க.பொ.த.

உயர்தர

கடந்தகால

வினாவிடை

1997,1998
1999,2000

விலை: 137.50

வணிகக்கல்வி




BRIGHT BOOK CENTRE (PVT) LTD
S-27, FIRST FLOOR, P.O. BOX - 162
COLOMBO CENTRAL SUPER MARKET
COMPLEX, COLOMBO-11 TEL : 434770

முன்னுரை

மானவ உலகம் தமது கல்வியை பல்கலைக்கழகம் வரை எடுத்து செல்வதற்கு நுழைவாயிலாக அமைவது கல்விப் பொது தராதரப்பத்திர உயர்தர பரீட்சையாகும். இப்பரீட்சையில் சித்தியடைவதோடு கூடிய புள்ளியை பெற்றுக் கொள்ள வழிசமைப்பதாக கடந்த கால வினா விடைகள் வெளிவருகின்றன.

மாணவ/மாணவிகள் எவ்வாறு வினாக்களுக்கு விடை அளிக்க வேண்டும் என்பதும், புள்ளிகள் கூடியதாக பெற்றுக் கொள்ள விடயங்கள் எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதையும் ஒரு கேள்விக்கு கிடைக்கும் புள்ளி, அக்கேள்விக்கு செலவிட வேண்டிய கால அளவு ஆகியவற்றை புரிந்துசெயல்பட கடந்தகால வினாவிடை உதவும்.



எமது பிறைட் கல்வி நிறுவனம் மானவ உலகுக்கு உறுதுணையாக நின்று உதவி புரிவது மூலம் மாணவர்களுக்கு ஒளிமயமான சுபீட்சகரமான எதிர்காலத்தை கையில் வழங்குவது எமது தாரகமந்திரமும் நோக்கமும் ஆகும்.

BRIGHT FUTURE IN YOUR HAND

பேராசிரியர், கலாநிதி பொன். சக்திவேல்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சை, 2000 ஒகஸ்ற் (புதிய பாடத்திட்டம்)

General Certificate of Education (A/L) Examination. August 2000 (New Syllabus)

வணிகக் கல்வி - I (பகுதி I)

இரண்டு மணி

29

T | I

அறிவுறுத்தல்கள்:

பகுதி I இல் உள்ள எல்லா வினாக்களுக்குமான விடைகள் இவ் வினாப்பத்திரத்திலேயே எழுதப்படல் வேண்டும். ஒவ்வொரு வினாவும் ஒரு புள்ளியைக் கொண்டுள்ளது. 1 ஆவது வினாவிலிருந்து 40 ஆவது வினா வரைக்கும் விடையளிக்கும்போது உரிய பொருத்தமான பெட்டியில் உ+ம் [√] என அடையாளமிடுக. பகுதி I க்கான வினாக்களுக்கு விடையளித்த பின்பு இவ்விடைகளுடன் பகுதி ஐக்கான விடைகளையும் ஒன்றாக இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்கவும்.

---

1) உலக சந்தையிலுள்ள நுகர்வோரின் அண்ணளவான எண்ணிக்கை,
- [ ] (1) 10 பில்லியன்
- [ ] (2) 8 பில்லியன்
- [√] (3) 6 பில்லியன்
- [ ] (4) 4 பில்லியன்
- [ ] (5) 2 பில்லியன்

2) ஒரு வியாபார நிறுவனம் ஏனைய வியாபார நிறுவனங்களில் தங்கியிருக்க வேண்டும். ஏனெனில்,
- [√] (1) சிறக்குமியல்பு
- [ ] (2) புதிய தொழில்நுட்பம்
- [ ] (3) தொடர்பாடலின் அபிவிருத்தி
- [ ] (4) துணைச் சேவைகள்
- [ ] (5) திறந்த பொருளாதாரக் கொள்கை

3) நேர் உற்பத்தி என்பதன் பொருள்.
- [ ] (1) வாடிக்கையாளரின் கட்டளையின் அடிப்படையிலான உற்பத்தி.
- [ ] (2) ஆரம்ப உற்பத்தி
- [ ] (3) சந்தைக்கான உற்பத்தி
- [√] (4) சொந்த நுகர்வுக்கான உற்பத்தி
- [ ] (5) நுகர்வோர் தேவைகளுக்கும் விருப்பங்களுக்குமான உற்பத்தி.

4) மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்குப் பங்களிப்புச் செய்யும் மிகப் பிரதான காரணி வருவது.
- [√] (1) வியாபார நடவடிக்கைகளில் இருந்து
- [ ] (2) கணனித் தொழில்நுட்பத்தில் இருந்து.

☐ (2) கணனித் தொழில்நுட்பத்தில் இருந்து
☐ (3) பணம். வங்கித் தொழில் என்பவற்றில் இருந்து.
☐ (4) பூகோளமாக்கலில் இருந்து.
☐ (5) சந்தைப் போட்டியிலிருநது.

5) பின்வருவனவற்றில் எது வியாபார நோக்கம் அன்று?
☐ (1) ஊழியர் நலனை உச்சப்படுத்துவது.
☐ (2) சந்தையில் பிழைத்து வாழ்வது
☐ (3) விற்பனைகளை உச்சப்படுத்துவது.
☐ (4) சொந்தக்காரரின் தனிப்பட்ட திருப்தி
☑ (5) தொழிலாளியின் வருமானத்தை உச்சப்படுத்துவது.

6) துணை உற்பத்தியை மட்டும உள்ளடக்கும் தொகுதியைத் தெரிவு செய்க.
☐ (1) சுரங்கத்தொழிலும் அகழ்வும் / மீன்பிடி / விவசாயம் / காடு.
☐ (2) வாகனம் / உடைகள் / வீடு / ஆபரணம்.
☑ (3) போக்குவரத்து / வங்கி / காப்புறுதி / தொடர்பாடல்.
☐ (4) சுரங்கத்தொழிலும் அகழ்வும் / ஆபரணம் / உடைகள் / வாகனங்கள்..
☐ (5) போக்குவரத்து / வங்கி / காப்புறுதி / கட்டடம் கட்டல்.

7) இலங்கைக் கைத்தொழில் உற்பத்திக்கு ஆகக்கூடிய பங்களிப்பைத் தரும் துறை,
☐ (1) உணவும் ஏனையவையும்
☑ (2) உடைகள்
☐ (3) புடைவை
☐ (4) றப்பர்
☐ (5) புகையிலைப் பொருட்கள்

8) பின்வருவனவற்றுள் எது "தனியார் மயமாக்கலின்" நோக்கம் அன்று?
☐ (1) அரசாங்க நிதியிடலைக் குறைப்பது.
☐ (2) தனியார் துறை முதலீட்டை ஊக்குவிப்பது.
☐ (3) வினைத்திறனை அதிகரிப்பது.
☐ (4) நுகர்வோர் திருப்தியை அதிகரிப்பது.
☑ (5) அரசாங்கப் பொறுப்பைக் கைகழுவி விடுவது.

9) தனியார்துறை, பொதுத்துறை என இரு குழுக்களாக வியாபார நிறுவனங்களை வகைப்படுத்துவதற்கான பிரதான அடிப்படை,
☐ (1) நோக்கம்
☑ (2) உடைமை
☐ (3) பங்குபற்றுவோரின் எண்ணிக்கை.
☐ (4) அரசாங்கக் கட்டுப்பாட்டின் தன்மை.
☐ (5) சட்டத் தேவைகள்

10) வரையறுக்கப்பட்ட பொறுப்பு என்பதன் பொருள்.
☐ (1) எல்லாப் பங்குதாரரும் வியாபாரக் கடன்களுக்குச் சமனான பொறுப்பு உடையவர்.
☐ (2) ஒரு வியாபாரத்தில் ஏற்படக்கூடிய கடனின் அளவுக்கு ஒரு எல்லையுண்டு.
☑ (3) சொந்தக்காரின் பொறுப்பு அவரது முதலீட்டின் அளவுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது.
☐ (4) சொந்தக்காரின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது.

☐ (5) வியாபார நடவடிக்கைகளில் சொந்தக்காரரின் ஈடுபாடு வரையறுக்கப்பட்டுள்ளது.

11) கண்ணியத் தொழில் வியாபாரங்களின் மத்தியில் பங்குடமை பிரபலம் பெறுவதற்கான பிரதான காரணம்,
☑ (1) வித்தியாசமான தேர்ச்சிகளோடு கூடிய ஆட்களைச் சேர்க்கக்கூடிய ஆற்றல்.
☐ (2) இலாபங்களையும், நட்டங்களையும் பகிரக்கூடிய ஆற்றல்.
☐ (3) குறைவான சட்ட நடைமுறைகள்.
☐ (4) பெரிய அளவு மூலதனம் தேவையில்லை.
☐ (5) வியாபார இடரை இழிவுபடுத்தக்கூடிய ஆற்றல்

12) பின்வருவனவற்றுள் எது பொது வரையறுக்கப்பட்ட கம்பனியின் ஒரு அம்சமாகக் கருதப்படுவது இல்லை?
☐ (1) பங்குதாரரின் இழிவு எண்ணிக்கை 7 ஆக இருக்க வேண்டும்.
☐ (2) பங்குச்சந்தையில் பங்குகள் கொள்வனவு செய்யவும் விற்பனை செய்யவும் முடியும்.
☐ (3) பங்குதாரரின் பொறுப்பு வரையறுக்கப்பட வேண்டும்.
☑ (4) முகாமையாளரால் பணிப்பாளர் சபை தெரிவு செய்யப்படுகின்றது.
☐ (5) ஒரு சட்ட ரீதியான ஆளாக இனம் காணம் தன்மை.

13) ஒரு வரையறுக்கப்பட்ட கம்பனியின் வெளித்தொடர்பைக் காட்டும் பத்திரம்.
☐ (1) அகவிதிப் பத்திரம்
☑ (2) புறவிதிப் பத்திரம்
☐ (3) முன் விபரணம்
☐ (4) நியதிச்சட்ட அறிவிப்பு
☐ (5) ஆண்டறிக்கை

14) ஒரு பல்தேசியக் கம்பனி என்பதன் பொருள்,
☐ (1) ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளால் சொந்தமாக்கப்பட்டுள்ள ஒரு கம்பனி.
☑ (2) ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் நடவடிக்கை மேற்கொள்ளும் ஒரு கம்பனி.
☐ (3) ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளிலிருந்து ஊழியர்களைச் சேர்த்துக் கொள்ளும் ஒரு கம்பனி.
☐ (4) ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளிலிருந்து மூலப்பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யும் ஒரு கம்பனி.
☐ (5) ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் பொருட்களை விற்கும் ஒரு கம்பனி.

15) தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனி தொடர்பாகப் பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
☐ (1) ஆகக் குறைந்தது ஒரு பணிப்பாளர் இருக்க வேண்டும்.
☐ (2) ஒரு பணிப்பாளர் ஆகக் குறைந்தது ஒரு பங்கைக் கொள்வனவு செய்ய வேண்டும்.
☐ (3) பொது மக்களுக்குப் பங்குகளை விற்கும் சாத்தியமில்லை.
☐ (4) ஆண்டுக் கணக்குகள் கம்பனிப் பதிவாளருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
☑ (5) பங்குச் சந்தையில் பங்குகளைப் பட்டியலிட முடியும்.

16) இலங்கையிலுள்ள கூட்டுறவு இயக்கத்தின் உயர் மட்ட நிறுவனம்.
☐ (1) கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு.
☐ (2) கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்.
☑ (3) இலங்கைத் தேசிய கூட்டுறவுச் சபை

☐ (4) இலங்கைக் கூட்டுறவு முகாமை நிலையம்
☐ (5) கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம்.

17) இலங்கையில் வியாபாரத் துறையில் அரச கூட்டுத்தாபனங்களை வைத்திருப்பதற்கான பிரதான காரணம்.
☑ (1) இலாபகரமற்ற அத்தியாவசிய சேவைகளை வழங்குவது.
☐ (2) அரசாங்கத் தனியுரிமை நிறுவனங்களை உருவாக்குவது.
☐ (3) வேலைப் பாதுகாப்பை உறுதி செய்வது.
☐ (4) அரசாங்கத்துக்கு ஒரு வருமானத்தைப் பெறுவது.
☐ (5) பொருட்கள், சேவைகளக்கான தரத்தை முன்னேற்றுவது.

18) பின்வருவனவற்றுள் எது பணத்தின் ஒரு தொழிற்பாடன்று,
☐ (1) பரிமாற்றத்தின் ஓர் ஊடகம்.
☐ (2) ஒரு பெறுமதி அளவீடு
☑ (3) வட்டி வீதங்களின் ஓர் அளவீடு.
☐ (4) ஒரு பெறுமதிக் களஞ்சியம்
☐ (5) பிற்போடப்பட்ட கொடுப்பனவுக்கான ஒரு வழி.

19) ஸ்ரேலிங் பவுண்டுக்கு எதிராக இலங்கை ரூபாவின் மதிப்பிறக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் ஒரு காரணி,
☑ (1) இலங்கையில் ஸ்ரேலிங் பவுண்டுக்கான கேள்வி அதிகரிப்பு,
☐ (2) இலங்கையில் ஸ்ரேலிங் பவுண்டுக்கான கேள்வி குறைவு,
☐ (3) இலங்கையில் ஸ்ரேலிங் பவுண்டுக்கான நிரம்பல் அதிகரிப்பு,
☐ (4) இலங்கையில் இலங்கை நாணயத்தின் நிரம்பல் அதிகரிப்பு,
☐ (5) இலங்கையில் இலங்கை நாணயத்தின் நிரம்பல் குறைவு.

20) இலங்கை மத்திய வங்கியின் ஒரு பிரதான நோக்கம்,
☐ (1) அரசாங்க வங்கியாகச் செயலாற்றுவது.
☐ (2) அரசாங்கத்தின் நிதியியல் பிரதிநிதியாகச் செயலாற்றுவது.
☐ (3) வங்கிகளின் வங்கியாகச் செயலாற்றுவது.
☑ (4) இலங்கை ரூபாவின் ஸ்திரத் தன்மையைக் காப்பாற்றுவது.
☐ (5) பணச் சந்தையையும் மூலதனச் சந்தையையும் முன்னேற்றுவது.

21) பின்வருவனவற்றுள் எது இலத்திரன் காசாகக் கருதப்படுவதில்லை?
☐ (1) வரவு அட்டை (Debit card)
☐ (2) உள்நாட்டுக் கடன் அட்டை (Local credit card)
☐ (3) ATM அட்டை (தொலை அட்டை ~ Teller card)
☐ (4) சர்வதேச கடன் அட்டை
☑ (5) பிரயாணிகள் காசோலை.

22) பின்வருவனவற்றுள் எது வியாபாரி ஒருவருக்கு நடைமுறைக் கணக்கொன்றைப் பேணுவதன் அனுகூலம் அல்ல?
☐ (1) காசோலை மூலம் கொடுப்பனவுகள் செய்யப்பட முடியும்.

☐ (2) மேலதிகப் பற்று வசதிகள் பெறப்பட முடியும்.
☑ (3) நாளாந்த மீதிக்கு வட்டி பெறப்பட முடியும்.
☐ (4) ஏனைய திறத்தவரிடம் இருந்து பெறப்படும் காசோலைகள் அக்கணக்கில் வரவு வைக்கப்பட முடியும்.
☐ (5) நிலையான கட்டளைகளுக்குப் பணம் கொடுக்கப்பட முடியும்

23) வெளிநாட்டில் வதியும் நண்பர் ஒருவருக்கு ஒரு தொகைப்பணம் அனுப்புவதற்குப் பின்வருவனவற்றுள் எது எளிமையான முறை?
☐ (1) தனியாள் காசோலை.
☑ (2) வங்கியாணை
☐ (3) தபால் மூலம் காசு.
☐ (4) மாற்று உண்டியல்
☐ (5) நாணயக் கடிதம்.

24) ஒருவருக்கு நடைமுறைக் கணக்கு இல்லாதவிடத்து, "கொடுப்போனுக்கு மட்டும்" என்ற வார்த்தைகளோடு கூடிய ஒரு குறுக்குக் கோடிட்ட காசோலையைக் காசாக மாற்றுவதற்குப் பின்வருவனவற்றுள் அவர் எதனை மேற்கொள்ள வேண்டும்.
☐ (1) நடைமுறைக் கணக்கு உள்ள வேறொருவருக்கு அக்காசோலையைக் கைமாற்றி காசைப் பெறுவது.
☐ (2) தெரிந்த ஒருவருக்குக் காசோலையைக் கைமாற்றி அவரிடமிருந்து திறந்த காசோலை ஒன்றைப் பெறுவது.
☐ (3) அடையாளத்தை நிரூபித்து வங்கியில் காசைப் பெறுவது.
☐ (4) பணத்தரகர் ஒருவருக்குக் காசோலையைக் கைமாற்றி அவரிடமிருந்து காசைப் பெறுவது.
☑ (5) வரைவோனால் குறுக்குக் கோடிடலை இரத்துச் செய்வித்து அக்காசோலைக்கான காசை வங்கியில் பெறுவது.

25) உணர்திறன் விலைச்சுட்டெண்ணுக்குப் பதிலாகக் கொழும்புப் பங்குச் சந்தையினால் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள விலைச்சுட்டெண் பின்வருவனவற்றுள் எது?
☐ (1) அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண்.
☐ (2) சராசரிப் பங்கு விலைச்சுட்டெண்.
☐ (3) மிட்~காப் (mid-cap) விலைச்சுட்டெண்.
☑ (4) மிலங்கா விலைச்சுட்டெண்.
☐ (5) ஜாடின் பிளெமிங் ற்றாக்கர் (Tardine Fleming Traker) விலைச்சுட்டெண்.

26) சந்தை மூலதன மயமாக்கல் (Capitalization) என்பதன் பொருள்,
☐ (1) கம்பனியால் வழங்கப்பட்ட சாதாரண பங்குகளின் பேரளவுப் பெறுமதி.
☐ (2) கம்பனியால் வழங்கப்பட்ட எல்லாப் பங்குகளினதும் பேரளவுப் பெறுமதி.
☐ (3) கம்பனியின் பங்கு மூலதனத்தினதும் கடன் மூலதனத்தினதும் பெறுமதி.
☐ (4) சொந்தக்காரரின் உரிமை மூலதனத்தினது பெறுமதி.
☑ (5) கம்பனியால் வழங்கப்பட்ட பங்குகளின் சந்தைப் பெறுமதி

27) ஆயுட் காப்புறுதி தொடர்பான தத்துவங்களைப் பின்வரும் எத்தொகுதி உள்ளடக்குகின்றது என்பதை தெரிவு செய்க.
☐ (1) அதியுயர் நம்பிக்கை / நட்டஈடு
☑ (2) அதியுயர் நம்பிக்கை / காப்புறுதி செய்தகு நலன்.
☐ (3) காப்புறுதி செய்தகு நலன் / நட்டஈடு.

☐ (4) அதியுயர் நம்பிக்கை / பங்களிப்பு
☐ (5) காப்புறுதி செய்தகு நலன் / பதிலாள் வைப்பு.

28) மூன்றாவது திறத்தவர் மோட்டார் வாகனக் காப்புறுதி ஒப்பந்தமூலம் பின்வருவனவற்றுள் எவ்விடரை ஏற்றுக் கொள்ளக் கூடும்?
☐ (1) மோட்டார் காரின் சொந்தக்காரரும் சாரதியும்
☐ (2) பிரயாணிகளும் பொருட்களும்.
☐ (3) மோட்டார் காரும் பொதுஆதனமும்.
☐ (4) பொருட்களும் பொத ஆதனமும்.
☑ (5) பொதுமக்களும் பொதுஆதனமும்.

29) பொருட்களை இடமாற்றம் ஒரு பொருத்தமான வழிமுறையைத் தெரிவு செய்யும்போது பின்வருவன வற்றுள் எது பொதுவாகக் கருதப்படுவது இல்லை?
☐ (1) பொருட்களின் தன்மை
☐ (2) தூரம்
☐ (3) காலம்
☐ (4) செலவு
☑ (5) சக்தி

30) தொடர்பாடல் செய்முறையில் ஒரு மூலகமாகப் பின்வருவனவற்றுள் எது கருதப்படுவது இல்லை?
☐ (1) அனுப்புபவர்
☐ (2) விடயம்
☑ (3) செலவு
☐ (4) ஊடகம்
☐ (5) பெறுபவர்

31) பின்வருவனவற்றுள் எத்தொடர்பாடல் ஊடகம் விரைவான பின்னூட்டியைத் தருகிறது?
☐ (1) இலத்திரன் தபால் (E-Mail)
☐ (2) இணையம் (Internet)
☐ (3) ரெலெக்ஸ் (Telex)
☐ (4) பாக்ஸ் (Fascimile)
☑ (5) தொலைபேசி

32) பின்வருவனவற்றுள் எவ்வூடகம் அகத்தொடர்பாடலிலும் வெளித்தொடர்பாடலிலும் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது?
☑ (1) கடிதம்
☐ (2) கூட்டம் (meeting)
☐ (3) ஞாபகக் குறிப்பு (memorandum)
☐ (4) பாக்ஸ் (Fax)
☐ (5) சுற்று நிருபம் (Circular)

33) பின்வருவனவற்றுள் எந்நாடு ஆசியான் (Asean) இன் அங்கத்தவர் இல்லை?

- [ ] (1) மலேசியா
- [ ] (2) சிங்கப்பூர்
- [ ] (3) தாய்லாந்து
- [√] (4) ஜப்பான்
- [ ] (5) இந்தோனேசியா

34) பின்வருவனவற்றுள் எது சர்வதேச வர்த்தகத்தின் ஒரு நன்மை இல்லை?

- [ ] (1) பல்வேறு பொருட்களை நுகர்வதற்கு ஒரு வாய்ப்பை வழங்குவது.
- [ ] (2) அளவுத் திட்டச் சிக்கனங்கள்.
- [ ] (3) சர்வதேசக் கூட்டுறவு
- [ ] (4) குறைவான விலைகள்.
- [√] (5) உயர்வான உள்நாட்டு நுகர்வுச் செலவீடு.

35) வர்த்தக மீதி என்பதன் பொருள்.

- [ ] (1) நடைமுறைக் கணக்கு மீதி
- [ ] (2) ஏற்றமதிகளுக்கும் இறக்குமதிகளுக்கும் இடையேயுள்ள வித்தியாசம்.
- [ ] (3) வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் வருமானத்துக்கும் வெளிநாடுகளில் ஏற்படும் செலவுகளுக்கும் இடையேயுள்ள வித்தியாசம்.
- [√] (4) புலனாகும் ஏற்றுமதிகளுக்கும் புலனாகும் இறக்குமதிகளுக்கும் இடையேயுள்ள வித்தியாசம்.
- [ ] (5) புலனாகா ஏற்றுமதிகளுக்கும். புலனாகா இறக்குமதிகளுக்கும் இடையிலான வேறுபாடு.

36) சர்வதேச வர்த்தகத்தில் மூல அத்தாட்சிப் பத்திரம் (certificate of origin) முக்கியமானது.

- [ ] (1) சுங்கத் திணைக்களத்திலிருந்து பொருட்களைப் பெறுவதற்கு.
- [ ] (2) ஒப்பந்தம் செய்யப்படும் சுங்கக் களஞ்சியத்தில் இடம் ஒதுக்குவதற்கு.
- [ ] (3) கேள்வுக் கட்டணங்களைக் குறைப்பதற்கு.
- [√] (4) தீர்வைக்கழிவு பெறுவதற்கு.
- [ ] (5) வங்கி வசதிகளையும் நிதி வசதிகளையும் பெறுவதற்கு.

37) ஐரோப்பிய சமூகத்தில் (EC) பயன்படுத்தப்படும் பண அலகு

- [ ] (1) எஸ்டீஆர் (SDR)
- [√] (2) யூரோ (EURO)
- [ ] (3) அமெரிக்க டொலர் (US Dollar)
- [ ] (4) யூரோ டொலர்
- [ ] (5) யூரோ பவுண்ட்

38.) வீசா (VISA) அல்லது மாஸ்ரர் காட் (Master Card) போன்ற சர்வதேசச கடன் அட்டை ஒன்றறு வாடிக்கை யாளர்களுக்கு மிகவும் வசதியானது ஏனெனில்.

- [ ] (1) ஒரு அட்டையோடு மட்டும் பலவகையான களஞ்சியங்களிலிருந்து பல கடன் கொள்வன வுகளைச் செய்ய அவர்களுக்கு அது அனுமதி அளிக்கிறது.
- [ ] (2) ஒரு காசோலையோடு மட்டும் மாதாந்த விலைப்பட்டியல்களுக்குப் பணம் கொடுத்துக் கொள்ள முடியும்.

☐ (3) அவர்களுக்கு ஒவ்வொரு அம்சமும் அடங்கிய மாதாந்தக் கூற்று அனுப்பப்படுகிறது.
☐ (4) கொண்டு செல்வதற்கு அது பாதுகாப்பானதும் இலகுவானதுமாகும்.
☑ (5) மேற்கூறிய எல்லாம்.

39) சில உற்பத்தியாளர்கள் நேர் விஷஷஷற்பனையைத் தெரிவு செய்வதற்கான காரணம்.
☑ (1) விலைகளின் இழிவு மட்டத்தைப் பேணுவதற்கு.
☐ (2) சுப்பமாக்கற்றின் பிரபலம்
☐ (3) சில்லறை வியாபாரிகள் மிகச் சக்தியுள்ளவராக இருப்பது
☐ (4) உற்பத்தியாளர்கள் மொத்தவிற்பனைத் தொழிலில் ஈடுபட விரும்புவது.
☐ (5) நுகர்வோர் நிறுவனங்கள் மிகத் தீவிரமாகச் செயற்படுவது.

40) பின்வருவனவற்றுள் எக்காரணி மொத்தவிற்பனைத் தொழிலில் இருந்து சில்லறை விற்பனைத் தொழிலை வேறுபடுத்துகிறது?
☐ (1) பொருட்களின் தொகை
☐ (2) பொருட்களின் விலை.
☐ (3) பயன்படுத்தப்படும் மூலதனம்
☑ (4) கொள்வனவின் நோக்கம்
☐ (5) கழிவு வீதம்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சை, 2000 ஒகஸ்ற் (புதிய பாடத்திட்டம்)

General Certificate of Education (A/L) Examination. August 2000 (New Syllabus)

வணிகக் கல்வி - I (பகுதி II)

இரண்டு மணி

29

T | I

அறிவுறுத்தல்கள்:

பகுதி "அ" பகுதி "ஆ" என்பவற்றில் ஒவ்வொன்றிலிருந்தும் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து நான்கு வினாக்களுக்கு விடை தருக. ஒரு வினாவுக்கு 15 புள்ளிகள்.

பகுதி "அ"

1) i. "வியாபாரம்" என்ற தொடரை வரையறுக்குக. (03 புள்ளிகள்)

ii. ஒரு வியாபாரத்தின் பிரதான தொழிற்பாடுகளைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

iii. வியாபாரத்தின் வரலாற்று ரீதியான அபிவிருத்தியில் உள்ள பிரதான மூன்று கட்டங்களைப் பெயரிட்டு விளக்குக. (03 புள்ளிகள்)

iv. வியாபாரத்திலுள்ள மூன்று பிரதான புதிய போக்குகளைப் பெயரிட்டு விளக்குக. (03 புள்ளிகள்)

v. ஆரம்ப, இரண்டாந்தர, துணைநிலைக் கைத்தொழில்களைத் தனித்தனியாக விளக்குக. (03 புள்ளிகள்)

2) i. தனியார் உடைமை, பொது உடைமை என்பவற்றின் கீழுள்ள வியாபார நிறுவனங்களின் பல்வேறு வகைகளைக் காட்டும் ஒரு வரைபடத்தை வரைக. (03 புள்ளிகள்)

ii. தனியுடைமை வியாபாரம், பங்குடைமை என்பவற்றில் இருந்து தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் வேறுபடும் ஆறு வழிகளைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

iii. சரத்து சந்தருவான் ஒரு உணவு விடுதியை முகாமை செய்யும் ஒரு தனியுடைமை வியாபாரி ஆவர். அவர் தனது வியாபாரத்துக்கு "குடி-படி" (Goody-Foody) என்ற பெயரிடத் தீர்மானிக்கின்றார். அவர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் எவை? (03 புள்ளிகள்)

iv. அரசாங்கத் திணைக்களங்களோடு ஒப்பீடுகையில் பொதுக் கூட்டுத்தாபனங்களின் நன்மைகள் யாவை? (03 புள்ளிகள்)

v. ஒரு வியாபார நிறுவன வடிவம் என்ற வகையில் கூட்டுறவுகளின் விசேட பண்புகள் யாவை? (03 புள்ளிகள்)

3) i. அனுமதி பெற்ற முகவர் வியாபாரம் ஒன்றில் அனுமதி பெறுபவருக்கும் (Franchisee) அனுமதி கொடுப்பவருக்கும் (Franchisor) கிடைக்க கூடிய நன்மைகள் முன்றை ஒவ்வொரு வருக்கும் பெயரிடுக. (03 புள்ளிகள்)

ii. ஒரு பொது வரையறுக்கப்பட்ட கம்பனியின் சாதாரண பங்குகளில் முதலீடு செய்வதன் மூலம் ஒரு முதலீட்டாளர் பெறக்கூடிய நன்மைகள யாவை? (03 புள்ளிகள்)

iii. 1990 களைப் "பசுமைச் சகாப்தம்" என அழைக்கப்படுகிறது. இச்சந்தர்ப்பத்தில் சூழ்நிலையைப் பாதுகாப்பதற்கு வியாபாரிகள் எவ்வாறு பங்களிப்புச் செய்ய முடியும் என விளக்குக. (03 புள்ளிகள்)

iv. பணத்தின் அபிவிருத்தியிலுள்ள பிரதான கட்டங்களை விளக்குக. (03 புள்ளிகள்)

v. ஒரு காசோலை எழுதும்போது வரைவோனால் பின்பற்றப்பட வேண்டிய அடிப்படை அம்சங்களைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

பகுதி "ஆ"

4) i. அண்மையில் இலங்கையில் தனியார் உடைமை வணிக வங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன. வியாபார சமூகத்திற்கு இதன் நன்மைகளை விளக்குக. (03 புள்ளிகள்)

ii. ஒரு சொத்துக் குத்தகை மூலம் அல்லது கொள்வனவு மூலம் கொள்ளப்பட வேண்டுமா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும்போது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய காரணிகளைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

iii. ஒரு வங்கிக்கடனுக்கு விண்ணப்பிக்கும்போது ஒரு வியாபாரி வழங்க வேண்டிய மிக முக்கியமான தகவல்கள் யாவை? (03 புள்ளிகள்)

iv. "பணச் சந்தை", "மூலதனச் சந்தை" என்பவற்றுக்கிடையேயுள்ள வேறுபாட்டை விளக்கி இலங்கையில் ஒவ்வொரு சந்தையிலுமுள்ள நிறுவனங்களின் வகைகளைப் பட்டியலிடுக. (03 புள்ளிகள்)

v. சிறுகுறிப்புகள் எழுதுக.
அ) பங்கு ஆணை
ஆ) கொழும்பு பங்குப் பரிவாத்தனை நிலையத்தில் உள்ள பிரதான பலகை
இ) திறைசேரிப் பிணைப் பத்திரங்கள் (03 புள்ளிகள்)

5) i. ஒரு தீயபாயகாப்புறுதி ஒப்பந்தத்தின் மூலம் வியாபரி ஒருவர் பூர்த்தி செய்யக்கூடிய இடர்கள் எவை? (03 புள்ளிகள்)

ii. ஊழியர் பொறுப்புக் காப்புறுதி, பொதுப் பொறுப்புக் காப்புறுதி என்பவற்றுக்கிடையேயுள்ள வேறுபாட்டை விளக்குக. (03 புள்ளிகள்)

iii. இலங்கையில் போக்குவரத்து அமைப்பை முன்னேற்றுவதற்கு எடுக்கப்படக்கூடிய வழிமுறைகளைத் தெரிவிக்குக. (03 புள்ளிகள்)

iv. இலங்கையிலுள்ள பெரும்பாலான வியாபாரங்கள் "மோசமான தொடர்பாடல்" மூலம் பாதிக்கப் படுகின்றன. இதற்கான காரணங்கள் யாவை? (03 புள்ளிகள்)

v. சுருக்கக் குறிப்புகள் எழுதுக.
அ) இணையம் (Internet)
ஆ) அக இணையம் (Intranet)
இ) இலத்திரன் தபால் (E-Mail) (03 புள்ளிகள்)

6) i. அரசாங்கத்தின் மூலம் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்படும் வசதிகள் யாவை? (03 புள்ளிகள்)

ii. மாற்றுண்டியல் என்றால் என்ன? ஒரு ஏற்றுமதியாளனுக்கு அது எவ்வாறு உதவுகிறது? (03 புள்ளிகள்)

iii. உலக வியாபார அமையத் (World Trade Organization)தின் பங்கினை விளக்குக. (03 புள்ளிகள்)

iv. இறக்குமதியாளரும் ஏற்றுமதியாளரும் தமது இடர்களை இழிவாக்குவதற்கு உதவும் மூன்று நிறுவனங்களைப் பெயரிட்டு ஒவ்வொரு நிறுவனத்தினாலும் வழங்கப்படும் ஒரு தொழிற்பாட்டைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

v. சிறுகுறிப்புக்கள் எழுதுக.
அ) எதிர் வர்த்தகம் (counter Trade) ஆ) சுமைச் சீட்டு இ) நாணயக் கடிதம் (03 புள்ளிகள்)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சை, 2000 ஒகஸ்ற் (புதிய பாடத்திட்டம்)

General Certificate of Education (A/L) Examination. August 2000 (New Syllabus)

BRIGHT BOOK CENTRE

வணிகக் கல்வி - II (பகுதி I)

ஒரு மணித்தியாலம்

29

T I

அறிவுறுத்தல்கள்:

பகுதி I இல் உள்ள எல்லா வினாக்களுக்குமான விடைகள் இவ் வினாப்பத்திரத்திலேயே எழுதப்படல் வேண்டும். ஒவ்வொரு வினாவும் ஒரு புள்ளியைக் கொண்டுள்ளது. 1 ஆவது வினாவிலிருந்து 40 ஆவது வினா வரைக்கும் விடையளிக்கும்போது உரிய பொருத்தமான பெட்டியில் உ+ம் [√] என அடையாளமிடுக. பகுதி I க்கான வினாக்களுக்கு விடையளித்த பின்பு இவ்விடைகளுடன் பகுதி IIக்கான விடைகளையும் ஒன்றாக இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்கவும்.

---

1) "கைத்தொழில் உறவுகள்" என்பதன் பொருள்,

[ ] (1) ஊழியர்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையேயுள்ள உறவு.
[ ] (2) தொழில்தருனருக்கும் அரசாங்கத்துக்கும் இடையேயுள்ள உறவு.
[√] (3) ஊழியர்களுக்கும் தொழில்தருனருக்கும் இடையேயுள்ள உறவு.
[ ] (4) தொழில்தருனருக்கும் முகாமையாளருக்கும் இடையேயுள்ள உறவு.
[ ] (5) ஊழியருக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையேயுள்ள உறவு.

2) ஒரு தொழிற்சங்கம் அங்கத்தவாகளுக்கு வழங்கும் நன்மைகள்.

[ ] (1) தொழில்தருனரின் தகாதசெல்வாக்குகளில் இருந்து தொழில் பாதுகாப்பையும், பாதுகாப்பையும் வழங்குவது.
[ ] (2) தொழில்தருனருடனும் ஏனைய திறத்தவருடனும் கலந்துரையாடும்போது அங்கத்தவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவது.
[ ] (3) சட்ட ஆலோசனைகளையும் தொழில்நுட்ப ஆலோசனைகளையும் வழங்குவது.
[ ] (4) சேவை நிலைகளையும் சம்பளங்களையும் முன்னேற்றஞ் செய்யக்கூடிய ஓர் ஆற்றல்.
[√] (5) மேற்கூறப்பட்டவை எல்லாம்.

3) வரைபு, அபிவிருத்தி உற்பத்தி நிர்மாணம், சேவை வழங்குவது என்பவற்றில் தர உறுதிப்பாட்டுக்கான சர்வதேச நியமம்.

[ ] (1) ISO 9000
[√] (2) ISO 9001
[ ] (3) ISO 9002
[ ] (4) ISO 9003
[ ] (5) ISO 9004

4) பின்வருவனவற்றுள் எது ஒரு திரைப்பட உற்பத்தியாளருக்கு அவரின் உற்பத்திக்குப் பிரத்தியேக உரிமையை வழங்குகிறது?

- [ ] (1) மோசடி தடுப்புக் கட்டளைச் சட்டம்
- [ ] (2) நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டம்.
- [ ] (3) கம்பனிச் சட்டம்.
- [√] (4) விவேக ஆதனச் சட்டம்.
- [ ] (5) திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டம்

5) நுகர்வோர் பாதுகாப்பு உறுதிப்படுத்தக் கூடியது.

- [ ] (1) அரசாங்க ஒழுங்குவிதிகளினால்
- [ ] (2) நுகர்வோர் ஆலோசனைச் சேவைகளால்.
- [ ] (3) வியாபார நடத்தை ஒழுக்க விதிகளினால்.
- [ ] (4) நியமத்தை அத்தாட்சிப்படுத்துவதாலும். லேபல்களினாலும்.
- [√] (5) மேற்கூறிய எல்லாம்.

6) பொருட்கள் சேவைகள் வரிவீதம்

- [ ] (1) 6.5 %
- [√] (2) 12.5 %
- [ ] (3) 15 %
- [ ] (4) 16.5 %
- [ ] (5) 19 %

7) வியாபார ஒழுக்கம் பற்றிய சரியான கூற்று.

- [√] (1) எது நல்லதோ அதைச் செய்வதும், எது பிழையானதோ அதைத் தவிர்ப்பதும் ஆகும்.
- [ ] (2) வாடிக்கையாளருக்குப் பௌவியமாக இருத்தல்.
- [ ] (3) தரமான பொருட்களை உற்பத்தி செய்வது.
- [ ] (4) நியாயமான ஒரு விலையில் பொருட்களை விற்பது.
- [ ] (5) மிகைப்படுத்திய விளம்பரத்தைச் செய்வதைத் தவிர்ப்பது.

8) முயற்சியாளன் பற்றிய பூரண கருத்தைத் தரும் கூற்று.

- [ ] (1) இலாபம் உழைப்பதற்காக ஒரு வியாபாரத்தில் முதலீடு செய்யும் ஒருவர்.
- [ ] (2) ஒரு வியாபார முயற்சியின் முகாமை நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒருவர.
- [ ] (3) ஒரு வியாபார முயற்சியில் முதலீடு செய்யும் முகாமை நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒருவர்.
- [ ] (4) இடர்களை ஏற்று இலாபம் பெறும் ஒருவர்.
- [√] (5) புதியன புனைதல் மூலம் மாற்றங்களைக் கொணரும் ஒருவர்.

9) இலங்கையில் முயற்சியாண்மை அபிவிருத்தியின் பிரதான நோக்கம்.

- [√] (1) வேலைவாய்ப்புகளை அதிகரிப்பது.
- [ ] (2) உள்ளூர் வளங்களின் உபயோகத்தை அதிகரிப்பது.
- [ ] (3) கிராமிய அபிவிருத்தியை விரைவுபடுத்துவது.
- [ ] (4) ஏற்றுமதிகளை அபிவிருத்தி செய்வது.
- [ ] (5) இறக்குமதிகளுக்குப் பதிலீடுகளை மேற்கொள்வது.

10) பின்வருவனவற்றில் எத்தொகுதி சிறிய வியாபாரங்களை இனம்காணப்பயன்படுத்தப்படும் அளவீடுகளுள் அடங்குகிறது என்பதைத் தெரிவு செய்க.

☐ (1) தொழிலாளரின் எண்ணிக்கை / வருட இலாபம் / பயன்படுத்தப்பட்ட மூலதனம்.
☑ (2) தொழிலாளரின் எண்ணிக்கை / வருட மொத்த விற்பனை / பயன்படுத்தப்பட்ட மூலதனம்.
☐ (3) வியாபார வகை / வருட மொத்த விற்பனை / தொழிலாளரின் எண்ணிக்கை.
☐ (4) பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் / வருட மொத்த விற்பனை / வருட இலாபம்
☐ (5) மின்சார வோல்ற்றேஜ் / வியாபார வகை / பயன்படுத்தப்பட்ட மூலதனம்.

11) சிறிய வியாபாரங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியது.

☐ (1) பாரிய அளவுத்திட்ட வியாபாரங்கள் விரும்பாத வியாபாரங்களை மேற்கொள்ள.
☐ (2) வேலைவாய்ப்புக்களை விஸ்தரிக்க.
☐ (3) உள்ளூர் வளங்களைப் பயன்படுத்த.
☐ (4) வருமானப் பங்கீட்டின் இடைவெளியைக் குறைக்க.
☑ (5) மேற்குறிப்பிட்ட எல்லாவற்றையும் நிறைவேற்ற.

12) பொதுவாக சிறு வியாபாரங்கள்.

☐ (1) மூலதனச் செறிவானவை.
☑ (2) ஊழியச் செறிவானவை.
☐ (3) வினைத்திறனற்றவை.
☐ (4) நிதியிட இலகுவானவை.
☐ (5) மேற்குறிப்பிட்ட எல்லா அம்சங்களும் அடங்கியவை.

13) இலங்கையில் சிறிய அளவு உற்பத்தியாளர்களுக்கு சந்தை வசதிகளை வழங்கும் ஒரு நிறுவனம்.

☐ (1) கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்
☐ (2) இலங்கை நியமங்கள் நிறுவனம்.
☐ (3) தேசிய பயிலுனர், கைத்தொழில் பயிற்சி அதிகார சபை.
☑ (4) இலங்கைக் கைப்பணி பொருட்கள் சபை.
☐ (5) மேற்குறிப்பிட்டவை எல்லாம்.

14) ஒரு வியாபாரத்துக்குப் பெருநோக்கக் (mission) கூற்று முக்கியமானது.

☐ (1) திட்டங்களின் அடிப்படைத் தொழிற்பாட்டைத் தீர்மானிக்க.
☐ (2) இடையிடையே சாதனை மீளாய்வு செய்ய.
☐ (3) தெளிவான நோக்கங்களையும் குறிக்கோள்களையும் உருவாக்க.
☑ (4) வியாபாரத்தின் தன்மையையும் அதன் திசையையும் தீர்மானிக்க.
☐ (5) வினைத்திறன் மிக்க ஒரு கட்டுப்பாட்டு முறையை வழங்க.

15) பின்வருவனவற்றுள் எது திட்டமிடலின் ஒரு தொழிற்பாடு அன்று?

☐ (1) சூழ்நிலைப் பகுப்பாய்வின் மூலம் வாய்ப்புக்களை இனங்காண்பது.
☐ (2) இலக்குகளையும் நோக்கங்களையும் உருவாக்குவது.
☑ (3) திணைக்களங்களை உருவாக்குவது.
☐ (4) மாற்றுவழிகளை இனம்காண்பதும் மதிப்பீடு செய்வதும்
☐ (5) திட்டங்களை நடைமுறைப்படுத்துவது.

16) முகாமை பற்றி மிகப் பொருத்தமான கருத்தை விபரிக்கும் கூற்றைத் தெரிவு செய்க.

☐ (1) சரியான வழியில் சரியானதைச் செய்வது

☐ (2) மற்றவர்களைக் கொண்டு வேலையைச் செய்விப்பது.

☑ (3) செயற்திறன் மிக்கதும் வினைத்திறன் மிக்கதுமான ஒரு முறையில் நிறுவனக் குறிக்கோள்களை அடைந்துகொள்ள வளங்களை உபயோகிப்பது.

☐ (4) குறிக்கோள்களை அமைத்தல் சிறந்த முறையில் எப்படி அடைவதென்பதைத் தீர்மானித்தல் ஆகியவற்றின் நடைமுறை.

☐ (5) திட்டமிடல், நிறுவன அமைப்பாக்கல், தலைமை வகித்தல்,கட்டுப்படுத்தல் ஆகியவற்றின் செய்முறை

17) முகாமையில் "பன்முகப்படுத்தல்" என்பதன் கருத்து.

☐ (1) நிறுவன அமைப்பின் பல கிளைகளை வைத்திருத்தல்.

☐ (2) வெவ்வேறு திணைக்களங்களின் கீழ் வியாபார நடவடிக்கைகளை வைத்திருத்தல்.

☑ (3) வெவ்வேறு முகாமை மட்டங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை வைத்திருத்தல்.

☐ (4) உயர் முகாமையோடு தீர்மானம் எடுத்தலின் மத்தியமயப்பட்ட அதிகாரத்தை வைத்திருத்தல்.

☐ (5) பல்வேறு தொழிற்பாடுகள். நடவடிக்கைகளின் ஓர் ஒன்றிணைப்பை வைத்திருத்தல்.

18) வியாபாரம் ஒன்றின் நிறுவன வரைபடம் காட்டுவது.

☑ (1) பல்வேறு தொழிற்பாடுகள் திணைக்களங்களின் பிரிவு.

☐ (2) ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட வேலையின் தன்மை.

☐ (3) செய்ய வேண்டிய வேலையின் வரிசைக் கிரமம்.

☐ (4) எல்லாத் தொழிலாளிகளினதும் பதவிநிலைகளுக்கு இடையேயுள்ள தொடர்பு.

☐ (5) மேற்குறிப்பிட்ட எல்லாம்.

19) "தலைமை வகித்தல்" நடவடிக்கைகளை உள்ளடக்கும் தொகுதியைத் தெரிவு செய்க.

☐ (1) தலைமை / திணைக்களப்படுத்தல் / குறிக்கோள்களை உருவாக்குதல்.

☑ (2) தொடர்பாடல் / தூண்டுதல் / தலைமை.

☐ (3) தூண்டுதல் / தலைமை / திணைக்களப்படுத்தல்.

☐ (4) குறிகோள்களை உருவாக்குதல் / மாற்றுவழிகளை மதிப்பிடுதல் / தலைமை.

☐ (5) சாதனை மதிப்பீடு / தூண்டுதல் / கையளிப்பு

20) பின்வருவனவற்றுள் எது கட்டுப்படுத்தலின் ஒரு கட்டம் அன்று?

☐ (1) சாதனையை மதிப்பிடவது.

☐ (2) வித்தியாசங்களை இனங்காணுவது.

☐ (3) நியமங்களை அமைப்பது.

☑ (4) இணைப்பு.

☐ (5) திருத்தத்துக்கான வழிகளை மேற்கொள்வது.

21) பின்வருவனவற்றுள் எது ஒரு உற்பத்தித் தொழிற்பாடு என்று?

☐ (1) உற்பத்திப் பொருள் திட்டமிடல்.

☐ (2) இருப்புக் கட்டுப்பாடு.

☐ (3) தரக் கட்டுப்பாடு.
☐ (4) கொள்வனவு.
☑ (5) விலையிடல்.

22) ஓர் உற்பத்திப் பொருளின் அலகுக் கிரயம் கணிப்பிடப்படுவது.
☐ (1) நிலையான கிரயம் + வெளியீடு.
☐ (2) மாறும் கிரயம் + வெளியீடு.
☑ (3) மொத்தக் கிரயம் + வெளியீடு
☐ (4) ஆரம்பக் கிரயம் + வெளியீடு
☐ (5) மேந்தலைக் கிரயம் + வெளியீடு

23) ஒரு உற்பத்திக் கம்பனியின் கொள்வனவுப் பகுதி அதன் சிக்கனக் கட்டளைக் கணியத்தைக் கணிப்பது.
☐ (1) உற்பத்திப் பொருளுக்கான மொத்தக் கேள்வியை அறிய.
☐ (2) வைத்திருத்தல் கிரயத்தை இழிவாக்க.
☐ (3) இருப்பை விலையிட
☑ (4) மொத்தக் கிரயத்தை இழிவாக்க.
☐ (5) கட்டளையிடல் கிரயத்தை இழிவாக்க.

24) "சந்தைப்படுத்தல்" என்பதற்கு மிகப் பொருத்தமான வரைவிலக்கணம்.
☐ (1) சந்தை ஆராய்ச்சியும் உற்பத்திப் பொருள் திட்டமிடலும்.
☐ (2) விளம்பரப்படுத்தலம் விற்பனை ஊக்குவிப்பும்.
☐ (3) விநியோக வழிகளைத் தெரிவு செய்வது.
☐ (4) விலையை நிர்ணயிப்பது.
☑ (5) மேற்குறிப்பிட்ட எல்லாவற்றையும் உள்ளடக்கும் ஒரு செய்முறை.

25) சந்தைப்படுத்தலின் "சந்தை" என்பதன் கருத்து.
☐ (1) பொருட்கள் விற்கப்படும் ஓர் இடம்.
☐ (2) ஒரு குறிப்பிட்ட உற்பத்திப் பொருளை உற்பத்தி செய்வதற்கு விருப்பமும் ஆற்றலும் உள்ள உற்பத்தியாளர்களின் ஒரு குழு.
☑ (3) ஒரு குறிப்பிட்ட உற்பத்திப் பொருளைக் கொள்வனவு செய்வதற்கு விருப்பமும் ஆற்றலும் உள்ள உள்ளார்ந்த வாடிக்கையாளர்களின் ஒரு குழு.
☐ (4) விற்பனைக்காகப் பொருட்களை நிரம்பல் செய்யும் விற்பனையாளர்களின் ஒரு குழு.
☐ (5) விற்பனைக்காகப் பொருட்களை வழங்கக் கூடிய எந்த ஒரு முறையும்.

26) ஒரு உற்பத்திப் பொருளை வரையும்போது கருத்திற் கொள்ளப்பட வேண்டாத ஒரு காரணி.
☑ (1) நடுவர்களின் தன்மை
☐ (2) போட்டிப் பொருட்களின் தன்மை.
☐ (3) நுகர்வோரின் தேவைகளும் விருப்பங்களும்.
☐ (4) கொள்வனவு செய்வதற்கான நுகர்வோரின் ஆற்றல்.
☐ (5) பதிலீடுகளின் கிடைப்புத் தன்மை.

27) ஒரு உற்பத்திப் பொருளை விலையிடும்போது கருத்திற் கொள்ளப்படவேண்டிய அடிப்படை அம்சம்.

☐ (1) நுகர்வோர் வருமானம்.
☐ (2) போட்டிப் பொருட்களின் விலைகள்.
☐ (3) பதிலீடுகளின் விலைகள்.
☑ (4) பொருட்களின் கிரயம்.
☐ (5) கேள்வி நெகிழ்ச்சி.

28) "சந்தைக்கலவை" (4p's) இல் உள்ளடங்கும் தொகுதியைத் தெரிவு செய்க.

☐ (1) விளைபொருள் (Produce) / செய்முறை (Process) / மேம்படுத்தல் (Promotion) / விலை (Price)
☑ (2) உற்பத்திப் பொருள் (product) / விலை (Price) / விநியோகம் (Place) / மேம்படுத்தல் (Promotion)
☐ (3) உற்பத்திப் பொருள் (product) / பொறி (Plant) / விலை (Price) / மேம்படுத்தல் (Promotion)
☐ (4) உற்பத்திப் பொருள் (product) / பொதியிடல் (Package) / விநியோகம் (Place) / பொறி (Plant).
☐ (5) உற்பத்திப் பொருள் (product) / விலை (Price) / பொறி (Plant) / பொது உறவுகள் (Public - relations).

29) மேம்படுத்தற் கலவையில் அடங்குவன.

☐ (1) விளம்பரம்
☐ (2) தனியாள் விற்பனை.
☐ (3) நேரடிச் சந்தைப்படுத்தல்.
☐ (4) பொது உறவுகள்.
☑ (5) மேற்குறிப்பிட்டவை எல்லாம்.

30) மனிதவள முகாமைத் தொழிற்பாட்டை அடக்கும் தொகுதியைத் தெரிவு செய்க.

☐ (1) ஆட்சேர்ப்பும் தெரிவும் / பயிற்சியும் அபிவிருத்தியும் / சம்பளங்கள்.
☐ (2) பயிற்சியும் அபிவிருத்தியும் / நலன்புரி சேவை / இடமாற்றங்கள்.
☐ (3) ஆட்சேர்ப்பும் தெரிவும் / நலன்புரி சேவை / சம்பளங்கள்.
☑ (4) ஆட்சேர்ப்பும் தெரிவும் / பயிற்சியும் அபிவிருத்தியும் / நலன்புரி சேவை.
☐ (5) நலன்புரி சேவை / இடமாற்றங்கள் / பயிற்சியும் அபிவிருத்தியும்.

31) ஊழியர் துண்டுதல் செய்யப்படுவது.

☐ (1) கூலிகளும் வேறு கொடுப்பனவுகளும் வழங்குவதன் மூலம்
☐ (2) தொழில் பாதுகாப்பை வழங்குவதன் மூலம்.
☐ (3) பதவியுயர்வு வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம்
☐ (4) நல்ல முகாமையின் மூலம்
☑ (5) மேற்குறிப்பிட்ட எல்லாவற்றின் மூலமும்.

32) பின்வருவனவற்றுள் எது உத்தியோகத்தரை மதிப்பீடு செய்யும் ஒரு நோக்கம் அன்று?

☐ (1) பயிற்சித் தேவைகளை இனங்காண்பது.

☐ (2) ஊழியர் தூண்டுதல்.
☑ (3) மனப்பாங்குகளின் மாற்றம்.
☐ (4) பிரச்சினையை இனம்கண்டு அறிதல்.
☐ (5) பதவியேற்றங்கள் பற்றிய தீர்மானம்.

33) ஆள் பற்றிய தரவில் (Bio Data) பின்வருவனவற்றுள் எவை அடங்கும்?
☐ (1) வேலையைப் பற்றிய விபரங்கள்
☑ (2) விண்ணப்பதாரி பற்றிய விபரங்கள்
☐ (3) தொழில்தருனர் பற்றிய விபரங்கள்.
☐ (4) தகைமைத் தேவைகள் பற்றிய விபரங்கள்.
☐ (5) மேற்குறிப்பிட்ட எல்லாம்.

34) "தொழிற்படு மூலதனம்" கணிக்கும்போது பின்வருவனவற்றுள் எது கருதப்படுவது இல்லை?
☐ (1) காசு.
☐ (2) வருமதிகள்
☑ (3) மோட்டார் வாகனங்கள்.
☐ (4) சென்மதிகள்
☐ (5) இருப்புக்கள்

35) ஒரு நிறுவனம் 31 டிசம்பர் 1999 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பின்வரும் தரவுகளை வைத்திருக் கின்றது.

விற்பனைகள் (அலகுகள்)		50 000		
நிலையான செலவு (ரூபா)		600 000		
அலகு நேர்க் கிரயம்				
மூலப்பொருள்	(ரூபா)		20	
கூலி	(ரூபா)		10	(ரூபா) 30
அலகு விற்பனை விலை				(ரூபா) 50

அந்நிறுவனத்தின் வருமான ~ செலவு சமப்படும் புள்ளி
☐ (1) 50 000 அலகுகள்
☐ (2) 7 500 அலகுகள்
☑ (3) 30 000 அலகுகள்
☐ (4) 20 000 அலகுகள்
☐ (5) 12 000 அலகுகள்

36) காரணித் தரகு (factoring) என்பதன் கருத்து.
☐ (1) ஒரு வங்கிக் கடன் பெறுவது.
☐ (2) சந்தேகமான வருமதிக் கடன்களைச் சேகரிப்பது.
☐ (3) அரசாங்கத்திடமிருந்து ஒரு கடன் பெறுவது.
☐ (4) ஒரு முயற்சி மூலதனக் கம்பனி (venture Capital company)யிடம் இருந்து ஒரு கடன் பெறுவது.
☑ (5) வருமதிக்கடன்களை விற்பது.

37) மூலதன இணைப்பு விகிதம் கணிப்பிடப்படும் முறை

☐ (1) $\frac{\text{தேறிய இலாபம்}}{\text{பயன்படுத்தப்பட்ட மூலதனம்}}$

☐ (2) $\frac{\text{மொத்த இலாபம்}}{\text{சாதாரண பங்கு மூலதனம்}}$

☐ (3) முன்னுரிமைப் பங்கு மூலதனம
சாதாரண பங்கு மூலதனம்

☑ (4) $\frac{\text{நீண்ட காலக் கடன் + முன்னுரிமைப் பங்கு மூலதனம்}}{\text{மொத்த நீண்ட கால மூலதனம்}}$

☐ (5) $\frac{\text{நீண்ட காலக் கடன் + தேறிய இலாபம்}}{\text{மொத்த நீண்ட கால மூலதனம்.}}$

38) எது குறிப்பிட்ட ஒரு வியாபாரக் காலப்பகுதிக்கான "இருப்புப் புரழ்வு வீதம்" பற்றிய மிகப் பொருத்தமான கருத்தைத் தருகிறது?

☐ (1) விற்கப்பட்ட பொருட்களின் கிரயம்.
☐ (2) ஒரு குறிப்பிட்டக் காலப் பகுதியிலுள்ள சராசரி இருப்பின் பெறுமதி.
☐ (3) மொத்த விற்பனைகளின் பெறுமதி
☑ (4) சராசரி இருப்பு விற்கப்படும் தடவைகளின் எண்ணிக்கை.
☐ (5) ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் சராசரி விற்பனைகளின் பெறுமதி.

39) பின்வருவனவற்றுள் எவை ஒரு கருத்திட்ட அறிக்கையில் இடம்பெறும்?

☐ (1) அக்கருத்திட்டத்தின் பின்னணி.
☐ (2) அக்கருத்திட்டத்தின் நோக்கங்கள்.
☐ (3) மதிப்பிடப்பட்ட கருத்திட்டக் கிரயம்.
☐ (4) எதிர்பார்க்கப்படும் வெளியீடும் நன்மைகளும்.
☑ (5) மேற்குறிப்பிட்டவை எல்லாம்.

40) சாத்திய ஆய்வு என்பதன் கருத்து

☑ (1) ஒரு கருத்திட்டத்தின் நிதி. பொருளாதார, சமூக ரீதியில் நிறைவேற்றக் கூடியதாக உள்ள தன்மை பற்றி ஒரு பகுப்பாய்வு.
☐ (2) ஒரு கருத்திட்டத்துக்கு நிதிகளைப் பெறும் சாத்தியம் பற்றிய ஓர் ஆய்வு.
☐ (3) ஒரு கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் பற்றிய பகுப்பாய்வு.
☐ (4) ஒரு கருத்திட்டத்தின் எதிர்பார்க்கப்படும் இலாபங்கள் பற்றிய ஒரு பகுப்பாய்வு.
☐ (5) ஒரு கருத்திட்டத்தின் இலக்குச் சந்தை பற்றிய ஒரு பகுப்பாய்வு.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சை, 2000 ஒகஸ்ற் (புதிய பாடத்திட்டம்)

General Certificate of Education (A/L) Examination. August 2000 (New Syllabus)

BRIGHT BOOK CENTRE

வணிகக் கல்வி - II (பகுதி II)

இரண்டு மணி

29

T | I

அறிவுறுத்தல்கள்:

பகுதி "அ" பகுதி "ஆ" என்பவற்றில் ஒவ்வொன்றிலிருந்தும் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து நான்கு வினாக்களுக்கு விடை தருக. ஒரு வினாவுக்கு 15 புள்ளிகள்.

பகுதி "அ"

1) i. தொழில்தருனர் ஒருவருக்கு வேலைப் பகிஷ்கரிப்பினால் ஏற்படக்கூடிய பாதகமான ஆறு விளைவுகளைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

ii. "கூட்டுப் பேரம் பேசல்" என்பதை விளக்கக. ஒரு வியாபாரிக்கு கூட்டுப் பேரம் பேசலினால் கிடைக்கக்கூடிய இரண்டு நன்மைகளையும் இரண்டு தீமைகளையும் கூறுக. (03 புள்ளிகள்)

iii. தற்போது நுகர்வோருக்கு ஏன் கூடிய பாதுகாப்புத் தேவை என்பதை விளக்குக.(03 புள்ளிகள்)

iv. காலாவதியான மருந்துகளை விற்கும் ஒரு மருந்துக் கடையைப் பற்றி நீர் அறிவீர் நீர் முறைப்பாடு செய்யக்கூடிய நான்கு திறத்தவர்களைப் பெயரிடுக. அவர்கள் எச்சட்டத்தின்படி செயலாற்ற முடியும்? (03 புள்ளிகள்)

v. உற்பத்திக் கைத்தொழிலில் தனியார்துறை முதலீட்டை ஊக்குவிப்பதற்கு இலங்கை அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட முயற்சிகள் எவை? (03 புள்ளிகள்)

2) i. "இலங்கையில் பொருளாதார அபிவிருத்திக்கு முயற்சியாளர்களின் பற்றாக்குறை ஒரு தடையாகும்" கருத்துரை செய்க.

ii. ஒரு முயற்சியாளனின் ஆறு முக்கிய பண்புகளைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

iii ஒரு சிறிய வியாபாரத்தை ஆரம்பிக்கும்போது ஒரு முயற்சியாளனால் பெறக்கூடிய மூன்று நன்மைகளைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

iv. இலங்கையின் மத்திய வங்கியினால் ஆரம்பிக்கப்பட் "சுரத்துர" (SURATHURA) நிகழ்ச்சித் திட்டத்தை விளக்குக. (03 புள்ளிகள்)

v. சிறுகுறிப்புக்கள் எழுதுக.

அ) நுகர்வோர் உரிமைகள்

ஆ) இலங்கையின் முதலீட்டுச் சபை (B O I)

இ) ஏற்றுமதி பதப்படுத்தும் வலையங்கள் (03 புள்ளிகள்)

3) i. ஒரு வியாபாரம் ஏன் திட்டமிடப்பட வேண்டும்? (03 புள்ளிகள்)

ii. ஒரு வியாபாரம் ஏன் தனது சாதனைகளைக் கண்காணித்து மீளாய்வு செய்கிறது? (03 புள்ளிகள்)

iii. அதிகாரக் கையளிப்பின் நோக்கத்தை விளக்குக. (03 புள்ளிகள்)

iv. "பணம் மட்டும் ஒரு தூண்டுதற் கருவி அன்று" தொழிலாளரைத் தூண்டும் வேறு மூன்று

முறைகளை விளக்குக. (03 புள்ளிகள்)

v. சிறுகுறிப்புகள் எழுதுக.
அ) தலைமை
ஆ) கட்டுப்படுத்துதல்.
இ) வினைத்திறன் (efficency) (03 புள்ளிகள்)

பகுதி "ஆ"

4) i. உற்பத்திப்பொருள் என்ற தொடரை வரையறுத்து அதன் வகைகளையும் தருக. (03 புள்ளிகள்)

ii. முன்று விலையிடல் நோக்கங்கள் முன்று விலையிடல் கொள்கைகள் என்பவற்றைத் தருக. (03 புள்ளிகள்)

iii ஒரு உற்பத்திப் பொருளின் விநியோக வழிகளைத் தெரிவு செய்வதில் செல்வாக்குச் செலுத்தும் முன்று காரணிகளை இனம் காண்க. (03 புள்ளிகள்)

iv. "விளம்பரப்படுத்தற் செலவுகளின் காரணமாக உற்பத்திப் பொருளின் விலைகள் உயருகின்றன" கருத்துரை செய்க. (03 புள்ளிகள்)

v. சிறுகுறிப்புகள் எழுதுக.
அ) பரிமாற்றம்
ஆ) பண்டக்குறி விசுவாசம்
இ) சமூகச் சந்தைப்படுத்தல் எண்ணக்கரு. (03 புள்ளிகள்)

5) i. ஏன் ஓர் உற்பத்தி நிறுவனத்துக்கு வினைத்திறன்மிக்க இருப்புக் கட்டுப்பாட்டு முறை ஒன்று முக்கியமானது என்பதை விளக்குக. (03 புள்ளிகள்)

ii. ஒரு மூலதனக் கருவியைக் கொள்வனவு செய்வதைக் காட்டிலும் குத்தகைக்குப் பெறுவதால் வரக்கூடிய முன்று நன்மைகளை விளக்குக. (03 புள்ளிகள்)

iii. ஒரு பொது வரையறுக்கப்பட்ட கம்பனிக்கான முன்று அகநிதி மூலங்களையும் முன்று புறநிதி மூலங்களையும் பெயரிடுக. (03 புள்ளிகள்)

iv. ஒரு பொது வரையறுக்கப்பட்ட கம்பனி மேலும் பங்குகளை வழங்குவதைவிடத் தொகுதிக்கடன்கள் மூலம் மேலதிக மூலதனத்தைத் திரட்டத் தீர்மானித்துள்ளது அத் தீர்மானத்துக்கான முன்று காரணங்களை விளக்குக. (03 புள்ளிகள்)

v. சிறுகுறிப்புக்கள் எழுதுக.
அ) சராசரி சேகரிப்புக் காலம்.
ஆ) நடப்பு விகிதம்
இ) காசோட்டக் கூற்று. (03 புள்ளிகள்)

6) i. மனிதசக்தித் திட்டம் என்றால் என்ன? அவ்வாறான ஒரு திட்டத்தின் இரண்டு நன்மைகளைத் தருக. (03 புள்ளிகள்)

ii. "ஓர் ஆளுக்கான வேலை விபரணம்" "ஓராளுக்கான வேலைக் குறிப்புரை" என்பவற்றுக்கிடையேயுள்ள வேறுபாடுகளை விளக்குக. (03 புள்ளிகள்)

iii. நிறுவனத்திற்கு உள்ளேயிருந்து பதவியுயர்த்துவதைவிட வெளியிலிருந்து ஒரு முகாமையாளரை ஆட்சேர்ப்பதன் முன்று நன்மைகளையும் முன்று குறைபாடுகளையும் பெயரிடுக. (03 புள்ளிகள்)

iv. "கருத்திட்டம்" என்பதன் கருத்து என்ன என்பதை விளக்குக. (03 புள்ளிகள்)

v. ஒரு கருத்திட்ட அறிக்கையைத் தயாரிப்பதன் நோக்கங்களை விளக்குக. (03 புள்ளிகள்)

வணிகக் கல்வி I - (பகுதி I) - 2000

விடைகள்

01. 3	02. 1	03. 4	04. 1	05. 5
06. 3	07. 2	08. 5	09. 2	10. 3
11. 1	12. 4	13. 2	14. 2	15. 5
16. 3	17. 1	18. 3	19. 1	20. 4
21. 5	22. 3	23. 2	24. 5	25. 4
26. 5	27. 2	28. 5	29. 5	30. 3
31. 5	32. 1	33. 4	34. 5	35. 4
36. 4	37. 2	38 5	39. 1	40. 4

வணிகக் கல்வி I - (பகுதி II)

1) (i) "வியாபாரம்" என்ற தொடரை வரையறுக்க.

* மனித தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்து கொள்வதற்கு அவசியமான பொருட்கள் சேவைகளின் உற்பத்தி, பங்கீடு, சந்தைப்படுத்தல், துணைச்சேவைகள் போன்ற அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது. (3 புள்ளிகள்)

* மனிதத் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்துகொள்வதற்கு உதவும் அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது. (2 புள்ளிகள்)

* இலாபம் பெறும் நோக்கில் செயற்படும் ஏந்தவொரு நடவடிக்கை. (1 புள்ளிகள்)
(இவ்வரை விலக்கணம் Business க்கு உரியதாகும்)

(ii) ஒரு வியாபாரத்தின் பிரதான தொழிற்பாடுகளைப் பெயரிடுக.

உற்பத்தி, கொள்வனவு, சந்தைப்படுத்தல், ஆளணி நிதியும் கணக்கீடும், முகாமை கொள்வனவும் விற்பனையும்.

(iii) வியாபாரத்தின் வரலாற்று ரீதியான அபிவிருத்தியில் உள்ள பிரதான மூன்று கட்டங்களைப் பெயரிட்டு விளக்குக.

1. பண்டமாற்று முறை / வியாபாரம்
2. பணப்பரிமாற்றம்
3. கைத்தொழில் புரட்சி
4. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி (E ~ வணிகம், E ~ தபால்)

(குறிப்பிடல் ½ × 3 = 1½ புள்ளிகள்
விளக்கத்துக்கு ½ × 3 = 1½ புள்ளிகள்)

(iv)வியாபாரத்திலுள்ள மூன்று பிரதான புதிய போக்குகளைப் பெயரிட்டு விளக்குக.


* பூகோள மயமாக்கல்:
  உலகம் முழுவதும் ஒரு சந்தை என்றடிப்படையில் வியாபார தடைகள் நீக்கப்பட்டு செயற்படல்
* தொழில்நுட்ப முன்னேற்றம்: கணனி, உற்பத்தி தொழிலுட்பம், போக்குவரத்து, E~ வணிகம் போன்றவற்றின் விருத்தி.
* சூழல் பிரச்சனைகளும், வியாபார ஒழுக்கங்களும்: வியாபாரம் சூழலுக்கு தீங்கு விளைவிக்கா முறையிலும் சமூகத்திற்கு நன்மை பயக்கக் கூடிய முறையில் செயற்படலும் வியாபார ஒழுக்கங்களைப் பின்பற்றலும்.
* வாடிக்கையாளர் பலம் : தொடர்பாடல் முன்னேற்றம் போன்றவற்றால் விழிப்புணர்வு
* உயர் போட்டித் தன்மை : பரந்த சந்தை காரணமாக பல்வேறுபட்ட பொருட்கள் சந்தைக்கு வந்தமை.

(பெயரிடல் ½ × 3 = 1½ புள்ளிகள்
விளக்கம் ½ × 3 = 1½ புள்ளிகள்)

(v) ஆரம்ப, இரண்டாந்தர, துணைநிலைக் கைத்தொழில்களைத் தனித்தனியாக விளக்குக.

* ஆரம்ப கைத்தொழில்:~ 1. வேளாண்மை, வனத்தொழில், மீன்பிடித்தல்
  2. சுரங்கமறுத்தல், அகழ்வு
* இரண்டாம்தர கைத்தொழில்:~ தயாரிப்பும், கட்டிடலாக்கமும், நிர்மானத் கைத்தொழில்
* துணைநிலைக்கைத்தொழில்:~ மின்சாரம், வாயு, நீர், சுகாதாரம், போக்குவரத்து, களஞ் சியப்படுத்தல், தொடர்பாடல், மொத்தச் சில்லறை வியா பாரம், வங்கி, காப்புறுதி போன்ற சேவைகளை உள்ளடக் கியது. (1 × 3 = 3 புள்ளிகள்)

2) (i) தனியார் உடைமை, பொது உடைமை என்பவற்றின் கீழுன்ன வியாபார நிறுவனங்களின் பல்வேறு வகைகளைக் காட்டும் ஒரு வரைபடத்தை வரைக.



(ii) தனியுடைமை வியாபாரம், பங்குடைமை என்பவற்றில் இருந்து தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் வேறுபடும் ஆறு வழிகளைப் பெயரிடுக.

தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனியில்

* சட்ட ஆளுமை உண்டு.
* பொருப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.
* பதிவு கம்பனிச் சட்டத்தின் கீழ் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.
* நீண்ட காலம் தொடர்ந்தியங்குதல்
* மூலதனம் பங்குகளாளானது
* சட்ட விதிமுறைகள் அதிகம்
* உரிமையாளரின் தொகை அதிகம்
* முகாமை பணிப்பாளர் சபை மூலம்
* கணக்கீடும் கணக்காய்வும் கட்டாயமாகும் (½ × 6 = 3 புள்ளிகள்)

(iii) சரத்து சந்தருவான் ஒரு உணவு விடுதியை முகாமை செய்யும் ஒரு தனியுடைமை வியாபாரி ஆவர். அவர் தனது வியாபாரத்துக்கு "குடி~புடி" ("Goody - Foody) என்று பெயரிடத் தீர்மானிக்கின்றார். அவர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் எவை?

* வியாபார பெயர்பதிவுக் கட்டளைச் சட்டத்தின்படி ("Goody - Foody) என்ற பெயர் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டும்.
* வியாபாரப் பெயருடன் தனது சொந்தப் பெயரைக் கொண்டே ("சரத்சந்தருவான்") வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

(முதலாவது விடைமட்டும் இருப்பினும் 3 புள்ளிகள்)

(iv) அரசங்கத் திணைக்களங்களோடு ஒப்பிடுகையில் பொதுக் கூட்டுத்தாபனங்களின் நன்மைகள் யாவை?

* தீர்மானம் எடுப்பது போன்ற முகாமை கருமங்களில் நெகிழ்சித் தன்மை காணப்படல்
* அதிக மூலதனத்தைப் பெற்றுக் கொள்வது சுலபம்
* திறமையான முகாமை
* வியாபார சூழ்நிலைகளுக்கு ஏற்ப நடவடிக்கைகளை மாற்றக்கூடிய தன்மை.
* இலாபம் பெறக்கூடிய தன்மையில் செயற்படல்.
* நிதிரீதியாக சுதந்திரமாக செயற்படக்கூடிய தன்மை.
* ஊழியர்களுக்கு அதிகளவான சலுகைகள் / நலன்கள் காணப்படுகிறது.

(1 × 3 = 3 புள்ளகள்)

(v) ஒரு வியாபார நிறுவன வடிவம் என்ற வகையில் கூட்டுறவுகளின் விசேட பண்புகள் யாவை?

* இலாப நோக்கம் அற்றது
* ஜனநாயக ரீதியான செயற்பாடு
* சமூக, அங்கத்தவர் நலன் செயற்பாடு கருத்திற் கொள்ளப்படல்
* சமூக பொறுப்புணர்ச்சி காணப்படல்
* எந்தவொரு அரசியலமைப்பு முறையிலும் செயற்பட முடிதல்
* பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட அளவில் மிகை பங்கிடப்படல்
* சுதந்திரமான தன்னிச்சையான அங்கத்துவம். (1 × 3 = 3 புள்ளிகள்)
* துகர்வோர் கூட்டுறவு சங்கங்களை பொறுத்தவரை அங்கத்துவம் குறிப்பிட்ட பிரதேசத்திற்கு மட்டும் வரையறுக்கப்பட்டது.

3) (i) அனுமதி பெற்ற முகவர் வியாபாரமொன்றில் அனுமதி பெறுபவருக்கும் (Franchisee) அனுமதி கொடுப்பவருக்கும் (Franchisor) கிடைக்கக் கூடிய நன்மைகள் மூன்றை ஒவ்வொருவருக்கும் பெயரிடுக.

அனுமதி பெறுபவர் (Franchisee)

* வியாபார நிலையத்தின் பெயரை (Trade Name) பயன்படுத்த முடிவதால் இலகுவாக பிரபல்யம் அடையலாம்.
* தாய் நிறுவனத்திலிருந்து உற்பத்தி சம்பந்தமான அனைத்து உதவிகளையும் பெற்றுக்கொள்ளலாம். (உற்பத்தி நுட்பங்கள், பங்கீடு, சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள்).
* அதிகளவு ஆரம்ப மூலதனமின்றி வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிக்கக் கூடிய நிலை.
* சந்தையில் உட்பிரவேசித்தல் இலகு.
* தாய் நிறுவனத்திலிருந்து முகாமை, தொழிலாளர் தொடர்பான அனைத்து அறிவுரைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.
* தாய் நிறுவனம் பொருட்கள் சேவைகள் தொடர்பாக உத்தரவாதம் வழங்குதல்.

($\frac{1}{2} \times 3 = 1\frac{1}{2}$ புள்ளிகள்)

அனுமதி கொடுப்பவர் (Franchisor)

* முதலீடுகள் இன்றி அதிகளவு இறையைப் பெற்றுக்கொள்ளலாம்.
* தமது சட்டதிட்டங்களுக்கு அமையவே அனுமதி பெற்றவர் செயற்பட வேண்டும்.
* சர்வதேச ரீதியாக வியாபாரத்தை விரிவுபடுத்த முடிதல்.
* வாடிக்கையாளர் அதிகரிப்பதால் நன்மதிப்பு அதிகரிக்கும். ($\frac{1}{2} \times 3 = 1\frac{1}{2}$ புள்ளிகள்)

(ii) ஒரு பொரு வரையறுக்கப்பட்ட கம்பனியின் சாதாரண பங்குகளில் முதலீடு செய்வதன் மூலம் ஒரு முதலீட்டாளர் பெறக்கூடிய நன்மைகள் யாவை?

* பங்கிலாபம் பெறலாம்
* தேவைப்படும்போது பங்குச் சந்தையில் பங்குகளை விற்று பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.
* பங்குகளின் விலை அதிகரிக்கும் போது பங்குகளை விற்பதன் மூலம் இலாபம் பெறலாம்.
* பங்கு கொள்வனவு அடிப்படையில் வாக்களிக்கும் உரிமை காணப்படுவதால் முகாமை தொடர்பான தீர்மனங்களில் ஆதிக்கம் செலுத்தலாம்.
* உபகாரப் பங்குகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
* உரிமை பங்குகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
* இலாபம் அதிகரிக்கும் போது கூடிய இலாபத்தை பெற்றுக்கொள்ளலாம்.

(iii) 1990களைப் "பசுமைச் சகாப்தம்" என அழைக்கப்படுகிறது. இச்சந்தர்ப்பத்தில், சூழ்நிலையைப் பாதுகாப்பதற்கு வியாபாரிகள் எவ்வாறு பங்களிப்புச் செய்யமுடியும் என விளக்குக.

"பசுமைச் சகாப்தம்" (Green Decade) என்றால் சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்காத முறையில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்காக ஒதுக்கப்பட்ட 10 ஆண்டுகள்.

* பிளாஸ்டிக் பொலிதீன் என்பவற்றிற்கு பதிலாக விரைவில் அழிவடையக் கூடிய கடதாசி, ஓலை போன்றவற்றைப் பயன்படுத்தல்.
* நிலம், நீர், வளி, இரைச்சல் போன்றவை மாசடையாமல் உற்பத்தியில் ஈடுபடல்
* மீளப் பயன்படுத்தல்

* கழிவுகளிலிருந்து மீள் உற்பத்திகள் ஆக்குதல்
* இயற்கை வளங்களை வீண் விரயமாக்காமை. (1 × 3 = 3 புள்ளிகள்)

(iv) பணத்தின் அபிவிருத்தியிலுள்ள பிரதான கட்டங்களை விளக்குக.

* பண்டமாற்று முறையின்போது பயன்படுத்தப்பட்ட பல்வேறு பொருட்கள் (சிப்பி, புகையிலை போன்றவை)
* உலோகங்களைப் பயன்படுத்தல் (வெள்ளி, தங்கம்)
* குத்தி, தாள் நாணயங்களை பயன்படுத்தல்
* காசோலைகளின் பயன்பாடு
* இலக்ரோனிக் பணப் பாவனை (E - Cash)

(3 விடைகள் ஒழுங்குக் கிரமமாக தரப்படின் 1 × 3 = 3 புள்ளிகள்)

(v) ஒரு காசோலை எழுதும்போது வரைவோனால் பின்பற்றப்பட வேண்டிய அடிப்படை அம்சங்களைப் பெயரிடுக.

* திகதி சரியாகக் குறிக்கப்படல்
* பெறுபவர் பெயருக்கு எழுதப்படல்.
* பண மோசடி செய்யாவண்ணம் தொகை எழுத்திலும் இலக்கத்திலும் பிறரால் மாற்றம் ஏற்படுத்த முடியாத வகையில் எழுத வேண்டும்.
* கையொப்பத்தை வரைபாளர் சரியான இடத்தில் இடவேண்டும்.
* தவறுகள் ஏற்படுமிடத்து அதனைத் தனிக்கோட்டால் வெட்டி சரியானதை எழுதி தனது கையொப்பத்தை முழுமையாக இடல்.
* பாதுகாப்புக் கருதி பொருத்தமான குறுக்குக்கோட்டை இடல்.
* காசோலை சம்பந்தமான விடயத்தை அடிக்கட்டையில் குறித்து வைத்தல்.
* காசோலையை வரையும் பொழுது மாற்றங்களை மேற்கொள்ள முடியாத விதத்தில் காசோலையை எழுதவேண்டும். (½ × 6 = 3 புள்ளிகள்)

பகுதி "ஆ"

4) (i) அண்மையில் இலங்கையில் தனியார் உடைமை வணிக வங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன. வியாபார சமூகத்திற்கு இதன் நன்மைகளை விளக்குக.

* வங்கி சேவை விருத்தி ~ வேலைநேர அதிகரிப்பு; படிவங்களில் தேவையற்ற விபரங்கள் உள்ளடக்காமை ; வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்; நேர சேமிப்பு சுமுகமான சூழல்.
* தொலைபேசி வங்கி சேவை (Tele Banking) ~ தொலைபேசியூடாக வங்கி வசதிகளை பெற்றுக்கொள்ளல்.
* கவர்ச்சிகரமான வட்டிகளுடன் கூடிய அதிர்ஷ்ட சீட்டு முறைகள்.
* குறைந்த கட்டுப்பாடுகளுடனான பல்வேறுபட்ட வங்கிக் கடன் முறைகள்.
* ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கையின் பொழுது பிரதி கருத்தா சேவையை வழங்குதலும் பணம் பெறுதல், பணம் செலுத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுதலும்.
* வங்கி கிளைகளின் விருத்தியும் வங்கிக் கிளைகளுக்கிடையிலான வலைப்பின்னல் சேவையும் பரவலாக்கப்பட்டுள்ளது.

* E - Cash நடவடிக்கை விருத்தியடைந்தமை
* இரவு நேர வங்கிசேசை
* குத்தகை வசதி செய்தல் (1 × 3 = 3 புள்ளிகள்)

(ii) ஒரு சொத்துக், குத்தகை மூலம் அல்லது கொள்வனவு மூலம் கொள்ளப்பட வேண்டுமா? இல்லையா என்பதைத் தீர்மானிக்கும்போது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய காரணிகளைப் பெயரிடுக.

* வியாபாரத்தின் திரவத்தன்மை ~ ஆரம்ப நிலையில்
* சொத்தின் கிரயம்
* சொத்துத் தேவைப்படும் கால அளவு
* சொத்தினை கொள்வனவு செய்வதாயின் தேவைப்படும் முதலுக்கான வட்டி.
* சொத்து பராமரிப்பதற்கு ஏற்படுகின்ற செலவு.
* தொழில்நுட்ப மாற்றத்தின் வேகம்.
* பயன்பாட்டின் பின் குத்தகை நிறுவனம் சொத்தினை விற்பதாயின் கொள்வனவு செய்யக் கூடிய தன்மை.
* வரிச் சலுகைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிமை. (1 × 3 = 3 புள்ளிகள்)

(iii) ஒரு வங்கிக் கடனுக்கு விண்ணப்பிக்கும்போது ஒரு வியாபாரி வழங்கவேண்டிய மிக முக்கியமான தகவல்கள் யாவை?

* வியாபாரத்தின் கடந்தகால வருமானம் தொடர்பான விபரங்கள்
* கடன் பெறுவதன் நோக்கமும் அதன் பயன்பாடும்.
* பிணையாக வைக்கப்படும் பொருள்.
* கடனைத் திருப்பிச் செலுத்தும் தன்மையும் முறையும்.
* மூலதன பயன்பாடு தொடர்பான விபர அறிக்கை
* வியாபாரம் ஏற்கனவே பெற்றுக்கொண்டுள்ள கடன் சம்பந்தமான விபரம்

(1 × 3 = 3 புள்ளிகள்)

(iv) "பணச்சந்தை", "மூலதனச் சந்தை" என்பவற்றுக்கிடையேயுள்ள வேறுபட்டை விளக்கி இலங்கையில் ஒவ்வொரு சந்தையிலுமுள்ள நிறுவனங்களின் வகைகளைப் பட்டியலிடுக.

பணச்சந்தையானது குறுங்கால நிதிவழங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய நிறுவனங்களின் தொகுதியாகும்.

மூலதனச் சந்தையாது நீண்ட கால அடிப்படையில் நிதி தேவைகளை நிறைவு செய்துகொள்ள கூடிய நிறுவனங்களின் தொகுதியாகும். (1 புள்ளிகள்)

பணச்சந்தை நிறுவனங்களின் வகைகள்:~

* வங்கிகளுக்கிடையிலான அழைப்புக் கடன்சந்தை
* திறைசேரி உண்டியல் சந்தை
* உள்ளூர், அன்னிய செலாவணி சந்தை
* கரைகடந்த வங்கிச் சந்தை
* மீள் கொள்ளுதல் சந்தை (½ × 2 = 1 புள்ளிகள்)

மூலதனச் சந்தை நிறுவனங்களின் வகைகள்:-

* பங்குச் சந்தை
* வர்த்தக வங்கிகள்
* வங்கியல்லாத நிறுவனங்கள்
* அலகுப் பொறுப்பாட்சி நிறுவனங்கள் (½ × 2 = 1 புள்ளிகள்)

(v) சிறு குறிப்புகள் எழுதுக.

(அ) பங்கு ஆணை

(ஆ) கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தின் உள்ள பிரதான பலகை

(இ) திறைச்சேரி பிணைப் பத்திரங்கள்

(அ) பங்கு ஆணை (Shaewarrant)

எதிர்காலத்தில் குறிப்பிட்ட விலையில் நிறுவனத்தின் பங்குகளை கொள்வனவு செய்வதற்காக உரிமையை உறுதிப்படுத்தி வழங்கும் ஒரு பத்திரமாகும். இது கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் நிரற்படுத்தப்பட்டுள்ளதுடன் கைமாற்றக் கூடிய ஒரு ஆவணமாகும். (1 புள்ளிகள்)

(ஆ) கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தின் உள்ள பிரதான பலகை (Main Board in the Colombo Stock Exchange)

கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தில் நிரற்படுத்தப்பட்ட நிறுவனங்களில், கீழ் குறிப்பிட்ட நிபந்தனைகளை நிறைவு செய்துள்ள நிறுவனங்கள் பிரதான பலகையில் உள்ளடக்கப்படும்.

* வழங்கிய மூலதனமானது 75 மில்லியனாக இருத்தல்
* வழங்கிய மூலதனத்தில் 25% பொதுமக்களுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும்.
* குறைந்தது மூன்று வருடங்கள் திருத்திகரமான செயற்பட்டிருத்தல்.
* பங்குதாரரின் எண்ணிக்கை குறைந்தது 300 பேராவது காணப்பட வேண்டும்.

(1 புள்ளிகள்)

(இ) திறைச்சேரி பிணைப் பத்திரங்கள் (Treasury Bonds)

அரசாங்கத்திற்கு மத்திய நீண்ட கால கடன்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக அரசின்சார்பில் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் ஒரு பத்திரமாகும். (1 புள்ளிகள்)

5) (i) ஒரு தீ அபாய காப்புறுதி ஒப்பந்தத்தின் மூலம் வியாபாரி ஒருவர் பூர்த்தி செய்யக்கூடிய இடர்கள் எவை?

* தீ விபத்து
* வெள்ளப் பெருக்கு
* இடி மின்னல் தாக்கம்
* மின்சார ஒழுக்கு
* விமான விபத்து
* சூறாவளி
* புயல்
* குண்டு வெடிப்பு (மூன்று காரணிகளுக்கு 1 × 3 = 3 புள்ளிகள்)

(ii) ஊழியர் பொறுப்புக் காப்புறுதி, பொதுப் பொறுப்புக் காப்புறுதி என்பவற்றுக்கு இடையேயுள்ள வேறுபாட்டை விளக்குக.

* ஊழியர்கள் தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் பொழுது தொழிலாளருக்கு தொழில் தொடர்பாக ஏற்படக்கூடிய விபத்துக்களுக்கு எதிராக தொழில் கொள்வோரால் மேற்கொள்ளப்படும் காப்புறுதி உ+ம் தொழிலாளர் நட்டஈட்டுக் காப்புறுதி.

* பொதுமக்கள் / வாடிக்கையாளருக்கு ஏற்படும் விபத்துக்கள் அல்லது ஆபத்துக்கு எதிராக வியாபாரிகள் மேற்கொள்ளும் காப்புறுதி உ+ம் உணவு நஞ்சடைதல். (1½ புள்ளிகள்)

* இரண்டு காப்புறுதியும் தொழில் கொள்வோரால் மேற்கொள்ளப்பட்ட போதும் ஊழியர்பொறுப்புக் காப்புறுதி தொழிலாளர் சார்பில் மேற்கொள்ளப்படும். பொதுப் பொறுப்புக் காப்புறுதி பொதுமக்கள் / வாடிக்கையாளர் சார்பில் மேற்கொள்ளப்படும். (1½ புள்ளிகள்)

(iii) இலங்கையில் போக்குவரத்து அமைப்பை முன்னேற்றுவதற்கு எடுக்கப்படக்கூடிய வழிமுறைகளைத் தெரிவிக்குக.

* பாதை ~ விரிவாக்கம், புதிய பாதை அமைத்தல்
* தரிப்பிடம் ~ விரிவுபடுத்தல்
* சாதனம் ~ இயலளவு கூடுதலான சாதனங்களைப் பயன்படுத்துதல்
* போக்குவரத்துத் தொடர்பான விதிமுறைகள் ~ தண்டனைகளும் அவற்றை அழுல்படுத்தலும்.
* சக்தி / வலு (1 × 3 = 3 புள்ளிகள்)

(iv) இலங்கையிலுள்ள பெரும்பாலான வியாபாரங்கள் "மோசமான தொடர்பாடல்" மூலம் பாதிக்கப் படுகின்றன இதற்கான காரணங்கள் யாவை?

* நவீன தொடர்பாடல் முறைகளை பயன்படுத்தாமை.
* நவீன தொடர்பாடல் பாவனை தொடர்பான அறிவின்மை
* நீண்ட தொடர்பாடல் வழிகள் ஊடாக தகவல் செல்வதால் தொடர்பாடலில் காலதாமதம்.
* ஒழுங்கான திட்டமிடலின்மை
* பயன்படுத்தப்படும் மொழிப்பிரயோகத்தில் உள்ள குறைபாடு
* தொடர்பாடல் சாதனங்களின் பயன்பாட்டின்போது வெளிக்காரணிகளினால் ஏற்படும் தாக்கம் (உ+ம் மின்சாரத் தடை) (1 × 3 = 3 புள்ளிகள்)

(v) சிறுகுறிப்புக்கள் எழுதுக.

(அ) இணையம் (Internet)
(ஆ) அக இணையம் (Intranet)
(இ) இலத்திரன் தபால் (E - Mail)

(அ) இணையம் (Internet)

சர்வதேச ரீதியாக பரந்து காணப்படும் கணனி வலைப் பின்னல் ஆகும். (Wide Area Net, Work) / பூகோள ரீதியான கணனி வலைப்பின்னல் (Glob;e Net Work) இதில் பல்வேறு இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களைத் தனிப்பட்ட கணனிகள் மூலம் பெற்றுக்கொள்ளலாம் (World Wide Web / WWW) (1 புள்ளி)

(ஆ) அக இணையம் (Intranet)

நிறுவனத்திற்குள் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கும் வழங்குவதற்கும் பயன்படுத்தப்படும் கணனி வலைப்பின்னலாகும். (1 புள்ளி)

(இ) இலத்திரன் தபால் (E- Mail)

சர்வதேச வலைப்பின்னலைப் பயன்படுத்தி தனது சொந்தக் கணனி மூலம் வேறொர் கணனிக்குத் தகவல்களை பரிமாற்றிக் கொள்வதற்கு பயன்படுத்தப்படும் முறையாகும். இது சம்பந்தமாக தகவலைப் பெறுபவரிடமும் அனுப்புபவரிடமும் இலத்திரன் தபால் இலக்கம் இருத்தல் வேண்டும். (1 புள்ளி)

6) (i) அரசாங்கத்தின் மூலம் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்படும் வசதிகள் யாவை?

* சந்தை தொடர்பான தகவல்களை வழங்குதல்
* ஏற்றுமதி கட்டளையை பெற்றபின் கடன்வசதிகளை பெற்றுக்கொள்ளும் வசதி
* சுங்கப் பண்டகசாலை வசதி
* பலதரப்பட்ட வரிச் சலுகைகள் வரி விடுமுறைகள்
* ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் உத்தரவாதம்.
* பொறிகள், தொழினுட்பங்களை பெற்றுக்கொள்வதற்கு மூலதன வசதிகளை வழங்குதல்.
* வியாபார கண்காட்சிகள், வியபாபார பொருட்காட்சிகள் பங்குகொள்ள சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல். (1 × 3 = 3 புள்ளி)

(ii) மாற்றுண்டியல் என்றால் என்ன? ஒரு ஏற்றுமதியாளனுக்கு அது எவ்வாறு உதவுகிறது?

மாற்றுண்டியல் என்பது குறிப்பிட்ட தொகைப் பணத்தை குறிப்பிட்ட காலத்தில் அல்லது அதற்கு முன் தருவதாக கடன்பட்டோரால் ஒப்புக்கொள்ளப்பட்டு கடன்கொடுத்தோரால் பிறப்பிக்கப்பட்டு வழங்கப்படும் ஒரு நிபந்தனையற்ற எழுத்திலான ஆவனமாகும். (2 புள்ளிகள்)

பணம் பெறுவது உறுதிப்படுத்துவதுடன் முதிர்ச்சியடைவதற்கு முன் பணம் தேவைப்படின் கழிவுடன் மாற்றிக்கொள்ளலாம். (1 புள்ளி)

(iii) உலக வியாபார அமையத் (World Trade Organization) தின் பங்கினை விளக்குக.

* சர்வதேச வர்த்தகத்தின் கட்டுப்பாடுகளைத் தளர்த்தல் மூலம் உலக வர்த்தகத்தை விருத்திசெய்தல்.
* சர்வதேச வர்த்தகத்தில் காணப்படும் வரிமுறைகளைக் குறைத்தல்.
* அனுமதிப் பங்கு முறைகளை (கோட்டா முறை) குறைத்தல்.
* சர்வதேச வர்த்தகத்துக்கு தடையாகவுள்ள ஏனைய கட்டுப்பாடுகளை நீக்க நடவடிக்கை எடுத்தல். (1 × 3 = 3 புள்ளிகள்)

(iv) இறக்குமதியாளரும் ஏற்றுமதியாளரும் தமது இடர்களை இழிவாக்குவதற்கு உதவும் மூன்று நிறுவனங்களை பெயரிட்டு நிறுவனத்தினாலும் வழங்கப்படம் ஒரு தொழிற்பாட்டை பெயரிடுக.

* ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
  - விசுவாசமான கொள்வனவாளரை பெற்றுக்கொள்ள உதவுதல்
  - அடிப்படை வசதிகளை வழங்கல்
* ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
  - ஏற்றுமதி கடன் தொடர்பான பொருட்களுக்கு காப்புறுதி சேவைகளை வழங்குதல்.

* காப்புறுதி நிறுவனங்கள்
  - பல்வேறுபட்ட காப்புறுதி சேவைகளை வழங்குதல்

* வர்த்தக வங்கிகள்
  - முன்னோக்கிய நாணய மாற்று வசதிகளை வழங்குதல்

(பெயரிடல் ½ × 3 = 1½ புள்ளிகள்
விளக்கம் ½ × 3 = 1½ புள்ளிகள்)

(v) சிறுகுறிப்புகள் எழுதுக.

(அ) எதிர்வர்த்தகம் (Counter Trade)
(ஆ) சுமைச்சீட்டு
(இ) நாணயக் கடிதம்

(அ) எதிர்வர்த்தகம் (Counter Trade)

அந்நிய செலாவணி பற்றாக்குறையாகவுள்ள நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுதல். இந்நாடுகள் சர்வதேச வர்த்தகத்தை பல்வேறு முறைகளில் மேற்கொள்ளலாம். அவை யாவன.

- பண்ட பரிமாற்ற முறை
- பெறுமதியில் ஒரு பகுதியை பணவடிவிலும், மிகுதி தொகையை பொருள் வடிவிலும் கொடுத்து தீர்த்தல்.
- பொருட்களுக்கு வழங்கப்படும் பணத்தினை அந்நாட்டிலேயே செலவு செய்ய வேண்டும். (பொருட்கொள்வனவு முலம்) (1 புள்ளிகள்)

(ஆ) சுமைச்சீட்டு (Bill of Landing)

பொருட்கள் பொறுப்பேற்கப்பட்டது என்பதையும், அவை குறித்த துறைமுகம் வரை கொண்டு செல்லபடும் என்பதையும் உறுதிப்படுத்தி கப்பல் கம்பனியால் வழங்கப்படும் ஆவணமாகும். இறக்குமதியாளர் பொருளைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையை இவ்வாவணம் வெளிப்படுத்தும். (1 புள்ளி)

(இ) நாணயக் கடிதம் (Letter of Credit)

பொருட்களுக்கான கொடுப்பனவுகளை இறக்குமதியாளன் செலுத்துவான் என்பதை உறுதிப் படுத்தி இறக்குமதியாளானின் வர்த்தகவங்கியினால் ஏற்றுமதியாளனின் வங்கிக்கு அனுப்பி வைக்கப்படும் ஒரு ஆவணமாகும். (1 புள்ளி)

வணிகக் கல்வி II - (பகுதி I) - 2000

விடைகள்

01. 3	02. 5	03. 2	04. 4	05. 5
06. 2	07. 1	08. 5	09. 1	10. 2
11. 5	12. 2	13. 4	14. 4	15. 3
16. 3	17. 3	18. 1	19. 2	20. 4
21. 5	22. 3	23. 4	24. 5	25. 3
26. 1	27. 4	28. 2	29. 5	30. 4
31. 5	32. 3	33. 2	34. 3	35. 3
36. 5	37. 4	38 4	39. 5	40. 1

வணிகக் கல்வி II - (பகுதி II) - 2000

1) (i) தொழில்தருனர் ஒருவருக்கு வேலை பகிஷ்கரிப்பினால் ஏற்படக்கூடிய பாதகமான ஆறு விளைவுகளைப் பெயரிடுக.

* வெளியீட்டில் வீழ்ச்சி ஏற்படும் (Loss of Output)
* விற்பனை வீழ்ச்சியடையும் (Loss of Sale)
* காசுபாய்ச்சலில் வீழ்ச்சியேற்படும் (Loss of Cash Flow)
* நன்மதிப்பு வீழ்ச்சியடையும்
* வாடிக்கையாளர் குறைவடைதல் (கொள்வனவாளர்)
* விநியோகஸ்தர்கள் குறைவடைதல் (விற்பனையாளர்)
* தொழிலாளர்களின் மனவுறுதி தளர்வடைவதால் உற்பத்தி வீழ்ச்சியடைதல்
* இலாபம் வீழ்ச்சியடைதல். (½ × 6= 3 புள்ளிகள்)

(ii) "கூட்டுப் பேரம் பேசல்" என்பதை வினக்குக. ஒரு வியாபாரிக்கு கூட்டுப் பேரம் பேசலினால் கிடைக்கக் கூடிய இரண்டு நன்மைகளையும், இரண்டு தீமைகளையும் கூறுக,
தொழில்கொள்வோருக்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையிலான சமரசமான ஒரு இணக்கம் பேசலினால் கிடைக்கக் கூடிய (Negotiation) ஏற்படுவதற்கான ஒரு பேச்சுவார்த்தை கூட்டுப் பேரம் பேசல் எனப்படும்.

நன்மைகள்

* பேச்சு வார்த்தைகளின் ஊடாக இணக்கத்திற்கு வரக்கூடிய தன்மை
* இருதரப்பினருக்குமிடையில் சமூகமான உறவு ஏற்படும்.
* தொழிலாளரின் மனநிலையில் விருத்தியேற்பட்டு உற்பத்தி அதிகரிக்கும்.
* இரு தரப்பினருக்குமிடையேயும் நடைமுறைப்படுத்தக்கூடிய மாற்றங்களை இலகுவாக மேற்கொள்ள முடியும். (½ × 2 = 1 புள்ளி)

தீமைகள்

* தொழிலாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கையானது அதிக ஆதிக்கத்தை ஏற்படுத்தலாம்.
* சம்பளம், செலவுகள் என்பன அதிகளவில் ஏற்படும்.
* பிரச்சினைகள் தொடர்பாக தீர்மானங்கள் எடுப்பதில் தாமதம் ஏற்படும்.
* நிறுவனம் தொடர்பான சில தகவல்களை தொழிற்சங்கங்களுக்கு வெளிப்படுத்த வேண்டிய நிலை உருவாகும். (½ × 2 = 1 புள்ளி)

(iii) தற்போது நுகர்வோருக்கு ஏன் கூடிய பாதுகாப்பு தேவையென்பதை விளக்குக.

* அதிகளவு போட்டிகள் காரணமாக வியாபாரிகள் தமது பொருட்களை சந்தையில் விற்பனை செய்வதற்கு பல்வேறு தவறான வியாபார உத்திகளை கையாள்கின்றனர். (உ+ம்: தவறான விளம்பரங்கள், கலப்படம், நிறை / அளவை குறைத்தல், குறைந்த தரம், விலைமாற்றம்)

* திறந்த பொருளாதார கொள்கை காரணமாக பல்வேறு வகையான பொருட்கள் நாட்டிற்குள் கொண்டுவரப்படகின்றன. எனவே இவற்றின் தரங்களை மதிப்பிடுதல் கடினமாகவுள்ளது.

* குறித்த ஒரு பொருளில் பல்வேறு தெரிவுகள் காணப்படுவதால் சில சமயங்களில் நுகர்வோர் தெரிவினை மேற்கொள்ளுதல் கடினமாகும். (1 × 3 = 3 புள்ளிகள்)

(iv) காலாவதியான மருந்துகளை விற்கும் ஒரு மருந்துக் கடையைப் பற்றி நீர் அறிவீர். நீர் முறைப்பாடு செய்யக் கூடிய நான்கு திறத்தவர்களை பெயரிடுக. அவர்கள் எச்சட்டத்தின்படி செயலாற்ற முடியும்.

* பொது சுகாதார பரிசோதகர்
* உணவு, மருந்துப் பொருள் பரிசோதகர்
* சுகாதார வைத்திய பரிசோதகர் (M.H.O)
* பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்.
* மாகாண சுகாதார பணிப்பாளர்
* பொது சுகாதாரப் பணிப்பாளர் (D.G.H) (½ × 4 = 2 புள்ளி)

அழகு சாதனங்கள், கருவிகள், போதைமருந்துக்கள் சட்டம்
(சட்டத்தின் பெயர் பூரணமாகக் குறிக்கப்பட்டிருப்பின் மட்டுமே 1 புள்ளி)

(v) உற்பத்திக் கைத்தொழிலில் தனியார்துறை முதலீட்டை ஊக்குவிப்பதற்கு இலங்கை அரசாங் கத்தினால் எடுக்கப்பட்ட முயற்சிகள் எவை?

* வரிவிடுமுறை ~ கிடைக்கப்பெறும் வேலைவாய்ப்பு அளவிற்கு ஏற்ப வரிவிடுமுறைக்காலம் வேறுபடும்.
* அதிக சலுகைகளுடனான கடன் வசதிகள் (உ+ம் ஆடை கைத்தொழில்களுக்கு குறைந்த வட்டியுடனான கடன்கள்)
* புடவைக் கைத்தொழில் தொடர்பாக பெறப்படும் கடன்களை கழித்துக் கொள்வதற்கு புடவைக் கைத்தொழில்களுக்கு விசேட நிதி (புடவை கடன் மீளப்பெறல் நிதி - Textile Debt recovery fund - tDRF) உருவாக்கப் பட்டுள்ளது.
* புனரமைத்தல் நடவடிக்கையின்போது மேலதிகமாக 5 மில்லியன் ரூபாவை முதலீடு செய்பவர்களுக்கு சலுகைகளை வழங்குதல்.
* ஆரம்பத்தில் காணப்பட்ட புரள்பு வரி நிலுவைகளை பதிவழித்தல்.

* ஆடை இறக்குமதிகளுக்கான வரியினை அதிகரிப்பதன் மூலம் உள்நாட்டு ஆடைக் கைத்தொழிலைப் பாதுகாத்தல்.
* முதலீட்டுச் சபையினால் வழங்கப்படும் விசேட ஊக்குவிப்புக்கள் (1 ½ 3 = 3 புள்ளிகள்)

2) (i) "இலங்கையில் பொருளாதார அபிவிருத்திக்கு முயற்சியாளர்களின் பற்றாக்குறை ஒரு தடையாகும்" கருத்துரை செய்க.

எந்த வொரு நாட்டின் வியாபார நடவடிக்கையை மேம்படுத்துவதற்கு முயற்சியாளர் முக்கியமாகும். வியாபார சந்தர்ப்பங்களை அறிந்து கொண்டு நவீன் உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதற்கு முன்வருபவர் முயற்சியாளராவார். இந்நிலையில் முயற்சியாளர்கள் அதிகமாகக் காணப்பட்டால் வியாபார நிலை விருத்தியடையும். சிறிய அளவில் ஆரம்பிக்கப்படும் பல வியாபாரங்கள் பேரளவில் செயற்படுவதற்கு காரணம் இம்முயற்சியாளர்களேயாகும். இவ்வகையான முயற்சியாளர்கள் இலங்கையில் குறைவாகக் காணப்படுவதால் பொருளாதார அபிவருத்திக்கு தடையாகவுள்ளது. (3 புள்ளிகள்)

(முயற்சியாளர் என்பவர் யார், தடைகள், பொருளாதார விருத்தியில் தாக்கம் என்பன பற்றி குறிப்பிடப்பட்டிருந்தால் முழுமையான புள்ளி வழங்கவும்.)

(ii) ஒரு முயற்சியாளானின் ஆறு முக்கிய பண்புகளைப் பெயரிடுக.
* புதிய வியாபார சூழ்நிலையை இனங்காணல்
* சாதகமான முறையில் நோக்கும் தன்மை
* சுய நம்பிக்கையுடையவரா இருத்தல்
* இலக்குடையவராக இருத்தல்
* உற்சாகத்துடன் செயற்படக்கூடிய திறன்
* ஒத்துழைக்கும் தன்மை
* தலைமைத்து ஆற்றல் ~ மனிதாபிமான முறையில் நோக்குதல்
* பின்னூட்டல்களை பெற்றுக்கொள்ளக்கூடிய தன்மை
* சுய கட்டுப்பாடு
* இடர்களை ஏற்றுக்கொள்ளும் தன்மை (½ × 6 = 3 புள்ளிகள்)

(iii) ஒரு சிறிய வியாபாரத்தை ஆரம்பிக்கும்போது ஒரு முயற்சியாளனால் பெறக்கூடிய மூன்று நன்மைகளைப் பெயரிடுக.
* ஏவ்வித தலையீடுகளுமின்றி தனது இலக்கை சுயமாகத் தீர்மானித்துக் கொள்ள முடியும்.
* தனது ஆற்றலை, சக்தியை முழுமையாகப் பயன்படுத்தக்கூடிய தன்மை.
* இலாபத்தை உச்சளவில் பெற்றுக்கொள்ளலாம்.
* சுய திருப்தி ஏற்படும். (1 × 3 = 3 புள்ளிகள்)

(iv) இலங்கையின் மத்திய வங்கியினால் ஆரம்பிக்கப்பட்ட "சுரத்துர" (SURATHURA) நிகழ்ச்சித் திட்டத்தை விளக்குக.

1996 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. கல்வி கற்ற வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு சுயதொழில் அடிப்படையில் வருமானத்தைப் பெற்றுக்கொடுபபதற்கும், சிறிய முயற்சியாண்மைக்கு கடன்களை வழங்குதலும் இதன் ஆரம்ப நோக்கமாகும். இலங்கை மத்திய வங்கி இது தொடர்பாக தேவையான அடிப்படை மூலதன வசதிகளை வழங்குகின்றது. இலங்கை வங்கி, மக்கள்

வங்கி, கற்றன் நஷனல் வங்கி என்பன மூலம் கடன் பெறலாம். இதற்கான ஆரம்பநிதியை வழங்குவது அரசாங்கமாகும். (திறைச்சேரி)

(v) சிறுகுறிப்புக்கள் எழுதுக.

(அ) நுகர்வோர் உரிமைகள்

(ஆ) இலங்கையின் முதலீட்டுச்சபை (BOI)

(இ) ஏற்றுமதி பதப்படுத்தும் வலயங்கள்

(அ) நுகர்வோர் உரிமைகள்

* பாதுகாப்பு பெறுவதற்கான உரிமை
* தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் உரிமை
* தெரிவு செய்யும் உரிமை
* கவனத்தை ஈர்ப்பதற்கான உரிமை
* அடிப்படைத் தேவைகளைப் பெறுவதற்கான உரிமை
* நுகர்வோர் கல்வியை பெறுவதற்கான உரிமை.
* நட்டஈட்டைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை.
* சமூகமான சூழலில் வாழ்வதற்கான உரிமை.

(நான்கு விடயங்களுக்கு 1 புள்ளி)

(ஆ) இலங்கையின் முதலீட்டுச்சபை (BOI)

இலங்கையின் பொருளாதார விருத்தியை மேம்படுத்தலும், இலங்கையின் பொருளாதார தரத்தை உறுதிப்படுத்துதலும், வெளிநாட்டு முதலீட்டு ஊக்குவிப்புக்களை பெறும் வழிகளை அறிதலும், வர்த்தக, விவசாய, கைத்தொழில் முயற்சிகளை மேம்படுத்தலும் போன்ற நடவடிக்கைகளுக்காக உருவாக்கப்பட்ட அமைப்பு இதுவாகும். (1 புள்ளி)

(இ) ஏற்றுமதி பதப்படுத்தும் வலயங்கள்

ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்டு உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கைத்தொழிற்சாலைகளைக் கொண்ட ஒரு தனிப்பட்ட விசேட வலயம் இதுவாகும். இவ்வலயத்தில் உள்ள தொழிற்சாலைகளுக்கு விசேட சட்ட விதிகளும் ஊக்குவிப்பு முறைகளும் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்றது. உ+ம் கட்டுநாயக்க, பியகம, கொக்கல, பள்ளேகல. (1 புள்ளி)

3) (i) ஒரு வியாபாரம் ஏன் திட்டமிடப்பட வேண்டும்?

* வியாபாரத்தின் குறிக்கோளை அடைவதற்கு
* இக்குறிக்கோளை நிறைவு செய்வதற்கான உபாயங்களை அறிந்து கொள்வதற்கு அதாவது எவ்வகையான வியாபாரத்தை ஆரம்பித்தல், எவ்வாறு நிதியிடல், எவ்வகையான முறைகளைப் பின்பற்றல் என்பனவாகும்.
* நிறுவனத்தினுள் உள்ள செயற்பாட்டில் காணப்படும் குறைபாடுகள், நிறைகள், வெளியக எதிர்ப்புக்கள் என்பவற்றை அறிந்து கொள்வதற்கு (SWOT)
* எதிர்காலத்தில் காணப்படும் நிச்சயமற்ற தன்மைகளை குறைப்பதற்கு.
* தேவையான வளங்கள் எவையென மதிப்பீடுவதற்கு
* நிகழ்கால, எதிர்கால போட்டித் தன்மையை மதிப்பீடுவதற்கு.

* நிறுவனத்தின் சகல நடவடிக்கைகளையும் முகாமைப்படுத்துவதற்கும், இணைப்பதற்கும்.

(1 × 3 = 3 புள்ளிகள்)

(ii) ஒரு வியாபாரம் ஏன் தனது சாதனைகளை கண்காணித்து மீளாய்வு செய்கிறது?

* குறித்த இலக்கினை நோக்கி செல்கின்றோமா? என அறிவதற்கும் அவ்வாறு செயற்படாவிடின் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும்.
* வியாபாரம் தொடர்ந்து செயற்படுவதற்கு தேவையான நிதிநிலைமைகள் காணப்படுகின்றதா என்பதை அறிவதற்கு.
* வியாபாரத்தின் செலவுகளைக் குறைப்பதற்கு
* இலாபத் தன்மையை அதிகரிப்பதற்கு. (1 × 3 = 3 புள்ளிகள்)

(iii) அதிகாரக் கையளிப்பின் நோக்கத்தை விளக்குக.

* குறைந்தளவு முக்கியத்துவம் உடைய நாளார்ந்த நடவடிக்கைகள் தொடர்பான தீர்மானங்களை தீர்மானிப்பதற்கு தனக்குக் கீழுள்ள அதிகாரிகளிடையே அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல் காரணமாக கீழ்மட்ட அதிகாரிகளிடையே பொறுப்புணர்ச்சியேற்படும்.
* உயர் அதிகாரிகள் / முகாமையாளர்கள் மிகமுக்கியமான விடயங்கள் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதில் அதிகளவு கவனம் செலுத்தக் கூடியதாக இருக்கும்.
* விரைவாக தீர்மானங்களை எடுக்கக் கூடியதாக இருப்பதுடன் விரைவாகத் தொழிற்படக் கூடியதாகவும் இருக்கும்.
* மிகச் சரியான தீர்மானங்களை எடுப்பதற்கு வாய்ப்புக்கள் ஏற்படும்.

(1 × 3 = 3 புள்ளிகள்)

(iv) "பணம் மட்டும் ஒரு தூண்டுதற் கருவி அன்று" தொழிலாளரைத் தூண்டும் வேறு மூன்று முறைகளை விளக்குக.

* வேலைச் சூழலை முன்னேற்றுதல் (Improve Working Condition)
(சிறந்த வேலை சூழல், நவீன உபகரணங்கள்)
* சிறந்த பயிற்சி அளித்தல்
* தீர்மானங்களை மேற்கொள்வதில் ஊழியர்களும் பங்குகொள்ளல்.
* பதவி உயர்வுக்கான வாய்ப்புக்களை வழங்குதல்.
* நலன்நோம்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் (சீருடை, உணவு, போக்குவரத்து, மருத்துவ வசதி, போன்றவைகள்).
* வேலை முறையை நவீனமயப்படுத்தல் (உற்சாகத்துடன் செயற்படக்கூடியதாக இருக்கும்).

(1 × 3 = 3 புள்ளிகள்)

(v) சிறுகுறிப்புக்கள் எழுதுக.

(அ) தலைமை
(ஆ) கட்டுப்படுத்துதல்
(இ) வினைத்திறன் (Efficency)

(அ) தலைமை

நிறுவனத்தின் குறிக்கோளை அடைந்து கொள்வதற்கு தனது உதவியாளர் களுடன் இணக்கமாகச் செயற்பட்டு வழிநடத்துதல் தலைமைத்துவம் ஆகும்.

(1 புள்ளி)

(ஆ) கட்டுப்படுத்துதல்

நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டமிடல் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேறியுள்ளதா என்பதை உறுதிசெய்வதும், அவை வேறுபடுமாயின் அதனை ஒழுங்குபடுத்தி (சீராக்கி) கொள்வதுமாகும். (1 புள்ளி)

(இ) வினைத்திறன் (Effiicency)

மேற்கொள்ளும் செயற்பாட்டினை தவறுகள் எதுவுமின்றி மேற்கொள்ளல் / குறைந்த உள்ளீடுகள் முலம் கூடிய வெளியீட்டினைப் பெற்றுக்கொள்ளல் / உள்ளீட்டு வெளியீட்டுகளுக்கிடையிலான தொடர்பு / நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக வளங்களை ஒழுங்கான முறையில் பயன்படுத்துதல். (1 புள்ளி)

பகுதி "ஆ"

4) (i) உற்பத்திப் பொருள் என்ற தொடரை வரையறுத்து அதன் வகைகளையும் தருக.

மனித தேவைகளை, விருப்பங்களை நிறைவு செய்தல் பொருட்டு பயன்படும் எதுவும் உற்பத்தியாகும். (1 புள்ளி)

வகைகள்:

* பொருள்
* எண்ணங்கள்
* இடம்
* நிறுவனங்கள்
* சேவைகள்
* நபாகள் (people)
* நடவடிக்கைகள் (events)
* செயற்பாடுகள் (activities)

(1 × 2 = 2 புள்ளிகள்)

(ii) மூன்று விலையிடல் நோக்கங்கள் மூன்று விலையிடல் கொள்கைகள் என்பவற்றைத் தருக.

விலையிடல் நோக்கங்கள் :

* சந்தையில் தொடர்ந்து நிலைத்திருத்தல் (Servival Objective)
* இலாபத்தை உச்சப்படுத்தல்
* வருமானத்தை உச்சப்படுத்தல்
* விற்பனையை அதிகரிக்கத்தல் / சந்தைப்பரப்பின் அளவை அதிகரிக்கும் நோக்கம்
* கிரயத்தை மீளப் பெற்றுக்கொள்ளல் (½ × 3 =1½ புள்ளிகள்)

விலையிடல் கொள்கைகள்:

* அதியுயர் விலையிடல் / கடைதல் விலையிடல் (Skimming Pricing Policy)
* ஊடுருவல் விலையிடல் (Penetration Pricing Policy)
* போட்டியாளர் சார்ந்த விலையிடல்.
* உளசார்பான / உளவியல் விலையிடல்
* புவியியல்சார் விலையிடல்.
* கிரயம் சார்ந்த விலையிடல்.
* தலைமைத்துவ விலையிடல். (½ × 3 = 1½ புள்ளிகள்)

(iii) ஒரு உற்பத்திப் பொருளின் விநியோக வழிகளை தெரிவு செய்வதில் செல்வாக்குச் செலுத்தும்

மூன்று காரணிகளை இனங்காண்க.

* நடுவர்கள் எதிர்பார்க்கும் வியாபாரக் கழிவு, தரகு (கிரயத்தில் தாக்கம்)
* நடுவர்களின் மூலதனம், முகாமை தொடர்பான சக்தி (களஞ்சியப்படுத்தல் வசதி, போக்குவரத்து வசதி, ஊழியர் வசதி)
* வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய சந்தைப் பரப்பு.
* கொடுக்கல் வாங்கல் செய்வோரிடையே விநியோகமார்க்கம் தொடர்பான நம்பகத்தன்மை
* நடுவர்களின் நன்மதிப்பு.
* உற்பத்திப் பொருளின் தன்மை. (1 × 3 = 3 புள்ளிகள்)

(iv) "விளம்பரப்படுத்தற் செலவுகள் காரணமாக உற்பத்திப் பொருளின் விலைகள் உயருகின்றன" கருத்துரை செய்க.

விளம்பரத்திற்குச் செலவுகள் ஏற்படுகிறது. இதனால் பொருளின் விலை உயர்கின்றது, விளம்பரத்தல் விற்பனை / உற்பத்திக் கேள்வி அதிகரிக்கும் / நிரம்பல் அதிகரிக்கும், இதனால் ஒரு அலகுகான செலவு குறையும் எனவே விலை வீழ்ச்சியடையும்.

(இருபக்கமும் குறிப்பிட்படின் 3 புள்ளிகள்)

(v) சிறுகுறிப்புக்கள் எழுதுக.

(அ) பரிமாற்றம்

(ஆ) பண்டக்குறி விசுவாசம்

(இ) சமூக சந்தைப்படுத்தல் எண்ணக்கரு.

(அ) பரிமாற்றம் (Exchage)

ஒரு உற்பத்தியை வேறு ஒருவரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்காக அவருக்குத் கொடுக்கும் பெறுமதி.

(ஆ) பண்டக்குறி விசுவாசம் (Brand Loyalty)

வாடிக்கையாளர் ஒருவர் பண்டக்குறி மீது கொண்டிக்கும் விருப்பம் ஆகும். இது மூன்று வழிகளில் ஏற்படுகிறது.

* பொருட்களை வர்ங்கும் போது பண்டக்குறியைக் கேட்டு வாங்குதல் / வேறு தெரிவு இல்லை.
* பண்டக்குறியிலும் காட்டப்படும் விருப்பத்தெரிவு / வேறு தெரிவு உண்டு.
* பண்டக்குறி பற்றி அறிந்திருந்தபோதும் வேறு பண்டக்குறியையுடைய பொருட்களைக் கொள்வனவு செய்தல். (1 புள்ளி)

(இ) சமூக சந்தைப்படுத்தல் எண்ணக்கரு (Societal Marketing Concept)

வாடிக்கையாளாரின் தேவைகளையும் விருப்பங்களையும் திருப்திப்படுத்தும் வகையில் பொருட்களை உற்பத்தி செய்வது விலையிடுதல், விநியோகத்தை மேற்கொள்ளுதல் என்பவற்றுடன் சமுதாயத்திற்கு நன்மை பயக்கக் கூடிய வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகும். (1 புள்ளி)

5) (i) ஏன் ஓர் உற்பத்தி நிறுவனத்துக்கு வினைத்திறன்மிக்க இருப்புக்கட்டுப்பாட்டு முறை ஒன்று முக்கியமானது என்பதை விளக்குக.

* அவசியமற்ற பாதுகாப்புச் செலவை (Holding Cost) நீக்குதல் (களஞ்சிய செலவுகள், மூலதன முடக்கம், காப்புறுதி செலவு, சரக்குகள் பழுதடைதலும் அழிவடைதலும், களவு)
* தடையின்றி உற்பத்தியை மேற்கொள்ளலாம் (கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளை குறிப்பிட்ட காலத்தில் நிறைவு செய்து கொள்வதன் மூலம் கொடுக்கல் வாங்கல் தடையினால் ஏற்படக்கூடிய மேலதிக செலவுகளைத் தவிர்க்கலாம்.)
* மொத்த செலவினை இழிவுபடுத்தலாம் (பொருளாதாரக் கட்டளைக் கணியம் EOQ)
* இருப்பு விநியோகம் வினைத்திறனுடன் மேற்கொள்ளும் போது இருப்பு விரயம், மோசடி என்பவற்றைக் குறைத்துக்கொள்ளலாம். (1 × 3 = 3 புள்ளிகள்)

(ii) ஒரு மூலதனக் கருவியைக் கொள்வனவு செய்வதைக் காட்டிலும் குத்தகைக்குப் பெறுவதால் வரக்கூடிய மூன்று நன்மைகளை விளக்குக.

* மூலதனக் கருவியை கொள்வனவு செய்வதற்கு அதிகளவு மூலதனம் தேவை. இதனை குத்தகை முறையில் பெற்றுக் கொள்ளும்போது குத்தகைக் கட்டணத்தை மட்டும் செலுத்த வேண்டும். எனவே பாரிய மூலதனம் அவசியமில்லை.
* தொழில்நுட்ப மாற்றத்துக்கேற்ப விரைவாக மாற்றமடையக் கூடிய கருவிகளை குத்தகை மூலம் பெற்றுக் கொள்ளுதல் நன்மையாகும்.
* பாரமரிப்பு செலவை குத்தகை நிறுவனம் பொறுப்பேற்பதால் நிறுவனத்திற்குச் இச்செலவு ஏற்படாது.
* வரிச்சலுகையைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு உண்டு
* தேவைப்படின் குத்தகைக் கால முடிவில் அப்பொருளை குறைந்த விலைக்குக் கொள்வனவு செய்யலாம்.
* மூலதனக் கருவியின் பாவனைக் கால முடிவில் அகற்றுதல் தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகள் நிறுவனத்துக்கு ஏற்படாது. (1 × 3 = 3 புள்ளிகள்)

(iii) ஒரு பொது வரையறுக்கப்பட்ட கம்பனிக்கான மூன்று அகநிதி மூலங்களையும் மூன்று புறநிதி மூலங்களையும் பெயரிடுக.

அகநிதி
* நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம்
* ஒதுக்கங்கள்
* மேலதிகச் சொத்து விற்பனை வருமானங்கள்
* குறுங்காலத்தில் வருமதிகளை பெற்றுக்கொள்ளுதலும், சென்மதிகளை நீண்ட காலத்தில் செலுத்துவதலும்.
* பெறுமானத்தேய்வு ஒதுக்கம். (½ × 3 = 1½ புள்ளிகள்)

புறநிதி
* வர்த்தக வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய நீண்டகாலக் கடன்களும், வங்கி மேலதிகப் பற்றும்.
* வங்கியல்லா நிறுவனங்களிலிருந்து பெறப்படும் கடன்.
* பங்கு விநியோகம்
* தொகுதிக்கடன்கள் விநியோகம்.
* குத்தகைக்கு எடுத்தல்.

* காரணிப்படுத்தல் (Factoring) – கடன்பட்டோரிடமிருந்து பெறவேண்டிய தொகையை வெளிநிறுவனங்களுக்கு ஒப்படைத்து அந்நிறுவனங்களிலிருந்து குறிப்பிட்ட தொகையை ஒரு குறிப்பிட்ட வீதக் கழிவு கழித்துக்கொண்டு பணமாகப் பெறல்.

(½ × 3 = 1½ புள்ளிகள்)

(iv) ஒரு பொது வரையறுக்கப்பட்ட கம்பனி மேலும் பங்குகளை வழங்குவதைவிட தொகுதிக் கடன்கள் மூலம் மேலதிய மூலதனத்தைத் திரட்டத் தீர்மானித்துள்ளது. அத்தீர்மானத்துக்கான மூன்று காரணங்களை விளக்குக.

* பங்குதாரரின் உரிமைகளில் தாக்கம் ஏற்படாதிருப்பதற்கு – இதனால் எதிர்காலத்தில் பங்கு தாரர்களுக்கு நிர்வாகம் தொடர்பாகக் காணப்படும் உரிமையில் தாக்கமேற்படாது.
* பங்கு வழங்கல் செலவினைவிட தொகுதிக் கடன் வழங்கல் செலவு குறைவு
* தொகுதிக் கடன்தாரருக்கு நிலையான வட்டி செலுத்த வேண்டியதால் சாதாரண பங்குதாரரின் இலாப அளவு அதிகரிக்கலாம் (பங்கு விளைவு வீதம் அதிகரிக்கும்)
* மூலதனக் கட்டமைப்பில் காணப்படவேண்டிய சமநிலையைப் பேணலாம்.
* தொகுதிக்கடன்களை தேவையேற்படும்போது மீட்டுக்கொள்ளலாம்.
* இலாப நட்டக் கணிப்பீட்டின் இலாபத்திலிருந்து தொகுதிக்கடன் வட்டியை கழித்துக் கொள்ளலாம்.

(1 × 3 = 3 புள்ளிகள்)

(v) சிறுகுறிப்புக்கள் எழுதுக.

(அ) சராசரி சேகரிப்புக் காலம்
(ஆ) நடப்பு விகிதம்.
(இ) காசோட்டக் கூற்று

(அ) சராசரி சேகரிப்புக் காலம்
கடன்பட்டோரிடமிருந்து கடனைச் சேகரித்துக்கொள்ள எடுக்கும் சராசரிக் காலத்தைக் குறிக்கும். இது கணிக்கப்படும் முறை.

$$\frac{\text{சராசரி கடன்பட்டோர்}}{\text{வருடாந்த கடன்விற்பனை}} \times 365 \text{ அல்லது } \frac{\text{சராசரி கடன்பட்டோர்}}{\text{நாளாந்த கடன் விற்பனை}}$$

(ஆ) நடப்பு விகிதம்
நடைமுறைப் பொறுப்புகளை கொடுத்துத் தீர்க்கக் கூடிய ஆற்றல் நடைமுறைச் சொத்துக் களுக்கு உண்டா என்பதைக் காட்டுவதாகும். நடைமுறைச் சொத்துக்களுக்கும் நடைமுறைப் பொறுப்புகளுக்குமிடையிலான தொடாபு. (1 புள்ளி)

(இ) காசோட்டக் கூற்று
குறிப்பிட்ட காலத்தில் வியாபாரத்துக்குள் காசு உட்பாய்ச்சற்பட்ட முறையையும், வெளிபாய்ச்சப் பட்ட முறையினையும் எடுத்துக்காட்டும். (1 புள்ளி)

5) (i) மனித சக்தி திட்டம் என்றால் என்ன? அவ்வாறான ஒரு திட்டத்தின் இரண்டு நன்மைகளைத் தருக.

ஒரு நிறுவனத்தின் எதிர்காலத்தில் தேவைப்படும் ஊழிய வகை, ஊழியர் எண்ணிக்கை, ஊழியர் தேவைப்படும் காலம் என்பவற்றை எதிர்வு கூறும் திட்டமாகும். (1 புள்ளிகள்)

நனமைகள்

* திட்டத்திற்கேற்ப ஆட்சேர்ப்பினை, ஆட்தெரிவினை மேற்கொள்ள முடியும்.
* நிறுவனத்திற்குலேற்படும் வெற்றிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்படுவதால் நிறுவனத்தின் செயற்பாடுகள் தடையின்றி நடைபெறும்.
* அவசரமாக ஊழியர்களைச் சேர்ப்பதால் ஏற்படக்கூடிய தேவையற்ற செலவுகள் ஏற்பட மாட்டாது.
* திட்டத்திற்கேற்ப நிறுவன முகாமைச் செயற்பாடுகளை தடையின்றிச் செயற்படும்.

(1 × 2 = 2 புள்ளிகள்)

(ii) "ஓர் ஆளுக்கான வேலை விபரணம்" "ஓராளுக்கான வேலைக் குறிப்புரை" என்பவற்றுக்கிடையேயுள்ள வேறுபாடுகளை விளக்குக.

வேலை விபரணம் (Job Description)
வேலை தொடர்பான நிபந்தனைகள்
உ+ம்: பதவி, வேலையின் தன்மை, காலம், கொடுப்பனவு போன்றவை.

(½ × 3 = 1½ புள்ளிகள்)

(iii) நிறுவனத்துக்கு உள்ளே இருந்து பதவியுயர்வதைவிட வெளியிலிருந்து ஒரு முகாமையாளரை ஆட்சேர்ப்பதன் மூன்று நன்மைகளையும், மூன்று குறைபாடுகளையும் பெயரிடுக.

* நவீன கருத்துக்கள் வியாபாரத்தினுள் உட்பாய்தல்
* பாரபட்சமின்றிச் செயற்பட முடியும்.
* பல்வேறுபட்டோலிருந்து தகுதியானோரைத் தெரிவு செய்ய முடியும்.

(½ × 3 = 1½ புள்ளிகள்)

தீமைகள்:

* நிறுவனம் தொடர்பான அறிவின்மை
* தற்போது வேலையிலுள்ள ஊழியர்கள் மனவிரக்தியடைய வாய்ப்புண்டு
* ஆட்சேர்ப்புச் செலவு அதிகம்.
* நிறுவனம் பின்பற்றிய பாரம்பரிய முறைகள் விடுபடும். (½ × 3 = 1½ புள்ளிகள்)

(iv) "கருத்திட்டம்" என்பதன் கருத்து என்ன என்பதை விளக்குக.

யாதேனுமொரு பிரச்சனை அல்லது விடயம் தொடர்பான விசேடமான அல்லது ஒருமைப்பாடான ஒரு தீர்வு. இது ஒரு சிறந்த வரையறுக்கப்பட்ட ஆரம்பத்தையும், முடிவையும் கொண்டதாக அமையும். (3 புள்ளிகள்)

(v) ஒரு கருத்திட்ட அறிக்கையை தயாரிப்பதன் நோக்கங்களை விளக்குக.

* வியாபாரத்தின் பொருளாதார, தொழிநுட்பம், நிதி, சமுதாய தேவைப்பாடு என்பவற்றை அறிந்து கொள்வதற்கு.
* திட்டமிடல் மூலம் திட்ட அடிப்படையில் எதிர்கால வேலையைத் தொடர முடிதல்
* தேவையான கடன் உதவிகளைப் பெற்குக்கொள்ள நிதி நிறுவனங்களுக்கு இதனைச் சமர்ப்பிக்கலாம்.
* திட்டம் வெற்றியளிக்குமா இல்லையா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

(1 × 3 = 3 புள்ளிகள்)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சை, 1999 ஒகஸ்ற் (புதிய பாடத்திட்டம்)

General Certificate of Education (A/L) Examination. August 1999 (New Syllabus)

BRIGHT BOOK CENTRE

வணிகக்கல்வி - I (பகுதி I)

இரண்டு மணி

29
T I

1 வது வினாவிலிருந்து 28 வது வினா வரைக்கும் விடையளிக்கும்போது உரிய பொருத்தமான பெட்டியில் √ என அடையாளமிடுக.

1. இலங்கையில் தற்போது காணப்படும் நுகர்வோர்களின் எண்ணிகை ஏறக்குறைய,
   - ☐ (1) 14 மில்லியன்.
   - ☐ (2) 16 மில்லியன்.
   - ☐ (3) 18 மில்லியன்.
   - ☐ (4) 20 மில்லியன்.
   - ☐ (5) 22 மில்லியன்.

2. வியாபாரம் தோற்றுவிக்கப்பட்டது ஏனெனில்
   - ☐ (1) நேரடி உற்பத்தி காரணமாக
   - ☐ (2) பணப் பாவனை காரணமாக
   - ☐ (3) கைத்தொழில் புரட்சி காரணமாக
   - ☐ (4) நேரடியற்ற உற்பத்தி காரணமாக
   - ☐ (5) பணமுறைமை காரணமாக.

3. தங்கம், வெள்ளி, நவரத்தினங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் நகை ஆபரணம் பின்வருவனவற்றில் என்ன வகைக் கைத்தொழிலாகும்.
   - ☐ (1) ஆரம்ப நிலைக் கைத்தொழில்
   - ☐ (2) இரண்டாம் தரக் கைத்தொழில்.
   - ☐ (3) மூன்றாம் தரக் கைத்தொழில்
   - ☐ (4) அரச கைத்தொழில்
   - ☐ (5) சுரங்கக் கைத்தொழில்

4. பின்வருவனவற்றுள் சரியான கூற்று.
   - ☐ (1) வணிகர்கள் தேவைகளை தோற்றுவிக்கின்றனர்.
   - ☐ (2) விருப்பங்கள் தேவைகளை தோற்றுவிக்கின்றன.
   - ☐ (3) மேம்படுத்தல் தேவைகளை ஏற்படுத்துகின்றன.
   - ☐ (4) நாடுகளுக்கேற்ப தேவைகள் வேறுபட்டிருந்த போதும், விருப்பங்கள் ஒத்ததன்மையானது.
   - ☐ (5) பல தரப்பட்ட பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வதனால் விருப்பங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன.

5. ஒரு உற்பத்தி எனப்படுவது

☐ (1) பொருட்கள் / சேவைகள் / எண்ணங்கள்.
☐ (2) பொருட்களும் சேவைகளும்.
☐ (3) கைத்தொழில் பொருட்கள்.
☐ (4) நுகர்வோர் பொருட்கள்.
☐ (5) தொட்டுணரக் கூடிய பொருட்கள் மட்டும்.

6. வியாபாரங்கள் வெற்றிகரமானதாகக் காணப்படுவது பெரும்பாலும் அவை

☐ (1) உயர்ந்த இலாபத்தை உழைக்கும் போது.
☐ (2) உயர்ந்த தரமான பொருட்களை உற்பத்தி செய்யும் போது.
☐ (3) மிகச் சிறந்த ஊழியர்களை சம்பளத்திக்கு அமர்த்தும்போது.
☐ (4) சமூகத்திற்கு சில பங்களிப்புக்களை மேற்கொள்ளும் போது.
☐ (5) மக்கள் விரும்புகின்ற பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்யும் போது.

7. வரையறுக்கப்படாத பொறுப்பு எனப்படுவது.

☐ (1) வியாபாரத்தின் மொத்தச் சொத்துக்களின் பெறுமதிக்கு உரிமையாளரே பொறுப்பாகும்.
☐ (2) வியாபாரத்தின் உரிமைத்துவத்திற்கு வரையறை இல்லை.
☐ (3) வியாபாரத்தின் பொறுப்புக்களை தீர்ப்பதற்கு உரிமையாளர் தனது சொந்த சொத்துக்களையும் இழக்க நேரிடலாம்.
☐ (4) பங்குதாரர்கள் அவர்களுக்கு சொந்தமான பங்குகளின் மொத்த பெறுமதிக்கு மட்டுமே பொறுப்பானவர்களாவார்.
☐ (5) பங்குதாரர்கள் அவர்கள் வாங்குவதற்கு ஒத்துக் கொண்ட பங்குகளின் மொத்த தொகைக்கு மட்டுமே பொறுப்பானவர்களாவார்.

8. தனி உரிமைத்துவ (sole proprietor ship) தன்மை பற்றிய மிகச் சரியான கூற்றினை தெரிவுசெய்க.

☐ (1) எப்போதுமே சிறிய அளவு வியாபார முயற்சியில் ஈடுபடல்.
☐ (2) வியாபாரப் பதிவு கட்டாயமானது.
☐ (3) சட்டத் தடைகள் இல்லை.
☐ (4) உரிமையாளரின் பொறுப்பானது பயன்படுத்தப்பட்ட மூலதனத்திற்கு வரையறுக்கப் பட்டிருக்கின்றது.
☐ (5) வியாபாரத்தின் பெயரானது சட்டத் தன்மையை கொண்டிருப்பதில்லை.

9. ஒரு வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியின் உரிமைத்துவத்தை (owner ship) பிரதிநிதிப்படுத்துவது.

☐ (1) சாதாரண பங்குகள்
☐ (2) சாதாரண பங்குகளும், முன்னுரிமை பங்குகளும்
☐ (3) சாதாரண பங்குகளும் முன்னுரிமைப் பங்கங்களும், மாற்றத்தக்க தொகுதிக் கடன்களும்.
☐ (4) சாதாரண பங்குகளும் மாற்றத்தக்க தொகுதிக் கடன்களும்.
☐ (5) முன்னுரிமைப் பங்குகளும், மாற்றத்தக்க தொகுதிக் கடன்களும்.

10. பங்குடைமை தொடர்பாக மிகச் சரியான கூற்று எது?

☐ (1) பங்குடைமை கட்டளைச் சட்டம் 1890 இன் கீழ் பங்குடைமையை பதிவு செய்தல் கட்டாயமானது.
☐ (2) ஒரு வரையறுக்கப்பட்ட பங்குடைமையில் உள்ள எல்லா பங்காளர்களினதும் பொறுப்பானது வரையறுக்கப்பட்டது.

☐ (3) பெயரளவுப் பங்காளரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது.
☐ (4) இலாபம் எப்போதும் சமனாக பிரிக்கப்படுதல் வேண்டும்.
☐ (5) பங்குடைமை ஒப்பந்தமானது எப்போதும் எழுத்தில் இருத்தல் வேண்டும்.

11. வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி தொடர்பாக மிகச் சரியான கூற்று எது?
☐ (1) ஆகக் குறைந்தது இரண்டு இயக்குனர்களாவது கட்டாயமாக காணப்படுதல் வேண்டும்.
☐ (2) கம்பனி பதிவாளருக்கு, நிதிக் கூற்றுக்களையும், வருடாந்த அறிக்கையையும் கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டுமென்பதில்லை.
☐ (3) பங்குகள் மாற்றப்பட முடியாதவை.
☐ (4) இழிவுக் கட்டண தேவைப்பாடு இங்கு பொருத்தமற்றது.
☐ (5) தொகுதிக் கடன்களை வழங்குவது சாத்தியமற்றது.

12. தனி உரிமைத்தத்துவத்தில் காணப்படும் பிரதான பிரதிகூலம் எது?
☐ (1) தீர்மானம் எடுத்தலுக்கான சுதந்திரம்
☐ (2) ஒருவரே உரிமையாளராகவும், தொழில் முகாமையாளராகவும் காணப்படல்
☐ (3) வியாபார இலக்குகளை அடைய தனிப்பட்ட முறையில் பாடுபடல்.
☐ (4) ஒரு சிறிய மூலதனத்துடனும் வியாபாரத்தை ஆரம்பிக்கக் கூடியதாக இருத்தல்.
☐ (5) வியாபாரத்தின் முன்னேற்றம் பிரதானமாக உரிமையாளரின் பலத்தில் தங்கியுள்ளது.

13. வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி தொடர்பாக மிகச் சரியான கூற்று
☐ (1) வியாபாரச் சான்றுகள் பத்திரத்தை பெற்றபின்பே, இதற்கு சட்டஅந்தஸ்து வழங்கப்படுகின்றது
☐ (2) கம்பனி பெயருடன் செர்த்து "பொது" என்ற பதத்தை கட்டாயமாக உள்ளடக்க வேண்டுமென்பதில்லை.
☐ (3) ஆக்க குறைந்தது ஏழு இயக்குனர்கள் கட்டாயமாக இருத்தல் வேண்டும்.
☐ (4) கொழும்பு பங்கு பரிமாற்றகத்தில் இதனை நிரற்படுத்துவது கட்டாயமானது.
☐ (5) இக்கம்பனியில் இயக்குனராக இருப்பவர் இன்னொரு கம்பனியில் இயக்குனராக இருக்க முடியாது.

14. கூட்டுறவுச் சங்கங்கள் தமது மேலதிகத்தை அங்கத்தவர்கள் மத்தியில் பங்கிடுவது எவ்வாறு ஏனெனில்
☐ (1) அவர்கள் வாங்கிய பங்குகளின் பெறுமதி அடிப்படையில்.
☐ (2) அங்கத்தவர்கள் கூட்டுறவுச் சங்கங்களுடன் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி அடிப்படையில்.
☐ (3) அங்கத்தவர்கள் மத்தியில் சமனாக பிரித்தல்.
☐ (4) வருடாந்த பொதுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி.
☐ (5) கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் முன் வைக்கப்படும் நிபந்தனைக்களுக்கமைய.

15. அரச கூட்டுத்தாபனங்களின் கீழ் உருவாக்கப்பட்ட வியாபாரங்கள் தொடர்பாக காணப்படும் பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
☐ (1) பாராளுமன்ற சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்படல் வேண்டும்.
☐ (2) மொத்த மூலதனம் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.
☐ (3) இயக்குனர்கள் சபையொன்றினால் முகாமை செய்யப்பட வேண்டும்.
☐ (4) இவ் வியாபாரம் ஒரு சட்ட ஆளுமையுடையதாக காணப்படுகின்றது.
☐ (5) இது திறைசேரியினால் நேரடியாக கட்டுப்படுத்தப்படுவதில்லை.

16. ஒரு கடன் அட்டையை (Credit card) பெற்றுக் கொள்வதற்கு மிக முக்கியமான தேவைப்பாடு

(1) நிலையானதொரு வருமானம்
(2) வங்கியுடன் ஒரு நடைமுறைக் கணக்கை பராமரித்தல்.
(3) போதுமான அளவு செல்வத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
(4) கடன் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக நல்ல பதிவேடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
(5) பிணையை வழங்குவதற்கான இயலுமை.

17. ஒரு காசோலை தொடர்பான சரியான கூற்றினை தெரிவு செய்க.

(1) ஒரு கட்டளைக்காசோலையை வங்கிக் காசாளரிடம் நேரடியாக காசாக மாற்றமுடியாது.
(2) ஒரு காவியின் காசோலையை புறக்குறிப்பிடல் இல்லாமல் கைமாற்ற முடியும்.
(3) காசோலைக்கான பணத்தை பெறுபவர் எப்போதும் ஒரு வங்கியாகவே இருக்கும்.
(4) காசோலை வரையுனரால் (Drawer) கொடுப்பனவை நிறுத்தும் படி கட்டளை வழங்க முடியாது.
(5) காவியின் காசோலைகள் கட்டளைக் காசோலைகளை விட பாதுகாப்பானது.

18. ஒரு காசோலையை கோடிடல் (Crossing) தொடர்பான சரியான கூற்றை தெரிவு செய்க.

(1) காசோலையொன்றின் பொதுவான கோடிடலுக்கு இதன் முகப்பில் இரண்டு சமாந்தரமான நேர்கோடுகளை வரைதல் வேண்டும்.
(2) கைமாறத்தகாதது என்ற வாசகத்தை கொண்டுள்ள ஒரு கோடிட்ட காசோலையை கைமாற்றமுடியாது.
(3) வரையுனரால் மாத்திரமே கோடிடலை மேற்கொள்ளமுடியும்.
(4) ஒரு கோடிடலை வரையுனரால் (Drawer) அல்லது வரையுணியால் (Drawee) மாத்திரமே நீக்கமுடியும்.
(5) "பெறுவோர் கணக்கு மட்டும்" என்ற வாசகத்தை கொண்ட ஒரு காசோலையானது ஒரு சிறப்புக் கோடிடலாகும்.

19. பணத்தின் சட்ட ஏற்பு (Legal tender) என்பதன் கருத்து.

(1) பரிமாற்று ஊடகமாகத் தொழிற்படல்
(2) நியம பெறுமதியாகத் தொழிற்படல்
(3) சிறிய அலகுகளாக பிரிபடும் தன்மை.
(4) கொடுக்கல் வாங்கல்களின் ஏற்றுக்கொள்ளும் தன்மை.
(5) பணத்தை நம்பிக்கை இழக்கச் செய்வது கடினமாகும்.

20. கொழும்பு பங்கு பரிமாற்றகத்தின் அடிப்படைத் தொழிற்பாடு யாது எனில்

(1) முதற் தர சந்தை செயற்பாடுகள்.
(2) இரண்டாம் தர சந்தைச் செயற்பாடுகள்
(3) முதற் தர, இரண்டாம் தர சந்தைச் செயற்பாடுகள்.
(4) பங்குகளை பொது மக்களுக்கு வழங்குவதற்கான ஆரம்பச் செயற்பாடுகள்.
(5) எல்லா பொதுக் கம்பனிகளினதும் பங்குகளை வழங்கல்.

21. பின்வருவனவற்றுள் எதனை கொழும்பு பங்கு பரிமாற்றகத்தின் வியாபாரத்திலீடுபடுத்த முடியாதது?

(1) சாதாரண பங்குகள்.
(2) முன்னுரிமைப் பங்குகள்
(3) தொகுதிக் கடன்கள்.

☐ (4) பங்கு ஆணைப்பத்திரம்.
☐ (5) திறைசேரி பிணைப்பத்திரங்கள்.

22. பின்வருவனவற்றுள் எது இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடற்றது?
☐ (1) பண நிரம்பலை கட்டுப்படுத்தல்.
☐ (2) வணிக வங்கிகளின் வைப்புக்களை ஏற்றுக்கொள்ளல்.
☐ (3) தனி நபர் வைப்புக்களை ஏற்றுக்கொள்ளல்.
☐ (4) தாள் நாணயங்களையும் சில்லறை நாணயங்களையும் வெளியீடு செய்தல்.
☐ (5) அரசாங்க கணக்குகளைப் பராமரித்தல்.

23. காப்புறுதி செய்யமுடியாத அபாயம் என்பதற்கான ஒரு உதாரணம்
☐ (1) ஊழியரின் திருட்டினால் ஏழுந்த ஒரு நட்டம்.
☐ (2) கம்பனி தலைவரின் இறப்பினால் ஏழுந்த ஒரு வியாபார நட்டம்.
☐ (3) சந்தையில் ஒரு புதிய பொருளின் விற்பனையின் தோல்வி.
☐ (4) ஒரு உற்பத்திப் பொறியில் ஏற்பட்ட தீயினால் ஏழுந்த அழிவு.
☐ (5) வழியில் உள்ள காசு களவு போதல்.

24. ஆயுட் காப்புறுதியில் ஆயுளுறுதிக் கட்டணத்தை நிர்ணயிப்பதில் பிரதானமான காரணி
☐ (1) காப்புறுதி செய்பவரின் வயது
☐ (2) காப்புறுதி செய்பவரின் குடும்ப அளவு.
☐ (3) காப்புறுதி செய்பவரின் திருமண நிலைப்பாடு
☐ (4) காப்பறுதி செய்பவரின் வருமானம்.
☐ (5) சம்பந்தப்படும் அபாயத்தின் அளவு.

25. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தவிர ஏனைய எல்லா விடயங்களும் மோட்டார் கார் காப்புறுதிக் கட்டணத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தாத விடயம்.
☐ (1) காரின் பெறுமதி
☐ (2) காரை உற்பத்தி செய்த வருடமும், காரின் வகையும்.
☐ (3) வீதிகளின் நல்ல நிலை.
☐ (4) பாதுகாக்கப்படும் அபாயங்கள்.
☐ (5) கார் பயண்படுத்தப்படும் நோக்கம்.

26. பின்வருவனவற்றுள் எது தொடர்பாடல் சாதனம் என கருதப்படுவதில்லை?
☐ (1) தொலைபேசி
☐ (2) செய்தி
☐ (3) பெக்ஸ் (fax)
☐ (4) தொலைக் காட்சி
☐ (5) வானொலி

27. உள்ளக தொடர்பாடல் சாதனங்களை மட்டும் உள்ளடக்கிய குழுவைத் தெரிவு செய்க.
☐ (1) நிகழ்ச்சிப் பதிவுக் குறிப்பு / கூட்டம் / அறிவிப்புப் பலகை.
☐ (2) கூட்டம் / பற்றுச் சீட்டு / வங்கிக் கூற்று
☐ (3) விளம்பரம் / பட்டியல் வரிசை (catalogue) / கொள்வனவுக்கட்டளை.
☐ (4) புதினப் பத்திரிகை / பருவ சஞ்சிகை / கூட்டம்.
☐ (5) கூட்டம் / பட்டியல் வரிசை / கணக்கீட்டு அறிக்கை.

28. பெருமளவு பொருட்கள் கொள்வனவு செய்யும் கொள்வனவாளருக்கு விற்பனையாளரால் வழங்கப்படும் கழிவு எவ்வாறு அழைக்கப்படும்?

☐ (1) காசுக்கழிவு
☐ (2) பொருட் கழிவு (quantity discount)
☐ (3) வியாபாரக் கழிவு
☐ (4) விஷேட படி (special allowance)
☐ (5) விற்பனைகள் தரகு

* **பின்வரும் வினாக்களுக்கு குறிப்பாகவும். தரப்பட்ட இடைவெளியினுள்ளும் விடையளிக்குக.**

29. பின்வரும் அட்டவணை இலங்கையின் வேலைவாய்ப்பு தொடர்பான சில தரவுகளைக் காட்டுகின்றது.

	ஆயிரத்தில்
விவசாயம், கடற்தொழில், வனத்தொழில்	1971
கட்டமைப்புக் கைத்தொழில்	299
மின்சாரம், வாயு, நீர்	21
வங்கியும், காப்பறுதியும்	1125
சுரங்கத் தொழிலும், அகழ்வுத் தொழிலும்	80
போக்குவரத்து	294
உற்பத்தி	904
ஏனைய சேவைகள்	238

மூன்றாம் தரநிலை கைத்தொழிலின் மொத்த வேலைவாய்ப்பு என்ன? .....

30. இலங்கையில் மொத்த தேசிய உற்பத்தியில் உயர்ந்த பங்களிப்பை வழங்கும் மூன்று பிரதான துறைகளை இதன் முக்கியத்துவ வரிசை அடிப்படையில் குறிப்பிடுக.

.....
.....

31. களவாடப்பட்ட ஒரு ரெலர் காட்ட ஐ (Teller card) பயன்படுத்தி ஏன் பணத்தை பெற முடியாது?

.....

32. வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியின் பங்குகளில் முதலீடு செய்வதனால் பங்குலாபத்தை விட பெற்றுக் கொள்ளக்கூடிய வேறு இரண்டு நன்மைகளைக் குறிப்பிடுக.

.....
.....

33. போக்குவரத்து முறைமையின் அடிப்படை அம்சங்கள் (கூறுகள்) யாவை?

.....
.....

34. பின்வரும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களுக்குமான மிகப் பொருத்தமான போக்குவரத்து முறையை எழுதுக.

(1) திருகோணமலையில் இருந்து காலிக்கு கோதுமை மாவை கொண்டு செல்லல்.

.....

(2) நுவரெலியாவிலிருந்து கொழும்புக்கு வாடாத மலர்களை கொண்டு செல்லல்.

.....

(3) கொழும்பிலிருந்து அனுராதபுரத்திற்கு பெற்றோலியத்தை கொண்டு செல்லல்.

.....

35. குறித்த ஒரு வியாபாரத் துறையில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு தொழில் முயற்சியாளர் பற்றிய அடிப்படைத் தகவல்களை இலகுவாக பெற்றுக்கொள்ளக் கூடிய தகவல் மூலமொன்றை பெயரிடுக.

.....

36. உமது மூல கல்விச் சான்றிதழ் பத்திரங்களை ஐக்கிய இராச்சியத்திலுள்ள கல்வித் தாபனமொன்றுக்கு அனுப்புவதற்கான மிகவும் விரைவான முறை எது?

.....

37. உலக சந்தைக்கு வழங்கப்படும் பொருட்களின் பொதியிடல்களில் பல தரப்பட்ட குறியீடுகள் பயன்படுத்துவதற்கான பிரதான காரணம் என்ன?

.....

38. வெளிநாட்டு வழங்குனர்கள் தொடர்பான புதிய தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு உள்நாட்டு இறக்குமதியாளர்களுக்கு காணப்படும் மிக விரைவான சாதனம் (media) எது?

.....

39. மொத்த வியாபரிகள் ஆற்றும் முக்கியமான தொழிற்பாடுகள் யாவை?

.....

.....

40. தென்னாசிய முன்னுரிமை வியாபார ஏற்பாட்டு (SAPTA) உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட நாடுகள் யாவை?

.....

பகுதி II

பகுதி "அ"

1. (1) வியாபாரம் (Trade), வர்த்தகம், வணிகம் (Commerce, Business) ஆகிய எண்ணக் கருக்களுக்கிடையேயான தொடர்பினை விளக்குக.

   (2) (அ) கைத்தொழிற் பொருட்களை வரையறுக்க. இதன் பிரதான வகைகளைப் பெயரிடுக.
   (ஆ) விருப்பத்திற்கும் கேள்விக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக.

   (3) (அ) சேவைகளை வரையறுக்க. இதன் பிரதான பண்புகளை பெயரிடுக.
   (ஆ) நுகர்வோர் பொருட்களை வகைப்படுத்துக.

   (4) சூழல் மாசடைதலையும், வளங்கள் வீணாகுவதையும் குறைக்கும் பொருட்டு நுகர்வோர், வணிகர் ஆகிய இருவராலும் எடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகளை இருவருக்கும் தனித்தனியாக மதிப்பீடு செய்து விளக்குக.

   (5) இலங்கையில் முன்றாம் தர கைத்தொழில்களின் வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை தெளிவாக விளக்குக.

2. (1) ஏனைய வகை வியாபார நிறுவனங்களுடன் தனி உரிமைத்துவத்தை ஒப்பிடும் போது இதன் விஷேட பண்புகள் என்ன?

(2) (அ) பங்குடமைகளுக்கு என்ன வகை வியாபாரங்கள் மிகவும் பொருத்தமுடையது?

(ஆ) ஒரு பங்குடமை உடன்படிக்கையில் கட்டாயமாக உள்ளடக்கப்பட வேண்டிய முக்கியமான தகவல்களை வரிசைப்படுத்துக.

(3) (அ) ஒரு வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியை எவ்வாறு பங்குதாரர்கள் கட்டுப்படுத்து கின்றனர்.

(ஆ) ஒரு வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியின் இயக்குனர்கள் சபையின் பிரதான பொறுப்புக்கள் என்ன?

(4) (அ) சில அரச கூட்டுத்தாபனங்கள் நட்டத்தை அனுபவித்த போதும் ஏன் இவை தொடர்ந்தும் இயங்கி வருகின்றன?
இதனை எவ்வாறு மேற்கொள்கின்றனர்?

(ஆ) முன்பு சில வியாபாரங்கள் பொதுக் கூட்டுத்தாபனங்களின் கீழ் இயங்கி வந்தன. இன்று இவைகள் தனியார் துறையின் கீழ் செயல்படுவதற்கான காரணங்கள் என்ன?

(5) வரையறுக்கப்பட்ட கம்பனிகளை ஏனைய வகை வியாபார நிறுவனங்களுடன் ஒப்பிடும் போது என்ன அனுகூலங்களைக் கொண்டுள்ளன.

3. (1) ஐரோப்பாவில் தோன்றிய கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சி அந்நாட்டில் ஏற்பட்ட வளர்ச்சி வேகத்தை விட இலங்கையில் இது கூடிய வேகத்துடன் வளர்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் என்ன?

(2) (அ) பணத்தின் கொள்வனவு சக்தி என்பதனால் கருதப்படுவது யாது?

(ஆ) பணத்தின் உண்மைப் பெறுமதியில் ஏழும் மாற்றங்களை எவ்வாறு மதிப்பிடலாம்?

(இ) ஏன், நாணயம் (currency) ஒரு வசதியான (convenience) ஊடகமாக கருதப்படு கின்றமைக்கான இரண்டு காரணங்களை குறிப்பிடுக.

(3) (அ) வணிக வங்கிகளினால் வழங்கப்படும் வைப்புக்களை ஏற்றுக் கொள்ளல், கடன் வழங்குதல் போன்ற சேவைகள் தவிர்ந்த இவை வழங்கும் ஏனைய சேவைகளை வரிசைப்படுத்துக.

(ஆ) ஒரு காசோலையில் உள்ள காந்தமை எண் அடையாள நிரலில் (MICR) காணப்படும் மூன்று எண் தொகுதியினால் என்ன தகவல்கள் சுட்டிக் காட்டப்படுகின்றன?

(4) (அ) ஒரு பிரயாணிக்கு காசை அல்லது சொந்த காசோலைகளை பயன்படுத்துவதை விட பிரயாணிகள் காசோலையை பயன்படுத்துவது ஏன் சிறந்ததாகும்.

(ஆ) கூட்டுக் கணக்கு (joint account) என்றால் என்ன? இத்தகைய ஒரு கணக்கை திறப்பவர்கள் யார்?

(5) (அ) சில்லறை வியாபாரிகளுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் கடன் அட்டைகளினால் (Credit card) பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் என்ன?

(ஆ) இலங்கையில் காணப்படும் நிதி நிறுவனங்களின் பிரதான வகைகளை வரிசைப்படுத்துக.

பகுதி "ஆ"

4. (1) (அ) சேமிப்பு, முதலீடிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது?

(ஆ) பெரும்பாலான மக்கள் பணத்தை சேமிப்பதற்கான மூன்று காரணங்களை கூறுக.

(இ) சேமிப்பு கணக்குகளுக்கும், தவணை வைப்புக்களுக்கும் இடையிலான முக்கிய

வேறுபாடுகள் என்ன?

(2) ஒரு அலகு நம்பிக்கை நிதியில் ஒரு முதலீட்டாளர் முதலீடு செய்வதனால் பெற்றுக் கொள்ளும் நன்மைகள் என்ன?

(3) கொழும்பு பங்குச் சந்தையில் நீர் பங்குகளில் முதலீடு செய்ய எண்ணியுள்ளீர் எனக் கருதுக. மிகப் பொருத்தமான பங்குகளை தெரிவு செய்தவற்கு என்ன காரணிகளை கருத்தில் கொள்வீர்?

(4) நடுவர் என்ற வகையில் பங்குத் தரகர் குறித்த கம்பனியின் பங்குகளை கொள்வனவு செய்யும் முதலீட்டாளருக்கும், இப் பங்குகளை வழங்கும் கம்பனிக்கும் என்ன சேவைகளை வழங்குகின்றார்?

(5) (அ) திறைசேரி உண்டியல்கள் ஒரு நல்ல முதலீடு எனக் கருதப்படுவதற்கான இரண்டு காரணங்களை விளக்குக.

(ஆ) ஒரு தொகுதிக் கடன் என்பதனால் கருதப்படுவது யாது? தொகுதிக் கடனில் முதலீடு செய்வதனால் பெற்றுக் கொள்ளக் கூடிய நன்மைகள என்ன?

5. (1) சரத் என்பவர் ஒரு தனி உரிமையாளராவார். இவர் சிறிய தொழிற்சாலையொன்றை இயக்கி வருகின்றார். இவரின் கீழ் 20 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். இவர் போக்குவரத்துக்காக இரண்டு லொறிகளை பயன்படுத்துகின்றார். இவ்லொறிகள் இவரின் பொருட்களை பங்கீடு செய்வதற்காக அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன. இவரின் காசாளர் பணத்தை வைப்பிலிட தினமும் வங்கிக்குச் செல்வார். அத்துடன் இவர் ஊழியர்களுக்கு கூலிகள் கொடுப்பதற்கு வாராந்தம் வங்கியிலிருந்து பணத்தைக் கொண்டு வருவார். சரத்தினால் எதிர்நோக்கப்படும் அபாயங்களை பாதுகாக்க எடுக்கப்படக் கூடிய முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளுக்கான ஆலோசனைகளை கூறுக.

(2) வியாபாரத்தின் தொடர்ச்சியான செயற்பாட்டில் காப்புறுதி எவ்வாறு உதவி செய்யும் என்பதை விளக்குக.

(3) இலங்கையில் நகரப் பகுதிகளில் உச்ச சேரங்களில் (peak hours) கடுமையான போக்குவரத்து நெருக்கடி காணப்படுகின்றது. இந்த நெருக்கடியை குறைவடையச் செய்வதற்கான பொருத்தமான நடவடிக்கைகளுக்கு ஆலோசனை கூறுக.

(4) (அ) வெளியக தொடர்பாடலில் வியாபாரக் கடிதம் ஆனது இன்னும் மிகவும் பரந்தளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஒரு சரியான வியாபாரக் கடிதத்தின் முக்கியமான பண்புகளை பெயரிடுக.

(ஆ) தொடர்பாடல் செய்முறையில் சத்தம் (NOISE) என்பது எதனைக் கருதி நிற்கின்றது.

(5) ஒரு வியாபார நிறுவனமொன்றுக்கு ஒரு முறைமையான உள்ளக தொடர்பாடலினாலும், வெளியக தொடர்பாடலினாலும் ஏழக்கூடிய நன்மைகளை தனித்தனியாக விளக்குக.

6. (1) இலங்கையின் ஏற்றுமதிகளை மேம்படுத்துவதற்கு அண்மையில் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கொள்கைகள் என்ன?

(2) ஒரு வணிகர் உள்ளூர் வியாபாரத்தில் ஈடுபடுவதை விட வெளிநாட்டுச் சந்தையில் நுழைவதனால் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகளை விளக்குக.

(3) நவீன உலகில் பிராந்திய வியாபாரக் கட்டப்பாடுகள் (Trade Blocks) அமைப்புக்களை உருவாக்கும் போக்கு காணப்படுகின்றது. இத்தகைய அமைப்புக்களின் நோக்கங்களை விளக்குக.

(4) (அ) தற்போது இலங்கையில் சில்லறை சிறப்புக் கடைகள் (Retail super stores) பிரபலிய மடைவதற்கான காரணங்களை விளக்குக.

(ஆ) சில உற்பத்தியாளர்கள் தமது பொருட்களுக்கான மொத்த வியாபாரத்தை ஏன் தாமே மேற்கொள்ள விரும்புகின்றனர்.

(5) (அ) அங்கீகாரம் பெற்ற வியாபாரம் (Franchise business) என்றால் என்ன?

(ஆ) ஒரு அங்கீகாரம் பெற்ற வியாபாரத்தில் காணப்படும் நன்மைகளும் தீமைகளும் என்ன?

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சை, 1999 ஒகஸ்ற் (புதிய பாடத்திட்டம்)

General Certificate of Education (A/L) Examination. August 1999 (New Syllabus)

BRIGHT BOOK CENTRE

வணிகக்கல்வி - II (பகுதி I)

இரண்டு மணி

29

T | I

1 வது வினாவிலிருந்து 27 வது வினாவரைக்கும் விடையளிக்கும்போது உரிய பொருத்தமான பெட்டியில் √ என அடையாளமிடுக.

1. ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்பு செய்வதில் பின்வரும் குழுக்களில் எக் குழு தகுதியானது?
   - ☐ (1) தொழில் தருனரும் ஊழியரும்
   - ☐ (2) தனியார் துறை ஊழியர்களும் பொதுத் துறையினரும்
   - ☐ (3) தனியார் துறை ஊழியர்கள்
   - ☐ (4) பொதுத்துறை ஊழியர்கள்
   - ☐ (5) சுய வேலைவாய்ப்பினை கொண்டவர்கள்.

2. SLS அத்தாட்சிப்படுத்தலில் பின்வருவனவற்றில் எவ்விடயம் அனுகூலமற்றது?
   - ☐ (1) நுகர்வோர் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்
   - ☐ (2) மேம்படுத்தல் செலவு இன்மை
   - ☐ (3) அதிகரித்த விற்பனைகள்
   - ☐ (4) நுகர்வோர் நம்பிக்கையை உறுதிப்படுத்தல்
   - ☐ (5) பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்தல்.

3. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சில குறித்த பொருட்களுக்கு SLS உத்தரவாதம் கட்டாயமாக மேற்கொள்ளப்படல் வேண்டும். இத்தகைய பொருட்கள் உள்ளடங்கிய தொகுதியினை தெரிவு செய்க.
   - ☐ (1) தகரத்திலடைக்கப்பட்ட மீன் / கெட்டியாக்கப்பட்டபால் / பழச்சாறு.
   - ☐ (2) தகரத்திலடைக்கப்பட்ட மீன் / பலச்சாறு / ஜேம்.
   - ☐ (3) பழச் சாறு / மென்பானம் / தகரத்திலடைக்கப்பட்ட பழம்.
   - ☐ (4) தகரத்திலடைக்கப்பட்ட பழம் / மென்பானம் / ஜேம்
   - ☐ (5) ஜேம் / தகரத்திலடைக்கப்பட்ட பழம் / கெட்டியாக்கப்பட்ட பால்.

4. உணவுச் சட்டத்தின் படி பின்வருவனவற்றில் எவ் விடயம் ஒரு பொருளின் லேபலிடுதல் (Label) வெளிப்படுத்துவது அவசியமற்றது எனக் கருதப்படும் தகவல்
   - ☐ (1) உற்பத்தியாளர் பெயர்
   - ☐ (2) நிறையும் அளவும்
   - ☐ (3) உற்பத்திச் செலவு
   - ☐ (4) பயன்படுத்திய பொருட்களின் கலவை
   - ☐ (5) நுகர்வுக் காலம் முடிவடையும் திகதி

5. பொருட்கள் சேவைகள் வரி (GST) அறவிடப்படும் அடிப்படையானது.
   - (1) வருமானத்தில்.
   - (2) செல்வத்தில்.
   - (3) இலாபத்தில்.
   - (4) நுகர்வில்.
   - (5) விற்பனையில்.

6. ஒருவரின் மூல உற்பத்திக்கான (Original work) சிறப்புரிமையை பின்வருவனவற்றுள் எது வெளிப்படுத்துகின்றது.
   - (1) வியாபாரக் குறி
   - (2) பண்டப் பெயர்
   - (3) பதிப்புரிமை
   - (4) ஆக்கவுரிமை
   - (5) இறை

7. தொழில் முயற்சியாண்மை (Entrepreneurship) பற்றிய மிகச் சரியான கருத்து.
   - (1) வியாபார வாய்ப்புக்களை அடையாளப்படுத்தலும், இவைகளை பயன்படுத்தலும்.
   - (2) தடைகளை வெல்லும் இயலுமையும், முன்னேற்றத்தை ஏற்படுத்தலும்.
   - (3) மிகப் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி புதிய பொருட்களை உற்பத்தி செய்தல்.
   - (4) தேவைகளையும், விருப்பங்களையும் திருப்திப்படுத்துவதற்காக, புதிய கண்டுபிடிப்புக்கள் ஊடாக வாய்ப்புக்களை பொறுப்பேற்று மேற்கொள்ளல்.
   - (5) பிரச்சினைகளை தீர்வு செய்யும் இயலுமையும், சரியான தீர்மானங்களை மேற்கொள்ளல்.

8. தொழிலுரிமையாளரொருவர் ஒரு முகாமையாளரிடமிருந்து வேறுபட்டுக் காணப்படுவது எவ்விடயத்தில் எனில்.
   - (1) வியாபாரத் தீர்மானங்களை எடுத்தலில்.
   - (2) வியாபார அபாயங்களை பொறுப்பேற்பதில்.
   - (3) திட்டமிடலில் ஈடுபடுவதில்.
   - (4) மேற்பார்வை வழங்குவதில்.
   - (5) தலைமைத்துவத்தை வழங்குதலில்.

9. பின்வருவனவற்றுள் எத் தொழிற்பாடு திட்டமிடலின் கீழ் ஆற்றப்பட வேண்டியது?
   - (1) செயற்பாடுகளை அடையாளப்படுத்தல்
   - (2) அதிகாரத்தையும் பொறுப்பையும் கையளித்தல்
   - (3) நோக்கங்களை உருவாக்குதல்
   - (4) ஊழியர்களை ஊக்குவித்தல்
   - (5) நோக்கங்களை அடைவதை உறுதிப்படுத்துதல்.

10. ஒழுங்கு படுத்தல் செய்முறையின் ஒரு தொழிற்பாடு
   - (1) ஊழியரிடல்
   - (2) ஊக்குவிப்பு
   - (3) தொடர்பாடல்
   - (4) திணைக்களப்படுத்தல்
   - (5) மதிப்பீடு

11. வியாபார முகாமையில் பின்வருவனற்றுள் எத் தொகுதி வளங்கள் என கருதப்படும் விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

☐ (1) மனித வளம் / நிதி / திரவியங்கள் (materials) / விற்பனைகள்
☐ (2) நிதி / திரவியங்கள் / இயந்திரங்கள் / கொள்வனவுகள்
☐ (3) நிதி / இயந்திரங்கள் / பொருட்கள் / சேவைகள்
☐ (4) கொள்வனவுகள் / விற்பனைகள் / இயந்திரங்கள் / திரவியங்கள்
☐ (5) மனித வளம் / இயற்கை வளங்கள் / நிதி தகவல்.

12. ஒரு வியாபார நிறுவனத்தின் ஒட்டு மொத்தமான உற்பத்தித் திறனை பின்வருவனவற்றுள் எதனைக் கொண்டு அளவிட முடியும்?

☐ (1) $\frac{\text{வெளியீடு}}{\text{உள்ளீடு}}$
☐ (2) $\frac{\text{உள்ளீடு}}{\text{வெளியீடு}}$
☐ (3) $\frac{\text{செலவு}}{\text{உள்ளீடு}}$
☐ (4) $\frac{\text{வருமானம்}}{\text{வெளியீடு}}$
☐ (5) $\frac{\text{விற்பனைகள்}}{\text{உள்ளீடு}}$

13. கட்டுப்பாடு என்பதன் கருத்தை பின்வருவனவற்றுள் எக் கூற்று வெளிப்படுத்துகின்றது?

☐ (1) நிறுவன சூழலில் ஏழுந்த மாற்றங்களை பரிசோதித்தல்
☐ (2) அதிகாரத்திற்கும் பொறுப்புக்கும் இடையிலான தொடர்பினை பரிசோதித்தல்.
☐ (3) செயற்பாடுகள் திட்டமிட்டதன் படி பெறுபேற்றை ஏற்படுத்தியுள்ளதா என பரிசோதித்தல்.
☐ (4) தொழிலாளர்களின் குறைபாடுகளை பரிசோதித்தல்.
☐ (5) வருமானத்திற்கு செலவுக்கும் இடையிலான உறவினைப் பரிசோதித்தல்.

14. சிறப்புத் தேர்ச்சியிலுள்ள பிரதிகூலமொன்று

☐ (1) தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கொருவர் குறைந்தளவு தங்கியிருத்தலை கொண்டிருத்தல்.
☐ (2) வெளியீட்டு மட்டம் படிப்படியாக அதிகரித்தல்
☐ (3) ஒரு பரம்பரையிலிருந்து இன்னொரு பரம்பரைக்கு பாரம்பரிய திறன்கள் மாற்றப்படுதல்.
☐ (4) ஊழியர்கள் பல தரப்பட வேலைகளை ஆற்ற முடியாதிருத்தல்.
☐ (5) ஒரு ஊழியர் தன்னால் செய்யக்கூடியதை சிறப்பாக செய்யக் கூடியதாக இருத்தல்.

15. ஒரு ஊழியச் செறிவு கைத்தொழிலுக்கு மிகச் சிறந்த உதாரணம்.

☐ (1) கார் ஒன்றிணைக்கும் உற்பத்தி (car assembly)
☐ (2) சிகையலங்காரம்
☐ (3) வடித்தலும் போத்தலிடலும்
☐ (4) இரசாயனங்கள் உற்பத்தி
☐ (5) மின்சார உற்பத்தி

16. தரக் கட்டுப்பாடு தொடர்பாக பின்வருவனவற்றுள் எது உண்மையற்றது?

☐ (1) உற்பத்தியின் ஆரம்ப நிலையில் குறைபாடுகளைத் தடுத்தல்.
☐ (2) பொருட்களானது முன் நிர்ணய நியமங்களுக்கு ஏற்ப உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தல்.
☐ (3) பூச்சிய (Zero) குறைபாடு மட்டத்தை அடையும் வரைக்கும் உற்பத்தியை மேற்கொள்ளல்.
☐ (4) முடிவடைந்த பொருட்களை மாத்திரம் பரிசோதித்தல்.
☐ (5) வளங்கள் வீணாகுவதை குறைப்பதற்கு படிமுறைகளை எடுத்தல்.

17. இலங்கை தொழிலாளர் சக்தி எனப்படுவது

☐ (1) நாட்டின் முழு சனத்தொகையுமாகும்.
☐ (2) தற்போது தொழில் புரிபவர்கள் மட்டும்.
☐ (3) தொழில் புரியும் இயலுமையைக் கொண்ட எல்லோரும்.
☐ (4) தற்போது தொழிலைக் கொண்டுள்ளவர்களும், ஆர்வமாக தொழில் தேடுபவர்களும்.
☐ (5) பொது, தனியார் துறைகளில் உள்ள மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை.

18. ஒரு வேலையில் உள்ளக ஆட்சேர்ப்பு முறையினால் ஏழும் நன்மையொன்று

☐ (1) புதிய எண்ணங்களை (ideas) நிறவனத்திற்குள் கொண்டுவர முடிதல்.
☐ (2) இது ஆட்சேர்ப்பு செலவை குறைக்கின்றது.
☐ (3) புதிய எண்ணங்களின் வினைத்திறனில் (efficency) மாற்றம் இல்லை.
☐ (4) இது குறுகிய காலத்தில் ஊழியர் விலகலை அதிகரிக்கச் செய்யும்.
☐ (5) இது ஊழியர் ஊக்குவிப்பை குறைவடையச் செய்யும்.

19. விற்பனைக் கிரயத்தை (cost of sales) சராசரி இருப்பினால் பிரிக்கும் போது வெளிப்படும் முக்கிய ஒரு தகவல்.

☐ (1) விற்பனைச் செலவின் மாற்றமடையும் பாங்கு.
☐ (2) விற்பனை விலைக்கும் விற்பனைக் கிரயத்திற்கும் இடையிலான உறவு.
☐ (3) இருப்பு வைத்தல் செலவின் மாற்றமடையும் பாங்கு.
☐ (4) கட்டளைச் செலவின் மாற்றமடையும் பாங்கு
☐ (5) இருப்புப் புரள்வு.

20. உரிமையாளரின் உரிமை மூலதனத்தை கணிக்கப் பயன்படுத்தப்படுவது.

☐ (1) இலாபம் - பொறுப்பு
☐ (2) சொத்துக்கள் + பொறுப்பு
☐ (3) இலாபம் + சொத்துக்கள்
☐ (4) சொத்துக்கள் - பொறுப்புக்கள்
☐ (5) நிறுத்தி வைக்கப்படும் உழைப்புக்களும் (retainds earnings) + சொத்துக்களும்.

21. உயர் மூலதன இணைப்பு கட்டமைப்பு எனப்படுவது.

☐ (1) கடன் மூலதனமானது உரிமை மூலதனத்தை விட உயர்வானது
☐ (2) உரிமை மூலதனமானது கடன் மூலதனத்தை விட உயர்வானது.
☐ (3) நிறுத்தி வைக்கப்படும் உழைப்புக்கள் பங்கு மூலதனத்தை விட உயர்வானது.
☐ (4) நீண்ட தவணை மூலதனம் குறுந் தவணை மூலதனத்தை விட உயர்வானது.
☐ (5) நிலையான மூலதனம் தொழிற்படு மூலதனத்தை விட உயர்வானது.

22. சந்தைப்படுத்தலுடன் தொடர்பான வகையில் பொது சன உறவு செயற்பாட்டிற்கான ஒரு உதாரணம்

(1) நேரடி விற்பனை
(2) வியாபார சந்தைகளும் பொருட்காட்சிகளும்
(3) சுவரொட்டிகளும் துண்டுப் பிரசுரங்களும்
(4) போட்டிகளும் லொத்தர்களும்
(5) அற நன்கொடைகள்.

23. திறன்மிக்க சந்தைப்படுத்தலுக்காக ஒரு வியாபாரம் கட்டாயம் ஆற்ற வேண்டியது.

(1) தீவிரமாக விளம்பரம் செய்தல்
(2) அதிகளவு விற்பனை ஊழியர்களை வேலைக்கமர்த்தல்.
(3) குறைந்த கிரயத்தில் மலிவான பொருட்களை உற்பத்தி செய்தல்.
(4) வாடிக்கையாளர் தேவைகளை திருப்திப்படுத்தும் பொருட்களை உற்பத்தி செய்தல்
(5) உயர்ந்த கிரயத்தில் உயர்தரம் கொண்ட பொருட்களை உற்பத்தி செய்தல்.

24. பின்வருவனவற்றில் எது விளம்பரத்தின் முக்கிய நோக்கம் ஆகும்?

(1) மக்களுக்கு தேவையற்ற ஏதேனும் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு தூண்டுதல்.
(2) கிடைப்பனவாகவுள்ள பொருட்கள் சேவைகள் பற்றி நுகர்வோருக்கு அறிவித்தல்.
(3) குறுங்காலத்தில் விற்பனையை அதிகரித்தல்.
(4) நடுவர்களின் இலாப எல்லையை குறைத்தல்.
(5) போட்டியை எதிர் நோக்கல்.

25. பொருளொன்றுக்கு விலையை நிர்ணயிக்கும் போது கருத்தில் கொள்ளப்படாத காரணி

(1) கேள்வியின் தன்மை
(2) வாழ்க்கைச் செலவு
(3) போட்டிப் பொருட்களின் விலை
(4) பதிலீட்டுப் பொருட்களின் விலை
(5) நுகர்வோர் மதிப்பீடு

26. ஒரு தொழிலுரிமையாளரால், ஒரு பொருத்தமான செயற்திட்டத்தை (project) தெரிவு செய்வதில் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய மிக முக்கிய காரணி.

(1) பொருளாதார சமூகச் சூழல்
(2) அரசாங்க ஊக்குவிப்புக்கள்
(3) ஒத்த செயற்திட்டங்களின் வெற்றி.
(4) தொழிலுரிமையாளரின் மனோபாவம் அறிவு, திறன்கள்.
(5) வியாபார அபாயங்களின் தன்மை.

27. சமப்பாட்டு புள்ளியை (Break even point) பின்வருவனவற்றுள் எதனைக் கொண்டு கணிப்பிடலாம்?

(1) நிலையான கிரயம் ÷ அலகு பங்களிப்பு
(2) அலகு பங்களிப்பு ÷ நிலையான கிரயம்
(3) மாறும் கிரயம் ÷ அலகொன்றுக்கான இலாபம்
(4) மாறும் கிரயம் ÷ அலகு பங்களிப்பு
(5) அலகு பங்களிப்பு ÷ மாறும் கிரயம்

* **பன்வரும் வினாக்களுக்கு விடையளிக்கும் போது குறிப்பாகவும், தரப்பட்ட இடைவெளியிலும் எழுதுதல் வேண்டும்.**

28. ஒரு தொழிற் சங்கத்தின் முக்கிய இரு நோக்கங்களைக் குறிப்பிடுக.
(1) .....
(2) .....

29. எந்தச் சட்டத்தின் கீழ், சுகாதாரமற்ற உணவுகளின் உற்பத்தி, இறக்குமதி, பங்கீடு, விற்பனை போன்றன தடை செய்யப்பட்டுள்ளன.
(1) .....

30. I வது கூட்டில் தரப்பட்ட தகவல்களுடன் ஒப்பிடக் கூடியதாக அடைப்புக் குறிக்குள் தரப்பட்ட சொற்களை பயன்படுத்தி 2 வது, 3வது கூடுகளைப் பூர்த்தி செய்க.
(வரையறுக்கப்பட்டது, இலாபம், சுயமான (Self), தொழில்தருனர், வரையறுக்கப்படாதது, சம்பளம்)

1 ~ தலையங்கம்	2 ~ ஊழியர்	3 ~ தொழிலுரிமையாளர்
நெறிப்படுத்தல் (Direction)		
விருத்தியடையும் இயலுமை (scop)		
உழைப்பு (earning)		

31. சிறு வியாபாரதாரர்களினால் எதிர் நோக்கப்படும் பொதுவான பிரச்சினைகள் நான்கினை குறிப்பிடுக.
(1) .....
(2) .....
(3) .....
(4) .....

32. 1982 இலக்கம் 35ம் இலக்க தேசிய கைப்பணிச் சபையும், இணைப்பு தாபனங்கள் சட்டத்தின் கீழ் தேசிய கைப்பணிச் சபை உருவாக்கப்பட்டது. இதே சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இணைப்புத் தாபனங்களைப் பெயரிடுக.
.....
.....
.....
.....

33. தேசிய கைப்பணிச் சபையின் முக்கியமான நோக்கம் என்ன?
.....

34. சிறிய வியாபாரங்களுக்கு தொழில்நுட்ப சேவைகளை வழங்கும் இரண்டு தாபனங்களை பெயரிடுக.
(1) .....
(2) .....

35. வணிகர்களுக்கு தேசிய பொதியிடல் நிலையம் வழங்கும் இரண்டு வகையான சேவைகளை பெயரிடுக.
(1) .....

(2) .....

36. ஒரு வியாபார நிறுவனம் ஊழியர் பெறுபேறுகள் மதிப்பீடு ஊடாக பெற்றுக் கொள்ளக் கூடிய இரண்டு நன்மைகளைப் பெயரிடுக.

(1) .....

(2) .....

37. வியாபார நோக்கில் முதலாவது கூட்டில் சந்தைப்படுத்தல் கலவை மாறிகள் தரப்பட்டுள்ள நுகர்வோர் நோக்கில் இவைகளுக்கான அர்த்தத்தை 2வது கூட்டில் தருக.

வியாபார நோக்கு ~ 1	நுகர்வோர் நோக்கு ~ 2
பொருள்	.....
விலை	.....
இடம் (பங்கீடு)	.....
மேம்படுத்தல்	.....

38. திட்டமிடல் தோல்வியடைவதற்கான காரணங்கள் இரண்டினைத் தருக?

(1) .....

(2) .....

39. ஒரு வியாபார நிறுவனமானது பெற்றுக் கொள்ளக் கூடிய இரண்டு பிரதான நிதித் தகவல் மூலங்களை பெயரிடுக.

(1) .....

(2) .....

40. ஒரு செயற்திட்ட அறிக்கையை தயாரிப்பதனால் பெற்றுக் கொள்ளக் கூடிய இரண்டு நன்மைகளை குறிப்பிடுக.

(1) .....

(2) .....

பகுதி II ~ பகுதி "அ"

1. (1) ஒரு வியாபார நிறுவனத்தில் தொழில்தருனர் தொழிலாளர் உறவுகளை நல்ல முறையில் பராமரித்தல் என்பது எதனைக் கருதி நிற்கின்றது.

(2) (அ) சுகாதாரமற்ற முறையில் உடனடியாக தயாரித்து சந்தைப்படுத்தும் உணவுப் பொருள் தொடர்பாக நீர் ஒரு முறைப்பாட்டை செய்ய வேண்டியுள்ளது. நீர் இம் முறைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டிய இரண்டு பகுதியினரைப் பெயரிடுக.

(ஆ) நுகர்வோர் பாதுகாப்பை நுகர்வோர்கள் மூன்று வழிகளில் பெற்றுக் கொள்ள முடியும். அவை யாவை?

(3) (அ) சந்தைக்கு நிரம்பல் செய்யப்படும் பொருட்களானது சுமாரான விலை, தரம், என்பனவற்றை கொண்டதாக சந்தைக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை ஒரு வணிகர் எவ்வாறு உறுதிப் படுத்தலாம் என்பதற்கான மூன்று முறைகளை பெயரிடுக.

(ஆ) நுகர்வோர் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்க கட்டுப்பாடு விதி முறைகளை விட ஒரு வணிகர் இதனை உறுதிப்படுத்துவதற்கு எடுக்கக் கூடிய ஒரு முறையினை விளக்குக.

(4) (அ) நுகர்வோர் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை தர நிர்ணய நிறுவனத்தினால் எடுக்கப்படும் நான்கு முறைகளை பெயரிடுக.

(ஆ) ஒரு பொருள், அத்தாட்சிப்படுத்தப்பட்ட தரத்தினை கொண்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தும் SLS அத்தாட்சிக்குறியீட்டினை தொடர்ச்சியாக நிறுவனம் கொண்டிருப்பதற்கு SLS நிறுவனத்தினால் எடுக்கப்பட்டிருக்கும் படிமுறைகள் என்ன?

(5) (அ) இலங்கையில் தனியார் துறை முதலீட்டை அரசாங்கம் ஏன் ஊக்குவிக்கின்றது.

(ஆ) அண்மையில் தனியார் துறை முதலீட்டை ஊக்குவிக்க அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட நான்கு தந்திரோபாயங்களை பெயரிடுக.

2. (1) இலங்கையில் பொருளாதார அபிவிருத்தியில் சிறு வியாபார முயற்சிகளின் முக்கியத்துவத்தை விளக்குக.

(2) நர் ஒரு சிறு வியாபாரத்தை ஆரம்பிக்க எண்ணியுள்ளீர் எனக் கருதுக. இது தொடர்பாக உமக்கு உதவியளிக்கக் கூடிய மூன்று நிறுவனங்களை பெயரிட்டு இவைகள் ஒவ்வொன்றினாலும் வழங்கப்படும் சேவையொன்றினை குறிப்பிடுக.

(3) (அ) சிறிய நடுத்தர மட்ட முயற்சிகளை இனங்காண்பதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரமாணங்கள் என ஒன்று இல்லை. எவ்வாறாயினும், இலங்கையில் சில வகை வழிகாட்டல்கள் இது தொடர்பாக காணப்படுகின்றன. அவைகள் யாவை?

(ஆ) ஒரு முயற்சியானது ஏன் ஒரு சிறிய நடுத்தர மட்ட முயற்சியாக அடையாளப்படுத்தப்பட வேண்டும்.

(4) கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ் உருவாக்கப்பட்ட பிராந்திய கைத்தொழில் சேவைகள் நிலையங்களினால் வழங்கப்படும் சேவைகளை விளக்குக.

(5) சிறு முயற்சியானது வெற்றிகரமாக செயல்படுகின்றது என்பதை மதிப்பிடக்கூடிய மூன்று வழிகளை பெயரிட்டு விளக்குக.

3. (1) (அ) எந்தவொரு வியாபார நிறுவனத்திலும் ஒரு முகாமையாளருக்கு பொதுவாகக் காணப்படும் அடிப்படைத் தொழிற்பாடுகள் என்ன?

(ஆ) ஒரு வியாபார நிறுவனத்திற்கு ஏன் திட்டமிடல் முக்கியமானது? விளக்குக.

(2) தற்போதைய கால கட்டத்தில் முகாமையாளர்கள் பல சவால்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. இத்தகைய சவால்களை குறிப்பிட்டு விளக்குக.

(3) (அ) திட்டமிடலுக்கும் (planning) திட்டத்திற்கும் (plan) இடையிலான தொடர்பினை விளக்குக.

(ஆ) முகாமைத் தொழிற்பாடுகளுக்கிடையிலான உறவுத் தன்மையை விளக்குக.

(4) (அ) முன்பு மனித வலுவினால் (manual) மேற்கொள்ளப்பட்ட பல வியாபார செயற்பாடுகள் தற்போது கணனியினால் மேற்கொள்ளப்படுவதுடன் அதிகரித்த வினைத் திறனையும் ஏற்படுத்துகின்றன. இத்தகைய ஆறு செயற்பாடுகளை பெயரிடுக.

(ஆ) ஒழுங்கமைத்தல் செய்முறைக்கான அடிப்படை படிமுறைகள் என்ன?

(5) பின்வரும் கட்டுப்பாட்டு முறைகளின் நோக்கங்களை பெயரிடுக.

(அ) தரக்கட்டுப்பாடு

(ஆ) சமப்பாட்டுப் புள்ளி (break even point)

(இ) சரக்கிருப்புக் கட்டுப்பாடு

பகுதி "ஆ"

4. (1) (அ) வியாபார நிறுவனம் ஒன்றின் மனிதவள திணைக்களத்தின் தொழிற்பாடுகள் யாவை?

(ஆ) ஒரு தொழிலாளியின் உற்பத்தித் திறனில் செல்வாக்கு செலுத்தும் முக்கிய காரணிகளை பெயரிடுக.

(2) (அ) முகாமையினால் அடுத்த வருடத்திற்கு தேவையான மனித சக்தியை மதிப்பீடு செய்வதில் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய மூன்று காரணிகளை பெயரிடுக.

(ஆ) ஆட்சேர்ப்பு தெரிவுச் செய்முறைகளின் செயற்பாடுகளை ஒழுங்கு முறையில் வரிசைப் படுத்துக.

(3) ஒரு செயற்றிட்டத்தை தெரிவு செய்வதில் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய மிக முக்கியமான காரணிகளை பெயரிட்டு விளக்குக.

(4) (அ) சர்வதேச சந்தைக்கு நிரம்பல் செய்யப்படும் பெரும்பாலான பொருட்கள் உலகளாவிய பொருள் குறியீட்டை (product code) கொண்டுள்ளன. இக் குறியீட்டினை பயன்படுத்தல் சில்லறை வியாபாரிகளுக்கு எவ்வாறு நன்மை அளிக்கின்றது?

(ஆ) இன்று பெரும்பாலான பொருட்கள் சந்தையில் பொதி வடிவத்திலே அறிமுகப்படுத்தப் படுகின்றன. இந்நிலைமைக்கு இட்டுச் செல்கின்ற காரணங்கள் என்ன?

(5) (அ) ஒரு நிறுவனத்தின் மூலதன தேவைப்பாடுகளை தீர்மானிப்பதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் என்ன?

(ஆ) குத்தகையை (leasing) ஏனைய நிதியிடல் மூலகங்களுடன் ஒப்பிடுகையில் குத்தகை யிடலில் காணப்படும் விஷேட நன்மைகளை விளக்குக.

5. பின்வரும் ஐந்தொகை வரையறுக்கப்பட்ட ஜனசத் கம்பனியினுடையதாகும்.

30.06.1999 இல் உள்ளபடியான ஐந்தொகை

பொறுப்புக்கள்	**(ஆயிரத்தில்)**	**சொத்துக்கள்**	**(ஆயிரத்தில்)**
சாதாரண பங்கு மூலதனம் (ஒவ்வொன்றும் ரூபா.10)	100	நிலமும் கட்டிடமும்	200
முன்னுரிமைப்பங்கு மூலதனம் (ரூபா. 10, 15%)	100	தளபாடமும் பொருத்துக்களும்	50
ஒதுக்கங்கள்	50	உபகரணம்	70
தொகுதிக்கடன் 20%	100	இருப்புக்கள்	110
வியாபாரக் கடன் கொடுத்தோர்கள்	160	கடன்பட்டோர்கள்	100
செலுத்த வேண்டிய வரி	70	காசும் வங்கியும்	50
	580		580

* வினாக்கள் (1) உம் (2) உம் மேற்காட்டப்பட்டுள்ள ஐந்தொகையில் தரப்பட்ட தகவல்களை பயன்படுத்தி விடையளிக்குக.

(1) (அ) கம்பனியின் பொறுப்புக்களை உள்ளக வெளியக நிதி மூலங்களின் அடிப்படையில் வகைப்படுத்துக.

(ஆ) நடைமுறை விகிதத்தையும், விரைவு விகிதத்தையும் கணக்கிடுக.

(இ) இணைப்பு விகிதத்தை (gearing radio) கணக்கிடுக.

(2) (அ) நீர் கணிப்பீடு செய்த நடை முறை விரைவு விகிதங்களைப் பயன்படுத்தி வியாபாரத்தின் திரவத்தன்மை நிலையினை ஆய்வு செய்க.

(ஆ) நீர் கணிப்பீடு செய்த இணைப்பு விகிதத்தை பயன்படுத்தி மூலதனவிணைப்பு நிலைப்பாட்டின் விளைவுகளை விளக்குக.

(3) (அ) சிறிய வியாபாரங்கள் தொழிற்படு முதல் பற்றாக்குறை காரணமாக எதிர் நோக்கும் முக்கிய பிரச்சினைகள் யாவை?

(ஆ) சிறிய வியாபாரத்தில் ஈடுபடும் ஒருவரினால் போதுமான தொழிற்படு முதலை பராமரிப்பதற்கு கடைப்பிடிக்கவேண்டிய கொள்கைகள் என்ன?

(4) (அ) நிறுவனமொன்று நிதி மூலங்களைத் தெரிவு செய்வதில் கருத்திற் கொள்ள வேண்டிய காரணிகள் என்ன?

(ஆ) உயர்ந்தளவு இலாபத்தையுடைய சில வியாபாரங்கள் காசுப்பற்றாக்குறையை எதிர் நோக்குகின்றன. அதே நேரம் அதிகளவு காசினைக் கொண்டிருக்கும் வியாபாரங்கள் நட்டங்களை அனுபவிக்கின்றன. இதற்கான காரணங்களை விளக்குக.

(5) (அ) நன்மதிப்பு என்பதனால் கருதப்படுவது யாது?

(ஆ) ஒரு முதலீட்டாளர் குறித்த சில வியாபாரங்களை கொள்வனவு செய்யும்போது ஏன் நன்மதிப்பைச் செலுத்துவதற்கு உடன்படுகின்றார்? விளக்குக.

6. (1) (அ) சந்தைப்படுத்தல், விற்பனை ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை விளக்குக.

(ஆ) உற்பத்தியாளர்கள் தமது பொருட்களைப் பங்கீடு செய்வதற்கு ஏன் நடுவர்களைப பயன் படுத்துதல் வேண்டும்? விளக்குக.

(2) விற்பனைகள் மேம்படுத்தலை மூன்று வழிகளில் மேற்கொள்ள முடியும். அவைகளைப் பெயரிட்டு ஒவ்வொரு வழிக்குமான விற்பனைகள் மேம்படுத்தல் கருவியொன்றை (Sale Promotional tool) குறிப்பிடுக.

(3) பொருள் ஒன்றுக்கான உற்பத்திக் கிரயம் கீழே தரப்பட்டுள்ளது.

ஒரு அலகுக்கான மாறும் கிரயம்	ரூபா. 20
நிலையான கிரயம்	ரூபா. 200,000
எதிர்பார்க்கப்படும் விற்பனை அலகுகள்	500,000

உற்பத்தியாளர் விற்பனையில் 20% இலாபமாகக் குறித்து இலாபம் உழைக்க எண்ணுகிறார்.

(அ) குறித்த விலையினை (Markup price) கணக்கிடுக.

(ஆ) ஒரு உற்பத்தியாளர் தனது பொருட்களைப் பங்கீடு செய்வதற்கு ஒரு பொருத்தமான நடுவனைத் தெரிவு செய்யும்போது கருத்திற்கொள்ளவேண்டிய காரணிகள் என்ன?

(4) (அ) பண்டப் பெயரொன்றில் காணப்படவேண்டிய பண்புகள் என்ன?

(ஆ) விளம்பரத்தின் முக்கிய நோக்கங்கள் என்ன?

(5) (அ) பின்வருவனவோர் தொடர்பாக வணிகரொருவர் கொண்டிருக்கவேண்டிய பொறுப்புக்களை விளக்குக.

- வாடிக்கையாளர்கள்
- சமூகம்

(ஆ) விற்பனையாளரின் (Sales person) பண்புகளைப் பெயரிடுக.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சை, 1999 ஒகஸ்ற் (புதிய பாடத்திட்டம்)

General Certificate of Education (A/L) Examination. August 1999 (New Syllabus)

வணிகக்கல்வி - I (பகுதி I)

இரண்டு மணி

29

T | I

விடைகள்

1.	3	8.	5	15.	2	22.	3
2.	4	9.	1	16.	4	23.	3
3.	2	10.	3	17.	2	24.	5
4.	5	11.	4	18.	1	25.	3
5.	1	12.	5	19.	4	26.	2
6.	5	13.	2	20.	2	27.	1
7.	3	14.	2	21.	5	28.	3

29. 1678,000 (21 + 1125 + 294 + 238)

30.

சேவைகள்	50.7	வீதம்
தயாரிப்பு பரும்படி கைத்தொழில்	31.2	வீதம்
விவசாயம், வனத்தொழில், கட்ற்தொழி	18.1	வீதம்
	100.00	

31. Teller Card வைத்திருப்பவர்க்கு தனிப்பட்ட இரகசிய இலக்கம் இருக்கும். இதனை களவாடியவருக்கு தெரியாது.
32. உபகாரப்பங்குகள் (Bonus Share) பெறமுடியும்
    உரிமை வளம் பெறமுடியும் ~ வாக்குரிமை
33. 1) பாதை 2) சாதனம் 3) சக்தி 4) தரிப்பிடம்
34. 1) கடல்போக்கு வரத்து
    2) வீதிப் போக்கு வரத்து
    3) புகையிரத போக்குவரத்து / வீதிப் போக்குவரத்து
35. வியாபார விபரக்கொத்து / தொலை பேசி விபரக் கொத்து
36. கூரியர் சேவை / விரைதூதர் சேவை
    உ+ம் DHL / EMS
37. மொழிப் பிரச்சனையை விட குறியீடுகள் எல்லோருக்கும் அடையாளம் காண முடியும்.
38. இணையம் (Internet), தொலைநகல் (Fax)
39. * உற்பத்திப் பொருளை களஞ்சியப் படுத்தல்
    * நுகர்வோர் பொருள் பற்றி அறிந்து கொள்வதற்கு விளம்பரம் செய்தல்

* உற்பத்தி யாளருக்கு முற்பண நிதியுதவி செய்தல்
* விநியோக வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல்
* பொருட்களை சந்தையில் சமநிலையாக வழங்கல்
* உற்பத்தி யாளருக்கு நுகர்வோர் தேவைபற்றிதகவல் வழங்கல்


40. இந்தியா, பூட்டான், மாலைதீவு, பாகிஸ்தன், நேபாளம், இலங்கை பங்களாதேஷ்


பகுதி II - விடைகள்

1. (i) * வியாபாரம் (Trade) எனப்படுவது பெறுமதியுடைய பொருட்கள் சேவைகளை இரு தரப்பினரி டையே பரிமாறுதல் ஆகும். அதாவது பொருட்கள், சேவைகள் என்பவற்றின் கொள்வனவு விற்பனை நடவடிக்கைகள் வியாபாரமாகும்.

* வியாபாரத்துடன் துணைநிலைச்சேவைகள் இணையும் போது அவை வர்த்தகம் (Commerce) ஆகும் இவற்றுடன் உற்பத்தியும் இணையும் வேளை அது வணிகம் (Business) எனப்படும்.

வணிக தொடர்பை காட்டும் படங்கள்





2. (அ) பொருட்கள், சேவைகள் உற்பத்தி செய்வதற்கு பயன் படுத்தப்படும் பொருட்கள் **கைத் தொழில பொருட்கள** எனப்படும்.

பிரதான வகைகள்

1. மூலப் பொருட்களும் உருதிப்பாகங்களும்
2. மூலதனப் பொருட்கள் உம் இயந்திரம், தளபாடமும் பொருத்துகளும்
3. வியாபார சேவைகளும், பழுதுபார்தலும்.

(ஆ) விருப்பம் எனப்படுவது தேவைகளை நிறைவு செய்வதற்கு ஒருவரிடம் காணப்படுகின்ற **நாட்டமாகும்.** தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ஒருவரிடம் காணப்படும் **விருப்பத்துடன் கொள்வனவுசக்தியும** இருக்குமாயின் அது கேள்வியாகும்.

3. (அ) சேவை எனப்படுவது ஒரு தரப்பினரால் பிறிதொரு தரப்பினர்க்கு வழங்கப்படும் ஏதேனுமோர் நடவடிக்கை சேவை எனப்படும். சேவை கட்புலனாகாது.

சேவையின் பிரதான பண்பு

i. தொட்டு உணரமுடியாது
ii. சேவையை வழங்குபவரையும், சேவையையும் வேறுபடுத்த முடியாது.
iii. நபர்களுக்கும், காலங்களுக்கும் ஏற்ப மாறுபடக் கூடியது.
iv. சேமித்து வைத்து பயன்பெறமுடியாது.

(ஆ) நுகர்வோர் பொருட்கள்

* வசதிப் பண்டம்
* கடைப் பண்டம்
* தனிச்சிறப்பு வாய்ந்தபண்டம்
* நாடப்பெறாப் பண்டம்

4.

நுகர் வோர்	வணிகர்
* மாசடைதலை ஏற்படுத்தக் கூடிய பொருட்களை தேவையற்ற வெளை களில் பயன்படுத்தாது இருத்தல். * அழிந்து போகக்கூடிய பொருட்கள் உபயோகித்தலும் அழிவுறாத பொருட்கள பயன்படுத்தமல் இருத்தல். * கழவுப் பொருட்களை மாசாடையாத முறை வெளியகற்றல் * சில பொருட்களை மீண்டும் உற்பத்திக்கு பயன்படுத்தல்.	* மாசடைவதை உருவாக்கூடியமுறையில் அமைந்து பொருட்களை உற்பத்தி செய்யாது விடல் * சூழல் மாசபடாத வகையில் உற்பத்தியை மேற்கொள்ளல் * கழிவுப் பொருட்களை சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத முறையில் முகாமை செய்தல்

5. மூன்றாம் தர கைத் தொழில்களின் வளர்ச்சியில் இலங்கையில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்

* தொழில் நுட்ப வளர்ச்சி தொடர்பாடல், மின்சாரம், கணனித் தொழில் நுட்பம்
* திறந்த சந்தை முறைமை
* சனத்தொகை வளர்ச்சி சுகாதார வசதி, நீண்ட ஆயுட்காலம்
* பெருந்தொகையானோர் வேலையில் ஈடுபட்டிருத்தல்
* உள்நாட்டு / வெளிநாட்டு சுற்றுலாத்துறை வளர்ச்சி
* பெரும்பாலானோர் ஏதோ ஒரு வேலையில் ஈடுபட்டிருத்தல்

2. (i) தனி உரிமைத்துவத்தின் விசேட பண்புகள்

1. தனி உரிமைத்துவக் காரண் வாடிக்கையாளர் களுடன் நேரடித் தொடர்பு வைத்திருப்பான்.
2. தனி உரிமைத் துவத்தில் உரிமை முழுவதும் ஒருவரையே சார்ந்திருக்கும்.
3. தனி உரிமைத்துவக்காரன் தனது முழுமையான பங்களிப்பையும் வியாபாரத்தில் செலுத்துவான்.
4. தனி உரிமைத்துவத்தில் கிடைக்கும் இலாபம் திரும்பவும் முதலிடப் படும்.
5. தனி உரிமைத்துவத்தின் முகாமை முழுவதும் அவன்மீதே இருக்கும்.
6. தனி உரிமைத்துவத்தின் மூலம் கிடைக்கும் இலாபத்தை அவரே முழுமையாக அனுபவிக்க முடியும்.

(ii) அ) பங்குடமைக்கு பொருத்தமுடைய வியாபாரங்கள்

கண்ணிய தொழில்கள் உதாரணம்
* மருத்துவம்
* கணக்காய்வு
* சட்டம்
* கற்பித்தல்

மேற்படி தொழில்கள் அவரவர் திறமையிலேயே தங்கியிருப்பதாலும் தொழில் இரகசியங்கள் பாதுகாப்பதற்கும் உகந்த அமைப்பு பங்குடமையாகும்.

அ. பங்குடமையில் உள்ளடக்கப்பட வேண்டிய முக்கிய அம்சங்கள்

1. பங்காளார் செலுத்தும் மூலதனத்தின் அளவு
2. இலாப நட்டம் பகிரும் விகிதம்
3. பங்காளர் பற்றுகள் தொடர்பாக நிபந்தனைகள்
4. புதிய பங்காளர் சேர்தல், பங்காளர் விலகல் தொடர்பான நிபந்தனைகள்
5. பங்குடமையின் பெயர், விளாசம், அமைவிடம்
6. பங்குடமை வியாபாரத்தின் நோக்கம்
7. பங்குடமை கலைப்புத் தொடர்பான நிபந்தனைகள்
8. பங்காளர்கள் பெயர் முகவரி
9. பங்காளர்கள் நிர்வாகத்தில் பங்கு கொள்ளும் முறை
10. பங்காளரிடையில் ஏற்படும் பிணக்குகளை தீர்த்தல் தொடர்பான நிபந்தனை

3. (அ) வரையறுத்த பொதுக்கம்பனி பங்குதாரரை கட்டுப் படுத்தும் முறைமை

1. பங்குதாரர்கள் தாம் பெற்றுக் கொண்ட பங்குகலின் அடிப்படையில் பொதுக் கூட்டத்தில் தீர்மானங்களுக்கு வாக்கு அளிப்பது மூலம்.
2. கணக்காய்வாளர்களை நியமிப்பதன் மூலம்
3. இயக்குணர்களை நியமித்துக் கொள்வதன் மூலம்

(ஆ) வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனி இயக்குனர் சபையின் பொறுப்புகள்

1. கம்பணியின் கொள்கையை உருவாக்குதல்
2. கம்பனி தொழிலின் ஊடாக இலாபமீட்டும் முறைமையை தீர்மானித்தல்
3. பொருள்கள் சேவைகள் உற்பத்தி விநியோகம் தொடர்பான தீர்மானங்கள் எடுத்தல்.

4. (அ) அரசாங்க கூட்டுத்தாபனம் நட்டத்தை அனுபவித்த போதும் தொடர்ந்து இயங்க காரணம்.

ஒரு கூட்டுத் தாபனம் உற்பத்தி செய்தல் மூலமோ, பொருட்கள் சேவைகள் பொது மக்களுக்கு வாழ்க்கைக்கு அத்தியாவசியமாக இருப்பதனாலும். பொருளாதார வளர்ச்சிக்கு அக்கூட்டுதாபனம் சேவையாற்றுமாயின் அ:.து நட்டத்தில் இயங்கினாலும் அரசாங்கம் திறைசேரி மானியம், வெளிநாட்டு உதவிகள் மூலம் இக்கூட்டுத்தாபனங்களுக்கு நிதியீட்டம் செய்யும்.

(ஆ) பொதுக் கூட்டுத்தாபனங்கள் தனியார் துறையின் கீழ் செயல்படுவதற்கான காரணம்.

1. தனியார்துறையில் போட்டி நிலவுவதால் வியாபாரம் வளர்ச்சி அடையச் செய்ய முடியும்.
2. தனியார் துறையில் வலுவான நிதியீட்டம், பரீட்சையமான முகாமைத்துவம், தொழில் நுட்ப வல்லுரைகள் எல்லோரும் ஈடுபடுத்த முடியும் ஆகையால் அரசாங்கம் இத்துறைகளை தனியார் மயமாக்கியது.

5. (1) வரையறுக்கப்பட்ட கம்பனியில் காணப்படும் அநுகூலங்கள்

1. பங்குதாரர் அதிகமானதால் பெருமளவு மூலதனத்தை திரட்டமுடியும்.

2. வரையறுக்கப்பட்டகம்பனி சட்டத்தின்முன் தனிமனிதனாகும்.
3. வரையறுக்கப்பட்ட நட்டப்பொறுப்பு
4. நீண்ட வாழ்வுடையது (பங்குதாரர் இறந்தாலும் பாதிக்காது)
5. சிறப்பான முகாமைத்துவத்தை கொண்டிருத்தல்
6. பாரிய நிறு வனங்களாக தொழிற்படுவதால் இலாபம் கூடுதலாக இருக்கும்.

3. (I) இலங்கையில் கூட்டுறவுத்துறை முதலாம் இரண்டாம் உலக யுத்தத்தின் போது பொருட்களை பகிர்தந்தளிக்க உருவாக்கப் பட்டதாகும். இலங்கையின் பொருளதார முறைமை கூட்டுறவுத் துறையின் சேவையிலே மிகுகூடியபாகம் தங்கியிருப்பதே ஐரோப்பியாவை விட இலங்கையில் கூட்டுறவு வியாபார நிறுவனம் வளரக் காரணமாகும்.

4. (அ) பணத்தன் கொள்வனவு சக்தி என்பது ஒரு குறிப்பிட்ட அலகு பணத்தைக் கொண்டு கொள்வனவு செய்யக்கூடிய பொருட்கள், சேவைகளின் அளவு ஆகும்.

(ஆ) பணத்தின் உண்மைப் பெறுமானத்தில் ஏழும் மாற்றங்களை விலைச்சுட்டெண் மூலம் மதிப்பிடலாம்.

(இ) நாணயம் வசதியான பரிமாற்று ஊடகமாக விளங்க காரணம்
1) இலகுவாக பயன்படுத்தலாம் 2) சேமித்து வைக்கமுடியும்
3) எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் 4) சட்ட அங்கீகாரம் முடையது
5) 100% திரவத்தன்மை உடையது 6) இலகுவாக புரிந்து கொள்ளலாம்.

3. வணிக வங்கிகளின் மேலதிக சேவைகள்.
1) இறக்குமதி ஏற்றுமதிக்கு நாணயக் கடிதம் வழங்கல்
2) மேலதிகப் பற்று வசதி
3) பாதுகாப்பு பெட்டக வசதி
4) நகை அடைவு பீடித்தல்
5) கடன் அட்டை வழங்குதல்
6) பயணிகள் காசோலை வழங்குதல் (Travaler cheque)
7) வங்கிகளுக்கு இடையிலான கொடுப்பன முறை
8) ஒப்புறுதி வழங்குதல்
9) பணத்தை பிறிதொரு இடத்திற்கு அனுப்ப உதவுதல்
10) தொலை பேசி வங்கி சேவை.

ஆ) 1. காசோலை இலக்கம்
2. வங்கியின் இலக்கமும் கிளை இலக்கமும்
3. நடைமுறைக் கணக்கின் இலக்கம்.

4. அ) பிரயாணி காசோலையின் (Traveler cheque) சிறப்பு
1. சர்வ தேசியரீதியாக பயணிகள் காசோலைகள் பயன்படுத்த முடியும்.
2. பிரயாணி காசோலை இழந்தால் (களவோ / விழுதலோ) நிகழ்ந்தால் புதிய காசோலை உடன் பெற்றுக் கொள்ள முடியும் ஆகவே பாதுகாப்பு அதிகம்.
3. சில குறிப்பிட்ட நாணை அலகுகளில் மாத்திரம் இதனைப் பெற்றுக் கொள்ள கூடியதாக இருப்பதால் தேவையான நாணயத்தில் இதனை மாற்றிக்கொள்ளமுடியும்.

ஆ) கூட்டுக் கணக்கு (Joint Account) எனப்படுவது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்டோர் சேர்ந்து ஆரம்பிக்கும் கணக்கு ஆகும்.

கூட்டு கணக்கை திறப்பவர்கள்

கணவன் மணைவி, பெற்றோர் பிள்ளைகள் சகோதரர்கள், நண்பர்கள், பங்காளர்கள்

v) கடன் அட்டையினால் சில்லறை வியாபாரி பெறும் நன்மைகள்

1. விற்பனையால் கிடைக்க வேண்டிய பணம் நிச்சயமாக கிடைக்கும் (அறவிடக் கடன் ஏற்படாது)
2. கடன் அட்டையினால் விற்பனை அதிகரிக்கும்
3. கொண்டு செல்வது இலகு, கொடுக்கல் வாங்கலும் இலகு
4. கடன் அட்டை பெறும் நிறுவனங்கள் பிரபல்யம் அடையும்

கடன் அட்டையினால் வாடிக்கையாளருக் கிடைக்கும் நன்மைகள்

1. கொடுக்கல் வங்கல்கள் இலகுபடுத்தும்
2. பாதுகாப்பாக கொடுப்பனவுகள் மேற்கொள்ள முடியும்
3. பொருட்களை பணம் இல்லாத போதும் கடனாக பெறமுடியும்.
4. கடன் அட்டையின் பெறுமதியில் 50 வீத பணத்தை கடனாக பெறுமுடியும்

ஆ) இலங்கையில் காணப்படும் நிதி நிறுவனங்கள்

* அரசாங்க வணிக வங்கிகள்
* அபிவிருத்தி வங்கிகள்
* மத்திய வங்கி
* வங்கியில்லாத நிதி நிறுவனங்கள்

பகுதி ஆ

4) அ) சேமிப்பு என்பது நடைமுறை வருமானத்தில் நுகர்வு போக எஞ்சிய தொகையாகும்.
முதலீடு எனப்படுவது பணத்தை வருமானம் உழைக்கும் நோக்கத் தோடு முதலீடு செய்வதாகும்.

ஆ) பணத்தை சேமிப்பதற்கான காரணங்கள்

* அவசரமான தேவைகளுக்கு பயன்படுத்த முடியும்.
* பிற்காலத் தேவையை நிறைவேற்ற
  உ+ம் ~ பிள்ளைகளின் மேற்படிப்பு
  கல்யாணம், பிறந்தநாள் போன்ற நிகழ்ச்சி
* குறுங்கால நீண்டகால அடிப்படையில் வருமானம் உழைக்க.

இ)

சேமிப்பு கணக்கு	தவனை வைப்புகள்
* எந்த வேளையிலும் ஆரம்பிக்க முடியும் எப்போதும் மீளப்பெற முடியும் * வட்டி குறைவானது * சேமிப்பு புத்தகம் வழங்கமுடியும்	* குறிப்பிட்ட தொகையை ஒரே முறையில் வைப்பில் இட்டு குறிப்பிட்ட காலத்தின் பின்பே பெறமுடியும் * வட்டி கூட * சான்றிதழ் வழங்கப்படும்

2) அலகு நம்பிக்கை நிதியில் முதலீடு செய்வதனால் ஏற்படும் நன்மைகள்.

1. பல்வேறுபட்ட முதலீட்டாளர்களின் முதலீடுகளை ஒன்று திரட்டி வினைத்திறனான துறைகளில் முதலீடு செய்வதானால் முதலுக்கு பாதிப்பு ஏற்படாது.
2. சிறு முதலீட்டாளர்களும் தம் தகுதிக்கும் பணவசதிக்கும் ஏற்ற முறையில் அலகுகளை கொள்வனவு செய்யு முடியும்.
3. பணம் தேவையான வேளைகளில் அலகுகளை விற்பனை செய்து பணமாக்கி கொள்ளலாம்
4. சிறிய முதலீட்டாளர்கள் மூலதன வருவாயை உழைக்கமுயல்தல்
5. வரிச்சலுகையை பெற்றுக் கொள்ளமுடியும்.

3). கொழும்பு பங்குச் சந்தையில் முதலீடு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள்.

1. நிறுவனத்தின் நிதி நிலைமை, முகாமைத்துவம்
2. பங்குகள் சந்தை விலை மாறும் கால அளவு
3. முதலீட்டுக்கான வருவார்வீதம் (பங்குஇலாபம் உபகாரப்பங்கு வழங்கல் உரித்து வழங்கல்)
4. குறித்த நிறுவனத்தின் வளர்ச்சிப் போக்கு
5. குறிப்பிட்ட நிறுவணத்தின் நிலைப்பாகும், செயற்பாடும்
6. வட்டிவீதம், பணவீக்கம், அரச வரிக் கொள்கை போன்ற பொருளதார காரணிகள்
7. அரசாங்கத்தின் நிலைப்பாடு

4). பங்கு தாகர் முதலீட்டாளருக்கு வழங்கும் சேவை!

1. பங்குத்தரகர் பங்குச் சந்தையில் தனக்கு உள்ள அனுபவம் காரணமாக சரியான முதலீட்டை தெரிவு செய்ய ஆலோசனை வழங்கல்.
2. பங்குச் சந்தை தொடர்பான தகவல்களை வளங்குதல்
3. பங்கு கொள்வனவு செய்யவும் விற்பனை செய்யவும் உதவுதல்

பங்கு வழங்கும் கம்பனிக்கு பங்குத்தரகரின் சேவை.

1. பங்கு கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான ஆவணங்கள் பூர்த்தி செய்வதற்கும் அவை தொடர்பான நடவடிக்கைகளுக்கு உதவுதல்
2. கம்பனியின் பங்குகளை விற்பனை செய்வதற்கு உதவுதல்

5) அ. 1. திறை சேரி உண்டியல்கள் நல்ல முதலீடு என்பதற்கான காரணங்கள்

1. கூடிய வருமானத்தை பெற்றுக்கொள்ளலாம்
2. முதலீட்டுக்கு அரச உத்தரவாதம் காணப்படல்
3. எவ்வேளையிலும் பணமாக மாற்றக்கூடிய திசவத்தன்மை உள்ளமை
4. வருமான வரியிலிருந்து விடுதலை
5. வேறுபட்ட முதிர்வு காலங்கள் அடிப்படையில் பெற்றுக் கொள்ளல்.

ஆ. தொகுதிக் கடன் (De) எனப்படுவது வரையறுத்த பொதுக் கம்பனிகள் கடன் தொகை, வட்டிவீதம், மீட்பு நிபந்தனைகள் என்பவற்றைக் குறிப்பிட்டு கம்பணியில் இலட்சனை பொறித்து வழங்கும் கடன்பத்திரங்கள் மூலம் பெற்றுக் கொள்ளும் கடன்கள் தொகுதிக் கடன்கள் எனப்படும்.

தொகுதிக்கடனில் முதலீடு செய்வதனால் ஏற்படும் நன்மைகள்

* நிலையான குறிப்பிட்ட வட்டி வீதத்தை வட்டியாக பெறலாம்
* தொகுதிக்கடன் முதிர்வு காலத்தில் பணத்தை மீளப்பெறமுடியும்

* பங்குச் சந்தையில் பணம் தேவையான போது விற்பனை செய்யலாம்.
* கூடிய வட்டி வீதத்தைக் கொண்டது தொகுதிக்கடன்.

5) i) சரத்தினால் எதிர் நோக்கப்படும் அபாயங்களுக்கு பாதுகாப்பிற்காக எடுக்ககூடிய முன் ஏச்சரிக்கை ஏற்பாடுகள்.

1. தொழிற்சாலைக்கு தீயினால் ஏற்படும் அபாயங்களுக்கு தீ அபாயக் காப்புறுதி செய்யப்படும்.
2. வேலை நேரத்தில் ஊழியர்களுக்கு ஏற்படக்கூடிய அபாயங்களுக்கான இழப்பீட்டை வழங்கு வதற்கு தொழிலாளர் நட்டஈடு செய்ய வேண்டும்.
3. காசாளரின் நம்பிக்கை விரோதமான செயல்களால் ஏற்படக்கூடிய நட்டத்தை ஈடு செய்ய பிணைப் பொறுப்புக் காப்புறுதி செய்யவேண்டும்.
4. சரத் தனது இரு லொறிகளுக்கும் முழு மோட்டார் காப்புறுதி செய்ய வேண்டும்.
5. காசுளர் பணத்தை வைப்பிட செல்லும்போது ஏற்படும் ஆபத்துக்கு வழிப்பணக் காப்புறுதி செய்யவேண்டும்.
6. பொருட்கள் பங்கீடு செய்ய செல்லும் போது பொருட்களுக்கு ஏற்படும் காப்புறுதிக்கு வழிப்பொருள் காப்புறுதி செய்ய வேண்டும்.

ii) வியாபாரத்தின் தொடர்ச்சியான செயற்பாட்டுக்கு காப்புறுதி செய்யும் உதவியானது. பல்வேறுபட்ட அபாயங்களிலிருந்து தம்பிக்க கூடிய முறையில் இழப்பீடு வழங்குகிறது. நட்டங்கள் ஏற்படும் வேளைகளில் உரிமையாளரால் நட்டத்தை தாங்க முடியாத சந்தர்ப்பத்தில் இழப்பீட்டை வழங்கி வியாபாரம் தொடர்ந்து இயங்க வழி செய்கின்றது.

3) 1. உச்ச நேரங்களில் (Peak hours) அவசியமற்ற பயனங்களை தவிர்க்குமாறு பயனிகளுக்கு அறிவுறுத்தலாம்.
2. நகரப்பகுதிகளில் செய்ய வேண்டியவேலை களை தொலைபேசியில் முடிக்க முடியுமாயின் (சந்திப்பு) அவ்வாறு செய்வதுமூலம் போக்கு வரத்தை குறைக்கலாம்.
3. நகரின் பிரதான வீதிகளில் கரைக வாகனங்கள் பகல் வேளைகளில் செல்வதை தவிர்த்துக் கொள்ளலாம்.
4. உச்ச நேரங்களில் நிறுத்தப்படும் வாகனங்களின் கட்டணத்தை அதிகரிப்பதன் மூலம் வாகனங்கள சரியான முறையும் அநுசரித்து வாகன ஓட்டுரை வழிநடத்த முடியும்.
5. போக்கு வரத்து விதிமுறைகளை சரியான முறையில் அநுசரித்து வாகன ஓட்டுனரை வழிநடத்த முடியும்.
6. நவீன வாகனத் தரிப்பிடங்களை அமைத்தல்
7. போக்குவரத்துக்கு பொருத்தமற்ற வாகனங்களை தடை செய்யலாம்.

4) அ) வியாபார கடிதத்தின் முக்கியமான பண்பு

1. வியாபாரத்தின் பெயர், விலாசம் கொண்ட கடிதத்தலைப்பு
2. தொடர்பு கொள்பவரின் பெயர் விலாசம்
3. திகதி
4. தொடர்பு இலக்கமும் கோவை எண்
5. தொடர்பு வங்கி, தொலைபேசி இலக்கம் ∴ப்க்ஸ் இலக்கம்
6. அழைக்கும் முறை (விழித்தல்)
7. விடயத்தலைப்பு

8. விடயர் பொருள்
9. கடிததின் முடிவு
10. கை யொப்பம் பெயர், பதவி

ஆ) தொடர்பாடல் முறையில் சத்தம் (Noise) குறிப்பது

தகவல் ஒழுங்காக் விளங்க முடியாத முறையில் இடையூறாக இருப்பது இரைச்சல் ஆகும். மொழிப்பிரச்சனை ஒலி அலைகளில் ஏற்படும் பிரச்சனை, சூழலில் காணப்படும் தாக்கங்கள் என்பவற்றால் இது ஏற்படலாம். இதனால் தகவல்கள் மற்றமடையாளாம்.

5) முறையான உள்ளக தொடர்பாடலினால் எழும் நன்மை

1. நிறுவனத்துள் தமது கருத்துகளை பரிமாற்றக் கூடியாதாக உள்ள
2. நிறுவனத்தின் ஆணைகளையும், ஆலோசனைகளை எல்லா வகை யோனுருக்கும் அறிவிக்க முடியும்
3. தீர்மானங்கள் விரைவில் எடுக்க உறுதுனை செய்யும்
4. நிறுவனத்தில் ஏற்படும் மாற்றங்களை தொழிலாளருக்கு உடனுக்குடன் அறிவிக்க முடிகிறது.
5. கருத்து முரண்பாடுகளை உடன் தீர்த்து கொள்ள முடியும்
6. நேரச் செலவினை குறைக்கலாம்
7. தாபாற் செலவு குறைவடையும்
8. பிழையாக விளங்கிக் கொள்ளும் தன்மையை குறைத்துக் கொள்ளலாம்.

முறையான வெளியக தொடர்பாடலினால் எழும் நன்மைகள்

1. நிறுவனத்திற்கு வெளியே உள்ளவருடன் சிறந்த தொடர்பை ஏற்படுத்த முடியும்.
2. வாடிக்கையாளரின் குறை நிறைகளை அறிய வழிவகுக்கும்
3. வாடிக்கையாளருக்கு பலவகையான சேவைகளை விரிவு படுத்த முடியும்.
4. வெளியக தொடர்பாடலினால் பிழைகளை குறைத்துக் கொள்ளலாம்.
5. வெளியக தொடர்பாடலினால் பொது சன தொடர்பை அதிகரிக்கலாம்.

6) i. இலங்கையில் ஏற்றுமதிகளை மேம்படுத்து வதற்க்கு அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட கொள்ள

1. ஏற்றுமதிகளுக்கு பதிந்த பண்டகசாலை வசதி
2. சில ஏற்றுமதி உள்ளீடுகளை வரியின்றி பெறவாய்ப்பளித்தல்
3. 1997 முதல் இலங்கை இந்திய நாடுகளுக்கிடையே சுதந்திர வர்த்தக உடல்படிக்கை ஏற்படுத்தியனம்
4. ஏற்றுமதி வசதிக்காக துறைமுகத்தை புதுப்பித்தமை
5. பேலியா கொடையில் கொள்கலன் சரக்கு களஞ்சியத்தை 2000 மார்ச்சில் ஆரம்பித்தல்
6. வங்கி நிதி வசதிகளை அளித்து ஏற்றுமதியை ஊக்கப்படுத்தியாம

ii. ஒருவனிகர் வெளிநாட்டுச் சந்தையில் நுழைவதனால் பெறக்கூடிய நன்மைகள்.

1. விரிந்த ஒரு சந்தையில் பிரவரிக்க முடிதல்
2. உற்பத்திகளுக்கு உயர்ந்த விலையை பெறமுடிதம்
3. அரச ஆதரவு பெற முடிதல்
4. நவீன தொழில்நுட்ட வசதிகளை பெறமுடிதல்
5. அன்னிய செலாவணியை உழைக்க முடிதல்.

iii. சில்லறை சிறப்புக் கடைகள் (Retail Super stores) பிரபல்யமடையக் காரணங்கள்

1. திரந்த பொருளாதார முறைமையினை இலங்கை பின்பற்றுவதனால் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி அதிகரித்தமை.
2. ஒரே கூரையின் கீழ் சில்லறை சிறப்பு கடைகளில் தேவைகள் அனைத்தையும் பெறமுடியும்
3. சுயமான தேர்வு காணப்படுவதால் சுதந்திரமாக தெரிவு செய்ய முடியும்
4. உயர்தரமான பொருட்களை தகுந்த விலையில் பெற ஊக்குவிக்கின்றது.
5. கடன் அட்டைகளை பயன்படுத்த முடியும்.
6. சில வங்கிகள் இக்கடைத்தொகுதியினுள் இருப்தால் காசு கொண்டு செல்லும் பயம் நீங்குகிறது.

iv. நவீன உலக பிராந்திய வியாபாரச் கடப்பாட்டின் (Trade Blocks) நோக்கங்கள்

1. போட்டியை குறைத்தல்
2. குறிப்பிட்ட பிரதேசத்தில் சுதந்திர வியாபாரத்தை உருவாக்குதல்
3. வெளிநாட்டு வியாபாரத்தடைகளுக்கு முகம் கொடுக்க கூடியதாக இருத்தல்
4. பிராந்தியத்துக்குள் பொருளாதார பொறுப்பை ஏற்படுத்துதல்

5) அ) அங்கீகாரம் பெற்ற வியாபாரம் (Franchise business) என்றால் என்ன? பொருட்களும் சேவைகளும் விற்பனை செய்யும் ஒரு முறையே அங்கீகாரம் பெற்ற வியாபாரம் ஆகும். இ:.து தாய் நிறுவனம் கிளை நிறுவனம் என இரண்டு பிரிவுகளைக் கொண்டது. தாய் நிறுவனத்தின் பொருட்கள் கிளை நிறுவனத்தின் மூலம் விற்பனை செய்யப்படும். தாய் நிறுவனத்திலிருந்து கிளை நிறுவனம் வேறுபட்ட உரிமைகளையும் நிர்வாகத்தையும் கொண்டதாகும். கிளையால் ஏழங்கப்படும் பொருட்கள் சேவைகள் குறிப்பிட்ட தரத்தில் அதனாலேயே உற்பத்தி செய்யப் படும்.

ஆ) அங்கீகாரம் பெற்ற வியாபாரத்தின் நன்மைகள்

1. தாய் நிறுவனத்தின் முகாமை பயிற்சியினை கிளை நிறுவனம் பெறமுடியும்
2. சேவை பயிற்சியினை கிளை நிறுவனத்திலும் பெறமுடியும்.
3. மூலதனம் சம்பந்தமான உதவிகளை தாய் நிறுவனத்தில் பெறமுடியும்
4. விளம்பரம், தொடர்பாடல் என்பவற்றை தாய் நி ுறுவனம் செய்யும்
5. பணம் சேவை சம்பந்தமான உத்தர வாதத்தினை வழங்குகிறது.

அங்கீகாரம் பெற்ற வியாபாரத்தின் தீமைகள்

1. அங்கீகாரம் பெறுவதற்காக பெருந்தொகைப் பணத்தை தாய் நிறுவனத்துக்கு செலுத்த வேண்டியுள்ளது.
2. தாய் நிறுவன சட்டதிட்டங்களுக்கு ஏற்ப கிளை நிறுவனம் இயங்க வேண்டியமை
3. தாய் நிறுவனத்தின் உற்பத்தி பொருட்கள் மட்டுமே விற்பனை செய்ய முடியும்
4. பொருட்களின் விலையினை தாய் நிறுவனம் தீர்மாணிக்கும்

வணிகக்கல்வி - II 1999 ஓகஸ்ட

பகுதி I விடைகள்

1. 5	8. 2	15. 2	22. 5
2. 2	9. 3	16. 4	23. 4
3. 1	10. 4	17. 3	24. 2
4. 3	11. 5	18. 2	25. 2
5. 4	12. 1	19. 5	26. 4
6. 4	13. 3	20. 4	27. 1
7. 4	14. 4	21. 1	

28) 1. தொழிலாளர் நிறுவனப் பிணக்குகளை தீர்த்தல்
2. தொழிலாளரின் உரிமைகள், சலுகைகள் நசுக்கப்படும் போது அவற்றினை பெற்றுக் கொடுக்க உதவுதல்.
3. வேலை நிறுத்தம், கதவடைப்பு போன்ற சந்தர்ப்பங்களில் உறுப்பினர்களுக்கு நிதிசார்ந்த அல்லது பொருள் சார்ந்த உதவிவழங்குதல்

29) 1980 ஆண்டு 26ம் இலக்க உணவுச்சட்டம்

1. தலையங்கம்	2. ஊழியர்	3. தொழிலுரிமையாளர்
நெறிப்படுத்தல் Direction	தொழில்தருநர்	சுயமான
விருத்தியடையும் இயலுமை (Scop)	வரையறுக்கப்பட்டது	வரையறுக்கபடாதது.
உழைப்பு Earning	சம்பளம்	இலாபம்

31) சிறு வியாபாரதாரர்களினால் எதிர் நோக்கப்படும் பொதுவான பிரச்சனைகள்
1. பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு தேவையான போது சந்தைப்படுத்த பண்டகசாலை வசதியின்மை
2. வியாபாரம் சம்பந்தமான அனுபவக் குறைவு
3. முகாமைத்துவ அறிவு குறைவாக உள்ளமை
4. இடவசதி பற்றாக்குறை காணப்படும்.
5. சிறு வியாபாரத்தில் முதலிட மூலதனம் குறைவாக இருக்கும்.
6. தொழில் நுட்ப அறிவு குறைவாக இருக்கும்
7. வளர்ச்சியடைந்த தொழில்களுடன் போட்டி போடமுடியாத நிலை
8. உற்பத்தி பொருட்களின் தரத்தை பேணுவதில் குறைபாடு இருக்கும்.

32) தேசிய கைப்பணிச் சபை 1982 இலக்கம் 35 சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட தாபனங்கள்
1. தேசிய கைவினைத் தொழில் நிலையம்

2. லக்சலா (இலங்கை தேசிய கைப்பணிச்சபை)
3. தேசிய வடிவமைப்பு சபை

33) தேசிய கைப்பணிச்சபையின் முக்கிய நோக்கம்
பாரம்பரியக் கைத்தொழில்களை ஊக்குவித்தலும் பாதுகாத்தலும்.

34) சிறிய வியாபாரங்களுக்கு தொழில் நுட்ப சேவைகள் வழங்கும் தாபனங்கள்
1. கைத் தொழில் அபிவிருத்திச்சபை (IDB)
2. தேசிய கைப்பணிச்சபை
3. தேசிய மொதியிடல் நிலையம்
4. இலங்கை கட்டளைப்பணியகம்
5. தேசிய இளைஞர் சேவை மன்றம்
6. கைத்தொழில் நுட்ப நிறுவனம்
(இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆய்வு நிறுவனம்)

35) தேசிய பொதியிடல் நிறுவனம் வழங்கும் சேவைகள்
1. பொதியிடல் தொடர்பான பயிற்சி அளித்தல்
2. பொதியிடல் தொடர்பான தொழில் நுட்ப சேவை ஆலோசனை வழங்குதல்
(செலவுகளை இழிவுபடுத்த ஆலோசனை வழங்குதல்)

36) ஊழியர்களின் பெறுபேறுகளுடாக மதிப்பீடு செய்வதால் ஏற்படும் நன்மைகள்
1. ஊழியர்களின் ஊக்குவித்தலை அதிகரித்துக் கொள்ளலாம்
2. ஊழியர்களுக்கு தேவையான பயிற்சியை இனங்காணல்
3. தேவையானவர்களின் மதீப்பீட்டை அடையாளம் கண்டு பதவி உயர்வு வழங்கலாம்.
4. சம்பள உயர்வு வழங்கலாம்
5. ஊழியரின் வேலைத் திறனை அதிகரித்துக் கொள்ளலாம்
6. மீள் ஊட்டலைப் பெற்றுக் கொள்ளலாம்.
7. வெற்றிகரமான முகாமைத்துவத்தை பெற்றுக் கொள்ளலாம்.

37)

வியாபார நோக்கில் ~ 1	நுகர் வோர் நோக்கில் ~ 2
பொருள்	நுகர்வோரின் தேவைகளும் விருப்பங்களும்
விலை	நுகர்வோர் பொருளுக்காக செலுத்தப்படும் கொடுப்பனவு
இடம்	விநியோக முறை
மேம்படுத்தல்	தொடர் கொள்ளும் முறைகளும் / தூண்டுதல்களும்

38) திட்டமிடல் தோல்வியடைவதற்கான காரணம்
1. திட்டமிடலுக்கு போதுமான தகவல்களைப் பயன்படுத்தி திட்டமிடலை மேற்கொள்ளாமை
2. திட்டமிடலுக்கு பயன்படுத்தப்பட்ட தகவல்கள் சரியானவையாகவும் நிச்சயமானவையாகவும் இராமை
3. நிறுவனத்தின் அளவுக்கு மேற்பட்ட அடிப்படையில் திட்டமிடல்
4. திட்டமிடலை சீராக செயற்படுத்தாமை
5. திட்டமிடலை செயற்ப்படுத்தும் இணைப்புகளில் உள்ள குறைபாடு.

39) வியாபார நிறுவனம் நிதித்தகவல் மூலங்களை பெற்றுக் கோள்ளும் கணக்குகள்

1. ஐந்தொகை (நிதி நிலைமைக் கூற்று)
2. வருமானக் கூற்று (இலாபநட்டக் கணக்கு)

40) செயற்திட்ட அறிக்கையால் ஏற்படும் நன்மைகள்

1. ஒரு செயற்ப்பாட்டில் திட்டமாக அமைதல்
2. பல்வேறு பட்டமாற்றுச் செயற்திட்டங்களில் இருந்து மிகப் பொருத்தமான சிறந்த செயற் திட்டத்தை தெரிவு செய்தல்
3. நிறுவன செயற்பாட்டை ஆரம்பிக்கு முன்னரே, நிறுவனத்தின் வெற்றியை உறுதிப்படுத்த செயற்திட்ட அறிக்கை உதவும்
4. வங்கி, நிதிசார் நிறுவனங்களில் கடனைப் பெற்றுக் கொள்வதற்கு செயற்திட்ட அறிக்கை உதவி புரியும்.

பகுதி II விடைகள்

1) i. வியாபார நிறுவனத்தில் தொழில் தருநர், தொழிலாளர் உறவுகளை நல்ல முறையில் பாரமரித்தல்

* தொழில் தருநரும், தொழிலாளரும் தொழில் நிறுவனத்தை தமது நிறுவனமாக கருதி நடத்தலும், இரு பகுதியினரும் ஒருவரில் ஒருவர் தங்கியிருப்பதோடு, நட்புடனும் ஒற்றுமையுடனும் செயற்படல்
* வியாபார நிறுவனத்தினது உற்பத்தி திறனும் இலாபத்திறனும் அதிகரிப்பதற்கு இரு சாரரும் இணைந்து செயற்படுதல்
* தொழில் தருநர், தொழிலாளர் ஆகிய இரு சாராரும் உரிமைகளையும் கடமைகளையும் பொறுப்புகளையும் அறிந்து அதற்கேற்ப செயற்படுதல்.
* நிறுவனத்தின் வளர்ச்சிக்கு தொழிலாளர் பலமே முக்கியமானது என்பதை தொழில் தருநர் அறிந்து கொள்ளுதல்.
* தொழிலாளர்களை மனிதாபிமான முறையில் நடாத்துவதோடு அவர்களுக்கான சலுகைகளை வழங்குதல்.

ii. அ) * பொதுச் சுகாதாரப் பரிசோதகர் (P.H.I)
* சுகாதார சேவைப் பணிப்பாளர்
* உள்நாட்டு வர்த்தக ஆணையாளர்
* மாநகரசபை அதிகாரருக்குட்பட்ட பிரதம அதிகாரி

ஆ) நுகர்வோர் பாதுகாப்பை பெற்றுக் கொள்ளும் வழிமுறைகள்

* சுய பாதுகாப்பு மூலம் (நுகர்வோர் கல்வி)
* நாகர்வோர் பாதுகாப்பு சங்கங்கள் மூலம்
* அரச சட்டங்கள் மூலமும் அரசாங்கள் மூலமும்

iii. அ) பொருட்களின் விலை, தரம் என்பவற்றை வணிகர் உறுதிப் படுத்தும் முறைகள்.

அ) S.L.S / ISO குறியீடுகள் மூலம்.
ஆ) உத்தரவாதப் பத்திரங்கள் வழங்குவதன் மூலம்.
இ) பொருளை சுற்றி ஒட்டப்பட்ட தகவல்கள் மூலம்
ஈ) பண்டத்தின் பெயர், உற்பத்தி நிறுவனம், விலாசம் மூலம்.

ஆ) நுகர்வோர் பாதுகாப்பை உறுதிப்படுத்த வணிகர் எடுக்க கூடிய முறை நுகர்வோர் நடத்தை ஒழுங்கு விதி நிறுவனம் தாமாக ஆக்கிக் கொள்ளும் விதி முறைகள் அதாவது.

* வாடிக்கையாளருக்கு நல்ல பொருளை விநியோகத்தல்
* வாடிக்கையாரை ஏமாற்றாது இருத்தல்

iv. அ) இலங்கைத் தர நிர்ணய நிறுவனத்தால் நுகர்வோர் பாதுகாப்பை ஏற்படுத்த எடுக்கப்படும் முறைமைகள்

* தேசிய தர நிர்ணயம்
* S. L. S.
* தரச் சான்றிதழ் (S.L.S) வழங்குதல்
* தரமுறைமை சான்றிதழ் (ISO 9000)
* உற்பத்தி பொருட்களுக்கு ஆய்வுகூடப் பரிசோதனை சேவை மேற்கொள்ளல்
* இலங்கை தேசிய தர சான்றிதழ்
* தரக்கட்டுப்பாடு சம்பந்தமான பயிற்சி அளித்தல்
* நுகர்வோர் கல்வியும் பாதுகாப்பு வழங்கல்

ஆ) S.L.S. அத்தாட்சி குறியீட்டினை தொடர்ச்சியாக நிறுவனம் கொண்டிருக்க S.L.S. நிறுவனம் செய்ய வேண்டியவை

* S.L.S. குறியீட்டை உடைய நிறுவனங்களது உற்பத்தி நடைமுறைகளை அடிக்கடி பரிசோதித்தல்.
* சந்தையிலிருந்து பொருட்களை குறிப்பிட்ட பொருளின் மாதிரிகளுடன் பரிசோதித்தல்
* பரிசோதனையின் போது குறைபாடுகள் காணப்படின் அவற்றை விவர்த்தி செய்வதற்கு அறிவுரை வழங்குதல்
* வழங்கப்படும் அறிவுரைகள் செயற்படுத்தாவிடின் S.L.S. குறியீட்டை ரத்து செய்தல்.

v. அ) இலங்கையில் தனியார் துறை முதலீட்டை அரசாங்க ஊக்குவிக்க காரணம்

* உள் நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதாடாக வேலை வாய்ப்பு வழங்கவும் தனியார்துறையை ஊக்குவிக்க.
* அரச முதலீடுகள் குறித்தளவு இலாபமீட்டாமை
* தனியார்துறை ஊக்குவிப்பதாடாக வெளிநாட்டு முதலீட்டை அதிகரிக்க செய்தல்.
* தனியார் துறை சிறந்த முகாமைத்துவத்தையும் கட்டுபாட்டையும் தன்னகத்தில் கொண்டிருத்தல்.

ஆ) தனியார் துறை முதலீட்டை ஊக்குவிக்க அரசு மேற்கொண்ட தந்திரோபாயங்கள்

* தனியார் துறைகளுக்கு வரி விடுதலை அளித்தல்
* வணிக வங்கிகள் ஊடாக நிதி வசதி அளித்தல்
* இலங்கை முதலீட்டு சபையை உருவாக்கி வெளிநாட்டினரை கவர்தல்
* உட்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்தியமை
* செலாவணிக் கட்டுபாடுகள் தளர்த்தியமை.

2) i. பொருளாதார அபிவிருத்தியில் சிறு வியாபார முயற்சிகளின் முக்கியத்துவம்

* சிறு தொழில் முயற்சிகள் மூலம் அதிகமானோருக்கு வேலை வழக்க முடியும்.
* கிராமியத்துறை மூலவளங்களை உபயோகித்து கிராம அபிவிருத்தி செய்தல்

* சிறுவியாபார முயற்சிகளை ஆரம்பிப்பது மூலம் முயற்சியாண்மையை அபிவிருத்தி அடையச் செய்தல்
* கிராமங்களிலிருந்து குடிபெயரும் இடத் தவிர்ப்பை நீக்குவதோடு வேலையாட்கள் உள்ள இடத்திலேயே வேலை வழங்கல்.
* வருமான சமமின்மையும், வறுமை நிலை நிவிர்த்திக்க உதவும்.

ii. நிறுவனங்கள் — வழங்கும் சேவைகள்

* சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் (I.F.C) International Finance corporation
  * சிறு வியாபார முயர்ச்சி நிறுவனங்களுக்கு நேரடிக்கடன் வசதி
  * சிறு வியாபார முயற்சிகளுக்கு கடன வழங்கும் நிதி நிறுவனங்களுக்கு கடன் வசதி அளித்தல்
* கைத்தொழில் அபிவிருத்தி கழகம் Industrial Development Council
  * சீரான வியாபார முயற்சியை மேற்கொள்ள உதவுதல்
  * உருவாக்கம் சம்பந்தமான ஆலோசனை பெற முடிதல்
  * செயற்திட்ட அறிக்கை பெறல்
  * தொழில்நுட்ப பயிற்சிபெறல்
  * சந்தைப்படுத்தல் வசதியைபெறல்
* கைத்தொழில் அபிவிருத்திசபை Industrial Development Board
  * கைத்தொழில் பேட்டைகளை நிர்வாகித்தல்
  * மாதிரிசிறு வியாபார கைத்தொழில்களை நிறுவிக்காட்டுதல்
  * நிதிஸ்தாபனங்களிடம் கடன் பெறச் சிபார்சு செய்தல்
  * மூலப் பொருள், பொறிகள் ஏற்பாடு செய்தல்.

iii. அ) சிறிய நடுத்தர மட்ட முயற்சிகளை இனம் காண்பதற்கான பிரமாணங்கள்

* முயற்சியில் ஈடுபடுத்தப்பட்ட மூலதனம்
* முயற்சியிலுள்ள சொத்துக்களின் பெறுமதி
* பயன் படுத்தப்படுகின்ற தொழில் நுட்பம்
* ஊழியர்களின் எண்ணிக்கை
* விற்பனைப் புரள்வு
* பயன் படுத்தப் படும் மின்சக்தி

ஆ) சிறிய நடுத்தர மட்ட முயற்சியாக அடையாளப் படுத்த வேண்டிய காரணிகள் எவை?

* அரசு, அரசு சார்பற்ற நிறுவனங்களும் வெளிநாட்டு நிறுவனங்களும் கடன் உதவி வழங்குதல்
* அரச வரிச்சலுகையும் தீர்வை விலக்கு பெறவும் உதவும்
* மற்றைய நிறுவனங்களை விட இவற்றுக்கு குறைவான கட்டணங்களை அறவிடுகின்றது.

iv. பிராந்திய கைத்தொழில் சேவை நிலையங்களினால் வழங்கப்படும் சேவைகள்

* உட்கட்டமைப்பு வசதி வழங்குதல் (கைத் தொழில் பூங்க)
* பிராந்திய கைத்தொழில் சேவை நிலையம் மூலம் போக்குவரத்து, களஞ்சிய, உணவு சாலைகளுடன் உள்ள சந்தை தொகுதி அமைந்துள்ளமை.
* சேவை வழங்கும் தொகுதிகள் அணைத்தும் ஒன்றுடன் ஒன்றினைந்து காணப்படுதல்.

v. சிறு முயற்சி வெற்றிகரமாக செயல்படுகின்றது என்பதை மதிப்பீடும் முறை

1. சிறு முயற்சிகள் வளங்கள் சிறப்பாக முகாமை செய்தல்
2. நிதி நிலை செல்வாக்கு தெரியப்படுத்தும்
3. தொழில் சார் உதவிகள் முயற்சிகளுக்கு பக்க பலமாக இருத்தல்
4. நேர அட்டவணைக்கும் திட்டமிடலுக்கு ஏற்பட செயற்படுதல்
5. வியாபாரம் சம்பந்தமாக முன் கூட்டியே திட்டமிடல்

3) i. அ). நிறுவனத்தில் முகாமையாளருக்கு காணப்படும் அடிப்படைத் தொழிற்பாடு

* நிறுவனம் பற்றி திட்டமிடலும், தீர்மாணம் எடுத்தலும்
* முகாமைத்துவமும் / ஒழுங்கமைத்தலும்
* தலைமைத்துவத்தை நெறிப்படுத்தல்
* கட்டுப்படுதல்

ஆ) ஒரு நிறுவனத்திற்கு திட்டமிடலின் முக்கியத்துவம்

* நிறுவன அமைப்புகள் எப்பொழுதும் மாற்றமடையக் கூடிய சூழ்நிலைகளில் செயற்படுவதால் நிச்சயமற்ற நிலைமைகளை எதிர் நோக்க வேண்டி ஏற்படலாம். இந்த நிச்சயமற்ற நிலைமை களை வெற்றிகரமாக எதிர் நோக்குவதற்கு திட்டமிடல் மிகமிக இன்றியமையாத முகாமைத் துவ கருமங்களில் ஒன்றாகும்.
* வரையறுக்கபட்ட வளங்களைப் பயன்படுத்த உச்சப் பயன் பெறுவதற்கு திட்டமிடல் அவசியமாகும்.
* திட்டமிடல் நிறுவனங்களது நிர்வாகத்தை எளிதாக்குகின்றது. அதாவது நிறுவனங்கள் எதிர்பார்க்க கூடிய குறிக்கோள்கள் நிறைவேறி விட்டனவா என நிச்சயிப்பதற்கு முகாமைக்குழு திட்டமிடல் அவசியமாகும்.

ii. முகாமையாளர் எதிர் நோக்க வேண்டிய சவால்கள்.

* வியாபார சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப மாறவேண்டும்
* போட்டி நிறுவனங்களின் சவால்களை சமளித்தல்
* தொழில் நுட்ப மாற்றத்திற்கேற்ப மாற்றடைய கூடிய உற்பத்தி
* நிலையற்ற பொருளாதாரமும் / சந்தையும்
* பூகோளமயப் படுத்தல் பிரச்சனை
* சமுகத்தின் விரைவான அறிவு வளர்ச்சி


iii. அ) திட்டமிடலுக்கும் (Planning) திட்டத்திற்கும் (Plan) இடையிலான தொடர்பு

திட்டமிடலிருந்து உருவாகுவதே திட்டமாகும். திட்டமிடல் ஒரு பரந்த செயற்பாடுயாகும். ஆனால் திட்டமானது ஒரு ஆவணம் ஆகும்.

ஆ) முகாமைத் தொழிற்பாடுகளுக்கிடையிலான உறவுத்தன்மை

முகாமைத் தொழிற்பாடுயானது நிறுவனங்களின் குறிக்கோளை உச்ச அளவில் அடைந்து கொள்வதற்கு தேவையான பல்வேறு வளங்களையும், கருமங்களை ஒன்றினைத்து செயற்பட வேண்டும் என்பதை நிர்ணயிக்கும் கருமம் ஆகும்.

திட்டமிடலானது குறிக்கேளை உச்ச அளவில் அடைவதற்கு எதிர்கால நிலைமைகளை முன்னுரைந்து ஒழுங்கமைக்கப்பட்ட விடயங்களுக்கு தலைமை வகித்தல், ஊக்குவித்தல், தொடர்புபடுத்தல் ஆகியனவாகும்.



iv. அ) தற்போது கணனியிலால் மேற்கொள்ளப்படும் வினத்திறன்கள்

* கணக்கீடு, கடன் பட்டோர் பட்டியல்
* சரக்கிருப்பு கட்டுப்பாடு
* சம்பளப் பட்டியல் தயாரித்தல்
* நிறுவன கோவை பராமரித்தல் ~ ஊழியர் வரவு பதிவேடு பேணுதல்
* இணைத்துடனான தகவல் பரிமாற்றம் (Internet)
* இலத்திரனியல் தபால் முறை (E-Mail)
* தரவுக்கட்டுபாடு, வரவு செலவுக் கட்டுப்பாடு
* இலத்திரனியற் காசு பரிமாற்று.

ஆ) ஒழுங்கமைத்தல் செய்முறைக்கான அடிப்படை பனிமுறை

* தேவையான வளங்களை அடையாளங்காணுதல், அவற்றை வகைப்படுத்தல்.
* அதிகாரங்களையும் பொறுப்புகளையும் பகிர்ந்தளித்தல்
* திணைக்களப் படுத்தல் / பதவி வகித்தல்
* கருமங்களை ஒருங்கினைத்தல்

v. அ) தரக்கட்டுப்பாடு ~ பொருட்களும் சேவைகளும் நியமமான தரத்திற்கேற்ப உற்பத்தி செயப் பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தப்படுவது தரக்கட்டுப்பாடு ஆகும்.

ஆ) சமப்பாட்டுப்புள்ளி ~ நிறுவனம் நிலைத்து செயற்பட ஆகக்குறைந்த வருமான உழைக்கும் எல்லையைக் கண்டு கொள்ள, இலாபநட்டமற்றநிலையை கண்டு கொள்ள சமப்பாட்டு புள்ளி உதவும்.

இ) சரக்கிருப்புக்கட்டுபாடு~ மிகையான அல்லது குறைவான இருப்பு நிலைமையொன்று ஏற்படா வண்ணம் இழிவுக் கிரயத்தில் சிறந்த இருப்பு பொன்றை பேணி வருவது சரக்கிருப்புக் கட்டுப்பாடு ஆகும்.

பகுதி "ஆ"

4) i. அ) வியாபார நிறுவனம் ஒன்றின் மனிதவளதிணைக்களத் தொழிப்பாடுகள்

* நிறுவனங்களின் செயற்பாட்டுக்கு அவசியமான ஊழியங்களின் எண்ணிக்கை.
* ஆட்சேர்ப்பு தெரிவு செய்தலும்
* சமுகப் படுத்தலும் திசைமுகப்படுதலும்
* தொழிலாளர் மதிப்பீடு
* பதவியுயர்வு, பதவிமாற்றம், இளைப்பாறல்

* தொழிலாளர் உறவு.
* கூலி, சம்பளம், நிர்வாகம்

ஆ) ஒரு தொழிலாளியின் உற்பத்தி திறனில் செல்வாக்கு செலுத்தும் முக்கிய காரணிகள்
* தொழில் செய்யும் சூழல்
* தொழிலாளிக்கான கொடுப்பனவும்
* சிறந்த ஊக்குவித்தலும் தொடர்பாடலும்
* கொடுப்பனவுகளும் பிறநலன்களும்
* ஏனைய ஊழியர்களுடன் கொண்டுள்ள தொடர்பு
* நிறுவன அபிவிருத்திக்கான வாய்ப்புகள்.
* பயிற்சியளித்தலும் திறனும்.

ii. அ) முகாமையால் மதிப்பீடு செய்ய வேண்டிய மனித சக்தி
* நிறுவனங்களின் செயற்பாட்டுக்கு அவசியமான ஊழியங்களின் எண்ணிகையை மனித சக்தி மூலம் திட்டமிடப்படவேண்டும்.
* ஊழியங்களை பயன்படுத்தும் முறைமை
* எதிர்காலத்தில் தேவைகளுக்கு வெளியிலிருந்து ஊழியங்களை திரட்டும் முறைகளையும் மனித சக்தியில் எதிர்வு கூறப்படவேண்டும்.
* எதிர்காலத்தில் மனித சக்தி திட்டமிடும் போது எதிர்கால ஊழியப் புரள்வு, (இளைப்பாறும் ஊழியர், பதவிவிலகல்) எதிர்கால மேம்பாடுகளுக்கு பொருத்தமான பயிற்சி பெற. சமயோசித, நிரந்தர ஊழியங்களையும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.
* மனித சக்தி திட்டமிடலின் போது உயர்நிலை, உத்தியோகத்தர் கட்டளை பிறப்பிப்போர், பொறியியலாளர், எழுதுநர், ஏனைய அவசியமான ஊழியர் ஆகிய ஊழியங்களை திட்டத்தில் வகைப்படுத்திக்காட்ட வேண்டும்.

ஆ) ஆட்சேர்ப்பு தெரிவு செய்முறைகளின் செயற்பாடுகளின் ஒழுங்குமுறை
1. தொழில் சார் விண்ணப்பங்கள்
(தொழில் சார் விண்ணப்படிவங்களை பரிசீலனை செய்தல்)
2. எழுத்துப் பரீட்சை நடாத்தல்
3. செயல் ரீதியான பரீட்சைகள் நடாத்துதல்
4. நேர்முகப் பரீட்சை நடாத்தல்
5. சிபார்சு செய்தல் / நியமனம் வழங்கள்

iii. செயற் திட்டத்தை தெரிவு செய்வதில் கருத்தில் கொள்ள வேண்டியவை
1. உத்தேச செயற் திட்டம் புதிய நிறுவனத்துக்குரியதா அல்லது தற்போது செயல்படக்கூடிய நிறுவனத்தின் விரிவாக்கம் சார்ந்ததா.
2. உற்பத்தியின் தன்மையும், அவை எந்நோக்கத்திற்காக பயன்படும் என்பதை அறிய உதவுதல்
3. உத்தேச நிறுவனத்தை ஒரிடப்படுத்தல்
4. செயல் திட்டம் சிறந்த அமைப்புக்கமைய திட்டப்மிடப் படுவதன் மூலம் தேவையான சிறந்த தகவல்களை திரட்டமுடியும்.

iv. அ) உலகளாவிய பொருள் குறியீட்டை (Product Code) பயன்படுத்துவதால் சில்லறை

வியாபார அடையும் நன்மைகள்

* பொருள் பற்றி வியாபாரி அறிந்து கொள்ளமுடியும்
* உற்பத்தியாளர் நாடு, உற்பத்தி பொருளின் வகை, பொருளின் விலை குறிப்பிடப்பட்டிருக்கும்.
* சரக்கு கட்டுப்பாட்டுக்கு கணனி மூலம் வாசிக்கப்படுவதால் இலகுவாக சரக்கிருப்பு கட்டுப் பாட்டை மேற்கொள்ள முடியும்.

ஆ) பொதி வடிவில் சந்தையில் பொருட்கள் வரக்காரணம்

* பொதிகளை பாதுகாப்பாக கையாளலாம்
* பொதிகளை கவர்ச்சிகரப்படுத்தல் மூலம் விற்பனை அதிகரித்தல்
* போக்கு வரத்து களஞ்சியப் படுத்தலுக்கு இலகு
* வாடிக்கையாளர் சுயமாக தேர்ந்தெடுக்க உகந்த முறை
* பொதியின் அருகே பொருளின் உள்ளடக்கம், பாவனைக்காலம் பாவிக்கப்படும் முறைகள் யாவும் விளக்கப்பட்டிருக்கும்.

v. அ) மூலதன தேவைப்பாட்டை தீர்க்கும் காரணிகள்

* தேவையான மூலதனம் பற்றிய தரவுகளையும், தகவல்களையும் வகுத்துக் கொள்ளல்
* மூலதனத்தின் தேவை நிறுவனத்தை வீரிவுபடுத்தல்
* மூலதனப் பொருட்களை கொள்வனவு செய்ய தேவையான மூலதனம்
* தொழிற்படு மூலதனத்தின் தேவையான அளவு
* கடன் பட்டோர் கடன் கொடுத்தோரிடம் மூலதனத்தைபெறல்

ஆ) குத்தகையிடலில் காணப்படும் விசேட நன்மைகள்

* குத்தகையிடல் முறையில் மிக கூடிய விலையான பொருட்களையும் சிறு, சிறு தொகை வழங்கும் முறையில் பெறுவதால் நீதியீட்டம் இலகுவாகின்றது.
* குத்தகை காலங்களில் பொருளுக்கான பராமரிப்பு நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படுவ தால் செலவீனங்கள் குறைவின்றன.
* பயன் படுக்காலம் முடிய சொத்தை திருப்பி ஒப்படைக்கலாம்.

5) i. அ)

கம்பனிப்பொறுப்பில்

உள்ளக நிதி மூலகம்	வெளியக நிதி மூலகம்
* ஒதுக்கங்கள்	* சாதரணபங்கு முதல் * தொகுதிக் கடன் * கடன் கொடுத்தோர் * செலுத்த வேண்டியவரி

ஆ) நடைமுறைவிகிதம் $= \frac{\text{நடைமுறைச் சொத்துகள்}}{\text{நடைமுறைப்பரிப்புகள்}} = \frac{260}{230} = 1.31 : 1$

விரைவு விகிதம் $= \frac{\text{திரவச் சொத்துகள்}}{\text{நடைமுறைப் பொறுப்புகள்}} = \frac{150}{230} = 0.65 : 1$

இ) இணைப்பு விகிதம் $= \frac{\text{நீண்டகாலக்கடன் மூலதனம்}}{\text{உரிமை மூலதனம்}} = \frac{200}{150} = 1.33 : 1$

ii. அ) வியாபாரத்தின் திரவத்தன்மை நிலை

சாதரணமாக நடைமுறை விகிதம் 2:1 ஆக இருக்க வேண்டும் இங்கு நடைமுறை விகிதம் 1.31:1 ஆக காணப்படுவதால், இது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. நிதிப் பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியதாக திரவத்தன்மை அமைந்துள்ளது விரைவுவிகிதம் பொதுவாக 1:1 ஆக இருப்பதே நல்லது. அதுவும் இங்கு 0.65 இருப்பதனால இது பாதகமாகவை. இங்கு நிதிப் பிரச்சனை ஏற்படலாம்.

ஆ) இணைப்பு விகிதத்துடன் ~ மூலதனவிணைப்பு நிலைப் பாட்டுவிளைவு

மூலதன இணைப்பு உயர் இணைப்பாக காணப்படுகிறது. கடன்காரரின் செல்வாக்கு இங்கு அதிகம் இருப்பதால் இலாபம் குறைவாக கிடைக்கும் சந்தர்ப்பங்களில் நிறுவனம் பிரச்சனையை எதிர் கொள்ளவும், கூடுதலாக வட்டி வழங்க வேண்டியிருப்பதால் பங்கு இலாபம் குறைவதுடன் வட்டியை வழங்க இலாபம் போதாமலும் இருக்கும்.

iii. அ) தொழிற்படுமுதல் பற்றாக்குறை காரணமாக எதிர்நோக்கும் பிரச்சனைகள்

1. குறுங்காலக் கடன்களை திருப்பி செலுத்துவதில் பிரச்சனை
2. வியாபார தொழிற்பாட்டு செயன்முறை பாதிக்கப் படுகிறது.
3. தொழிற்ப்படு முதல் பற்றாக்குறையால் வியாபாரம் முறிவுநிலையடையும்.
4. ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதில் பிரச்சனை உருவாகும்.
5. வியாபார கொடுப்பனவுகளை கொடுப்பதில் பிரச்சனை உருவாகும்.

ஆ) போதுமான தொழிற்படு முதலை பராமரிப்பதற்கு கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகள்.

* வங்கிகளில் மேலதிகப் பற்று வசதியை கூட்டுதல்
* வியாபாரக்கடன் கொடுத்தோர்களை அதிகரித்தல்
* வியாபாரக்கடன் பட்டோரிடம் பணத்தை விரைவாக பெறுதல்
* கொடுப்பனவுகட்கு பிற்தேதியிட்டு காசோலை வழங்கல்
* விற்பனைகளுக்கு முன்பணத்தை பெற்றுக் கொள்ளுதல்

iv. அ) நிதி மூலகங்களை தெரிவு செய்வதில் கருத்திற்கொள்ள வேண்டியவை

* குறிப்பிட்ட திகதியில் நிதி மூலகம் அறவிடும் வட்டி
* நிதி வழங்கும் போது விதிக்கப்படும் நிபந்தனைகள்
* நிதி மூலகம் கடனுக்கு கோருகின்ற பிணைகள்

ஆ)

உயர்ந்தளவு இலாபமுடைய நிறுவனம் காசுபற்றாக்குறை எதிர்நோக்க காரணம்	அதிகளவு காசினைக் கொண்ட நிறுவனம் வியாபாரத்தில் நட்டமடையக் காரணம்
* நிதி முகாமை காணப்படாமை * இலாபத்திற்கும் காசுக்கும் இடையில் தொடர்பு இன்மை * இலாபம் உழைக்கும் நிறுவனம் குறைந்த காசைக் கொண்டிருத்தல்	* குறைந்த இலாபம் பெறும் நிறுவனம் கூடியகாசை கொண்டிருக்கலாம் * நிறுவன தொழிற்பாட்டிற்கு ஏற்றகாசு மீதியை பேண வேண்டும். * நல்ல மூலதன முகாமை இல்லாமை

v. அ) நன்மதிப்பு எனப்படுவது நிறுவனம் ஒன்றினது மதிப்பும் அதனது சேவையும் ஆகும். நன்மதிப்பு வாய்ந்த நிறுவனத்தில் வாடிக்கையாளர் கூடியதாகவும். நீண்டகாலமாக இலாபத்தில் இயங்குகின்றவேளையில் நன்மதிப்பு உருவாகும்.

ஆ) வியாபாரம் ஒன்றினைக் கொள்வனவு செய்யும் போது நன்மதிப்பு செலுத்துவதற்கான காரணம். ஒரு வியாபாரத்தை தொடங்கி நீண்ட கால இலாபத்தில் இயக்குவதும். வியாபார நிறுவனத்திற்கு ஏற்கனவே இருக்கும் வாடிக்கையாளரையும் கொள்வனவு செய்வது மூலம் பல நன்மைகள் உள்ளமையால் நன்மதிப்பு செலுத்தப்படும்.

6) i. அ)

சந்தைப்படுத்தல்	விற்பனை
* மக்கள் தேவைகளையும் விருப்பங்களையும் திருப்தி செய்வதன் மூலம் நிறுவன நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான முழுமையான செயற்பாடு சந்தைப் படுத்தல் ஆகும்.	சந்தைபடுத்தலின் ஒரு செயற்பாடே விற்பனையாகும். விற்பனையானது கொள்வனவு விற்பனை நடவடிக்கைகளை குறிக்கும்.

ஆ) உற்பத்தியாளர் பங்கீடு செய்ய நடுவரை நாடவேண்டிய காரணம்

* உற்பத்தியாளரே விநியோகம் செய்வதை மேற்கொள்ள அதிக மூலதனம் தேவை.
* உற்பத்தியாளர் பங்கீட்டு வேலையை பிறிதொருவருக்கு வழங்குவது மூலம் தனது கவனத்தை உற்பத்தியில் கூடிய பங்கு செலுத்த முடியும்.
* நடுவர்களுக்கு விநியோகம் செய்வதில் ஆர்வம் உள்ளமையால் உற்பத்தியாளர் நடுவரை நாடுகின்றனர்.

ii. விற்பனை மேம்படுத்தல் (Sale Promotional tool)

* வியாபார கழிவு வழங்கல்
* விசேட படி வழங்கல்
* கடன் விற்பனை
* உபகரணங்கள் வழங்கல்
* அன்பளிப்பு வழங்கல்.

iii. அ) அலகுக்கான கிரயம் $= \text{மாறும் கிரயம்} + \frac{\text{நிலையான கிரயம்}}{\text{விற்பனை அலகு}}$

$= 20 + \frac{200,000}{50,000} =$ ரூபா 24/=

குறித்த விலை $= \frac{24}{80} \times 100$

$=$ ரூபா 30

ஆ) உற்பத்தி யாளன் நடுவனைத் தெரிவு செய்யும் போது கவத்திற்கொள்ள வேண்டியவை

* விநியோக்கிக்கும் நிறுவனத்தினது தன்மை
* விநியோக நிறுவன அனுபவம்
* விநியோக நிறுவன இலாபத்தன்மையும் வளர்ச்சியும்

* வியாபாரத்தின் பலம்
* வியாபாரத்தின் நன்மதிப்பு
* ஒத்துழைக்கும் தன்மை
* வழங்க கூடிய உத்தரவாதங்கள்

iv. அ) பண்டப் பெயரொன்றில் காணப்பட வேண்டிய பண்புகள்

* பொருள் பற்றிய நல்ல அபிப்பிராயத்தை உருவாக்க கூடியதாக இருத்தல்
* பொருளின் உயர்தர தன்மையை உணர்த்தல்
* சரியான கருத்துகள் காணப்படவேண்டும்
* பொருளின் பெயர் இலகுவாக வாசிக்க கூடியதாக இருக்க வேண்டும்.

ஆ) விளம்பரத்தின் முக்கிய நோக்கங்கள்

1. பொருள் பற்றிய தகவல்களை வழங்குதல்
2. ஏற்கனவே உள்ள விற்பனையை அதிகரித்தல்
3. பொருள் பற்றி வாடிக்கையாளர்மத்தியில் ஞாபக மூட்டல்.

v. **வணிகர் ஒருவர் கொண்டிக்கவேண்டிய பொறுப்புகள்**

அ)	வாடிக்கையாளர்	* நியாயமானவராக இருத்தல் * நேர்மையாக நடத்தல் * ஏமாற்றாது இருத்தல் * வாடிக்கையாளரை மதிப்பளித்தல்
	சமூகம்	* வாடிக்கையாளரை மட்டுமன்றி சமூத்திலும் கவனம் செலுத்த வேண்டும். * சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் இயங்குதல் * சமூக மேம்பாட்டுக்காக சமூக அபிவிருத்திகளும் தகவல் தொடர்புகளையும் ஏற்படுத்துதல்.

ஆ) விற்பனையாளரின் பண்புகள்

1. வாடிக்கையாளருக்கு மதிப்பளிக்க வேண்டும்
2. வாடிக்கையாளருடன் நேர்மையாக நடத்தல்
3. வாடிக்கையாளரை கவரகூடிய முறை பேசுதல்
4. பொருட்களின் பண்பு பற்றி கலந்துரையாடுதல்
5. பொறுமையுடைய இருத்தல்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சை, 1998 ஒகஸ்ற் (புதிய பாடத்திட்டம்)

General Certificate of Education (A/L) Examination. August 1998 (New Syllabus)

வணிகக்கல்வி - I (பகுதி I)

ஒரு மணி

29

T I

* வினாவொன்று பல்தெரிவு வினாவாகக் காணப்படின் இதன் சரியான விடையின் கீழ்க் கோடிடுக. ஏனைய வினாக்களுக்கு விடையளிக்கும்போது குறிப்பாகவும் தரப்பட்ட இடைவெளியிலும் எழுதுதல் வேண்டும்.

1. 1996ஆம் ஆண்டிற்கான வேலைவாய்ப்பு பங்கீட்டு வீதம் கீழே தரப்பட்டுள்ளது.

சேவைகள்	~	40
விவசாயம், வனத் தொழில், கடற்றொழில்	~	38
தயாரிப்புக் கைத்தொழில்	~	14
கட்டிட நிர்மாணம்	~	06
சுரங்கத் தொழிலும் அகழ்வுத்தொழிலும்	~	02

மேற்கூறிய தகவல்களைப் பயன்படுத்தி பின்வரும் கைத்தொழில்களுக்கான வேலைவாய்ப்பு வீதங்களைக் குறிப்பிடுக.

ஆரம்பநிலை கைத்தொழில்கள் .....

இரண்டாந்தர கைத்தொழில்கள் .....

மூன்றாம் நிலைக் கைத்தொழில்கள் .....

2. கைத்தொழில் பொருட்களுக்கும், நுகர்வுப் பொருட்களுக்குமிடையிலான அடிப்படை வேறுபாடு பின்வருவனவற்றுள் எதனை அடிப்படையாகக் கொண்டது?

(1) பொருட்களின் பெறுமதி
(2) பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட நோக்கம்
(3) பங்கீடு, மேம்படுத்தல் செய்யப்படும் முறைகள்.
(4) கொள்வனவு செய்யப்பட்ட அளவும், தடவைகளும்.
(5) பொருட்களின் வாழ்க்கைக் காலம்.

3. பொருள் விரிவுபடுத்தல் (Diversification) என்பது

(1) தற்போதைய பொருளுடன் புதிய ஒரு அம்சத்தைச் சேர்த்தல்.
(2) உற்பத்தியில் கழிக்கப்பட்ட பொருட்களை பயன்படுத்தி பொருட்களை உற்பத்தி செய்தல்.
(3) பொருட்களின் உற்பத்தி செய்முறையில் எண்ணற்ற செயற்பாடுகள் இடம்பெறுதல்.
(4) பொருட்கள் தொடர்பான வேறுபட்ட வகைப்படுத்தல்கள்.
(5) ஒரு பொருளில் மாத்திரம் இருக்காமல் பலவித பொருட்களை உற்பத்தி செய்தல்.

4. இலங்கை மத்தியவங்கியின் வருடாந்த அறிக்கையின்படி 1997ஆம் ஆண்டிற்கான துறைசார்பான மொத்த தேசிய உற்பத்தி கீழே தரப்பட்டுள்ளன. (மொ.தே.உ.பங்குவீதம்)

விவசாயம், வனத்தொழில், கடற்றொழில்	18.1
சுரங்கத்தொழிலும் அகழ்வுத் தொழிலும்	2.5
தயாரிப்புத் தொழில்	21.8
கட்டிட நிர்மாணம்	6.9
சேவைகள்	50.7
மொத்த தேசிய உற்பத்தி	100.0

மேற்கூறப்பட்ட தகவல்களின்படி, 1997ஆம் ஆண்டிற்கான மொத்த தேசிய உற்பத்தியில் பங்களிப்பு வீதம்?

(1) 21.8 (2) 24.3 (3) 28.7 (4) 31.2 (5) 49.3

5. தற்போது இலங்கையில் எந்த நாடு பாரிய முதலீட்டாளராக காணப்படுகின்றது?

.....

6. பின்வரும் செயற்பாட்டு நிகழ்வுகளில் எந்த செயற்பாட்டு நிகழ்வு உற்பத்தித்திறன் தன்மையை மேம்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்யாதது.

(1) உள்ளீட்டை மாற்றாமல் அதே நிலையில் வைத்திருப்பது வெளியீட்டை அதிகரித்தல்.
(2) வெளியீட்டை மாற்றாமல் அதே நிலையில் வைத்திருந்து உள்ளீட்டைக் குறைத்தல்.
(3) உள்ளீட்டை அதிகரிக்கும் அதே வேளையில் வெளியீட்டையும் அதிகரித்தல்.
(4) உள்ளீட்டை சிறிய அளவினால் அதிகரிக்கும் வேளையில் வெளியீட்டை பெரிய அளவினால் அதிகரித்தல்.
(5) உள்ளீட்டை பெரிய அளவினால் குறைத்து, வெளியீட்டை சிறிய அளவினால குறைத்தல்.

7. வியாபாரத்தின் இலாபம் மாற்றமடைவதற்கு ஏற்ப தனது மூலதனத்திற்கான வட்டியை பெறுபவர்

(1) அமைதிப் பங்காளன் (2) இரகசிய பங்காளன்
(3) உறங்கும் பங்காளன். (4) பெயரளவுப் பங்காளன்
(5) போலிப் பங்காளன்.

8. ஒரு கூட்டுமுயற்சியை ஏனைய வியாபார நிறுவன வகைகளில் இருந்து வேறுபடுத்தும் பிரதான பண்பு:

.....

.....

9. ஒரு அலகு நம்பிக்கைப் பொறுப்பைத் (unit trust) தோற்றுவிக்கும் மூன்று பகுதியினரைப் பெயரிடுக.

1. ..... 2. .....

3. .....

10. ஒரு புதிய பங்கு வழங்கலில் ஒரு நிரற்படுத்தப்பட்ட கம்பனியின் பங்குகளுக்கு மேலதிக கேள்வி காணப்படும் போது, கடைப்பிடிக்கப்படாத ஒரு விடயம்,

(1) அதிஷ்டசீட்டு அடிப்படையில் ஒதுக்குதல்.
(2) விகிதாசார முறையில் ஒதுக்குதல்.
(3) குறித்த குறைந்த மட்ட அளவு வரைக்கும் விண்ணப்பிக்கப் பட்டவைகளுக்கு ஆகக் கூடிய தொகையை வழங்கியும் மிகுதியை விகிதாசாரப்படி வழங்கலும்.
(4) கூட்டு விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கல்.
(5) எல்லா பங்குகளுக்கும் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரியவந்ததுடன் விண்ணப்பங்களை மூடிவிடுதல்.

11. பங்குகளால் முதலீடு தொடர்பாக அனுமதிக்கப்பட்ட வணிக வங்கிகளின் மீது அண்மையில் அமுல் படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளை கீழ்க்காணப்படும் கூற்றுக்களில் எது சரியாகக் குறிப்பிடுகின்றது.
(1) நிரற்படுத்தப்பட்ட பொதுக்கம்பனியை விட வேறு எந்தக் கம்பனியினதும் பங்குகளையும் வைத்திருக்காமை அல்லது வேறு எந்த கம்பனியுடனும் இணையாமை.
(2) இத்தகைய கம்பனிகள் வைத்திருக்கும் பங்குகள் வங்கியின் மூலதனத்தில் 10% இற்கு மேற்படலாகாது.
(3) ஒரு பொதுக்கம்பனியின் மொத்த முதலீடானது வங்கியின் மூலதனத்தில் 30%இற்கு மேற்படலாகாது.
(4) இவ் இணைக்கப்பட்ட அல்லது பிடிக்கப்பட்ட பங்குகள் உரிய நிரற்படுத்தப்பட்ட பொதுக் கம்பனியின் செலுத்தப்பட்ட மூலதனத்தின் 20%இற்கு மேற்படக் கூடாது.
(5) மேலே கூறப்பட்ட எல்லா நிபந்தனைகளையும் கருத்தில் கொள்ளுதல்.

12. கொழும்பு பங்கு பரிமாற்ற நிலையத்தில் ஒரு நிரற்படுத்தப்பட்ட கம்பனியாக பதிவுசெய்வதற்கு ஒரு கம்பனியின் ஆகக் குறைந்த வழங்கப்பட்ட மூலதனம் எவ்வளவாகக் காணப்படுதல் வேண்டும்.
.....
.....

13. பொதுத் தாபனங்கள் புனரமைப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் பின்னர் பொறுப்பேற்கப்பட்ட வெற்றியடையாத தனியார் மயப்படுத்தப்பட்ட தாபனங்கள் இரண்டினைப் பெயரிடுக.
1. ..... 2. .....

14. விரிவுபடுத்தலுக்கான நிதிகளில் வரையறை, கடுமையான சட்டங்களை பின்பற்ற வேண்டிய அவசியம், வியாபார முகாமைத் திறன்களில் குறைபாடு, திறன்கொண்ட தொழிலாளர்களைக் கவர முடியாமை போன்ற பிரதிகூலங்களை எந்த வகையான நிறுவனம் கொண்டுள்ளது.
(1) பொதுக் கூட்டுத்தாபனம்.
(2) கூட்டுறவுச் சங்கங்கள்
(3) வரையறுக்கப்பட்ட பங்குடமைகள்
(4) தனி உரிமையாண்மை
(5) அரசாங்க திணைக்களங்கள்

15. ஒரு கூட்டுறவு சங்கத்தை பதிவு செய்வதற்கு அவசியமற்ற ஆவணம் எது?
(1) பதிவு செய்வதற்கான விண்ணப்பப்பத்திரம்.
(2) சட்ட அறிக்கை.
(3) சங்கம் ஒன்றை வைத்திருப்பதற்கான பொருளாதார நிலையை வெளிப்படுத்தும் அறிக்கை.
(4) சங்கத்தை பதிவுசெய்வதற்கான இறுதித் தீர்மானத்தினை அங்கீகரித்த கூட்டத்தின் நிகழ்ச்சியேட்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி.
(5) சங்கம் அமைந்துள்ள இடமும், இவ்விடத்தை அடையக்கூடிய வழியை காட்டும் வரைபடமும்.

16. ஒரு கூட்டுறவு சங்கத்தின் பதிவை ரத்துச் செய்வதற்கு கூட்டுறவுச் சங்க பதிவாளருக்கு வேண்டுகோள் விடுக்க எத்தனை அங்கத்தவர்கள் தேவைப்படுவார்கள்?
.....

17. ஆரம்ப சந்தை மட்டத்தில் விலை மாற்றங்களை கணிப்பீடு செய்ய இலங்கையில் பயன்படுத்தப்படும் சுட்டெண் யாது?
.....

18. அண்மித்த பணம் சார்பாக, பின்வருவனவற்றில் கருத்திற்கொள்ள முடியாதது எது?
(1) வைப்புச் சான்றுப்
(2) திறைசேரி உண்டியல்
(3) சேமிப்பு சான்றிதழ்கள்
(4) பிரயாணிகள் காசோலைகள்
(5) தவணை வைப்புகள்

19. பணத்தைச் செலுத்தவும் என அறிவுறுத்தப்பட்ட ஒரு கட்டளைக் காசோலை பெறப்பட்டு இது மதிப்பிழக்கப்படும் போது, வங்கியாளரால் பயன்படுத்தப்படும் சொற்கள்,
(1) வரையுனரை விசாரிக்க.
(2) காசோலை ஒழுங்கற்ற முறையில் வரையப்பட்டுள்ளது.
(3) காசோலை முழுமைப்படுத்தப்படவில்லை.
(4) வரையுனரின் கையொப்பம் தேவை.
(5) கொடுப்பனவுக்கு வங்கியின் உத்தரவாதம் அவசியம்.

20. ஒரு வணிக வங்கி மூலம் பணத்தை அனுப்புவதற்கு ஒரு நிதி சாதனமாக பின்வருவனவற்றுள் எது பயன்படுத்தப்படுவதில்லை.
(1) வங்கியாணைகள் (Bank drafts)
(2) கொடுப்பனவுகள் கட்டளைகள்/உடன் கொடுப்பனவு கட்டளைகள் (Pay order/sight Pay ment orders)
(3) கிளை அறிவிப்பு (Branch advice)
(4) தபால்/தந்தி மாற்றங்கள்
(5) கொடுகடன் அட்டைகள்

21. இலங்கை மத்திய வங்கியினால் கடனை கட்டுப்படுத்த பயன்படுத்தக்கூடிய சில முறைகள் கீழே தரப்பட்டுள்ளன.
(a) வங்கி வீதம்
(b) முதலீட்டு உச்ச வரம்பு (Portfolio Ceilings)
(c) நாணயக் கடிதத்திற்கு எதிரான காசு எல்லை
(d) சட்ட ஒதுக்கு வீதம்
(e) வணிக வங்கி வட்டி வீதங்கள் மீதான கட்டுப்பாடு.
(f) திறந்த சந்தை செயற்பாடுகள்.
(g) நடத்தை சார்பு இணங்குவிப்பு (moral suasion).
(1) a,d,f,b (2) d,f,b,c (3) f,b,c,e (4) b,c,e,g (5) c,e,g,a

22. நிதிக் குத்தகையிடலின் வீசேட பண்புகளை உள்ளடக்கும் தொகுதியைத் தெரிவு செய்க.
(1) சாதாரணமாக நீண்டகால உடன்படிக்கை/குத்தகைக்கு எடுத்தவரினால் சொத்துப் பராமரிப்பு/ ஒரு பகுதியினரால் உடன்படிக்கையை நீக்கும் இயலுமை.
(2) ஒரு பகுதியினரால் உடன்படிக்கையை நீக்கும் இயலுமை/தவணை அடிப்படையில் வாடகையை செலுத்தல்/சாதாரணமாக குறுங்கால உடன்படிகை.
(3) உடன்படிக்கையை நீக்குவதற்கு இரண்டு பகுதியினரதும் சம்மதத்தை பெறும் அவசியம்/ சாதாரணமாக நீண்டகால உடன்படிக்கை/குத்தகைக்கு எடுத்தவரால் சொத்தைப் பராமரித்தல்.
(4) சாதாரணமாக குறுங்கால உடன்படிக்கை/குத்தகை கம்பனியினால் சொத்துப் பராமரிக்கப்படல்/ உடன்படிக்கையை நீக்குவதற்கு இரண்டு பகுதியினரதும் சம்மதத்தை பெறும் அவசியம்.
(5) சாதாரணமாக நீண்டகால உடன்படிக்கை/குத்தகை கம்பனியினால் சொத்து பராமரிப்பு/ஒரு பகுதியினரால் உடன்படிக்கையை நீக்கும் இயலுமை.

23. இலங்கை அரசாங்கம் கடனை பெறுவதற்கு பயன்படுத்தும் மூலதனச் சந்தை சாதனங்கள இரண்டைப பெயரிடுக.
(1) ..... (2) .....

24. திறைசேரி உண்டியல்கள் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்கூடிய கடன் தொகையை அங்கீகரிப்பது,

(1) இலங்கை மத்தியவங்கி (2) பாராளுமன்றம்

(3) பொதுத் திறைசேரி (4) பொதுக்கடன் திணைக்களம்

(5) நிதியமைச்சர்

25. இலங்கையின் தாபனங்களினால் வழங்கப்பட்ட நீண்ட காலக்கடனில் எத்துறை அண்மைக் காலத்தில் ஆகக் கூடிய கடன் தொகையை பெற்றுள்ளது?

.....

26. துணிகர தொழில் முயற்சி மூலதனக் கம்பனிகள் (Venture capital Companies) எந்த வகையான வியாபார நிறுவனங்களுக்கு மூலதனத்தை வழங்குகின்றன?

.....

27. காப்புறுதியின் பிரதான வகைகள் என்ன?

.....

.....

28. ஒரு சொத்து ரூ.100 000 இற்கு பெறுமதியிடப்பட்டு ரூ.60 000இற்கு காப்புறுதி செய்யப்பட்டது. இது ரூ.50 000ஐ நட்டத்தை அடைந்தது. சராசரி வாசகத்தை கொண்டிராத ஒரு காப்புறுதி கொள்கையைப் பெற்றுக் கொண்ட ஒருவரால் எவ்வளவு நட்டஈட்டுத் தொகையை பெற்றுக் கொள்ள முடியும்?

.....

29. ஆயுள் காப்புறுதிக்கு அல்லது சொந்த விபத்துக் காப்புறுதிக்கு எந்த காப்புறுதித் தத்துவம் பொருத்தமற்றது?

.....

30. நெடுஞ்சாலையில் ஒரு சாரதி தனது மோட்டார் வாகனத்தை செலுத்தும் போது கட்டாயமாக தன்னுடன் கொண்டு செல்ல வேண்டிய மூன்று ஆவணங்கள் என்ன?

(1) ..... (2) .....

(3) .....

31. ஒரு வியாபாரியினால் எந்த வகைப் பொருட்களுக்குமான ஒரு பொருத்தமான போக்குவரத்து முறையை தெரிவு செய்யும் போது என்ன பிரதான காரணியை கருத்திற் கொள்ள வேண்டும்?

.....

32. குறித்த சில பிரயாணிகள் போக்குவரத்து சேவைகளுக்காக நிதி உதவி வழங்கும் நோக்கத்தை கொண்டிருக்கும் தாபனத்தைப் பெயரிடுக.

.....

33. ஒருவர் வலைப்பின்னல் (Internet) தொடர்பை ஏற்படுத்துவதற்கு தேவைப்படும் உபகரணங்கள் என்ன?

.....

34. வாய்மூலமான தொடர்பு கொள்ளலின் நன்மைகளை வெளிப்படுத்தும் கூற்றை தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.
(1) செய்தியை வழங்கியவுடனே பிரதிபலிப்பை பெற்றுக் கொள்ளக்கூடிய இயலுமை.
(2) செய்தி பெறுபவரின் தன்மையை பொறுத்து செய்தியை அனுப்பும் இயலுமை.
(3) இது மிகவும் இறுக்கமான ஒரு முறையாகும்.
(4) செய்தியை மிகவும் சரியாக அனுப்பும் இயலுமை.
(5) செய்தியானது அனுப்பப்பட்டு விட்டது என்பதை உறுதிப்படுத்தும் இயலுமை.

35. மொத்த வியாபாரத்தை சில்லறை வியாபாரத்திலிருந்து வேறுபடுத்தும் மிகவும் முக்கியமான காரணி என்ன?

.....

36. முதல்வருக்காகக் கடனுக்கு விற்பனை செய்து பணத்திற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் முகவருக்கு வழங்கப்பட்டுள்ள பெயர் என்ன?

.....

37. தற்போது இலங்கையில் ஆகக்கூடிய அந்நியச் செலவாணி தொகையை எந்த இறக்குமதி கொண்டுள்ளது?

.....

38. சில குறித்த ஏற்றுமதி பொருட்களுக்கு தேவைப்படுகின்ற சுகநல சான்றுப் பத்திரத்தை (Health Certificate) யார் வழங்குகின்றனர்?

.....

39. ஏற்றுமதியில் பொருட்களுக்கான தரம், நிறுவை, அளவை போன்ற நற்சான்றிதழ்களை வழங்குவது
(1) வர்த்தக சம்மேளனம்.
(2) இலங்கை தர நிர்ணய தாபனம்.
(3) வர்த்தக திணைக்களம்.
(4) இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை.
(5) மதிப்பீட்டு அலகு, நியமங்கள், சேவைகள் திணைக்களம்.

40. இலங்கையில் இருபக்க வியாபார ஒப்பந்தங்களை தோற்றுவித்தலிலும், அமுல்படுத்துவதிலும் எந்த நிறுவனம் சம்பந்தமுடையது?

.....

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சை, 1998 ஒகஸ்ற் (புதிய பாடத்திட்டம்)

General Certificate of Education (A/L) Examination. August 1998 (New Syllabus)

BRIGHT BOOK CENTRE

வணிகக் கல்வி - I (பகுதி II)

29
T I

பகுதி "அ"விலும் "ஆ" விலும் இவ்விரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.
ஒவ்வொன்றுக்கும் 15 புள்ளிகள் வழங்கப்படும்.

---

1. (i) பின்வரும் ஒவ்வொரு துறைகளிலும் கைத்தொழில் புரட்சியின் விளைவாக ஏழுந்த மூன்று மாற்றங்களைக் குறிப்பிடுக.
   (a) உற்பத்தி துறை (b) வர்த்தகத் துறை
   (ii) ஒரு ஆடைத் தொழிற்சாலையினது உள்ளீடு வெளியீடு மாற்றச் செய்முறைகளை விபரமாக வரைபடம் ஒன்றைப் பயன்படுத்திக் காட்டுக.
   (iii) பொருட்களுக்கும் சேவைகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் என்ன?
   (iv) (a) அரசாங்கத்தினால் இன்று பயன்படுத்தப்படுகின்ற கைத்தொழில் தந்திரோபாயத்தின் பொதுவான நோக்கங்கள் என்ன?
   (b) ஏன் ஒரு நாட்டிற்கு உற்பத்தித்திறன் தன்மை (Productivity)
   (v) (a) கைத்தொழில் அபிவிருத்திக்கு அவசியமான உட்கட்டமைப்பு (Infrastructure) வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கத்தினால் பயன்படுத்தப்படும் தனியார் துறை பங்குபற்றலின் இரண்டு பிரதான முறைகளை விளக்குக.
   (b) உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதில் ஏன்அரசாங்கம் தனியார் துறையினரிடம் இருந்து பரந்தளவிலான பங்குபற்றலை எதிர்பார்க்கின்றது?

2. (i) இலங்கையில் காணப்படக்கூடிய வியாபார நிறுவனங்களின் முக்கியமான அமைப்பு வடிவங்களை கோட்டு வரைபடம் மூலம் காட்டுக.
   (ii) (a) ஒரு வரையறுக்கப்பட்ட பங்குடமைக்கும் ஒரு வரையறுக்கப்படாத பங்குடமைக்கும் இடையிலான பிரதான வேறுபாடுகள் என்ன?
   (b) தூங்கும் பங்காளனுக்கும் அமைதிப் பங்காளனுக்கும் இடையிலான வேறுபாடுகள் என்ன?
   (c) ஒரு பங்குடமையொன்றின் சீரான தொழிற்பாட்டிற்கு எழுத்திலான பங்குடமை ஒப்பந்தம் எவ்வகையில் பயன்பாடுடையது என விளக்குக.
   (iii) கீழ்வரும் விடயங்கள் தொடர்பாக, ஒரு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி எவ்வகையில் ஒரு வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியிலிருந்து வேறுபடுகின்றது என்பதை குறிப்பிடுக.
   (a) பங்குதாரர்களின் ஆகக்கூடிய, ஆகக் குறைந்த எண்ணிக்கை.
   (b) மூலதனம் திரட்டும் விதமும், பங்குகள் கைமாற்றமும்.
   (c) நிர்வாகம்

(iv) (a) ஒரு பங்குச் சான்றிதழில் உள்ளடங்க வேண்டிய அடிப்படையான தகவல்களைக் குறிப்பிடுக.

(b) ஒரு வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியினால் வருடாந்த பொதுக்கூட்டத்திற்கு முன்பு, பங்குதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தகவல் என்ன?

(v) (a) வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கு கீழ்க் காணப்படும் ஒவ்வொரு கம்பனியும் கம்பனி பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய ஆவணம் என்ன?

(1) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி

(2) வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி

(b) ஒரு வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனி மேலே (a)இல் குறிப்பிட்ட ஆவணத்தை பெற்றுக் கொள்வதற்கு என்ன தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தல் வேண்டும்?

3. (i) பொதுத் தாபன மீளமைப்பு ஆணைக்குழுவின் பிரதான தொழிற்பாடுகள் என்ன?

(ii) கூட்டுறவு சங்கங்களுடன் தொடர்புபடுத்தி பின்வருவனவற்றை விளக்குக.

(a) உரிமைத்துவமும் (ownership), பங்கொன்றின் விலையும்

(b) பதிவுசெய்தலும் அங்கத்தவர்களின் எண்ணிக்கையும்

(c) கணக்கீடும் கணக்காய்வும்

(iii) (a) பணத்தினுடைய மிகவும் முக்கியமான பண்புகளை விளக்குக.

(b) குறுகிய பண நிரம்பலுக்கும் (m_1) விரிந்த பண நிரம்பலுக்கும் (m_2) இடையிலான வேறுபாட்டை விளக்குக.

(iv) மாற்றுண்டியலுடன் தொடர்புபடுத்திக் கீழ்க் காணப்படும் விடயங்களை விளக்குக.

(i) இளைப்பாற்றுதல்

(ii) உதவியுண்டியல்

(iii) அண்மையில் பெறவிருப்பவர் (holder in due course)

(v) (a) ஒரு கைமாறத்தக்க சாதனத்தின் இரண்டு பண்புகளை தீர்வுசெய்வதற்கு

(b) இலங்கையில் வியாபாரியொருவர் தனது கொடுக்கல் வாங்கல்களைத் தீர்வு செய்வதற்கு காசோலைகளை விட ஏன் கொடுகடன் அட்டைகளை (credit cards) விரும்புகின்றனர்?

பகுதி ஆ

4. (i) (a) 'இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை' (Srilanka Interbank Payment System) என்பதனை விளக்குக.

(b) இலங்கை மத்திய வங்கி ஏன் வங்கிகளின் வங்கியாகத் தொழிற்படுகின்றது? விளக்குக.

(ii) (a) இலங்கையின் பொருளாதாரத்திற்கு நிதிக் கம்பனிகளினால் வழங்கப்படும் இரண்டு சேவைகளைக் குறிப்பிடுக.

(b) இலங்கையில் வியாபாரிகளுக்கிடையில் குத்தகை பிரபல்யமடைவதற்கான காரணங்கள் என்ன?

(iii) (a) பிறநாட்டு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் வணிக வங்கிகளில் இருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய இரண்டு வகையான கடன்களைக் குறிப்பிடுக.

(b) X என்பவர் Y இடம் இருந்து ரூ.100 பெறுமதியான பொருட்களைக் கொள்வனவு செய்து, கைமாறத் தகாதது எனக் குறுக்கு கோடிட்ட காசோலையைப் பயன்படுத்தி இக்கொடுப்பனவை தீர்த்துக் கொண்டார். Z என்பவர் இக்காசோலையைத் தவறவிட்டார். அக்காசோலை Aஇற்குச் செலுத்த வேண்டிய கொடுப்பனவைத் தீர்க்க பயன்படுத்தப்

பட்டது. Z இனதும் A இனதும் உரிமை தொடர்பான சட்ட அந்தஸ்து நிலைப்பாட்டை விளக்குக.

(iv) (a) ஆரம்ப நிலைப் பணச்சந்தையில் திறைசேரி உண்டியல்களின் கேள்வியை நிர்ணயிக்கும் காரணிகள் ஏவை?

(b) மக்கள் மத்தியில் திறைசேரி உண்டியல்களைப் பிரபல்யப்படுத்த என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(v) (a) கொழும்பு பங்கு பரிமாற்ற நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள தாபனத்தைப் பெயரிட்டு இத ஆற்றும் தொழிற்பாட்டை சுருக்கமாக விபரிக்குக.

(b) மத்திய வைப்பு முறைமையை (Central Depository System) தோற்றுவித்தலின் பிரதான நோக்கங்கள் என்ன?

5. (i) (a) 20 வருட காலத்திற்கான ஒரு ஆயுளுறுதிக் காப்புறுதி பத்திரத்தை பெற்றுக் கொண்ட ஒருவர் 5 வருடங்களுக்குப் பின்பு இதற்கான ஆயுளுறுதிக் கட்டணத்தை செலுத்த முடியாத சந்தர்ப்பத்தில் இவருக்கு காணப்படக்கூடிய தெரிவுகள் என்ன?

(b) ஏன் இத்தகைய தெரிவுகள் ஒரு காப்புறுதியாளருக்கு வழங்கப்படுகின்றன?

(ii) (a) கடல் காப்புறுதியில் பயன்படுத்தப்படும் மிதக்கும் காப்புறுதி ஒப்பந்தத்தை விளக்குக.

(b) ஒரு கப்பல் கம்பனிக்கு மிதக்கும் காப்புறுதி ஒப்பந்தத்தால் கிடைக்கக்கூடிய நன்மைகள் என்ன?

(iii) போக்குவரத்துக்கான கேள்வியை தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை விளக்குக.

(iv) (a) இலங்கையின் புகையிரத போக்குவரத்தின் செயற்பாட்டுத் திறனில் காணப்படும் குறை பாடுகளுக்கான காரணங்கள் என்ன?

(b) கொள்கலன் கப்பல்களின் பாவனை அதிகரிப்புக்கான காரணங்கள் என்ன?

(v) (a) தொடர்புகொள்ளலில் எவ்வாறு இலத்திரன் அஞ்சல் (E-mail) பயன்படுத்தப்படுகின்றது?

(b) இலத்திரன் அஞ்சலில் காணப்படும் நன்மைகள் என்ன?

6. (i) ஒரு சிறப்புச் சந்தைக்கும் ஒரு பல்பகுதிக் களஞ்சியத்திற்கும் இடையிலான மூன்று ஒத்த தன்மைகளையும் மூன்று வேறுபாடுகளையும் குறிப்பிடுக.

(ii) கீழ்வரும் ஒவ்வொரு விடயம் தொடர்பாக மிகவும் அதிகமாக பயன்படுத்தப்படும் விற்பனை முறையை பெயரிட்டு, ஏன் இம்முறைகள் பயன்படுத்தப்படுகின்றன என்பதை விளக்குக.

(1) ஒரு நகர பகுதியில் நிலத்தை சிறிய துண்டுகளாக விற்பனை செய்தல்.

(2) ஒரு அரச நிறுவனத்திற்கு சொந்தமான ஒரு பழைய கட்டிடத்தை இடித்தலும், நீக்கலும்.

(iii) (a) மீள் ஏற்றுமதிக்கும், இறக்கியேற்றும் வியாபாரத்திற்கு இடையிலான வேறுபாடுகளை விளக்குக.

(b) மீள் ஏற்றுமதியையும் இறக்கியேற்றும் வியாபாரத்தையும் கருத்திற் கொள்ளும் போது இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு எது மிகவும் முக்கியமானது என்பதை விளக்குக.

(iv) பிறநாட்டு வியாபாரத்தில் ஏன் மாதிரிப் பட்டியல் (Pro forma invoice) பயன்படுத்தப்படுகின்றன என்பதை குறிப்பிடுக.

(v) (a) ஒரு நிறுவனம் ISO 9000 தொடரை அடைய என்ன தேவைப்பாடுகளை கொண்டிருக்க வேண்டும்.

(b) உள்நாட்டில் வியாபாரியொருவர் ISO நற்சான்றுப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு ஏன் விருப்பம் கொண்டவராக காணப்படுதல் வேண்டும்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சை, 1998 ஒகஸ்ற் (புதிய பாடத்திட்டம்)

General Certificate of Education (A/L) Examination. August 1998 (New Syllabus)

BRIGHT BOOK CENTRE

வணிகக்கல்வி - II (பகுதி I)

இரண்டு மணி

29

T | I

வினாவொன்று பல்தெரிவு வினாவாகக் காணப்படின் இதன் சரியான விடையின் கீழ்க் கோடிடுக. ஏனைய வினாக்களுக்கு விடையளிக்கும்பொது குறிப்பாகவும் தரப்பட்ட இடைவெளியிலும் எழுதுதல் வேண்டும்.

1. ஊழியர்கள் தங்களது உரிமைகளை பெறும் இரண்டு மூலகங்களை குறிப்பிடுக.
   (1) .....
   (2) .....

2. ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கமும் தனது பதிவினை தொடர்ச்சியாக வைத்திருக்க என்ன பிரதான கடமைப்பாட்டைக் கொண்டிருத்தல் வேண்டும்?
   .....
   .....

3. ஊழியர்கள் நம்பிக்கை நிதியினால் பாதுகாப்பளிக்கப்படாத ஊழியர்கள்,
   (1) தனியார் துறையில் உள்ள எல்லா ஊழியர்களும்
   (2) பொதுக் கூட்டுத்தாபனத்திலும், நியதிச் சபைகளிலும் உள்ள எல்லா ஊழியர்களும்.
   (3) தமது சொந்தத்தில் பங்களிப்புச் செய்ய விரும்பும் சுய தொழிலை புரிபவர்கள்.
   (4) வெளிநாட்டு உத்தியோகத்தைக் கொண்டிருப்பவர்கள்.
   (5) அரசாங்க திணைக்களங்களின் ஊழியர்கள்.

4. சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டதான நுகர்வோர் உரிமைகளை யார் பிரகடனப்படுத்தினர்?
   (1) .....
   (2) .....

5. நுகர்வோர் சமூகத்தை (consumer society) உருவாக்குவது தொடர்பாக பின்வருவனவற்றிற்கு விடையளிக்குக.
   (1) பிரிவு .....
   (2) ஆகக்குறைந்த அங்கத்தவர்கள் எண்ணிக்கை .....

6. பொருட்கள் பற்றி பொய்யான அல்லது பிழையாக வழிநடாத்தும் விளம்பரமானது பின்வருவனவற்றில் எதனை மீறி நிற்கின்றது?
   (1)அழகுசாதனப் பொருள், உபகரணச் சட்டமும், மருந்துப் பொருள் சட்டமும்.
   (2) உணவுச் சட்டம்.
   (3) நியாய வியாபார ஆணைக்குழு

(4) நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்
(5) இலங்கை தர நிர்ணய நிறுவனச் சட்டம்.

7. கீழ்க் காட்டப்பட்ட பெயர்களைக் கொண்ட பரிசுகளை (awards) பெற்றுக் கொண்ட நிறுவனங்களின் பெயர்களை அப் பரிசுக்கு எதிரே உள்ள கோட்டில் குறிப்பிடுக.
(1) கண்டுபிடிப்புக்களுக்கான ஜனாதிபதி பரிசுகள்
.....
(2) தேசிய உற்பத்தித்திறன் பரிசுகள்
.....

8. SMED செயற்திட்டத்துடன் சேர்க்கப்பட்ட இரண்டு நிறுவனங்கள் என்ன?
(1) .....
(2) .....

9. தேசிய பொதியிடல் நிலையத்தின் மூலதனத்திற்கு பங்களிப்புச் செய்த நிறுவனங்களில் ஒன்று இலங்கை பொதியிடல் நிறுவனம் ஆகும். மற்றைய நிறுவனம்,
.....

10. Lak Nipayum விற்பனை நிலையங்கள் ஊடாக காட்சி, சந்தைப்படுத்தல் போன்ற வசதிகளை வழங்கும் நிறுவனம்
(1) இலங்கை கைப்பணிப் பொருள் சபை
(2) இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
(3) தேசிய கைத்திறன் ஆலோசனைச் சபை
(4) இலங்கை தேசிய வடிவமைப்பு நிலையம்
(5) ஏற்றுமதி வியாபார நிலையம்

11. முயற்சியாண்மையின் பண்புகள் சரியாக குறிப்பிடும் கூற்றின் கீழ்க் கீறிடுக.
(1) நிட்சயமற்ற தன்மையை ஏற்றுக்கொள்ளல்/சுயநம்பிக்கையை கொண்டிருத்தல் பொறுமையை கடைப்பிடித்தல்.
(2) இருந்த இடத்தில் வேலை செய்தல்/விரைவாக தீர்மானம் எடுத்தல்/புதிய தந்திரோபாயங்களை அமுல்படுத்தல்.
(3) நன்மை தரக்கூடிய வியாபார வாய்ப்புக்களை அடையாளம் காணல்/வினைத்திறன் கொண்டவராக இருத்தல்/பொறுமையை கடைப்பிடித்தல்.
(4) பொருத்தமான வியாபார வாய்ப்புக்களை அடையாளம் காணல்/திடசங்கற்பத்துடன் வெற்றியை முன்நோக்கிச் செல்லல்/அபாயத்தை எதிர்நோக்கும் தயார்நிலை.
(5) நிச்சயமற்ற வியாபார செயற்பாடுகளில் ஈடுபடல்/விரைவாக சரியான தீர்மானங்களை எடுக்கும் இயலுமை/தந்திரோபாயங்களை அமுல்படுத்தும் இயலுமை.

12. சிறிய நடுத்தர மட்ட வியாபார அடையாளப்படுத்துவதற்கு ஊழியர்களின் எண்ணிக்கையும் நிலையான சொத்தில் முதலிடப்பட்ட மூலதனத்தையும் பிரமாணமாக கொள்ளும் இரண்டு நிறுவனங்களைப பெயரிடுக.
(1) .....
(2) .....

13. பின்வரும் வியாபார நிறுவன அமைப்புக்கள் ஒவ்வொன்றிலும் எவரை முயற்சியாளராக (entrepreneur) கருத்தில் கொள்ள முடியும் என்பதை ஒவ்வொரு வியாபார அமைப்புக்கு எதிரே உள்ள இடைவெளியில் குறிப்பிடுக.

(1) பங்குடமைகள் .....

(2) கம்பனிகள் .....

(3) கூட்டுறவுச் சங்கங்கள் .....

(4) கூட்டுத்தாபனங்கள் .....

14. இலங்கையானது சிறிய நடுத்தர மட்ட கைத்தொழில்களில் உயர்ந்தளவு அக்கறையைக் கொண்டுள்ளமைக்கு காரணம்

(1) போட்டித்தன்மையை அதிகரிக்க.

(2) இறக்குமதி பதிலீட்டு கைத்தொழில்களை ஆரம்பிக்க.

(3) உள்நாட்டு மூலப்பொருட்களை பயன்படுத்த.

(4) பொருளாதார அபிவிருத்தியை துரிதப்படுத்த.

(5) ஆகக் குறைந்த அந்நிய செலாவணியைப் பயன்படுத்தும் முதலீடுகளை ஊக்குவிக்க.

15. ஒரு முயற்சியாளனின் அடிப்படைப் பண்புகளில் ஒன்று

(1) தற்போதைய வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ள மதிப்பீடுகளை எடுத்தல்.

(2) மூலவளங்களில் இருந்து ஆகக்கூடிய நன்மைகளை பெறுதல்.

(3) உயர் அபாயம் கொண்ட வியாபார முயற்சியில் ஈடுபடாதிருத்தல்.

(4) புதிய வியாபார செயற்திட்டங்களில் ஈடுபடுதல்.

(5) ஊழியர்களுடன் கூட்டாக வேலை செய்தல்.

16. இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் ஆலோசனை சேவைகளை உள்ளடக்கும் தொகுதியைத் தெரிவு செய்க.

(1) தர அறிக்கைகளைத் தயாரித்தல் / விலை பற்றி ஆலோசனை வழங்கல் / வியாபார சட்டம் பற்றிய அறிவினை வழங்கல்.

(2) ஆராய்ச்சியாளர்களுக்குப் பயிற்சியளித்தல் / உற்பத்திக் கிரயங்களை குறைப்பதற்கு ஆலோசனை வழங்கல் / விலை பற்றிய ஆலோசனை வழங்கல்.

(3) ஆராய்ச்சியாளர்களுக்கு பயிற்சியளித்தல் / உற்பத்திக் கிரயங்களைக் குறைப்பதற்கு ஆலோசனை வழங்கல் / செயற்றிட்ட அறிக்கைகளை தயாரித்தல்.

(4) பொதியிடல் முறைகளை மேம்படுத்தல் / சூழல் மாசடைதலை நிறுத்த ஆலோசனை வழங்கல் / விலை பற்றிய ஆலோசனை வழங்கல்.

(5) உற்பத்திக் கிரயங்களைக் குறைக்க ஆலோசனை வழங்கல் / விலை பற்றி ஆலோசனை வழங்கல் / பொதியிடல் முறைகளை மேம்படுத்தல்.

17. சிறிய, நடுத்தர நிறுவன உதவிச் செயற்றிட்டம் ஆனது எதனைக் கருதி நிற்கின்றது?

1. .....

2. .....

18. முகாமை பற்றி மிகச் சரியான கருத்தை பின்வருவனவற்றுள் எது கொண்டுள்ளது.

(1) நிறுவன இலக்கை அடைதல்.

(2) தொழில் கொள்வோர் ~ தொழில் புரிவோர் உறவை அபிவிருத்தி செய்தல்.

(3) மூலவளங்களை வினைத்திறனாக பாவித்தல்.

(4) வியாபாரத்தின் இலாபத்தன்மையை அதிகரித்தல்.

(5) திறன்மிக்க கட்டுப்பாட்டை பராமரித்தல்.

20. ஒரு வியாபாரத்தினது வெற்றியினால் நன்மை அடையக்கூடிய நான்கு குழுக்களைக் குறிப்பிடுக.

1. ..... 2. .....

3. ..... 4. .....

21. முகாமையில் கட்டுப்பாட்டு செய்முறைகளின் படிகளை குறிப்பிடுக.

.....

.....

22. மனித சக்தி திட்டத்தை மிகவும் சரியாகக் குறிப்பிடும் கூற்று எது?

(1) ஒரு நிறுவனத்திலுள்ள மேலதிக மனித சக்தி தொடர்பான முன்னுணர்தல்.
(2) ஒரு நிறுவனத்திற்கு தேவையான வேறுபட்ட வகை ஊழியர்கள் தொடர்பான முன்னுணர்தல்.
(3) ஒத்த நிறுவனத்தில் உள்ள மனித சக்தி கேள்வி நிரம்பலைத் தொடர்புறும் வகையில் ஒரு நிறுவனத்தின் எதிர்கால மனிதசக்தி கேள்வி நிரம்பல் தொடர்பாக முன்னுணர்தல்.
(4) ஒரு நிறுவனத்திலுள்ள மனித சக்தியின் எதிர்கால கேள்வி நிரம்பல் தொடர்பாக முன்னுணர்தல்.
(5) ஒரு நிறுவனத்தில் ஊழியர்களின் திறன்களை (skills) மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்படும் நிகழ்ச்சித் திட்டம்.


23. கூலிகளை நிர்ணயிப்பதில் சாதாரணமாக கருத்தில் எடுக்கப்படாத காரணியைக் கோடிடுக.

(1) வாழ்க்கைச் செலவு
(2) வேலை செய்யும் இடத்தின் தூரம்.
(3) ஊழியரில் தங்கியிருப்போர்களின் எண்ணிக்கை.
(4) பதவியுடன் தொடர்பான அபாயங்கள்.
(5) ஊழியரின் உடல் இயலாமை.

24. ஊழியர்களுக்கு மாதாந்தம் செலுத்தப்படும் பணிக்கொடை எந்த அடிப்படையில் கணக்கிடப்படுகின்றது.

.....

கீழே தரப்பட்ட சரக்கிருப்பு மாதிரியை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.



25. Q இனால் காட்டப்படுவது என்ன? .....
Q_1 இனால் காட்டப்படுவது என்ன? .....

26. Q_2 இனால் காட்டப்படுவது என்ன? .....
Q_3 இனால் காட்டப்படுவது என்ன? .....

27. T இனால் காட்டப்படுவது என்ன? .....
T_1 இனால் காட்டப்படுவது என்ன? .....

28. சிக்கனக் கட்டளைத் தொகை (Economic Order Quantity) மாதிரியின் அடிப்படை நோக்கம் என்ன வெனில்,

(1) கட்டளை அளவை (Order size) குறைத்தல்.
(2) கட்டளைக் கிரயத்தை குறைத்தல்.

(3) இருப்பு வைத்தற் கிரயத்தைக் குறைத்தல்.
(4) கொள்வனவுக் கிரயத்தையும் கட்டளைக் கிரயத்தையும் குறைத்தல்.
(5) கட்டளைக் கிரயத்தையும் பராமரிப்புக் கிரயத்தையும் குறைத்தல்.

29. ஒரு பொருளின் உற்பத்திக்கு மூலப்பொருட்களை தெரிவு செய்வதில் எப்பொதும் கருத்தில் கொள்ளப்படாத காரணிகளின் கீழ் கீறிடுக.
(1) மூலப் பொருளின் தரம்.
(2) மூலப் பொருளின் விலை.
(3) வழங்குநர்களின் நிதி நிலைப்பாடு.
(4) பயன்படுத்தப்படும் போக்குவரத்து முறை.
(5) மூலப்பொருளைப் பற்றிய தகவல் மூலங்கள்.

30. நிறுவனமொன்றில் ஆளணி முகாமை தொழிற்பாடு சாதாரணமாக கீழ்வருவனவற்றில் ஒன்றைத் தவிர மற்றைய எல்லாவற்றையும் உள்ளடக்குகின்றது. இதில் உள்ளடங்காதது.
(1) ஊழியர் சுகநலம் (2) மனித வள திட்டமிடல்
(3) ஊழியர் பதவியுயர்வு (4) ஆட்சேர்ப்பும் தெரிவும்
(5) பயிற்சியும் அபிவிருத்தியும்.

31. ஒரு கம்பனியின் மூலதன கட்டமைப்பு என்பது எதனைக் கருதுகின்றது?
.....

32. ஒரு நிறுவனம் ஏன் தனது காசு மீதியை குறைவாக வைத்திருக்க வேண்டும்.
.....

33. பின்வரும் நிதியிடல் முறைகளில் எது வியாபாரத்தில் உள்ள காசுத் தொகையை உண்மையில அதிகரிக்க மாட்டாது?
(1) குத்தகை (2) வியாபாரக் கடன்
(3) பகிரப்படாத இலாபம் (retained profits)

34. பின்வருவனவற்றுள் எது சந்தைப்படுத்தல் எண்ணக்கருவின் நோக்கத்திற்கு அண்மித்த கருத்தை கொண்டுள்ளது.
(1) குறுங்கால இலாபத்தை உயர்வுபடுத்தல். (2) நீண்டகால இலாபத்தை உயர்வுபடுத்தல்.
(3) விற்பனை வருமானத்தை உயர்வுபடுத்தல். (4) வாடிக்கையாளர் திருப்தியை உயர்வுபடுத்தல்.
(5) சமூக நலத்தை உயர்வுபடுத்தல்.

35. நுகர்வோர் தமக்கு மிகவும் விருப்பமான சில குறித்த பொருட்களை கொள்வனவு செய்வதற்கு குறிப்பிடத் தக்களவு நேரத்தையும் சக்தியையும் எப்பொழுதும் செலவிடுகின்றனர். இத்தகைய பொருட்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?
(1) வசதிப் பொருட்கள்
(2) முன் விற்பனைப் பொருட்கள் (predisposed goods)
(3) கடைப் பொருட்கள்
(4) தனிச்சிறப்பு வாய்ந்த பொருட்கள்
(5) துணைப் பொருட்கள் (ancillary goods)

36. ரூபா. 29.98 ரூ. 199.90 போன்ற விலையிடலானது பின்வருவனவற்றில் எதற்கு உதாரணமாகக் கருதமுடியும்.
(1) உளவியல் விலை

(2) கௌரவ விலை
(3) கடைதல் விலை (skimming pricing)
(4) ஊடுருவல் விலை (Penetration pricing)
(5) மேம்படுத்தல் விலை

37. பொருளொன்றின் விற்பனையானது தொடர்ச்சியாக குறைவடையுமானால், இச்சந்தர்ப்பத்தில் மிகவும் புத்திசாலித்தனமான சந்தைப்படுத்தல் அணுகுமுறையானது.
(1) தொடர்ந்தும் இப் பொருளை உற்பத்திசெய்யும் அதே வேளை விளம்பரத்தையும், விற்பனைப் பிரதிநிதிகளையும் அதிகளவு மேம்படுத்தல்.
(2) புதியவகை பொருளை உற்பத்தி செய்து பழைய பொருளைக் காலவதியாக்கல்.
(3) விற்பனையாளர்களுக்கு புதிய ஊக்குவிப்புக்களை அறிமுகம் செய்தல்
(4) நுகர்வோருக்கு உண்மையில் என்ன தேவை என்பதை கண்டறிந்து அதன்படி செயல்படல்.
(5) விற்பனை அளவை அதிகரிப்பதற்காக விலையை குறைத்தல்.

38. விளம்பரத்தை ஏனைய சந்தைப்படுத்தல் மேம்படுத்தல் முறைகளில் இருந்து எவ்வாறு அடையாளப்படுத்த முடியும்.
(1) வெகுசன சாதனங்களான புதினப் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி போன்றவைகள் ஊடாக விளம்பரம் செய்தல்.
(2) குறுகிய நேரத்தில் விற்பனைகளை அதிகரிக்கும் எண்ணத்துடன் இது மேற்கொள்ளப்பட்டிருத்தல்
(3) பொருட்கள் சேவைகள் தொடர்பான மேலதிக தகவல்களை அதிக நுகர்வோர்களுக்கு வழங்கக் கூடிய இயலுமையைக் கொண்டிருத்தல்.
(4) போட்டிமிக்க நிபந்தனையின் கீழ், ஒருவரின் பொருட்கள் சேவைகளை மிகவும் வசதியானதாக அறிமுகப் படுத்த முடிதல்.
(5) செலவை பொறுப்பேற்பவரினால் நேரடியற்றதாக (impersonally) இதனை முன்வைத்தல்.

39. பின்வரும் மதிப்பீடுகள் ஒரு வியாபாரத்திற்காக தயாரிக்கப்பட்டது எனக் கொள்க.

மொத்த நிலையான செலவு	ரூ.	50 000
தேறிய விற்பனை வருமானம்	ரூ.	215 000
ஒரு பொருளின் விற்பனை விலை	ரூ	25
தேறிய இலாபம்	ரூ	150 000
மாறும் செலவு	ரூ	15 000
உற்பத்தி (அலகுகளில்)	ரூ	10 000
சாதாரண பங்கு மூலதனம்	ரூ	600 000
தொழிற்படு மூலதனம்	ரூ	30 000
நீண்டகாலக் கடன்	ரூ	200 000
கட்டிடங்கள்	ரூ	40 000
மோட்டர் வாகனங்கள்	ரூ	60 000

மேற்கூறிய தகவல்களைப் பயன்படுத்தி பின்வருவனவற்றை கணிக்க.

40. சமப்பாட்டு புள்ளி (break - even - point)

.....

41. உரிமையாளர் மூலதன வருவாயைக் (return on owner's capital) கணக்கிடுக.

.....

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சை, 1998 ஒகஸ்ற் (புதிய பாடத்திட்டம்)

General Certificate of Education (A/L) Examination. August 1998 (New Syllabus)

BRIGHT BOOK CENTRE

வணிகக்கல்வி - II (பகுதி II)

இரண்டு மணி

29

T I

பகுதி "அ" விலும் "ஆ" விலும் இவ்விரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.
ஒவ்வொன்றுக்கும் 15 புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி 'அ'

1. (i) தொழில் கொள்வோர்களும், தொழிலாளர்களும் தங்களுக்கிடையில் சரியான உறவுமுறைகளை பராமிப்பதன் மூலம் இரு சாராரும் தமது நோக்கங்களை அடைவது சாத்திய மானதொன்றாகும்.
(அ) தொழில் கொள்வோர்களினதும், தொழிலாளர்களினதும் பிரதான நோக்கங்களை குறிப்பிடுக.
(ஆ) இத்தகைய ஒரு உறவு முறையை பராமரிப்பதன் மூலம் எவ்வாறு இரு சாராரும் தமது நோக்கங்களை அடைந்து கொள்ளமுடியும்?

(ii) கடைகாரியாலய தொழிலாளர்கள் சட்டத்தின்படி தொழில் கொள்வோர்கள், தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் உள்ள மூன்று பொறுப்புகளை (responsibilities) குறிப்பிடுக.

(iii) (அ) நுகர்வோர் கல்வி (Consumer Education) என்பது எதனை கருதுகின்றது?
(ஆ) நுகர்வோர் கல்வி ஊடாக எவ்வாறு நுகர்வோர் பாதுகாக்கப்படுவர்?

(iv) இலங்கை தர நிர்ணய நிறுவனமானது (Srilanka Standard Institution) பிறநாட்டு வியாபாரம் தொடர்பாக நியமங்களை அமுல்படுத்தும் மூன்று வழிகளை விளக்குக.

(v) (அ) நீங்கள் கொள்வனவு செய்த தொலைக்காட்சிப் பெட்டியொன்று இதன் கொள்வனவுத் தகதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குப் பின்பு குறைபாடுடையது என அறிந்ததும், இதனை வியாபாரிக்கு அறிவித்தும் பரிகாரம் எதுவும் கிடைக்கவில்லை. இதுசார்பாக உங்களுக்கு கிடைக்கக் கூடிய பரிகாரத்தை பரிசீலிக்க.

(ஆ) ஒரு உற்பத்தியாளர் தனது பொருள் விஷேட தரத்தை கொண்டுள்ளது என்பதை நுகர்வோர்க்கு உறுதிப் படுத்த எடுக்கக் கூடிய இரண்டு மதிப்பீடுகளைக் குறிப்பிடுக.

2. (i) "இலங்கை அரசாங்கத்தின் கொள்கையானது பொருளாதார வளர்ச்சியின் இயந்திரமாக தனியார் துறையை பயன் படுத்துதல் ஆகும்". இக் கொள்கை அமுல்படுத்தலானது எவ்வகையில் நாட்டின் பொருளாதாரம், வியாபாரத்துறை ஆகிய இரண்டினதும் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்கின்றது?

(ii) இலங்கையிலுள்ள தேசிய இயந்திரவியல் ஆய்வு அபிவிருத்தி நிறுவகம் எவ்வகையில் இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்கின்றது?

(iii) ஒரு உற்பத்தியாளர் தனது பொருட்களுக்கான பிறநாட்டுக் கொள்வனவாளர்களை பெற்றுக்கொள் வதற்கு அரசாங்க துறையானது எவ்வகையில் உதவியளிக்கின்றது? விளக்குக.

(iv) இலங்கை வியாபார அபிவிருத்தி நிலையத்தினால் வியாபார கைத்தொழில் அபிவிருத்திக்காக வழங்கப்படும் சேவைகளை விளக்குக.

(v) (அ) வியாபார ஒழுக்கம் (Business ethics) என்பது எதனைக் குறிக்கின்றது?
(ஆ) இலங்கையில் வியாபாரிகள் ஏன் வியாபார ஒழுக்கத்திற்கு அதிகளவு கவனம் செலுத்துவ தில்லை? விளக்குக.

3. (i) ஒரு முயற்சியாளன் (Evtrepreneur) எவ்வாறு ஒரு முகாமையாளரிடம் இருந்து வேறு படுகின்றார்?

(ii) "சிறு முயற்சியாளனை அபிவிருத்தி செய்வதன் ஊடாக பொருளாதார அபிவிருத்தியை அடைவது சாத்தியமான தாகும்" விளக்குக.

(iii) சிறிய நடுத்தர மட்ட நிறுவனங்களை அடையாளப்படுத்துவதில் இலங்கையின் பலதரப்பட்ட அரசாங்க நிறுவனங்கள் ஏன் வேறுபட்ட அளவீடுகளை பயன்படுத்துகின்றது?

(iv) இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆய்வு நிறுவனமானது (CISIR) சிறிய மட்ட நிறுவனங்களுக்கு ஆற்றும் பங்கினை கருத்துரைக்க.

(v) "சிறிய மட்ட நிறுவனங்களுக்கும், பாரியளவு நிறுவனங்களுக்கும் இடையில் உறவு முறை காணப்படுமாயின் இது இரு சாராரினது மேம்பாட்டிற்கும் பங்களிக்கும்" விளக்குக.

பகுதி 'ஆ'

4. (i) ஒரு முதலீட்டாளருக்கு ஏன் வியாபார வாய்ப்புக்களை மதிப்பிடுவது முக்கியமானதாகும்?

(ii) ஒரு சிறிய வியாபாரி ஒரு பொருத்தமான வியாபார நிறுவன வகைகளை தீர்மானிப்பதில் கருத்தில் கொள்ள வேண்டிய மிகவும் முக்கியமான காரணிகளை சுருக்கமாக விளக்குக.

(iii) ஒரு சிறிய வியாபாரிக்கு திட்டமிடலின் முக்கியத்துவத்தை பரிசீலிக்க.

(iv) (அ) நிறுவன கட்டமைப்பு என்றால் என்ன?
(ஆ) ஒரு நிறுவன வரைபடத்திலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய தகவல்கள் என்ன?

(v) முன்னெடுத்தல் (Leading) முகாமைத்துவ செயற்பாட்டில் உள்ளடங்கியுள்ள செயற்பாடுகளை சுருக்கமாக விளக்குக?

5. (i) (அ) ஒரு உற்பத்தி நிறுவனத்தில் சரக்கிருப்பு (inventory) என்பது எதனைக் கருதுகின்றது?
(ஆ) உற்பத்தி நிறுவனங்கள் ஏன் கையிருப்புக்களை பராமரிக்கின்றன.

(ii) (அ) இயந்திரம், உபகரணம் போன்றவைக்காக பயன்படுத்தப்படும் இரண்டு பராமரிப்பு முறைகளை விளக்குக.

(ஆ) இயந்திரத்தையும், உபகரணத்தையும் சரியாக பராமரிப்பதனால் எழும் நான்கு நன்மைகளை குறிப்பிடுக.

(iii) ஆளனி முகமைத் தொழிற்பாடு ஒரு வியாபாரத்தின் வெற்றிக்கு எவ்வகையில் பங்களிப்பு செய்ய முடியும்? கருத்துரைக்க.

(iv) ஒரு தெரிவு நுட்பம் என்ற வகையில் நேர்முகப்பரீட்சையில் (interviews) முக்கியத்துவத்தை பரீசீலிக்க.

(v) ஒரு நியமனக் கடிதத்தில் சாதாரணமாக குறிப்பிடப்பட் வேண்டிய தகவல்கள் என்ன?

6. (i) நிறுவனத்தின் காசுப் பாதீடானது எதிர்வரும் வருடத்தில் இரண்டு மாதத்திற்கான குறுங்கால, நிதித் தேவையை வெளிப்படுத்தியது. இத் தற்காலிக பற்றாகுறையை நிதியிடுவதற்கு குறுங்கால பணத்தை பெற்றுக்கொள்ளக் கூடிய சில சாத்தியமான வழிகளை கருத்துரைக்க.

(ii) வியாபார உரிமையளர்களை, உயர் முலதன இணைப்புக் கட்டமைப்பு எவ்வாறு தாக்கமடையச் செய்கின்றன?

(iii) (அ) சந்தை துண்டமாக்கல் என்பது எதனை குறிக்கின்றது?
(ஆ) ஒரு சப்பாத்து உற்பத்தியாளர் தனது சந்தையை என்ன வழிகளில் துண்டமாக்க முடியும்? விளக்குக.

(iv) (அ) ஒரு வியாபாரியினால் பயன்படுத்தக் கூடிய இரண்டு நுகர்வோர் விற்பனை மேம்படுத்தல் சாதனங்களை குறிப்பிடுக.
(ஆ) ஒரு வியாபாரி சந்தையில் ஒரு புதிய பொருளை அறிமுகப்படுத்த விரும்புகின்றார். இதற்கு ஒரு பொருத்தமான விளம்பரசாதனத்தை தெரிவு செய்வதில் எதனை கருத்தில் கொள்ள வேண்டும்?

(v) (அ) ஒரு செயல்திட்ட அறிக்கை என்பது எதனைக் கருதி நிற்கின்றது.
(ஆ) ஒரு புதிய வியாபாரத்தை ஆரம்பிக்க விரும்பும் ஒரு முயற்சியாளனுக்கு எவ்வகையில் செயல்திட்ட அறிக்கை பயன்பாடுடையதாக காணப்படும், விளக்குக.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சை, 1998 ஒகஸ்ற் (புதிய பாடத்திட்டம்)

General Certificate of Education (A/L) Examination. August 1998 (New Syllabus)

BRIGHT BOOK CENTRE

வணிகக்கல்வி - I (பகுதி I)

இரண்டு மணி

29
T I

விடைகள்

1. ஆரம்ப நிலைக் கைத்தொழில்கள் 38%
   இரண்டாம் தர கைத்தொழில்கள் 22%
   மூன்றாம் நிலைக் கைத்தொழில்கள் 40%
2. பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட நோக்கம் (2)
3. ஒரு பொருளிலி மாத்திரம் இருக்காமல் பலவித பொருட்களையும் உற்பத்தி செய்தல் (5)
4. 31.2 (4)
5. தென் கொரியா
6. உள்ளீட்டை அதிகரிக்கும் அதேவேளை வெளியீட்டையும் அதிகரித்தல் (3)
7. போலிப் பங்காளன் (5)
8. குறுகிய கால அளவு/குறிப்பிட்டநோக்க மானது நிறை வடைந்ததும் முடிவடைதல்
9. 1) முதலீடு உடமையாளர் / அலகு உடமையாளர்
   2) நம்பிக்கைப் பொறுப்பாளர் / அலகுப் பொறுப்பாட்சித்திறன்
   3) நிதி முகாமையாளர் / முகாமைக் கம்பனி
10. கூட்டு விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கல் (4)
11. மேலே கூறப்பட்ட எல்லா நிபந்தனைகளையும் கருத்திற்கொள்ளுதல் (5)
12. 5 மில்லியன் / 50 இலட்சம்
13. 1) வரையறுக்கப்பட்ட இங்குரான சீனிக்கூட்டுத்தாபனம்
    2) பூகொடை ஆடைத் தொழிற்சாலை
14. அரசாங்க திணைக்களங்கள்
15. சட்ட அறிக்கை (2)
16. முக்கால பகுதியினர் 1/4
17. மொத்த விற்பனை விலைச் சுட்டென்
18. பிரயாணிகள் காசோலை
19. வரையுனரை விசாரிக்க
20. கொடுகடன் அட்டைகள்
21. b, c, e, g (4)
22. உடன் படிக்கையை நீக்குவதற்கு இரண்டு பகுதியினரதும் சம்மதத்தை பெறும் அவசியம் / சாதாரணமாக நீண்டகால உடன்படிக்கை / குத்தகைக்கு எடுத்தவாரால் சொத்தைபராமரித்தல்.
23. 1) திறைசேரி பிணைப் பத்திரம்

2) அரசமுறி

24. பாராளுமன்றம்
25. கைத்தொழில் துறை
26. ஏற்றுமதி உற்பத்தி சார்ந்த, விலைகூறப்படாத சிறிய நடுத்தர அளவிலான நிறவனங்கள்.
27. 1) ஆயுட் காப்புறுதி
    2) தீ அபாயக் காப்புறுதி
    கடல் அபாயக் காப்புறுதி
    விபத்துக் காப்புறுதி
28. 50,000/=
29. இழப்பீட்டுத் தத்துவம்
30. வாகன அனுமதிப் பத்திரம், தொலைபேசி
31. பொருளினது தன்மை
32. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு
33. கணனி, மொடம், தொலைபேசி
34. 1, 2, 4 ~ மூன்றும் சரியானது
35. கொள்வனவாளரின் நோக்கம் / வாங்குவோனின்குறிக்கோள்
36. பொறுப்புத்தரகர் / நம்பிக்கை முகவர்
37. புடவையும் ஆடையும்
38. சுகநல சான்று பத்திரம், விவாசாய திணைக்கள நோய் தடுப்பு அதிகாரி அல்லது துறைமுக சுக நல தடுப்பு அதிகாரி
39. வர்த்தக சம்மேளனம்
40. வர்த்தக திணைக்களம்

வணிகக்கல்வி – I (பகுதி – II)

விடைகள்

1. i) 1. சுய தேவைக்காக நடைபெற்ற உற்பத்தி ~ சந்தை தேவைக்கு ஏற்ப மாற்றமடைந்தது
   2. குடிசைக் கைத்தொழில்கள் ~ தொழிற் பகுப்பு முறைத் தொழிற் சாலையாக மாறின.
   3. தொழிற் சிறப்புத் தேர்ச்சியும் தொழிற் பிரிவும் காரணமாக நவீன கருவிகள் உற்பத்தி துறையினுள் பாவிக்கப்பட்டன.
   4. கைகளால் செய்யப்பட்ட உற்பத்திகள் யாவும் பாரிய இயந்திரங்களின் உதவியுடன் உற்பத்தி செய்வதாக மாற்றப்பட்டது.

ii)

உள்ளீடு	நிலைமாற்றல்	வெளியீடு
1. இயந்திரங்கள்	1. வெட்டுதல்	
2. துணி	2. தைத்தல்	
3. நூல்	3. பொத்தான்	
4. வர்ணம்	4. பொருத்துதல்	ஆடை
5. பொத்தன்	5. அழகு படுத்தல்	
6. பொதி செய்யும்	6. தூய்மைப்படுதல்	
7. ஊதியம்	7. அமத்துதல்	
8. தொழிற்சாலைக்காணி	8. பொதிசெய்தல்	

iii)

பொருட்கள்	சேவைகள்
1. ஒருபொருள், ஒரேதன்மை உடையது	நபருக்கேற்பவும், காலத்திற்கேற்பவும் மாறுபடும் தன்மைகொண்டது.
2. தொட்டு உணரலாம்	தொட்டு உணரமுடியாது
3. உற்பத்தி சேமித்துவைக்க பயன்படும்	உற்பத்தியை வழங்கும் நேரத்திலேயே நிகழ்கின்றது
4. எதிர்காலத்தில் பயன்படுத்தலாம்	சேவை கிடைக்கும் போதே பயன்படுத்த வேண்டும்.


iv) A.
1. பௌதிக மனித வளங்களின் திறமையான முகாமைத்துவம்
2. கைத்தொழில்களை விரிவுபடுத்தி உயர் மட்டத்திற்கு கொண்டு வரல்
3. கிராமிய, நகர பிரதேசங்களில் புதிய வேலை வாய்ப்புகளையும் ஏற்படுத்தி கொடுத்தல்
4. ஏற்றுமதியை நோக்காக கொண்ட உற்பத்தி
5. பிரதேச ரீதியான கைத் தொழில்விருத்தி

B.
1. நாட்டின் உற்பத்தியை அதிகரிக்க
2. வாழ்க்கை செலவு குறைய
3. பண்டங்களின் விலையைக் குறைக்க
4. சர்வதேச வர்த்தகத்தில் போட்டியிடக் கூடியநிலை ஏற்படல்.
5. மூளவங்களின் விரயத்தைக் குறைக்க.

v) A) B.o.o. ~ உருவாக்கம், செயற்படுத்தல், உறிமை யாக்கல்
B.o.o ~ உருவாக்கம், செயற்படுத்தல், உரிமையாற்றுதல்

B)
1. அரசின் நிதிப் பற்றாக்குறை
2. இதில் தனியார் துறையினர் திறமை பெற்று உள்ளதாக ஏற்றுக்கொண்டமை
3. உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கி வந்த அரச அமைப்புகள் நிதிப் பற்றாக்குறை
4. நவீன முறைகளை ஏற்படுத்த முடியாத நிலையில் அரச அமைப்பு களின் நிர்வாக குறைபாடு, எதிர்பார்த்த வரமானத்தை அடையாமுடிய நிலை என்பனவாகும்.

2. i)



ii) 1. வரையறுக்கப்பட்ட பங்குடமையில் மேலதிக நட்டப் பொறுப்பில் பங்கு பற்ற ஆகக் குறைந்தது ஒருவரை யாவது வரையறுக்கப் படாத பங்காளராக கொண்டிருத்தல் வேண்டும். வரையறுக்கப்படாத பங்குடமையின் பங்காளிகள் அனைவரும் வரையறுக்க பட்டிருக்க மாட்டார்கள்.

2. தூங்கும் பங்காளர் | அமைதிப் பங்காளர்

1. தொழிற் பாடுகளில் ஈடுபாடு இல்லை	தொழிற்பாடுகளில் ஈடுபாடு உண்டு
2. பிறர் பொதுமக்களால், பங்காளர் எனக் கருதப்படுவார்	பொதுமக்களுக்கு பங்காளர் எனத் தெரிவதில்லை

3. பங்குடமை ஒப்பந்தம் பங்காளிடையே ஏற்படுகின்ற உடன்படிக்கை ஒன்றாகும் பங்குடமைச்சட்டத்தின் கட்டுப்பாட்டை குறைத்து பிரத்தியேகமாக ஏற்படுத்தப் படும் எழுத்து மூலம் அல்லது வாய் மொழிமூலமோ அல்லது நடத்தை மூலம் ஒப்பந்தம் பங்காளிடையே பிணக்குகள் ஏற்படாமல் பாதுகாக்கவும், ஏற்படுகின்ற பிணக்குகளை இலகுவாகப் தீர்ப்பதற்கு எழுத்திலான ஒப்பந்தமாகும்.

iii) A.

தனியார் கம்பனி	பொதுக்கம்பனி
* ஆக கூடியது 50 பேர்	* முடிவற்றது
* ஆகக் குறைந்தது 02 பேர்	* 07 பேர்

B.

* பகிரங்கமாக பொது மக்களுக்கு பங்குகளை விற்கமுடியாது	* முடிவற்றது பங்குகளை விற்கலாம்
* சுதந்திரமாக கைமாற்றமுடியாது	* கைமாற்றமுடியும்

C. * ஆக குறைந்தது 1 இயக்குனர் ஆகக்குறைந்தது 2 இயக்குனர்

iv) A.

* நிறுவனத்தின் பெயர்	* பங்குதாரரின்பெயர்
* பங்குகளின் எண்ணிக்கை	* பங்குகளின் பெறுமதி
* தொடர் இலக்கம்	* நிறுவனத்தின் இலட்சினை
* விநியோகித்தவரின் கையொப்பம்	* இயக்குனர் ஒப்பம்

B.
1. கணக்காய்வாளர் அறிக்கைப் பிரதி
2. ஐந்தொகைப் பிரதி
3. இ/நா. அறிக்கையின் பிரதி
4. கூட்டம் சம்பந்தமான அறிவுறுத்தலின் பிரதி
5. இயக்குனர் அறிக்கையின் பிரதி
6. பதிலி தொடர்பான அறிவுறுத்தல் தெளிவாக காட்டப்படல் வேண்டும்.

v) A
1. கம்பனி உருவாக்கற் பத்திரம்
2. வியாபார தொடக்கச் சான்றிதழ் / வியாபார சான்று பத்திரம்

B.
1. முன்விவரணத்தை வெளியிட்டு இழிவுக் கட்டணம் திரட்டிய விபரம் பற்றிய அறிக்கை சமர்பித்தல்
2. இயக்குனர்களக்கு பங்குகள் வழங்கப்பட்டு அவர்கள் பணம் செலுத்தியுள்ளார்கள் என்பதை உறுதிப் படுத்துதல்.
3. சட்டமுறைக் கூற்றை கம்பனி பதிவாளருக்கு சமர்பித்தல்.

3. i)
1. பொது கூட்டுத்தாபனங்களை மீளமைப்புச் செய்தப்
2. பொதுத்துறை முயற்சிகளுக்கான நிறுவனக் குழு (Cope)
3. தொழிற்பாடுகளை மேற் பார்வை செய்தல்
4. திட்டங்களை பரிசீலனை செய்தல்
5. திறைசேரியாளர்களால் வைத்துக் கொண்டிருக்கும் பங்குகளை நீர்வாகித்தல்.

6. திறனற்ற மோசடியான செயற்பாடுகள் பற்றி ஆராய்ந்து அறிக்கையிடல்
7. பொது கம்பனிகளாக மாற்றக்கூடிய கூட்டுத்தாபனங்களை கண்டறிந்து பொது மக்களுக்கு பங்குகளை விற்பனை செய்தல் பற்றி அரசுக்கு ஆலோசனை கூறல்.

ii) A. உறுப்பினர், பங்கொன்று 100/=
B. கூட்டுறவுத் திணைக்களம், குறைந்தது 10 அங்கத்தினர்
C. கட்டாயக் கணக்கீடு, கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்.

iii) A. கொடுக்கல் வாங்கல்களுக்கு எல்லோரலும் அல்லது பலராலும் ஏற்றுக் கொள்ளப்படல்
* இலகுவாக எல்லோராலும் அடையாளம் காணமுடிதல்
* இழப்புகளின்றி நீண்டகாலம்சேமித்து வைக்கமுடிதல்
* கொடுக்கல் வாங்கல் யாவற்றுக்கும் பயன்படுத்தக்கவாறு பல அலகுகளாக காணப்படல்
* சுமக்கும் தன்மையை கொண்டிருத்தல்

B. குறுகிய பணநிரப்பலில் தாள், குத்தி நாணயங்கள் மட்டும் உள்ளடக்கப்படும், விரிந்த பணநிரம்பலில் கூறுகள் சட்டப் பணம், வங்கிப்பணம், போலிப்பணம் ஆகியனவாகும்.

iv) A. ஒப்புக்கொண்டோன் அதன் முதிர்வு திகதிக்கு முன் அதற்குரிய பெறுமதியை செலுத்தி அப்பொறுப்பினின்று நீக்கி கொள்வதாகும்.
B. குறித்த ஒருவரால் குறித்த பெறுமதியை பெற்றுக் கொள்ளாமல் உண்டியலின் கட்சிகாரர் ஒருவராக தோன்றி, உண்டியலொன்றை ஒப்புக்கொள்வது உதவி உண்டியலாகும்.
C. முதிர்ச்சி பெற்றதும் உண்டியலுக்கான பணத்தை பெற்றுக்கொள்ளக் கூடியவர்.

v) A. 1. நோடியாகவோ அல்லது புறக்குறிப்பிட்டோ உரிமையை வேறநபருக்கு ஒப்படைத்தல்
2. பெறநருக்கு முழுமையான உரிமை கிடைத்தல்
3. முன் உரி மையாளர்களின் எதுவிததொடர்பின்றி பெறநர் இந்த ஆவனம் தொடர்பாக தனது பெயரில் வழக்கு தொடர முடிதல்.

B. இலகுவாக கொண்டு செல்லக்கூடியது பணம் நிச்சயம் கிடைக்கும் என கொடுகடன் அட்டை வழங்கும் நிறுவனம் உறுதி கூறுதல்.

4. i) A. வங்கிகளுக் கிடையிலான கொடுப்பனவுகளையும் நிறுவனங்களையும் பல்வேறு நபர்களுக்கு ஒரே முறையில் செய்ய வேண்டிய கொடுப்பனவுகளையும் வங்கிகளுள் தமக்கிடையில் கணனிப் பரிவர்த்தனை மூலவு செலவு வைத்துக் கொள்ளும் முறையாகும்.

B. வணிக வங்கிகளுக்காக மத்திய வங்கி சேவைகளை வழங்குவதால அது வங்கியாளர்களின் வங்கி என அழைக்கப்படுகின்றது. இது வைப்புகளுக்கான ஒதுக்குகளைப் பேணல், கடன்வசதி இறுதிக்கடன் வசதி வழங்கல், காசோலை கொடுக்கல் வாங்கல் தீர்த்தல், வங்கிகளை மேற்பார்வை செய்தல்.

ii) A. 1. நீண்டகாலக்கடன் வசதிகளை வழங்கல்
2. குத்தகை வசதி வழங்கள் / வாடகை கொள்வன வசதி
3. அரச முறிகளில் முதலிடல்
4. சேமிப்புக்கு அதிக வட்டி வழங்கல்

B. 1. ஒரே முறையில் பாரிய முதலீட்டை செய்யமுடியாத வியாபாரிகள் குத்தகை முறையில் கொள்வனவு செய்வது மூலம் இயந்திரங்களுக்கு கொள்வனவாளராதல்.

2. இலகுவாக குத்தகை கடன் பெறக்கூடியவசதி
3. வாடகை கொள்வனவு (குத்தகை முறை) வட்டிகுறைவு
4. வரி முறையில் நிவாரணங்கள் பெறல்

iii) A. 1. பொதியிடல் கடன்
2. நம்பிக்கைக்கடன் / காவியின் பற்று சீட்டுக் கடன்
3. அடகு கடன்
4. ஈட்டுக் கடன்

B. "கைமாறத் தகாதது எனக்குறுக்கு கோடிட்ட காசோலையை பெறும் போது அதன உரிமையை தெரிந்த பின்னே காசோலையை பெறவேண்டும். இங்கு அவ்வுரிமை யில்லை (களவு எடுக்கப்பட்டுள்ளதால்) A இதனை கவனியாது கவனயீனமாக எடுத்ததால் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கமுடியாது"

iv) A: 1. திறை சேரிமுறிகள் நிறை காப்புடைய (அரச உத்தரவாதப் படுத்திய) முதலீடு
2. போட்டியான வட்டி வீதங்கள் வழங்கல்
3. தேவையான பெறுமதிகளில் கிடைத்தல்
4. திரவத்தன்மை அதிகரித்து காணப்படல், பணமாக கைமாற்றல் இலகு
5. முத்திரை தீர்வை, தடுத்து வைத்தல் வரி இல்லை
6. கைமாற்றம் செய்யமுடிதல்

B. 1. மத்திய வங்கியால் நியமித்த நிதி நிறுவனங்களே கொள்வனவு செய்ய விண்ணப் பிக்கலாம்.
2. அனுமதிக்கப்பட்ட இந் நிறுவனங்களே தனியுரிமையாக கேள்விப் பத்திரங்களை ஒப்படைத்து
3. முதல் தர வணிகர்கள் மத்திய வங்கியில் பொதுகடன் திணைக்களத்திற்கு விண்ணப் பித்தும் கொள்வனவு. செய்த உண்டியல்களை பொது மக்களுக்கு விற்றல்
4. மத்திய வங்கியில் வாங்கிய விலையைவிட கூடிய விலைக்கு முதல்தர வணிகர்கள் பொது மக்களுக்கு விற்றல்.
5. மற கொள்வனவு சந்தை உருவாக்கப்பட்டுள்ளது.

v) i) A. ஆவனங்கள் பரிவர்த்தனை சபை / பிணைகள் மன்றம்
1. வரையறுக்கப்பட்ட பொதக்கம்பனியாக கொழும்பு பங்குபரிவர்த்தனை கம்பனி நிறுவப் பட்டது.
2. வியாபார தளத்தை கொண்டு நடத்துவதற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்கலும் அவற்றை கொண்டு நடத்துவதற்கான விதிமுறைகளை வெளியிடல்.
3. பங்கு பரிமாற்றத்தில் ஏற்படும் நட்டத்திற்கு நட்டயீடு வழங்கள்
4. கட்டுபாடுகள் எதுவுமின்றி பங்குகளை கருமபீடத்தில் விற்பனை செய்யும் முறை அறிமுகப் படுத்தப்பட்டது
5. இதன் நடவடிக்கைகள் சமபந்தமாக அரசில் கொள்வனவை நடைமுறைப் படுத்தல்

B. பங்குகளின் கொள்வனவு விற்பனையை இலகுவாக்குதல்

5. i) A 1. ஒப்படைப்பு பெறுமானத்தை பெற்றுக் கொள்ளுதல்
2. செலுத்தப் பட்ட பூட்கையாக மாற்றுதல்.

B. 1. நட்டயீட செய்தவர் ஒழுங்காக கட்டணத்தை செலுத்த முடியாத சந்தர்ப்பத்திலும் அவர் நட்டமடையாமல் இருப்பதற்கு.

2. இத்தகைய வாய்ப்பு இருப்பதால் தயக்கமின்றி மக்கள் காப்புறுதி செய்யமுன் வருவர்

ii) 1. A. பெருந்தொகை பெறுமதி யொன்றுக்கு பெற்றுக் கொள்ளப்பட்ட, காப்புறுதி ஒப்பந்ததின் கீழ் சிறு, சிறு தொகையான பொருட்களை அடிக்கடி கொண்டு செல்லும் போது அதன் பெறுமதியைக் கழித்துக் கொள்ளக் கூடியதாக வழங்கப்படும் ஒப்பந்தம் மிதக்கும் ஒப்பந்தம் எனப்படும்.

B. ஏற்றுமதி செய்யும் ஒவ்வொரு முறையும் காப்புறுதி செலுத்திக் கொண்டிருக்க தேவையில்லை.

2. உடன் செலவுகள் குறைவு.

iii) 1. நாட்டின் பொருளாதார வளர்ச்சி (விவசாய, வியாபார, கைத்தொழில் வளர்ச்சி)

2. மக்களின் தலா வருமான அதிகரிப்பால் தேவைகள் அதிகரித்தல்

3. புதிய நகர உருவாக்கம் போக்குவரத்தை அதிகரிக்கும்

4. சனத்தொகை அதிகரிப்புக்கேற்ப போக்குவரத்து அதிகரித்தல்.

iv) A. 1. நிர்வாகப் பிரச்சனை

2. நிதிப் பிரச்சனை

3. உட்கட்டமைப்பு வசதிகள் சீராக இல்லாமை

4. நிர்வாக அமைப்பு முறையில் குறைபாடு

B. 1. கொள்கலன் போக்குவரத்திற்கு பாதுகாப்பானது

2. கொள்கலனை ஏற்றி இறக்கும் செலவு குறைவு

3. பொருட்களை கொள்கலனின் அளவுக்கேற்ப கொள்வனவு செய்யமுடியும்.

4. பொதி செய்யும் முறை இலகு

5. ஒரேமுறை கூடிய பொருட்களை கொள்வனவு செய்ய முடியும்.

v) A. இலத்திரன் அஞ்சல் மூலம் தகவல் பரிமாறிக் கொள்வதற்கு தகவல் அனுப்புபவரது இலக்கத்தை தகவல் பெறுபவரின் இலக்கத்தை தகவல் அனுப்புபவரும் தெரிந்திருத்தல் வேண்டும். கணனியில் தகவல்பெற வேண்டியவரது இலக்கத்தை தகவல் அனுப்புபவர் முதலில் தெரிந்து அதன்பின் தகவலை தொடர்பு கொள்ள வேண்டும். இத்தகவல் பெற வேண்டியவரது கணனியில் பொறிக்கப்படும்.

B. 1. Fax, Telex என்பவற்றைவிட ஒப்பீட்டளவில் மிகக்குறைந்த செலவாகும்.

2. விரைவான முறையில் தகவலைப் பரிமாற்றலாம்

3. தகவலின் இரசியத் தன்மை பேணப்படும்.

4. ஒரே நேர்தில் ஒரு தகவலை பல்வேறு நபர்களுக்கு நிறுவனங்களுக்கு அறிவிக்கலாம்.

5. கணனி பயன்பாடு காரணமாக உலகின் எந்தப் பகுதிக்கும் இதன் மூலம் தகவல் அனுப்பவும் பெறவும் முடியும்.

6.

	சிறப்பு சந்தை	பல் பகுதி களஞ்சியம்
1.	சுப்பர் மார்கட்களில் நாளாந்த தேவைக் கான உணவுப் பொருட்கள் காணப்படும்	பிரதானமாக கடைப்பொருட்கள் காணப்படும்.
2.	கொள்வனவாளரே பொருள் விலை குறிக்கப்பட்டிருப்பதால் சுயமாக பெற்றுக்கொள்ளமுடியும்.	கடைச்சிப்பந்தி காணப்படுவர்

3.	வாகனங்கள் நிறுத்தி வைக்கும்வசதி கொண்டிருக்கும்	வசதி கிடையாது
4.	பொருட்கள் தேவைக் கேற்ற முறையில் வகைப்படுத்தப்படும்	ஒரு குறிப்பிட்ட பொருளுக்கு ஒருபகுதியென தனித்தனியாக பிரிக்கப்பட்டிருக்கும்.

ii) 1. ஏலவிற்பனை ~ குறிப்பிட்ட நில விற்பனை பற்றி விளம்பரம் படுத்தி கூடிய விலைக்கு விற்க முடியும்.

2. கேள்விப் பத்திர முறை ~ அரச நிறுவனங்கள் இம்முறையே கட்டாயமாக அனுசரிக்க வேண்டும்.

iii)	**மீள ஏற்றுமதி செய்தல்**	**இறக்கி ஏற்றும் வியாபாரம்**
1.	இறக்குமதி செய்து பொருளை மாற்றங்கள் செய்து ஏற்றுமதி செய்தல்	1. மாற்றங்கள் எதுவும் மேற் கொள்ளாமல் ஏற்றுமதிசெய்தல்
2.	நாட்டுக்கு கொண்டுவர இறக்குமதித் தீர்வை செலுத்தப்பட வேண்டும்	2. தீர்வை செலுத்த தேவையில்லை உடன் ஏற்றுமதி செய்வதால்
3.	தீர்வைச் சலுகை வழங்கப்படும்	3. இல்லை

iv) 1. மாதிரி பட்டியலுக்கு இணங்க நாணயக்கடிதம் பெறுமாறு அறிவுறுத்தலும்

2. பொருட்கள் உடன் காசுக்கு விற்கும் போது பொருட்களின் விலை விபரங்களை அறிவிக்கும் பொருட்டு

3. இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு முன் கூட்டியே தீர்வை கணித்துக் கொள்க.

4. ஒப்படைமுறையில் தரகு செலுத்தி விற்பனை செய்வதாயின் அவர் தொகை, விலையை அறிந்து கொள்வதற்கு.

v) A.

1.	முகாமைப் பொறுப்பு	11. பாதுகாப்பும் பங்கீடும்
2.	தரநிர்ணயம்	12. களஞ்சியப் படுத்தல்
3.	ஒப்பந்த விபரம்	13. உள்நாட்டு தர நிர்ணயம்
4.	ஆக்க முகாமைத்துவம்	14. பயிற்சி யளித்தல்
5.	பதிவுகளை பேணுதல்	15. புள்ளிவிபரநிர்வாகம்
6.	பொதியிடல் நிர்வாகம்	16. தகவல் புள்ளிவிபரக் கோட்பாடு
7.	கொள்வனவாளருக்கு விநியோகிக் கும் பொருட்களின் தன்மை	17. உள்ளகக் கணக் காய்வு
8.	வியாபாரக்குறி	18. விற்பனைக்கு பின்னான சேவைகள்
9.	பூரணத்துவமும் பரிசோதனையும்	19. பிழையற்றதும் பரிகாரத்துக்குமான வழிகள்.
10.	தரமற்ற பொருட்கள் மீதான கட்டுபாடு	20. பரிசோதனைத் தெரிவுகள் மூலம் கிடைக்கும் முடிவுகள்.

B.

1. ஐரோப்பிய சந்தையில் புகுவதற்குத் தகுதியாக கருதப் படும்
2. சர்வதேச சந்தையில் பிரவேசிக்க எத்தனிக்கும் ஒருவருக்கு அச்சந்தையில் புகுந்து கொள்வதற்கு
3. வியாபார விளம்பரங்களில் குறிப்பிட
4. வியாபார நிறுவனத்தின் நன்மதிப்பை உயர்த்த

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சை, 1998 ஒகஸ்ற் (புதிய பாடத்திட்டம்)

General Certificate of Education (A/L) Examination. August 1998 (New Syllabus)

BRIGHT BOOK CENTRE

வணிகக்கல்வி - II (பகுதி I)

இரண்டு மணி

29

T | I

விடைகள்

1. 1) அரச கூட்டளைச் சட்டங்கள்
   2) தொழில் ஒப்பந்தம்
2. வருடாந்த அறிக்கையை தொழிற் சங்கப் பதிவாளருக்கு தொழில் ஆணையாளுக்கு தொடர்ச்சியாக சமர்பித்தல்
3. அரசாங்க திணைக்களங்களின் ஊழியர்கள்
4. 1. ஜனாதிபதி ஜோன் எவ். கெனடி
   2. சர்வதேச நுகர்வோர் பாதுகாப்பு அமையம் (icu)
5. 1. கிராமசேவகர் பிரிவு / நகரசபை தேர்தல் பிரிவு
   2. 15
6. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்
7. 1. இலங்கை நவீன கண்டுபிடிப்பு ஆனையாளர் குழு
   2. இலங்கை வியாபார முகாமைத்துவ நிறுவனம்
8. 1. ஜேர்மன் பிரீட்ரிக் நடுமென் நிறுவனம்
   2. இலங்கை வர்த்தக கைத்தொழில் சம்மேளனம்
9. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை (E. D. B.)
10. இலங்கை கைத் தொழில் அபிவிருத்திச் சபை
11. பொருத்தமான வியாபார வாய்ப்புகளை அடையாளம் காணல் / திடசங்கற்பத்துடன் வெற்றியை நோக்கி செல்லல் / அபாயத்தை எதிர் நோக்கி தயாரிக்கும் நிலை.
12. 1. கிராமிய கைத் தொழில் அபிவிருத்தி அமைச்சு
    2. இளைஞர் விவகார அமைச்சு
13. 1. பங்காளர் 2. பங்குதாரர்
    3. உறுப்பினர் அங்கத்தவர் 4. அரசு
14. பொருளார அபிவிருத்தியை துரிதப்படுத்த
15. தற்போதைய வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ள மதிப்பீடுகள் எடுத்தல்
16. ஆராய்சியாளர்களுக்கு பயிற்சியளித்தல் / உற்பத்தி கிரயங்களை குறைப்பதற்கு ஆலோசனை வழங்கல் / விலைபற்றி, ஆலோசனை வழங்கல்
17. சிறிய நடுத்தர நிறுவனங்களுக்கு தேவையான நிதி உதவிகளை செய்யமத்திய வங்கியினால் ஆரம்பிக்கப்பட்ட நவீன கடன் வழங்குர் திட்டமாகும்.
18. மூலவளங்களை வினைத்திறனாக பாவித்தல்

19. மூலவளங்களை மிகச்சிறந்த அளவுபயன்படுத்தி நிறுவன இலக்குகளை அடைவதற்கு வடிவமைக்கப் பட்ட நிகழ்ச்சித்திட்டம்.

20. 1. உரிமையாளர் / முதலீட்டளார்
    2. ஊழியர்
    3. கொடுக்கல் வாங்கல் செய்வோர், சமூகம் / வாடிக்கையாலர்
    4. அரசு

21. 1. நியமனங்களை ஒழுங்குசெய்தல்
    2. பெறுபேறுகளை மதிப்பிடல்
    3. வேறுபாடுகளை அறிதலும் தேவைப்படின் சீராக்கலை மேற்கொள்ளவும்

22. ஒரு நிறுவனத்தின் மனித சக்தியில் எதிர்கால கேள்வி நிரம்பல் தொடர்பான முன்னுரைதல்

23. வேலை செய்யும் இடத்தின்தூரம், ஊழியரில் தங்கியிருப் போர்களின் கண்ணிக்கை ஊழியரின் உடல் இயலாமை

24. கடைசி

25. G ~ உச்ச இருப்பு மட்டம்
    G_1 ~ காப்பு இருப்பு / தாங்கல் இருப்பு

26. G_2 ~ முதன்மைகால கேள்வி
    G_3 ~ மறுகட்டளையிடும் தொகை

27. T ~ கட்டளை சுழற்சி / சுழற்சிக்காலம்
    T_1 ~ முதன்மைக் காலம்

28. கட்டளைக் கிரயத்தையும் பராமரிப்புக் கிரயத்தையும் குறைத்தல்

29. வழங்குநர்களின் நிதிநிலைப் பாடு பயன்படுத்தப்படும் போக்கு வரத்து முறை மூலப்பொருளைப் பற்றிய தகவல் மூலங்கள்

30. ஊழியர் பதவியுயர்வு

31. வியாபாரத்தில் மூலதனமானது பங்களிப்பு செய்யப்பட்டுள்ள முறை (நிறுவனத்தின் நீண்டகால மூலதனம் பெறும் முறை/ நிதி திரட்டும் முறை)

32. வருமானம் உழைக்காத (பயன்படுத்தப்படாத) சொத்தாக இருப்பதால்

33. குத்தகை / வியாபாரக் கடன்

34. நீண்டகால இலாபத்தை உயர்வுபடுத்தல்

35. தனிச்சிறப்பு வாய்ந்த பொருட்கள்

36. உளவியல் விலை

37. நுகர்வோருக்கு உண்மையில் என்ன தேவை என்பதை கண்டறிந்து அதன்படி செயல்படல்

38. செலவை போறுப்பேற்பவரினால் நேரடியற்றதாக இதனை முன்வைத்தல்.

39. $$\frac{\text{மொத்த நிலையான செலவு}}{\text{பொருளின் விற்பனைவிலை பொருட்களுக்கான மாறும் செலவு}}$$

$$\frac{50,000}{2 \quad 5} = 2127.66$$

40. $$\frac{\text{தேறிய இலாபம்}}{\text{சாதாரண பங்கு மூலதனம்}} \times 100$$

$$\frac{150,000}{600,000} \times 100 = 25\%$$

வணிகக்கல்வி – II (பகுதி – II)

விடைகள்

1. அ) i) தொழில் கொள்வோர்களினது நோக்கங்கள்

* விற்பவை இயலளவை விரிவுபடுத்தல்
* உழைப்பு அதிகரித்தல்
* சந்தையை விரிவுபடுத்தல்
* புதிய உற்பத்திகளை அறிமுகம் செய்தல்
* முதலீட்டின் உச்சப் பயனை அடைதல் தொழிலாளர்களினதும் பிரதான நோக்கங்கள்
* ஊழியத்திற்குச் சமமான பணிக் கொடையைப் பெறுதல்
* தொழிலின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்
* தனிப்பட்ட தொழில் திறன்களை விருத்தி செய்தல்
* சமுக மதிப்பை உறுதிப் படுத்தல்
* தொழில் மூலம் திருப்தி அடைதல்

ii) தொழில் கொள்வோரின் உறவு முறையையும், நோக்கங்களும்

* சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அல்லது ஒப்பந்தப்படுத் தப்பட்டுள்ள கூலிகளை வழங்குதல்
* கூலியை உரிய தினத்தில் அல்லது அதற்கு முன்னர் வழங்கல்
* ஊழியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்
* தொழிலாளர் பாதுகாப்புத் திட்டங்களை வகுத்தல்
* தொழிலாளர் உரிமைகளை மதித்தல்
* ஊழியர்களுக்கான உழியர் கோவைகளைப்பேணல்
* தொழிலாளர் நலனோம்பல் திட்டங்களை வகுத்தல்
* நிறுவனத்தினது ஒழுக்க நெறிகளை நெறிப்படுத்தல்

தொழிலாளரின் உறவு முறையும் நோக்கங்கள்

1. தமக்கு ஒப்படைக்கப்பட்ட பணியை ஒழுங்கான முறைகளில் நிறை வேற்றல்.
2. தொழில் கொள்வோரின் சட்டரீதியான கட்டளைகளை சிரமேற்கொள்ளல்
3. தொழில் கொள்வோருடன் இணக்க முறச் செயற்படல்
4. சொத்துகள், உபகரணங்கள் போன்றவைகளை உரிய முறைகளில் கையாளுதல்
5. நிறுவன ஆதனங்களுக்கு நட்டங்கள் ஏற்படா வண்ணம் பாதுகாத்தல்
6. நிறுவன விதி முறைகளுக்கும், நிபந்தனைகளுக்கு இனங்குதல்
7. நிறுவனத்தின் முன்னேற்றகரமாக நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

iii) 1. தொழில் கொள்வோர் பொறுப்புகள்

* வியாபார நிலைய அலுவலக ஊழியர் பற்றிய இடாப்பு வைக்கப்பட வேண்டும்.
* ஒவ்வொரு ஊழியனும் பணிபுரியும் காலம், விடுமுறை, மிகைநேர வேலை பற்றிய அறிக்கைகள்
* ஒவ்வொரு ஊழியனுக்கும் வழங்கப்பட்ட சம்பளங்கள் பற்றிய பட்டியல்.
* ஒவ்வொரு ஊழியனுக்கும் வைக்கப்பட்டுள்ள சேவை அறிக்கைகள்.
* நியமன நிபந்தனைகளின் விபரங்கள் குறித்துரைக் கப்பட்ட நியமனச் கடிதம், தொழில் கொள்வோரால் கையொப்பமிட்டு ஊழியருக்கு வழங்கப்பட வேண்டும்.

2. தொழிலாளர் பொறுப்புகள்
   * தொழில் கொள்வோர் தொழிலாளர் ஆகிய இருபகுதிகளினதும் நிபந்தனைக் கமையவும். சேவை ஒழுக்க நெறிகளுக்கமையவும், சேவைபுரிதல்.
   * தமக்கு நியமிக்கப்பட்ட நாளாந்த கடமைகளைப் பொறுப்புடன் மேற் கொள்ளல்.

iii) அ) நுகர் வோன் தனக்குரிய உரிமைகள், பொறுப்புகள் எவை என்பது பற்றிய அறிவை பெற்றுக் கொள்வதற்கு தேவையான கல்வி வழங்குதலைக்குறிக்கும்.

ஆ) 1. தமக்குரிய உரிமைகளை, எவை என்பது பற்றிய அறிவை பெற்றுக் கொள்ளல்
2. இதன் ஊடாக ஏனைய நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாக்க உதவுதல்.

iv) Sri Lanka Standard Institution ~ பிறநாட்டு வியாபாரம் தொடர்பாக நியமங்களை அமுல் படுத்தும் வழிகள்
1. உத்தரவாத சான்றிதழ் வழங்கி பிரநாட்டு வியாபாரத்திற்கு உறுதி வழங்கள்.
2. பொருட்களின் சிறப்பான தரத்தை பரிசோதித்து உறுதிப் படுத்தல்
3. பொருட்களுக்கான தரநிர்ணய இலச்சனை. பண்டங்கள் தரசிறப்புடன் செயற்பட
1. ஏற்றுமதிக்கு முன் பரிசோதனை
2. இறக்குமதிப்பரிச்சனை
3. கடல் உணவுப்பொருட்கள் ஏற்றமதி பரிசோதனை

v) அ) உள்நாட்டு வர்த்தக ஆணையாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிராந்திய அதிகாரிகளுக்கு முறையிடல்

ஆ) 1. தர நிர்ண சபையின் இலச்சினையைப்பெற்று அதனைப் பண்டங்களில் குறியிடல்
2. உத்தரவாத சான்றிதழ் வழங்கல்

2. i) 1. பொருளாதார வளச்சிக்காக தனியார் துறையினருக்கு நிதிவசதி வரி ஊக்குவிப்பு, உட்கட்டமைப்பு வசதி ஆகிய பல வசதிகளை வழங்கி ஆக்கமும் ஊக்கமும் அரசு அளிக்கின்றது.
2. வியாபாரத்துறையிலும் ஊக்குவிப்புகாரணமாக தனியார் துறையின் திறன் அதிகரிக்கின்றது.
3. கொள்கைகள் அதிகரிப்பின் காரணமாக பொருளாதார வளாச்சியில் உற்பத்தி அதிகரித்து, வருமானம் அதிகரிக்கின்றது.

ii) 1. கைத்தொழில் அபிவிருத்திக்கு தேவையான மின்சக்கி பயன்படுத்தும் முறைபற்றிய தொழில் நுட்ப அறிவுரை வழங்குதல்.
2. பெற்றோல் பாவனைக்கு பதிலாக வாயு (Gas) ஜெனரேட்டர் பாவித்தல் தொடர்பான அறிவுரைகள் வழங்கல்
3. காற்று, சூரிய ஒளி ஆகியவற்றை பயன்படுத்தி மின் வலுவை உற்பத்தி செய்யும் முறைக்கு உதவுதல்

iii) 1. வியாபார கண்காட்சிகளை அமைத்து கொடுத்து கொள்வனவாளர்க்கு உற்பத்தியை தெரியப்படுத்துகின்றது.
2. ஏற்றுமதி அபிவிருத்தி சபை (EDB) பல சஞ்சிகைகளை வெளியிட்டு கொள்வனவாளருக்கு அனுப்புகிறது.
3. வெளிநாட்டு தூதராலயம், வியாபார பிரதிகள் மூலம் உற்பத்தி பற்றி அறியச்செய்கின்றது.
4. வியாபார சஞ்சிகைகளில் விளம்பரம் செய்தல்
5. வர்த்தக திணைக்களகம் மூலம் தகவல்பெறுதல்

iv) 1. வியாபார கைத்தொழில் அபிவிருத்திக்காக முகாமைத்துவ பயிற்சி வழங்குதல்
2. வியாபாரத்தை ஆரம்பித்தல், செயற்படுதல், வியாபார வாய்ப்புகளை அறிதல்.
3. வியாபார முயற்சியாளர்களுக்கு தேவையான வியாபாரங்களை வழங்கல்

v) வியாபார நடவடிக்கை பொழுது பொதுவாக ஏற்றுக் கொள்ளக கூடிய சரியான செயற்பாடுகள் நடத்தைகள் வியாபார ஒழுக்கம் எனப்படும்.

அ) 1. வியாபார ஒழுக்கம் பற்றி நுகர்வோருக்கு எதுவும் தெரியாமை
2. வியாபாரிகளிடையே போட்டித்தன்மை அதிகரியாமையால் ஒழுக்கம் அவசியமற்றதாக இருத்தல்
3. வியாபாரத்தில் ஈடுபடுவோருடைய கல்வி அறிவின்மை

	முயற்சியாளன்	முகாமையாளர்
1.	1. நிறுவனமொன்றை, முயற்சியொன்றை நிறுவும் அனுபவம், திறமை இருக்க வேண்டும்	வியாபாரத்தை கொண்டு நடத்த தெரிந்திருத்தல் போதுமானது
	2. வியாபார சூழுமங்களில் ஈடுபடுத்தன்மை ஆயத்தை எதிர் கொள்ளக் கூடியதிறன் முதலீடும் செய்யும் திறன் வியாபாரம் தொடர்பான திறன் விருத்தி	முகாமைத்துவ பணிகள் தெரிந்திருத்தல் வேண்டும்.
	3. முயற்சியில் இலாபம் உழைப்பவர்	மாதாந்தம் இலாபம் உழைப்பவர்
	4. உரிமையாளர்	தொழிலாளர்

2. * புதிய, புதிய வியாபார கைத்தொழில் நிறுவனங்கள் உருவாகும்.
* சிறு முயற்சியாளர் பெருகுவதால் வேலை வாய்ப்பு அதிகரிக்கும்.
* பொருட்கள் பலவகையிலும் சந்தைக்குவரும், இதனால விலை குறையக் கூடிய நிலை உருவாகும்
* புதிய முயற்சியாளர் மத்தியில் நவீன உற்பத்தி முறைகள் வளர்ச்சி பெறும்

3. பலதரப்பட்ட அரச நிறுவனங்கள் தாம் வழங்குகின்ற சேவைகளின் தன்மைக்கு ஏற்ற அளவீடுகளை கவனத்தில் எடுக்கப்படும்.
* குடித் தொகை புள்ளி விபரவியல் திணைக்களம் 25 பேருக்கு குறையாத ஊழியர்களைக் கொண்டு அமைந்த நிறுவனங்கள்
* கைத்தொழில் அபிவிருத்தி சபை
நிலம், கட்டிடங்கள் தவிர்ந்த 4மில்லியனுக்கு மேற்படாத நிலையான சொத்தை கொண்டிருத்தல்.

4. விஞ்ஞான கைத்தொழில் ஆய்வு நிறுவனமானது ஆற்றும் பங்கு
* உற்பத்திகளின்வினைத் திறனை மேம்படுதல்
* உற்பத்திக் கிரயத்தை இழிவுபடுத்தல்
* உற்பத்திகளின் பண்புசார் நலன்களை மேம்படுத்தல்
* வினைத்திறன்களையும் பயன் பாட்டையும் மேம்படுத்தல்
* ஆய்வு அபிவிருத்திகளை மேற்கொள்ளல்

5. பாரிய அளவு நிறுவனங்கள் சிறிய மட்ட நிறுவனங்களுக்கு உபகரண, தொழில் நுட்பங்களை

வழங்குதல், சிறிய மட்ட நிறுவன உற்பத்தி பொருளை கொள்வனவு செய்து உதவுதல், சிறிய மட்ட நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்குதல்.

பகுதி "ஆ"

4. i) 1. இலாபம் தரக்கூடிய முயற்சிகளை இனம்காணல்
2. சந்தையில் காணக்கூடியவியாபார சூழ்நிலைகளை இனம்காணல்
3. சந்தை வளங்கள் என்பவற்றின் அடிப்படைகளுக்கு பொருத்தமான வியாபாரச் சூழ்நிலை நிர்ணயம் செய்தல்

ii) 1. மூலதன அளவும் தேவையும்
2. உரிமையாண்மை முதலிடுவோர் விபரம்
3. தனித்து செயற்படும் ஆற்றல்
4. வியாபார நிறுவன சட்டநுணுக்களை அறிந்திருத்தல்

iii) 1. சிறிய வியாபாரிகள் பொதுவாக தமது சொந்த சொத்தினைப் பயன்படுத்தியே வியாபாரத்தை நடத்து கின்றன.
2. திட்டமிடல் முகாமைத்துவம் இருக்குமாயின் நிறுவனம் நட்டத்தில் இயங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படாது.
3. சிறிய வியாபாரிகளின் சந்தையில் நிச்சயமற்ற தன்மையை எதிர் நோக்குகின்றனர் இதனால் திட்டமிடல் அவசியம்.

iv) அ.)நிறுவன முயற்சிகளுக்காக உருவாக்கப்படும் அடிப்படை வசதிகளைக் கொண்ட சூழல் உட்கட்டமைப்பு நிறுவன கட்டமைப்பு ஆகும் இதில் நிறுவன செயற்பாட்டு பிரிவு ஒழுங்கமைப்பு, இணைப்பு ஆகியவற்றை அட்டவனை காட்டும்.

ஆ) 1. தொழிற் பாடுகள்
2. பகுதிகளின் பிரிவுகள்
3. இவற்றுக்கிடையிலான தொடர்புகொள்ளும் முறை

v) 1. முன்னெடுத்தல் முகாமைத்துவ செயற்பாட்டில் துண்டல்/நிறுவனத்தின் இலக்கை அடைதற்கு ஊழியர்களை ஊக்குவித்தல்
2. தலைமைத்துவம் அதிகாரம், ஆற்றல் என்பவற்றின் அடிப்படையில் தனக்கு கீழேயுள்ள தொழிலாளர்களை விருப்பத்துடன் செயற்பட உதவுதல்
3. மேல்மட்ட ~ கீழ்மட்ட ஊழியர்களுடன் பொதுப் தொடர்பு தகவல் பரிமாற்றம்.

5. i) அ) எதிர் காலத் தேவைக்கென பயன்படுத்தாமல் ஒதுக்கி வைக்கப் பட்டுள்ள பொருட்களை குறிக்கும்.

ஆ) 1. உற்பத்தி நடவடிக்கையை தடையின்றி செயல் படுத்துவதற்கு
2. பொருளாதார நன்மைக்காக (விலை கூடுதல்)
3. தேவைப்படும் காலத்தில் இருப்பை பெற்றுக் கொள்ள முடியாத நிச்சயமற்ற தன்மையை தவிப்பதற்கு.
4. வாடிக்கை யாளரின் தேவையை உரிய காலங்களில் நிறை வேற்றும் பொருட்டு

ii) அ) 1. செயலிழத்தல் சார்பான (தேய்வு) பராமரிப்பு
2. பாதுகாப்பு சார்பான (தடுப்பு) பராமரிப்பு

ஆ) 1. உற்பத்தியை தடையின்றி மேற்கொள்ள முடியும்
2. குறிப்பட்ட காலத்தில் இயந்திரத்தை நவீன மயப்படுத்தல்
3. முடிவுப் பொருட்களின் தரத்தைப்பாதுப்பதற்கு
4. உற்பத்தியை அதிகரிக்க.

iii) 1. நிறுவன செயற்பாட்டிற்க்கு அத்தியாவசிய தொழிலாளர்களை பெற்றுக் கொள்ளுதல்
2. நிறுவனத்தின் தேவைகேற்ற முறையில் ஊழியர்களை பயிற்று வித்தல்
3. ஊழியர்களுக்கான பிறநலன்களை சிறப்பாக வழங்குதல்
4. தொழில் கொள்வோர் தொழிலாளர் உறவைப் பேணல்
5. தொழிற் சங்கங்களில் சிறந்த முறையில் செயற்படுதல்

v) 1. நேர்முகப் பரீட்சையின் போது பரீட்சார்த்தியின் மதிப்பீட்டை மேற்கொள்ளலாம்.
2. நேர்முகப் பரீட்சாத்தியின் மேலதிக விபரங்களை தெரியலாம்.
3. சம்பளவிபரம், பதவி நிபந்தனை பற்றி விளக்கமாக அறிவிக்கலாம்.
4. நபர் தொடர்பான தகைமைகள், சான்றிதழ்களை பரிசோதிக்கலாம்.
5. பதவிக்கு பொருத்தமான ஆளுமையுடையவரா என அறியலாம்.

vi) 1. நியமனப் பதவிப் பெயர்
2. நியமனத் தன்மை (நிரந்தரம் / தற்காலிகம்)
3. பதவிக்கான சம்பளத்திட்டம்
4. சேவை தொடர்பான நிபந்தனைகள்
5. பதவியில் அமர்ந்த திகதி, சேவை செய்யும் இடப் பெயர்.
6. நிறுவனத்தால் வழங்கப்படும் பிறநலன்கள்.
7. நிறுவனத்தின் அங்கீகரிக்கப் பட்டவரின் கையொப்பம்

6. i) 1. தற்காலிக வங்கி மேலதிக பற்றை கோரல்
2. கடன் கொடுத்தோருக்கான கொடுக்க வேண்டிய தொகையை பிற்போட்டுக் கொடுத்தல்
3. கையிருப்பை குறைத்து திரவத் தன்மை யாக்குதல்
4. கடன்பட்டோரிடம் பெறவேண்டிய பணத்தை பெற்றுக் கொள்ளல்

ii) 1. வியாபார இலாபம் அதிகரிக்கும் போது உரிமையாளர் இலாபம் அதிகரிக்கும்
2. வியாபார இலாபம் குறைவடையும் போது உரிமையாளர் இலாபம் குறையும்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 1997 ஒகஸ்ற் (புதிய பாடத்திட்டம்)

General Certificate of Education (A/L) Examination. August 1997 (New Syllabus)

BRIGHT BOOK CENTRE

வணிகக்கல்வி - I (பகுதி I)

ஒரு மணி

29

T | I

சகல வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக. எல்லா வினாக்களுக்கும் ஒரு புள்ளி வீதம் வழங்கப்படும். பகுதி Iஇற்கு விடையெழுதி முடிந்ததும் பகுதி IIஇற்கான விடைகளுடன் இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்கவும்.

சுட்டெண் .....

---

* **இல 1~20வரையிலான வினாக்களுக்கு விடையளிக்கும் போது தரப்பட்டுள்ளவற்றில் மிகச் சரியான விடையை தெரிந்து அதன் இலக்கத்தின் மீது வட்டமிடுக.**

1. பிரித்தானியர் காலத்தில் இலங்கையின் வியாபார நடவடிக்கைகளின் விருத்திக்கு பங்களிப்புச் செய்த காரணிகளைச் சரியாகக் கொண்டுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.
   (i) கறுவா மீளகுப் பயிர்ச்செய்கையை அறிமுகப்படுத்தல் / துறைமுக அபிவிருத்தி / போக்குவரத்து சேவை அபிவிருத்தி / வங்கி முறைமையை அறிமுகப்படுத்துதல்.
   (ii) பல்வேறு வர்த்தக ஒழுங்கு அமைப்புகளை அறிமுகப்படுத்தல் / வங்கி முறைமையை அறிமுகப் படுத்தல் / பங்கு வர்த்தகத்தை ஆரம்பித்து வைத்தல் / துறைமுக அபிவிருத்தி.
   (iii) வர்த்தகப் பயிர்களை அறிமுகப்படுத்தல் / பங்கு வர்த்தக நிலையத்தை ஆரம்பித்தல் / கால்வாய் வழிகளை அமைத்தல் / துறைமுக அபிவிருத்தி.
   (iv) தயார் சேவையை ஆரம்பித்தல் / போக்குவரத்து சேவை அபிவிருத்தி, இரத்தினக்கல் வாசனைத் திரவிய ஏற்றுமதியை ஆரம்பித்தல் / வர்த்தகத்தோடு தொடர்புடைய சட்டங்களை அறிமுகப் படுத்தல்.
   (v) கால்வாய்வழி அமைத்தல் / வர்த்தகத்தோடு தொடர்புடைய சட்டங்களை அறிமுகப்படுத்தல / வங்கி முறைமையை ஆரம்பித்தல் / துறைமுக அபிவிருத்தி.

2) அவசியங்களுக்கும் தேவைகளுக்குமிடையே உள்ள பிரதான வேறுபாடுகளை காட்டும் கூற்றினைத் தெரிக.
   (i) அவசியங்கள் பொதுவானவை ஆனால் தேவைகள் இன்றியமையாதவை.
   (ii) அவசியங்கள் இரண்டாம் பட்சமானவை ஆனால் தேவைகள் முதல் நிலைக்குரியவை.
   (iii) அவசியங்கள் பொதுவானவையானவை ஆனால் தேவைகள் வரையறைக்குட்பட்டவை.
   (iv) அவசியங்கள் பொதுவானவையானவை ஆனால் தேவைகள் பலவிதமானவை.
   (v) அவசியங்கள் வரையறைக்குட்படாதவை ஆனால் தேவைகள் பலவிதமானவை.

3. தொழிற்பகுப்பு, சிறப்புத்தேர்ச்சி ஆகியவற்றோடு தொடர்புடைய சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
   (i) தொழிற்பகுப்பின் விளைவு மிகை உற்பத்தியும் சிறப்புத் தேர்ச்சி காரணமாக பரிமாற்றமும் ஏற்படும்.

(ii) தொழிற்பகுப்பு சிறப்புத்தேர்ச்சி இரண்டினாலுமே மிகை உற்பத்தி உண்டாகும்.
(iii) தொழிற்பகுப்பினால் சிறப்புத் தேர்ச்சியும், சிறப்புத் தேர்ச்சியினால் தொழிற்பகுப்பும் உண்டாகும்.
(iv) தொழிற்பகுப்பு, சிறப்புத்தேர்ச்சி இரண்டிலுமே வெளியீட்டின் வெளியீட்டு அளவு அதிகரிக்கிறது.
(v) தொழிற்பகுப்பின் விளைவாக வெளியீடு அதிகரிக்கின்றதெனின் சிறப்புத் தேர்ச்சியின் விளைவாக துணைச் சேவைகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

இவற்றுள் மிகச் சரியான கூற்றுக்கள்.

(1) i, iii, iv (2) i,iii,v (3) ii, iii, iv (4)ii, iv, v (5) iii, iv, v

4. பருமன் அளவுப்படி கைத்தொழில்களை வகைப்படுத்துவதில் முக்கியத்துவம் பெறும் காரணிகளைக் கொண்ட தொகுதி.
(i) முதலிடப்பட்ட மூலதனம் / ஊழியர் எண்ணிக்கை / மொத்த விற்பனை / சந்தையின் பருமன்.
(ii) உற்பத்தி இயலளவு / ஊழியர் எண்ணிக்கை / மொத்த விற்பனை / முதலிடப்பட்ட மூலதனம்.
(iii) மொத்த விற்பனை / சந்தையின் பருமன் / கைத்தொழில் வகை / உற்பத்தி இயலளவு.
(iv) முதலிடப்பட்ட மூலதனம் / முகாமைத்துவ இயல்பு / கைத்தொழில் வகை / ஊழியர் எண்ணிக்கை.
(v) ஏற்றுமதி இயல்திறன் / மொத்த விற்பனை / உற்பத்தி இயலளவு / முகாமைத்துவ இயல்பு.

5. கைத்தொழில்களை நிறுவுவதற்கு அவசியமான அடித்தளமட்ட வசதிகளை உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவு செய்க.
(i) காணி அபிவிருத்தி / மூலதனம் வழங்குதல் / நெடுஞ்சாலைகளை நிறுவுதல் / மின்சாரம் வழங்குதல்.
(ii) தொழிலாளர் பயிற்சி / நெடுஞ்சாலைகளை நிறுவுதல் / கட்டிடங்களை கட்டுதல் / நீர் வழங்கல்.
(iii) நெடுஞ்சாலைகளை நிறுவுதல் / மின்சாரம் வழங்குதல் / கட்டிடங்களைக் கட்டுதல் / காணி அபிவிருத்தி.
(iv) தொழிலாளர் வசதிகளை அளித்தல் / பொறித் தொகுதிகளை வழங்கல் / குப்பைகளை அகற்றுதல் / தொலைபேசி வசதிகளை செயற்படுத்தல்.
(v) குப்பைகளை அகற்றுதல் / நீர் வழங்கல் / கட்டிடங்களைக் கட்டுதல் / மூலதனம் வழங்குதல்.

6. இலங்கையில் முதலீடு ஊக்குவிப்பு வலயங்களை அமைப்பதிலே பின்வருவனவற்றுள் மிக முக்கியமான காரணமாக கருதப்படக்கூடியது.
(i) நவீன தொழில் நுட்ப அறிவைப் பெற்றுக்கொள்ளல்.
(ii) ஏற்றுமதிகளை உயர்த்துதல்.
(iii) தெரிந்தெடுத்த பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல்.
(iv) அந்நிய செலவாணியை சம்பாதித்தல்.
(v) இறக்குமதிகளை ஊக்கமிழக்கச் செய்தல்.

7. புதிய வியாபாரமொன்றை ஆரம்பிக்கும்போது அது தொடர்பாக வியாபார ஒழுங்கமைப்பு வகையொன்றைத் தெரிவதற்காக கருத்தில் கொள்ளவேண்டிய காரணிகளையுள்ளடக்கிய தொகுதியைத் தெரிவு செய்க.
(i) வியாபாரத்தின் இயல்பு / தேவைப்படும் மூலதனம் / அபாயத்தின் இயல்பு / அமைவிடம்.
(ii) சந்தைப்பங்கு / சட்டத் தேவைகள் / வியாபார அபாயம் / தேவைப்படும் மூலதனத்தின் அளவு.
(iii) வியாபாரத்தின் இயல்பு / தேவைப்படும் மூலதன அளவு / சட்டத்தேவைகள் / அபாயத்தின் இயல்பு.
(iv) தேவைப்படும் மூலதன / சட்டத் தேவைகள் / சந்தைப்பங்கு / அபாயத்தின் இயல்பு.

(v) அமைவிடம் / தேவைப்படும் மூலதனம் / நுகர்வோன் திருப்தி / வியாபாரத்தின் இயல்பு.

8. தனிவியாபாரி வியாபாரமொன்றை நிறுவுவதனால் பெறக்கூடிய பிரதான நன்மையாவது,
(i) முடிபுகளை விரைவாக எடுப்பதன் மூலம் வியாபாரத்தை இலாபமடையச் செய்ய முடியும்.
(ii) சிறிய மூலதனத்தோடு ஆரம்பித்து விருத்தி செய்ய முடியும்.
(iii) கடும் சட்டங்களின்றி வியாபாரத்தை நடத்திச் செல்லும் திறமை.
(iv) தனியாள் தொடர்புகளினால் சந்தையை வீரிவுபடுத்த முடியும்.
(v) தனியார் அர்ப்பணிப்பின் மூலம் வியாபாரத்தை அபிவிருத்தி செய்ய முடியும்.

9. பங்குடைமை உறுதியொன்றை வைத்திருப்பதால் கிடைக்கும் முக்கிய நன்மை
(i) இலாப நட்டங்களைப் பகிர்வது தொடர்பாக பிரச்சினைகள் எழுவதில்லை.
(ii) நாளாந்த வியாபார நடவடிக்கைகளிலே ஒவ்வொரு பங்காளரினதும் கடமைப் பங்கினை எடுத்துக் காட்டும்.
(iii) பங்காளரிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும் சந்தர்ப்பத்தைக் குறைக்கும்.
(iv) ஒவ்வொரு பங்காளரினதும் உரிமைகளையும் கடமைகளையும் குறித்துக் காட்டும்.
(v) பங்குடமையின் குறிக்கோள்களைக் குறித்துக் காட்டும்.

10. வரையறுத்த தனிப்பட்ட கம்பனிகளில் மட்டும் காணக்கூடிய இயல்புகளைக் கொண்ட தொகுதி எது?
(i) பங்குகள் ஒப்படைத்தல் கட்டப்படுத்தல் (Transfer of shares) / அங்கத்தவர் உச்ச எண்ணிக்கை 50ஆக வரையறை செய்யப்படல் / பொதுமக்களுக்கு திபெஞ்சர்களை வழங்குதிறன்.
(ii) பணிப்பாளர்களின் எண்ணிக்கை ஆகக் குறைந்தது 2 ஆக இருத்தல் / பணிப்பாளர் உச்ச எண்ணிக்கை 50ஆக வரையறைப்படுத்தல் / பொதுமக்களுக்குப் பங்குகளையும் திபெஞ்சர் களையும் விற்பது தடை செய்யப்படல்.
(iii) பங்குகள் ஒப்படைத்தல் கட்டுப்படுத்தல் / பொதுமக்களுக்கு பங்குகளையும் திபெஞ்சர்களையும் வழங்கும் ஆற்றல் / ஆக்க கூடிய அங்கத்தவர் எண்ணிக்கை 50ஆக வரையறை செய்தல.
(iv) பொதுமக்களுக்கு பங்குகளையும் திபெஞ்சர்களையும் வழங்குதலைத் தடுத்தல் / ஆகக்கூடிய அங்கத்தினர் எண்ணிக்கையை 50ஆக வரையறை செய்தல்/பங்குகள் ஒப்படைத்தல கட்டுப்படுத்தல்.
(v) பங்குகள் ஒப்படைத்தலைக் கட்டுப்படுத்தல் / ஆகக் குறைந்த ஒரு பணிப்பாளரையாவது கொண்டிருத்தல் / பங்குகளையும் திபெஞ்சர்களையும் பொது மக்களுக்கு வழங்கும் ஆற்றல்.

11. சங்கங்களின் சட்ட விதிகள் (அமைப்பு அகவிதி) குறித்துக் காட்டுவது
(i) வெளியுலகத்துக்கும் கம்பனிகளுக்குமிடையேயுள்ள உறவை,
(ii) பொதுமக்கள் தமது பங்குகளுக்கு செலுத்திய தொகைக்கு சமமான தொகையை பணிப்பாளர் தமதுபங்குகளுக்கு செலுத்தினார் என்பதை,
(iii) கம்பனி பங்குகளிலும் திபெஞ்சர்களிலும் முதலீடு செய்யும்படி பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்தல்,
(iv) கம்பனிகள் சட்டத்தில் தேவைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளமையை,
(v) கம்பனியின் உள்ளக நிர்வாகம் தொடர்பான தகவலை.

12. ஒரு பங்குச் சான்றிதழின் வழங்குதல் தொடர்பாகவுள்ள சரியான கூற்று
(i) பங்குச் சந்தையில் கொடுக்கல் வாங்கல் செய்ய வழங்கப்பட்டது.
(ii) கம்பனி உறுப்பினர் பதிவேட்டில் ஒரு அங்கத்தவரின் பெயர் நீக்கப்பட்ட போது வழங்கப்பட்டது.
(iii) கம்பனி அங்கத்தவரின் பதிவேட்டில் பெயர்கள் காணப்பட்டால் மட்டும் வழங்கப்பட்டது.
(iv) பங்கின் முழுப்பெறுமதியும் செலுத்தப்பட்ட போது வழங்கப்பட்டது.

(v) பங்கொன்றின் பெயரளவிலான பெறுமதிக்கு மட்டுமே வழங்கப்பட்டது.

13. கூட்டுறவுச் சங்கமொன்றைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டியது.
(i) கூட்டுறவு மொத்த நிறுவனத்துக்கு.
(ii) கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சுக்கு.
(iii) இலங்கை கூட்டுறவு முகாமைத்துவ திணைக்களத்துக்கு.
(iv) கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்துக்கு.
(v) இலங்கை தேசிய கூட்டுறவுச் சபைக்கு.

14) பொதுக் கூட்டுத்தாபனமொன்று உட்படுகிற மூன்றுவகையான கட்டுப்பாடுகளைக் காட்டும் தொகுதி,
(i) பாராளுமன்றக் கட்டுப்பாடு / திறைசேரி கட்டுப்பாடு / அமைச்சின் கட்டுப்பாடு.
(ii) கணக்காய்வு அதிபர் கட்டுப்பாடு / சட்டவிதிகள் கட்டுப்பாடு / இறைவரித் திணைக்களக் கட்டுப்பாடு
(iii) அமைச்சுக் கட்டுப்பாடு / திறைசேரிக் கட்டுப்பாடு / சட்ட விதிகள் கட்டுப்பாடு.
(iv) மத்தியவங்கிக் கட்டுப்பாடு / கணக்காய்வுமா அதிபர் கட்டுப்பாடு / பாராளுமன்றக் கட்டுப்பாடு.
(v) அமைச்சுக் கட்டுப்பாடு / கணக்காய்வுமா அதிபர் கட்டுப்பாடு / பாராளுமன்றக் கட்டுப்பாடு.

15. ஒரு வியாபாரத்தின் வளர்ச்சியைப் பாதிக்கின்ற சில காரணிகள் கீழே தரப்பட்டுள்ளன.
(i) போதியளவு நிதியின்மை.
(ii) விரைவான தீர்மானங்களை எடுக்க முடியாமை.
(iii) ஊழியர்களை ஊக்குவிப்பதற்குப் போதுமான உந்துதல்களை வழங்க இயலாமை.
(iv) நிதிச் சட்டங்களுக்குள்ளேயே வேலையை செய்ய வேண்டிய கட்டாயம்.
(v) வினைத்திறன் மிக்க ஊழியர் குறைபாடு.
மேற்கூறியவற்றில் அரசாங்கத் திணைக்களமொன்றினால் நடத்தப்படும் வியாபாரத்துடன் மிகப் பொருத்தமான தொகுதி எது?
(a) i, ii, iii (b) ii, iii, iv (c) iii, iv, v (d) i, iv, v (e) ii, iii, v

16. "சுந்தரமும் தனது மாதாந்த சம்பளத்தில் ரூ.500 செலவழித்து ஒரு சேர்ட் கொள்வனவு செய்தான்" பணத்தின் இரண்டு தொழிற்பாடுகளை உள்ளடக்கிய கூற்று பின்வருவனவற்றுள் எது?
(i) மாற்று ஊடகமும், பெறுமதியின் அளவீடும்.
(ii) மாற்று ஊடகமும், பல்வேறு கொடுப்பனவுகளின் ஊடகமும்.
(iii) மாற்று ஊடகமும், பெறுமதியைக் களஞ்சியப்படுத்தும் ஊடகமும்.
(iv) பெறுமதியைக் களஞ்சியப்படுத்தும் ஊடகமும், பல்வேறு கொடுப்பனவுகளின் ஊடகமும்.
(v) பல்வேறு கொடுப்பனவுகளின் ஊடகமும், பெறுமதியின் அளவீடும்.

17) வணிகத்தாள்கள் பற்றிய சரியான கூற்றினைத் தெரிவு செய்க.
(i) முகவிலைக்கு வழங்கப்படுகின்றன.
(ii) பணச் சந்தையில் விற்கப்படுகின்றன.
(iii) கொள்வனவு செய்யப்பட்டால் உயர் வட்டியை சம்பாதிக்கலாம்.
(iv) வணிக வங்கிகளால் வழங்கப்படும்.
(v) முதிர்வுக்கேற்ப கழிவுகள் பெறமுடியும்.

சரியான கூற்றினைத் தெரிவு செய்க.

18) இலங்கை மத்திய வங்கி வணிகவங்கிகளின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது.
(i) நாளாந்த நாணமாற்று வீதத்தைத் தீர்மானிப்பதன் மூலம்
(ii) மீள நிதியீட்டும் வசதிகளை வழங்குதல் மூலமாக.
(iii) இறுதிக்கடன் வழங்கும் புகலிடமாக தொழிற்படுவதன் மூலம்
(iv) மேற்பார்வைச் செயற்பாடுகள் மூலமாக
(v) திறந்த சந்தையை இயக்கிடும் நடவடிக்கைகளில் செயலாற்றுவதன் மூலமாக.

19) வணிக வங்கிகளால் (வணிகர் வங்கி) வழங்கப்படும் சேவை ஒன்று
(i) மாற்றுண்டியல்களைக் கழிவு செய்தல். (ii) காப்புப் பெட்டக வசதிகளை வழங்குதல்.
(iii) காப்புறுதிச் சான்றிதழ்களை வழங்குதல். (iv) நிதிவசதிகளை அளித்தல்.
(v) "ரெலி பேங் சேவை" வசதிகளை வழங்குதல்.

20) வணிக வங்கியில் நடைமுறைக் கணக்கை வைத்திருப்போருக்காக மட்டும் வழங்கப்படும் சேவைகளை உள்ளடக்கும் தொகுதி
(i) வங்கி உடனுண்டியல்களை வழங்குதல் / பிரயாணிகள் காசோலைகளை வழங்குதல் / மேலதிக பற்றுவசதிகளை வழங்குதல்.
(ii) வங்கிக்கூற்றுக்களை வழங்குதல் / மேலதிகப் பற்று வசதிகளை வழங்குதல் / நிலையியற் கட்டளைகளை செயற்படுத்தல்.
(iii) பிரயாணிகளின் காசோலைகளை வழங்குதல் / நாணயக் கடிதங்களை வழங்குதல் / கடன அட்டைகளை வழங்குதல்.
(iv) முகவர் சேவைகளை வழங்குதல் / வங்கிப் பொறுப்பு கூறல்களை வழங்குதல் / ரெலிபேங் சேவையை வழங்குதல்.
(v) கடன் அட்டைகளை விநியோகித்தல் / ரெல்லர் காட்களை விநியோகித்தல் / வங்கித்தாள்களை விநியோகித்தல்.

* இல 21~25 வரையிலான வினாக்களுக்கு விடை சரியெனில் (√) அடையாளத்தையும் பிழையெனில் (X) அடையாளத்தையும் ஒவ்வொரு கூற்றுக்கும் எதிரேயுள்ள கூட்டில் எழுதுக.

21. (a) கைமாறத்தக்க சாதனமொன்றின் சட்டரீதியான உடைமைத்துவமானது மாற்றப் பெற்றவருக்கு ஒப்பமிட்டு உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் மட்டுமே உரிமையாகும். (.....)
(b) காசோலைகளும், மாற்றுண்டியல்களும், குறிப்பிட்ட ஒரு நபருக்கு அல்லது அவரது பிரதிநிதிக்கு அல்லது அவரது வாரிசுக்கு குறித்ததொரு பணத்தொகையை செலுத்துவதற்குரிய எழுத்திலிடப்பட்ட நிபந்தனைகளற்ற கட்டளைகளாகும். (.....)

22. (a) மாற்றுண்டியலொன்றின் புதுப்பித்தல் என்பதன் கருத்து, பெறுபவரின் சம்மதத்துடன் ஒரு உண்டியலின் முதிர்வு திகதியை நீடிக்கச் செய்தலாகும். (.....)
(b) உதவியுண்டியலொன்றுக்கு தயவுக்காலம் கிடையாது. (.....)

23. (a) ஆயுட் காப்புறுதி ஒன்றின் தவணைக்கட்டணத்தைத் தீர்மானிக்கும் காரணிகளாவன, உறுதியின் பெறுமதி, காலம், தொழிலின் இயல்பு, உடல்நலமும் வயதும். (.....)
(b) தரிசனவுண்டியல்களுக்கு ஒப்புக்கொள்ளல் தேவையில்லை. (.....)

24. (a) வணிகத்தாள் ஒரு வாக்குறுதிச் சீட்டு ஆகும். (.....)

(b) வணிகவங்கிகளுக்கு மீள்நிதியிட்ட வசதிகளை அளித்தல் வியாபார நிறுவனங்களுக்கு மூலதனப்பங்கு கொள்வோனாயிருத்தல், பிரதான கடன் திட்டங்களை அமுலாக்குதல் ஆகியன இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கியின் முக்கிய பணிகளாகும். (.....)

25) (a) வங்கிகளுக்கிடையிலான பணச்சந்தையிலே வணிக வங்கிகள் தமது வாடிக்கையாளருக்கு நாளொன்றில் அல்லது வாரமொன்றில் திருப்பிச் செலுத்தத் வேண்டிய கடன்களை வழங்குகின்றன.

(b) நாட்டின் பணி நிரம்பலை குறைப்பதற்காகவே அண்மையில் இலங்கை மத்திய வங்கி வட்டி வீதத்தைக் குறைத்தது. (.....)

* 26 ~ 35 வரையிலான வினாக்களுக்கு விடையளிக்கும் போது மிகச்சரியான கூற்றைத் தெரிந்து அக்கூற்றுக்குரிய இலக்கத்தின் மீது வட்டமிடவும்.

26. ரூ. 10 இலட்சத்துக்கு கொள்வனவு செய்யப்பட்ட லொறி ஒன்றுக்கு ரூ 8 லட்சம் பெறுமதியுடைய முழுப்பொறுப்புடைய காப்புறுதிப் பத்திரம் பெறப்பட்டது. பொருட்களை ஏற்றிக் கொண்டு செல்கையில் சாரதியின் கவனக்குறைவு காரணமாக லொறி விபத்துக்குள்ளாகி ஏற்பட்ட சேதத்தின் நட்டம் ரூ.50 000க்கு மதிப்பிடப்பட்டது.

(i) ரூ. 50 000 நட்டஈட்டுக்கு உரித்துடையவராவர்.
(ii) ரூ. 40 000 நட்டஈட்டுக்கு உரித்துடையவராவர்.
(iii) ரூ. 25 000 நட்டஈட்டுக்கு உரித்துடையவராவர்.
(iv) ரூ. 30 000 நட்டஈட்டுக்கு உரித்துடையவராவர்.
(v) எதுவித நட்டஈட்டுக்கும் உரித்துடையவரல்ல.

27. முழுப்பொறுப்புடைய மோட்டார் காப்புறுதிப் பத்திரமொன்றைப் பெறுகையில் காப்புறுதி தவணைக் கட்டணத்தை குறைப்பதற்கு வாய்ப்பாகவுள்ள படிமுறைகள் காட்டும் தொகுதி பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தித் தெரிவு செய்க.

(i) வாகனத்துக்கான (தரத்தகுதிச்) சான்றிதழைச் சமர்ப்பித்தல்.
(ii) ஓட்டோமொபைல் அசோஸியேசனின் அங்கத்தவராக இருத்தல்.
(iii) வாகனமோட்டுதலில் திறமையுள்ளமையைக் காட்டும் சான்றிதழைச் சமர்ப்பித்தல்.
(iv) நட்டஈட்டுத் தொகை கோரலுக்கு வரையறையொன்றைத் தீர்மானித்தல்.
(v) கோரமுடியாத உபகாரப் பணம் (NO Claim Bonus)க்குரிய சான்றினை சமர்ப்பித்தல்.

பொருத்தமான தொகுதி

(a) i, ii, iii (b) ii, iv, v (c) ii, iii, v
(d) iii, iv, v (e) i, iv, v

28) கடல் போக்குவரத்தில் கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகளையுள்ளடக்கிய கூற்றுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

(i) பொருட்களை பொதி செய்தல் செலவுகளைக் குறைத்தல்.
(ii) கவனமுடன் போக்குவரத்து செய்யும் திறன்.
(iii) கப்பல் வெற்றிடங்களை ஒதுக்கீடு செய்வதில் இலகுதன்மை.
(iv) பொருட்களை ஏற்றி இறக்குவதிலுள்ள இலகுதன்மை.
(v) போக்குவரத்துக்காக செலவழியும் நேரத்தைக் குறைத்தல்.

மேற்கூறிய காரணங்களுக்கு உட்பட்ட கொள்கலன் கப்பல் சேவையை மேலும் ஜனரஞ்சகமாக்கிடக்காரணங்களாய் அமைவது

(a) i, ii, iii (b) i, iii, iv (c) i, ii, v
(d) ii, iii, iv (e) iii, iv, v

29) புகையிரதப் போக்குவரத்து, வீதிப்போக்குவரத்து ஆகியவற்றின் அனுகூலங்களைக் குறிக்கும் கூற்றுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

(i) பாரப் பொருட்களை ஏற்றியிறக்கும் திறன்.
(ii) போக்குவரத்துச் செலவுக் குறைப்பு.
(iii) பொருட்களின் தன்மைகளுக்குப் பொருத்தமான "வெகன்" வாகனங்கள்.
(iv) அதிவேகம்.
(v) கவனமுடனே பொருட்களை போக்குவரத்து செய்யும் திறன்.

வீதிப்போக்குவரத்துடன் ஒப்பிடும்போது புகையிரதப் போக்குவரத்தில் மட்டுமுள்ள நன்மைகளைக் குறிக்கும் கூற்றுக்கள்.

(a) i, ii, iii. (b) i, ii, iv (c) i, ii, v
(d) ii, iii, iv (e) iii, iv, v

30. வான் பிரயாணத்துடன் தொடர்புடைய வேலை ஒழுங்கு சில கீழே உள்ளன.

(i) விமானப்பறப்புகளின் ஒழுங்கு அட்டவணையைத் தயாரித்தல்.
(ii) வான் பயணிகளுக்கு ஹோட்டல் தங்குமிடங்களை அளித்தல்.
(iii) வான் ரிக்கற்றுக்களை விற்றல்.
(iv) வான் பயணத்துக்கான இருக்கைகளை ஒதுக்கீடு செய்தல்.
(v) வான் பயணத்துடன் தொடர்புடைய ஆவணங்களைத் தயாரித்தல், வான் பயண முகவர் ஒருவரது வேலை ஒழுங்கை பின்வருவனவற்றில் எத்தொகுதி ஒழுங்காகக் காட்டுகிறது.

(a) i, ii, iii (b) ii, iii, iv (c) ii, iii, v
(d) iii, iv, v (e) ii, iv, v

31) தொடர்பாடல் ஊடகமொன்றைத் தெரிவு செய்வதில் கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகளைக் குறிக்கும் தொகுதி எது?

(i) வேகம் / சுருக்கம் / இரகசியத்தன்மை / செலவு.
(ii) செலவு / சுலபமாக கிடைக்கும் தன்மை / பாதுகாப்பு / தூரம்.
(iii) கொள்ளளவு / இரகசியத் தன்மை / சாதனை நாட்டும் தேவை / தூரம்.
(iv) வேகம் / தூரம் / பிழையறு தன்மை / பின்னூட்டம்.
(v) செலவு / சுலபமாகக் கிடைக்கும் தன்மை / வேகம் / சுருக்கம்.

32) வியாபாரத் தொடர்பாடலில் "பூரணத்துவம்" என்பதன் கருத்து

(i) துலங்கல் ஒன்றைப் பெறக்கூடிய வகையில் செய்தியைத் தயாரித்தல்.
(ii) நன்கு பாவனையிலுள்ள சொற்களைக் கொண்டு செய்தியைத் தயாரித்தல்.
(iii) சரியான எழுத்து நடப்பத்தைப் பயன்படுத்தி செய்தியைத் தயாரித்தல்.
(iv) நியம மட்டத்திலான மொழிவழக்கைப் பயன்படுத்தி செய்தியைத் தயாரித்தல்.
(iv) தேவையான விபரங்களை அளிக்கும் விதத்தில் செய்தியைத் தயாரித்தல்.

33) வியாபாரத் தொடர்பாடலில் பின்னூட்டலின் முக்கியத்துவம்
(i) பெறுநருக்கு செய்தியைப் பிழையில்லாமல் கொடுத்தல்.
(ii) பெறுநரின் கவனத்தை ஈர்த்தல்.
(iii) பெறுநர் செய்தியை சரியாகப் பெற்றாரா என்பதைத் தெரிந்து கொள்ளுதல்.
(iv) பெறுநருக்கு மீண்டும் செய்தியை அனுப்புதல்.
(v) பெறுநரின் துலங்கலை அறிந்து கொள்ளல்.

34) முகவர் ஒருவரின் பிரதான கடமை.
(i) முதல்வருக்காக செயலாற்றுதல்.
(ii) முதல்வருக்கு நேர்மையாக இருத்தல்.
(iii) முதல்வருக்கு நன்மை கிட்டும் வகையில் செயலாற்றுதல்.
(iv) முதல்வருடனான ஒப்பந்தத்துக்கு இணங்க செயலாற்றுதல்.
(v) நியாயமானதொரு தரகுப் பணத்தைப் பெறுதல்.

35) "இன்வொய்ஸ்" ஒன்றின் பிரதான குறிக்கோள்
(i) விற்கப்பட்ட பொருட்களின் விபரங்களை வாங்குவோருக்கு அறிவித்தல்.
(ii) விற்கப்பட்ட பொருளுக்கு அறவிடப்பட வேண்டிய பணம் தொடர்பாக வாங்குவோருக்கு அறிவித்தல்.
(iii) பொருட்களை சரிபார்த்து வாங்கிட வாங்குவோருக்கு வசதியளித்தல்.
(iv) விற்பனை நிபந்தனைகளை வாங்குவோருக்கு வசதியளித்தல்.
(v) வாங்குவோருடனான நிபந்தனைக்கேற்றபடி விற்போன் செயற்பட்டுள்ளதை உறுதிப்படுத்தல்.

* இல.36 ~ 40 வரையுள்ள வினாக்களில் உள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் சரியாகப் பூரணப்படுத்த அவற்றின் கீழ் அடைப்புக்குள்ளுள்ள சொல் / சொற்களைத் தெரிந்து இடைவெளியில் எழுதுக.

36. ஒரே கூரையின் கீழ் ஒவ்வொரு வகையான பொருட்களுக்கும் வெவ்வேறு பிரிவுகளையேற்படுத்தி விற்பனை செய்கின்ற நிறுவனத்தின் பெயர் ..... (பல்பொருட்கடை / பகுதிக்கடை / சுப்பர் மார்க்கட் / தொடர்களஞ்சியக் கடை / சுயசேவைக்கடை)

37) சில்லறை வியாபாரத்தை மொத்த வியாபாரத்திலிருந்து வேறுபடுத்துகிற மிகச் சரியான அளவீடு .....(வாங்குவோனின் உத்தேசம் / பொருட்களின் விலை / கழிவுகளின் அளவு / பொருட்களின் அளவு / விற்பனையாளனின் உத்தேசம்)

38. "2/10 தேறிய 30" என்பது ..... என்பதற்கான உதாரணமாகும். (அளவுப்படியான கழிவு / வியாபாரக் கழிவு / காசுக்கழிவு / முற்பணக் கழிவு / பருவகாலக் கழிவு)

39) முதல்வரின் பொருட்டு தன் விருப்பத்திற்கேற்ப பொருட்களை வாங்குதல், விற்றலோடு ..... செய்பவர் ஒரு காரணி ஆவார். (பொதி செய்தல் / ஒப்பந்தத்துக்கு உட்படுத்தல் / போக்குவரத்துச் செய்தல் / தனது பெயரில் இன்வொய்ஸை விநியோகித்தல் / கப்பலில் அனுப்புதல்)

40) கப்பற்றள மட்டுமிலவசம் (F.O.B) பொருட்களின் விலை, போக்குவரத்துக் கட்டணம், துறைமுகக் கட்டணம் ..... ஆகியவற்றை உள்ளடக்கும், (காப்புறுதிக் கட்டணம் / ஏற்றுவதற்குரிய கட்டணம் / பண்டகசாலை கட்டணம் / இறக்குமதி சுங்கக் கட்டணம் / கேழ்வுக் கட்டணம்)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சை, 1997 ஒகஸ்ற் (புதிய பாடத்திட்டம்)

General Certificate of Education (A/L) Examination. August 1997 (New Syllabus)

வணிகக்கல்வி - I (பகுதி II)

29
T | I

பகுதி Aயிலும் பகுதி Bயிலும் இவ்விரண்டு வினாக்களையேனும் தெரிந்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக. ஒவ்வொன்றுக்கும் 15 புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி A

1. (i) பண்டமாற்று முறைமையின் வரையறைகள் மூன்றினை விளக்குக.
   (ii) வர்த்தக வளர்ச்சியுடன் தொடர்புறுத்தி கீழ்வருவனவற்றின் பிரதான தொழிற்பாடுகளை தனித்தனி பரிசீலிக்குக.
   (a) போக்குவரத்து (b) வங்கிமுறைமை (c) களஞ்சியப்படுத்தல்.
   (iii) இலங்கைக்கு செறிவான தொழிலாளரைக் கொண்ட கைத்தொழில்களின் முக்கியத்துவத்திற்கான மூன்று காரணிகளைக் குறிப்பிடுக.
   (iv) கைத்தொழில் மயமாக்கல் காரணமாக இலங்கை எதிர்நோக்கும் மூன்று பிரச்சினைகளை விளக்குக.
   (v) கைத்தொழில் குறித்த பிரதேசங்கள் சிலவற்றுக்கு மட்டும் மையமாக்காது இலங்கை முழுவதற்கும் பரவலாக்குவதன் நன்மை மூன்றினை விளக்குக.

2. (i) உடைமைத்துவத்திற்கு இணங்க இலங்கையில் வியாபாரம் எவ்வாறு பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதென்பதைக் குறிப்பிடுக. ஒவ்வொன்றுக்கும் தனித்தனி உதாரணம் தருக.
   (ii) வியாபாரமொன்றை வரையறுத்த தனியார் நிறுவனமாக தொடங்குவதிலும் பார்க்க பங்குடமையாகத் தொடங்குவதால் விளையும் நன்மை மூன்றினை விளக்குக.
   (iii) வரையறுத்த கம்பனிகளால் நடத்தப்படும் பல்வேறுபட்ட பொதுக்கூட்டங்களை பெயரிட்டு அவை ஒவ்வொன்றும் நடத்தப்படுவதன் குறிக்கோள்களை குறிப்பிடுக.
   (iv) வரையறுத்த பொதுக்கம்பனிகளின் வெற்றிக்குரிய காரணங்கள் ஆறினைக் குறிப்பிடுக.
   (v) இலங்கையில் முதலீட்டுச் சாதனங்களாக விளங்கும் நிரற்படுத்தப்பட்ட கம்பனிகளின் பிரபல்யத்துக்கான மூன்று காரணங்களைக் குறிப்பிடுக.

3. (i) இலங்கையில் அரசாங்கத்துக்கு சொந்தமான வியாபாரம் பொறுப்புகளை தனியார மயப்படுத்துவதற்கு ஆதரவாகவும் எதிராகவும் மும்மூன்று காரணங்களைக் குறிப்பிடுக.
   (ii) இலங்கையில் பலநோக்கு கூட்டுறவு சங்கம் தொடர்பாக பின்வரும் தகவல்களைக் குறிப்பிடுக.
   (a) ஆகக் குறைந்த அங்கத்தினர் தொகையும் பங்கொன்றின் பெறுமதியும்.
   (b) மூலதன மூலகங்கள்.
   (c) நிர்வாகம்.

(iii) வெற்றி பெறாத தனியார் முயற்சிகளை கையாள்வதிலே அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கையை விளக்குக.

(iv) நடத்து குத்தகையிலிருந்து, நிதிக்குத்தகை வேறுபடும் விடயங்கள் மூன்றினைக் கூறுக.

(v) உள்ளக வெளிநாட்டுச் செலவாணி சந்தையின் மூன்று செயற்பாடுகளை விளக்குக.

பகுதி B

4. (i) இலங்கையில் தனியொப்படைப்புகளை உருவாக்க வேண்டியதன் காரணங்களை குறிப்பிடுக.

(ii) தற்காலிக மேலதிகப் பற்றுக்கும் நிலையான மேலதிக பற்றுக்குமிடையிலான வேறுபாடுகள் மூன்றினைக் குறிப்பிடுக.

(iii) வியாபார நிறுவனமொன்றுக்கு கொடுகடன் (Credit Card) களினால் ஏற்படுகின்ற நன்மைகள் மூன்றினை விளக்குக.

(iv) முதலீட்டாளரொருவருக்கு கொழும்பு பங்குச் சந்தையின் மாறும் விலைச்சுட்டி எவ்வாறு பயன்படும் என்பதை விளக்குக.

(v) நிதி நிறுவனங்களை கட்டுப்படுத்துவதில் இலங்கை மத்திய வங்கியினால் எடுக்கப்படும் மூன்று படிமுறைகளை விளக்குக.

5. (i) பொறுப்பு காப்புறுதி என்பதனால் விளங்குவது யாது? இரண்டு உதாரணங்கள் தருக.

(ii) உற்பத்தியாளர் ஒருவர் தனது உற்பத்திகளுக்காக போக்குவரத்து முறையொன்றைத் தெரிவு செய்யும் போது கருத்தில் கொள்ளவேண்டிய ஆறு பிரதான காரணிகளைக் குறிப்பிடுக.

(iii) கப்பல் முகவர் ஒருவரது பிரதான தொழிற்பாடுகள் மூன்றினைக் குறிப்பிடுக.

(iv) சர்வதேச சந்தையொன்றிற்கு புதிய உற்பத்தி பொருளை அறிமுகப்படுத்துகிற வியாபாரி ஒருவருக்கு "இன்ரநெற்" மூலம் கிடைக்கின்ற நன்மைகள் மூன்று குறிப்பிடுக.

(v) செய்தித்தாள் ஒன்றில் வெளிவந்த விளம்பரம் ஒன்று கீழே தரப்படுகின்றது.

கேகாலை, பிரதானவீதி, இலக்கம் 60 கூடிய விலைக்கு விசாரணை:- வழக்கறிஞர், 145 வட்டவளை வீதி.

மேலேயுள்ள விளம்பரத்தின் மீறப்பட்டுள்ள மூன்று தொடர்பாடல் கோட்பாடுகளை விளக்குக.

6. (i) பொருட்களின் உரிமையாளருக்கு "ஏலவிற்பனை" எவ்வாறு நன்மையளிக்கும் என்பதை விளக்குக.

(ii) நாணயக் கடிதம் என்பதன் கருத்தை விளக்கி வெளிநாட்டு வர்த்தகத்தில் பரவலாக அது உபயோகப்படுத்தப்படுவது ஏனென்பதை விளக்குக.

(iii) "ஏற்றுமதிப் பதிவு" என்பதன் கருத்து என்ன? அது எதற்காக தேவைப்படுகிறது?

(iv) வர்த்தக திணைக்களத்தினால் ஏற்றுமதியாளன் ஒருவருக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள சேவைகள் மூன்றினை விளக்குக.

(v) இலங்கை உற்பத்திகளுக்கான வெளிநாட்டச் சந்தையை விரிவுபடுத்துவதற்கு ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் மூன்றினை விளக்குக.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சை, 1997 ஒகஸ்ற் (புதிய பாடத்திட்டம்)

General Certificate of Education (A/L) Examination. August 1997 (New Syllabus)

BRIGHT BOOK CENTRE

வணிகக்கல்வி - I (பகுதி I)

ஒரு மணி

29

T I

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்கவும். ஒவ்வொரு வினாவுக்கும் ஒவ்வொரு புள்ளி வழங்கப்படும். இவ்வினாத்தாள்களுக்கு விடையளித்த பின்னர் பகுதி Iஇற்கான விடைத்தாள்களையும் பகுதி IIஇற்கான விடைத்தாள்களையும் ஒன்றாக இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்கவும்.

---

* **1 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கும் பொழுது சரியான விடையைத் தெரிவு செய்து அவ் விடைக்குத் தரப்பட்டிருக்கும் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.**

1. கூற்று: அலுவலக ஊழியர்கள் சட்டத்தின் ஒரு நோக்கமாக இல்லாதது,
   (i) வேலையாற்றுவதற்கான வசதிகளை வழங்குதலும் வேலை மணித்தியாலங்களை (நேரத்தை) நிர்ணயித்தலும்.
   (ii) மேலதிக நேரக் கொடுப்பனவுகள் தொடர்பான பிரமாணங்களை வகுத்தல்.
   (iii) பெண் ஊழியர்களுக்குப் பிரசவ நலன்களை வழங்குதல்.
   (iv) கூலிகள் தொடர்பான பிரமாணங்களை அமுல்படுத்துதல்.
   (v) பணிக் கொடைக் கொடுப்பனவுகளை முறைமைப்படுத்துதல்.

2. தொழிற் திணைக்களத்தினால் பேணப்பட்டுவரும் ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து ஊழியரொருவர் தனது சேமலாப நிதியத்தை மீளப் பெற்றுக்கொள்ள முடியாதிருக்கும் நிலைமை பின்வருவனவற்றுள் எது?
   (i) ஓர் ஆண் தனது 55 வயதைப் பூர்த்தி செய்தும் ஒரு பெண் தனது 50 வயதைப் பூர்த்தி செய்தும் வேலையை விட்ட நீங்கும் பொழுது
   (ii) ஒரு பெண் விவாகம் காரணமாகச் சேவையிலிருந்து விலகும் பொழுது
   (iii) ஊழியர் தனது முழுமையான இயலாமை பற்றி வைத்தியரொருவரின் சான்றிதழைப் பெற்றிருக்கும் பொழுது
   (iv) திரும்பி வரும் நோக்கத்துடன் ஊழியர் இலங்கையை விட்டுப் போகும் பொழுது
   (v) ஓய்வுதிய உரித்துடன் ஊழியர் நிரந்தரமான அரசாங்க உத்தியோகமொன்றைப் பெற்றுக் கொள்ளும்பொழுது.

3. தொழிற்சங்கமொன்று பதிவு செய்யப்படுதல் தொடர்பில் பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
   (i) தொழிற்சங்கங்கள் தொழிற் திணைக்களத்தில் பதிவு செய்யப்படும்.

(ii) உருவாக்கப்பட்டு மூன்று வாரங்களுக்குள் தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்படல் வேண்டும்.
(iii) பதிவு செய்தல், தொழிற்சங்கங்கள் கட்டளைச் சட்டத்திற்கு அமைய மேற்கொள்ளப்படல வேண்டும்.
(iv) பதிவு செய்வதற்கு தேவைப்படும் உறுப்பினர்களின் இழிந்தளவான எண்ணிக்கை 7 ஆகும்.
(v) தொழிற்சங்கத்தைப் பதிவு செய்தலுக்கு விதிக்கப்படும் பெறுமானத்திற்கான முத்திரைகள் விண்ணப்பத்திற்கு ஒட்டப்படுதல் வேண்டும்.

4. நுகர்வோர் பாதுகாப்பிற்குப் பின்வருவன பொருத்தமானவை
(i) உண்ணாட்டு வியாபாரத்தை ஒழுங்கு முறைப்படுத்தப்படுதல்.
(ii) நுகர்வோர் சங்கங்களை அபிவிருத்தி செய்தல்.
(iii)நியாயமான வியாபார நடைமுறைகளைத் தாபித்தல்.
(iv) தேசிய விலைக் கொள்கையொன்றை வகுத்தல்.
(v) நுகர்வோர் பாதுகாப்பினை வழங்குதல்
மேலே குறிப்பிட்டவற்றுள் 1979ஆம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் நோக்கங்களாக உள்ளவை
(1) i, ii, iii (2) i, ii, v (3) ii, iii, iv
(4) i, iii, iv (5) i, iv, v

5. நுகர்வோர் பாதுகாப்பிற்காக உண்ணாட்டு வர்த்தகத் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டங்களை உள்ளடக்கும் சரியான தொகுதியைத் தெரிவு செய்க.
(i) நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் / அழகுசாதனங்கள், கருவிகள், போதை மருந்துகள் சட்டம்.
(ii) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம் / தேசிய சூழல் சட்டம்.
(iii) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம் / நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்.
(iv) நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் / உணவுச் சட்டம்.
(v) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம் / உணவுச் சட்டம்.

6. நுகர்வோர் ஒருவரின் உரிமையாக "நுகர்வோர் கல்விக்கான உரித்து" பிரகடனம் செய்யப்பட்டது.
(i) ஜனாதிபதி ஜோன் எப் கெனடி அவர்களால்
(ii) சர்வதேச கட்டளைகள் அமையத்தினால்
(iii) உண்ணாட்டு வியாபார ஆணையாளர் திணைக்களத்தின் கல்விப் பிரிவினால்
(iv) நுகர்வோர் சங்கங்களின் சர்வதேச அமையத்தினால்
(v) 1979ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தினால்.

7. வரி விடுமுறை என்பதனால் கருதப்படுவது
(i) குறித்த ஒரு காலத்திற்கு வரி விதிக்கப்படாமை.
(ii) விதிக்கப்பட்ட ஒரு வரியை நீக்குதல்.
(iii) வரி செலுத்துவதற்குச் சலுகைக் காலமொன்றை வழங்குதல்.
(v) வரி விரிக்காமை.

8. தனியார் துறை வணிகங்களினதும் கைத்தொழில்களினதும் அபிவிருத்திக்காக இலங்கையில் தாபிக்கப் பட்டுள்ள நிறுவனம்,
(i) இலங்கை வியாபார அபிவிருத்தி நிலையம்.
(ii) தேசிய பொதிகட்டல் நிலையம்.

(iii) கைத்தொழில் அபிவிருத்தி சபை.
(iv) இலங்கை தேசிய வடிவமைப்பு நிலையம்.
(v) தேசிய வியாபார முகாமை நிறுவனம்.

9. தேசிய உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தி வரும் நிலையம்,
(i) இலங்கை வியாபார அபிவிருத்தி நிலையம்.
(ii)இலங்கைக் கட்டளைகள் நிறுவனம்
(iii) தேசிய வியாபார முகாமை நிறுவகம்.
(iv) தேசிய பொதிகட்டல் நிலையம்.
(v) இலங்கைத் தேசிய வடிவமைப்பு நிலையம்.

10. சிறிய, நடுத்தர அளவுச் செயற்றிட்டங்களின் கீழ் தேசிய அபிவிருத்தி வங்கியினால் அளிக்கப்படும் கடன்வசதிக்கான நிதியங்களை வங்கியினால் அளிக்கப்படும் கடன்வசதிக்கான நிதியங்களை வழங்கிவரும் இரு நிறுவனங்களும் எவை?
(i) புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கியும், சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அரசுகள் முகவராண்மையும்.
(ii) ஆசிய அபிவிருத்தி வங்கியும் ஆசிய பசுபிக்பொருளாதார ஆணைக்குழுவும்.
(iii) சர்வதேச நாணய நிதியமும் இலங்கை மத்திய வங்கியும்.
(iv) சர்வதேச அபிவிருத்திச் சங்கமும், ஆசிய அபிவிருத்தி வங்கியும்.
(v) சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அரசுகள் முகவராண்மையும் சர்வதேச நாணய நிதியமும்.

11. முயற்சியாண்மை எனப்படுவது,
(i) தொழிலாளருக்கும் முகாமைக்குமிடையில் மத்தியஸ்தம் வகித்தல்.
(ii) இடர் நேரவுள்ள (ஆபத்துள்ள) வணிகத்தில் ஈடுபடுவதற்கான வல்லமை.
(iii) புதிய தொரு வணிகத்தை வெற்றிகரமாகத் தாபித்து நடத்தும் வல்லமை.
(iv)வணிகத்தில் முதலீடு செய்து இலாபங்களைச் சம்பாதிக்கும் வல்லமை.
(v) பொருளாதாரத்தில் வாய்ப்புக்களைப் பற்றிக் கொள்ளும் வல்லமை.
மேற்போந்தவற்றுள் முயற்சியாண்மை என்பதைச் சரியாக வரையறுக்கும் தொகுதியைத் தெரிவு செய்க.
(1) i, ii, iii (2) ii, iii, iv (3) iii, iv, v
(4) ii, iii, v (5) ii, iv, v

12. பின்வரும் காரணங்களுள் எதற்காக இலங்கைக்கு முயற்சியாண்மை முக்கியமான தொன்றாக அமைகிறது?
(i) புதிய வணிகங்களை ஆரம்பிப்பதற்கு.
(ii) ஏற்கனவேயுள்ள வணிகங்களை விரிவபடுத்துவதற்கு.
(iii) முகாமைத் திறன் மிகுந்த தாக்குவதற்கு.
(iv) ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட கைத்தொழில்களை தோற்றுவிப்பதற்கு
(v) ஊழியச் செறிவுடைய கைத்தொழில்களைத் தோற்றுவிப்பதற்கு.

13. முயற்சியாளரொருவரின் பிரதான சிறப்பியல்பு,
(i) தொழில்முட்பத்தை தூரதமாகக் கற்கும் ஆற்றல்.
(ii) பிறரிடத்து நம்பிக்கை வைப்பதில் இணக்கம்.

(iii) துரிதமாகத் தீர்மானங்களெடுக்கும் ஆற்றல்.
(iv) புதிய வணிக வாய்ப்புகளை இனங்காணும் ஆற்றல்.
(v) புதிய முகாமைச் செயல்நுட்பங்களைக் கற்பதில் நாட்டம்.

14. சிறிய இடைத்தர அளவு வணிகங்களை இனங்காண்பதற்கான தகுதி விதிகளைக் கொண்டுள்ள தொகுதி.
(i) மூலதனம் / உடைமை / ஊழியர்களின் எண்ணிக்கை.
(ii) உடைமை / ஊழியர்களின் எண்ணிக்கை / ஆண்டுக்குரிய வருமானம்.
(iii) ஆண்டுக்குரிய வருமானம் / நிலையான சொத்துக்கள் / மூலதனம்.
(iv) நிலையான சொத்துக்கள் / நிறுவக வகை / மூலதனம்.
(v) ஊழியர்களின் எண்ணிக்கை / வெளியீடு (விளைவு) நிறுவகவகை.

15. சிறிய, நடுத்தர அளவுக் கைத்தொழிலொன்றை இனங்காண்பதற்குத் தொகை மதிப்பு புள்ளிவிபரவியற் திணைக்களம் கொள்ளும் தகுதி விதி
(அ)பொறித்தொகுதி மீதான முதலீடு.
(ஆ)ஊழியர்களின் எண்ணிக்கை.
(இ)முதலீடு செய்யப்பட்டுள்ள மூலதனம்.
(ஈ) நிலையான சொத்துக்களின் பெறுமானம்.
(உ)பயன்படுத்தப்படும் மின்சார இயலளவு.

* 16 தொடக்கம் 20 வரையிலான வினாக்களுக்கு விடையளிக்கும் பொழுது கூற்று ஒவ்வொன்றுக்கும் எதிரேயுள்ள கூட்டில் கூற்று சரியானதாயின் (√) எனும் அடையாளத்தையும் கூற்று பிழையானதெனின் (X) எனும் அடையாளத்தையும் இடுக.

16. (i) அவதானிக்கப்பட்ட தரவுகளும் பதிலளிப்போரிடமிருந்து நேரடியாகச் சேகரிக்கப்படும் தரவுகளும் முதன்மை தரவுகளாகும். ☐

(ii) துணைத் தரவுகளை நிறுவகத்திற்கு உள்ளேயிருந்தும் அத்துடன் நிறுவகத்திற்கு வெளியேயிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும். ☐

17. (i) தொலைபேசி, தபால் மூல வினாக்கொத்துக்கள், நேர்முகப் போட்டிகள் என்பவற்றின் வாயிலாகத் தனிப்பட்டவர்களிடமிருந்து நேரடியாகத் தரவுகளை சேகரித்தல் அளவையீட்டு முறையென அழைக்கப்படும். ☐

(ii) உடைமையாளர் மூலதனம் ஆனது, சார்பளவில் கடன் மூலதனத்தை காட்டிலும் கூடுதலாக அமையப்பெறும் ஒரு மூலதனக் கட்டமைப்பாகும். ☐

18. (i) வணிகத்தை நடத்துவதற்கான ஒருவரது ஆற்றலை இனம் காணுதல். தற்சார்புடைமையின் (Self reliance) மதிப்பீடு என அழைக்கப்படும். ☐

(ii) பயிற்சி பரீட்சைகள் ஆகிய இரண்டையும் திட்டமிட்டு ஒழுங்கு முறைப்படுத்தி நடத்திச் சான்றிதழ்களை வழங்கும் நிறுவனம் தேசிய தொழிற்கற்கை கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையாகும். ☐

19. (i) உண்ணாட்டு மூலப் பொருள்களைப் பயன்படுத்திக் கைத்தொழில்களைத் தாபித்தல், ஏற்கன வேயுள்ள கைத்தொழில்களின் பிரச்சினைகளைத் தீர்த்தல், உற்பத்திப் பொருள்களின் தரத்தினை மேம்படுத்துதல் என்பவை தொடர்பாக மதியுரை வழங்குவதை நோக்காகக் கொண்ட நிறுவனம் இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவனமாகும். ☐

(ii) நிஸ்கோ (தேசிய இளைஞர் சேவை ஒத்துழைப்பு) நிலையம் இளைஞர்களின் சுயதொழில் வாய்ப்பு, வருமான மூலங்களின் விருத்தி என்பவற்றுக்கான தொழிலுட்பச் செயல்முறை அறிவு, மதியுரைகள் சேவைகள் என்பவற்றை வழங்கி வருகிறது. ☐

20. (அ) மரபுவழிப் பெறுமானம், தேசிய பெறுமானம், பண்பாட்டுப் பெறுமானம் என்பவற்றைக் கொண்ட கைப்பணிகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதையும் அரும்பொருட் சாலைகளைத் தாபிப்பதையும் நோக்கமாகக் கொண்ட நிலையம் இலங்கைக் கைப்பணிகள் சபையாகும். ☐

(ஆ) பிரதானமாக தனியார் துறை வணிகங்களைச் சேர்ந்த கைத்தொழில், விவசாய, வர்த்தக துணிகர முயற்சிகளுக்கும் நிதியுதவியை வழங்கிவரும் நிறுவனம் இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம். ☐

* 21 தொடக்கம் 33 வரையிலான வினாக்களுக்கு விடையளிக்கும் பொழுது மிகச் சரியான விடையைத் தெரிவு செய்து அதைக் குறித்து நிற்கும் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.

21. நிறுவகங்கள் அனைத்துக்கும் பொதுவாக ஓர் அமிசமாக உள்ளது.
(1) நோக்கம் (2) இலாபம் (3) விளைபொருள்
(4) சந்தை (5) திட்டம்

22. நிறுவகக் கட்டமைப்பு என்பதற்கு கருதப்படுவது,
(i) ஒரு நிறுவகத்திலுள்ள ஆட்களின் எண்ணிக்கை.
(ii) நிறுவகம் ஒழுங்கமைப்புச் செய்யப்பட்டுள் விதமும் பிரிவுகளுக்கிடையிலான பரஸ்பரத் தொடர்பும்.
(iii) ஒரு நிறுவகத்தின் பிரிவுகளுக்கிடையில் நிலவும் பரஸ்பரம் தொடர்பில் அளவு.
(iv) ஒரு நிறுவகத்தின் தொழிற்பிரிப்பினதும் சிறப்புத் தேர்ச்சியினதும் அளவு.
(v) ஒரு நிறுவகத்தின் ஊழியர் தொகுதிகளின் எண்ணிக்கை.

23. வழிநடத்துதல் எனும் முகாமைத் தொழிற்பாட்டில் உள்ளடக்கப்படுபவை,
(i) செயலாக்கமளித்தல் / கட்டுப்படுத்தல் / தலைமைத்துவம்.
(ii) தலைமைத்துவம் / திட்டமிடல் / செயலாக்கமளித்தல்.
(iii) கட்டுப்படுத்தல் / தொடர்பாடல் / திட்டமிடல்.
(iv) தலைமைத்துவம் / செயலாக்கமளித்தல் / தொடர்பாடல்.
(v) ஒழுங்கமைப்புச் செய்தல் / திட்டமிடல் / தலைமைத்துவம்.

24. கட்டுப்படுத்தலின் நோக்கம்,
(i) விலகல்களை இனங்கண்டு இலாபகரத் தன்மையை உறுதிப்படுத்தல்.
(ii) விலகல்களை இனங்கண்டு செயற்பாடுகளை மீளத்திட்டமிடுதல்.
(iii) வீண் விரயங்களை இனங்கண்டு ஊழியர்களுடன் மீள் பயிற்சியளித்தல்.
(iv) திட்டங்கள் ஆனவை பெறுபேறுகளுடன் இணங்கியமைவதை உறுதிப்படுத்துதல்.
(v) பெறுபேறுகள் ஆனவை திட்டங்களுடன் இணங்கியமைவதை உறுதிப் படுத்துதல்.

25. புதிய உற்பத்திப் பொருளொன்றினது அபிவிருத்திச் செயன் முறையின் முதற்படி
(i) அதிசிறந்த கருத்தினைத் தெரிவு செய்தல்.
(ii) வணிகப் பகுப்பாய்வு.
(iii) உற்பத்திப் பொருளின் விருத்தி.
(iv) கருத்தின் விருத்தி.
(v) சந்தைச் சோதனை.

26. உற்பத்தி இயலளவு என்பதாற் கருதப்படுவது
(i) உற்பத்திக்குத் தொழிற்சாலை தொழிற்படும் ஆகக்கூடிய நாட்களின் எண்ணிக்கை.
(ii) பொறியொன்று தொழிற்படக்கூடிய ஆகக்கூடிய மணித்தியாலங்களின் எண்ணிக்கை.
(iii) மணித்தியாலமொன்றில் ஒரு பொறி உற்பத்தி செய்யக்கூடிய அலகுகளின் எண்ணிக்கை.
(iv) குறித்துரைக்கப்பட்ட ஒரு கால எல்லையில் உற்பத்தி செய்யப்படக்கூடிய ஆகக்கூடிய அலகுகளின் எண்ணிக்கை.
(v) உள்ளீடுகைக்கும் வெளியீட்டிற்குமிடையிலான விகிதம்.

27. மறுகட்டளை மட்டம் பின்வருவனவற்றுள் எதற்குச் சமனாக அமையும்?
(i) பாதுகாப்பு இருப்பு + சராசரி இருப்பு.
(ii) முதன்மைக் காலக் கேள்வி + சிக்கனக் கட்டளைக் கணியம்.
(iii) முதன்மைக்க காலக் கேள்வி + சராசரி இருப்பு.
(iv) பாதுகாப்பு இருப்பு + முதன்மைக்கால கேள்வி.
(v) சிக்கனக் கட்டளைக் கணியம் + இழிந்தளவு இருப்பு.

28. ஊழியர்களைத் தெரிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் செயல்நுட்பங்களை உள்ளடக்கும் தொகுதி எது?
(i) விண்ணப்பங்கள் / விளம்பரப்படுத்தல் / பேட்டி காணல் / எழுத்துச் சோதனைகள்.
(ii) விளம்பரப்படுத்தல் / எழுத்துச் சோதனைகள் / பேட்டி காணல் / மருத்துவ சோதனை.
(iii) பயிற்சியளித்தல் நிறுவனம் / செய்முறைச் சோதனைகள் / பேட்டி காணல் / மருத்துவ சோதனை.
(iv) தொழில் முகவராண்மைகள் / விண்ணப்பங்கள் / நேர்முகத் தொடர்புகள் / பேட்டி காணல்.
(v) விண்ணப்பங்கள் / எழுத்துச் சோதனைகள் / பேட்டி காணல் / மருத்துவ சோதனைகள்.

29. கூலிகளையும் சம்பளங்களையும் நிர்ணயிப்பதில் கருத்திற் கொள்ளப்படும் காரணிகளைக் கொண்டுள்ள தொகுதி எது?
(i) தேவைப்படும் கல்வி / உழைப்பின் கேள்வியும் நிரம்பலும் / வாழ்க்கைச் செலவு.
(ii) உழைப்பின் கேள்வியும் நிரம்பலும் / தேவைப்படும் கல்வி / ஆளுமை.
(iii) வாழ்க்கைச் செலவு / உழைப்பின் சிறப்புத் திறமைகள் / வேலைத்தலத்திற்கான தூரம்.
(iv) ஆளுமை / உழைப்பின் சிறப்புத் திறமைகள் / வேலையின் தன்மை.
(v) தேவைப்படும் கல்வி / பயிற்சி / வேலைத்தலத்திற்கான தூரம்.

30. ஊழியர்களுக்குச் செயலாக்கமளிப்பதற்காகச் சம்பளத்திற்கு மேலதிகமாக வழங்கப்படும் நன்மைகள் உள்ளடக்கும் தொகுதி எது?
(i) இலவச பிரயாண / இலவச வீடமைப்பு / சுகவீன லீவு வழங்குதல்
(ii) மிகையூதிய (உபகார)க் கொடுப்பனவுகள் / மேலதிக நேரக் கொடுப்பனவுகள்/சுகவீன லீவு வழங்குதல்
(iii) இலவச வீடமைப்பு / இலவச பிரயாணம் / ஆண்டுக்குரிய மிகையூதியக் கொடுப்பனவுகள்
(iv) ஓய்வு அறை வசதிகள் / இலவசச் சீருடைகள் / வைத்திய வசதிகள்

(v) இலவசச் சீரூடைகள் / ஓய்வூதியம் / வைத்திய வசதிகள்

31. காசுப் பாதீடொன்று பின்வருவனவற்றுள் எதனைக் காட்டும்?
(i) அவசியமான பொழுது போதுமான பணம் இருக்குமா என்பதை
(ii) சகல வருமதிகளும் உரிய வேளையில் கிடைக்கப் பெற்றனவா என்பதை
(iii) கொடுப்பனவுகள் யாவும் கால அட்டவணைக்கமையச் செலுத்தப்பட்டனவா என்பதை
(iv) எதிர்வரும் தேதி ஒன்றிலே மிகையான பணம் இருக்குமா என்பதை
(v) எதிர்வரும் தேதியொன்றிலே காசுப் பற்றாக்குறையொன்று இருக்குமா என்பதை
இவற்றுள் சரியான கூற்றுக்களை உள்ளடக்கும் தொகுதி யாது?
(1) i, ii, iii (2) ii, iii, iv (3) iii, iv, v (4) i, iv, v (5) ii, iii, v

32. வரையறுத்த பொதுக்கம்பனியொன்றின் நிதியங்களுக்கான மூலகங்களை உள்ளடக்கும் தொகுதியைத் தெரிவு செய்க.
(i) பங்குகளின் வழங்கல் / நிறுத்தி வைத்த இலாபங்கள் / புற முதலீடுகள்.
(ii) நிறுத்தி வைத்த இலாபங்கள் / பங்குகளின் வழங்கல் / மிகைப்பட்ட நிலையான சொத்துக்களின் விற்பனை
(iii) புற முதலீடுகள்/மிகைப்பட்ட நிலையான சொத்துக்களின் விற்பனை / நிலையான சொத்துக்களின் கொள்வனவு.
(iv) பெறுமானத்தேய்விற்கான ஒதுக்கல்/நெடுந்தவணைக் கடன்கள்/உபகாரப் பங்குகளின் வழங்கல்.
(v) பங்குகளின் வழங்கல் / பெறுமானத்தேய்விற்கான ஒதுக்கல்/முன்னுரிமைப் பங்குகளின் மீட்பு.

33. வணிக நிறுவகமொன்றினால் இயல்பாகத் தயாரிக்கப்படும் நிதிக்கூற்றுக்களை உள்ளடக்கும் தொகுதியைத் தெரிவு செய்க.
(i) வருமான செலவீட்டுக் கணக்கு / ஐந்தொகை / காசுப்பாதீடு.
(ii) ஐந்தொகை / நிதிப்பாய்ச்சல் கூற்று / இலாபநட்டக் கணக்கு.
(iii) இலாபநட்டக்கணக்கு / கடன்கொடுத்தோர் பட்டியல் / ஐந்தொகை.
(iv) காசுப்பாதீடு / காசுக்கணக்கு / ஐந்தொகை.
(v) ஐந்தொகை / இலாபநட்டக்கணக்கு / காசுப்பாதீடு.

* 34 தொடக்கம் 40 வரையிலான வினாக்களுக்கு விடையளிக்கும் பொழுது கூற்றுக்கள் சரியானவையாயின் (√) எனும் அடையாளத்தையும் பிழையானவையாயின் (×) எனும் அடையாளத்தையும் கூற்று ஒவ்வொன்றுக்கும் எதிரேயுள்ள அடைப்பினுள் இடுக.

34. (அ) பண்டங்களினதும் சேவைகளினதும் ஓட்டத்தையும் உற்பத்தியாளரிடமிருந்து நுகர்வோருக்கு அல்லது பயன்படுத்துநருக்கு வழிப்படுத்தும் வணிகச் செயற்பாட்டுகளின் நிறைவேற்றமாக சந்தைப்படுத்தல் எண்ணக்கருவினை மிகச் சிறந்த வகையில் வரையறுக்க முடியும். [ ]

(ஆ) ஒரு வியாபாரத் தாபனம் சந்தைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முயற்சியில் சூழல் சார்மாறிகளைப் புறக்கணித்து தீர்மானங்கள் சார் மாறிகளில் தனது கருத்தினைக் குவிக்க முடியும். ஏனெனில் சூழல்சார் மாறிகள் இன்றியமையா வகையில் வியாபாரத் தாபனத்தினாலோ அன்றேல் அதன் போட்டியாளர்களினாலோ கட்டுப்படுத்தப்படக் கூடியவையாக இருப்பதில்லை. [ ]

35. (அ) உற்பத்தி பொருளொன்றை வாங்குமொருவர் அதனைப் பயன்படுத்தக் கருதும் நோக்கத்திற்கு அமையவே உற்பத்திப் பொருள்கள் கைத்தொழிற் பொருட்களாகவோ நுகர்வுப் பொருள்களாகவோ வகைப்படுத்தப்படுகின்றன. [ ]

(ஆ) சார்பளவில் மலிவானவையாகவும் இழிந்தளவு முயற்சியுடன் அடிக்கடி கொள்வனவு செய்யப்படுபவையுமான உற்பத்திப் பொருள்கள் கடையிலுள்ள பண்டங்களாக வகைப்படுத்தப்படலாம்.

36. (அ) விலையிடும் முறைகள் ஆனவை, விலையிடும் நோக்கங்களுடன் கொள்வனவாளர்கள், கேள்வி செலவுகள், போட்டி என்பவை சார் அறிவினையும் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

(ஆ) கேள்விச் சார்புடைய விலையிடலின் பயனுறுதிப்பாடு ஆனது, உற்பத்திப் பொருளுடன் தொடர்புபட்ட சகல செலவுகளையும் சந்தைப்படுத்துநர் துணிந்து கொள்ளும் ஆற்றலில் முழுமையாகத் தங்கியிருக்கும்.

37. (அ) சாத்தியமான மிகக்குறுகிய விநியோக வழி உற்பத்தியாளரிடமிருந்து சில்லறை வியாபாரிக்கும் சில்லறை வியாபாரிகளிடமிருந்து நுகர்வோருக்குமான வழியாகும்.

(ஆ) நேர் விநியோக வழி ஆனது, கைத்தொழிற் சந்தையிலுள்ளதைக் காட்டிலும் நுகர்வோர் சந்தையிலுள்ளதைக் காட்டிலும் நுகர்வோர் சந்தையிலேயே கூடுதலாகப் பயன்படுத்தப்படுகிறது.

38. (அ) மேம்படுத்தற் கருவிகளாக சார்பளவில் விளம்பரப் படுத்தலின் முக்கியத்துவத்தை நேரடி விற்பனையின் முக்கிய தத்துவத்துடன் ஒப்பிடும் பொழுது கைத்தொழிற் சந்தைப்படுத்தலில் விளம்பரப்படுத்துதலைக் காட்டிலும் நேரடி விற்பனை முறையே கூடுதலாகப் பயன்படுத்தப்படும் போக்கு காணப்படுகிறது.

(ஆ) இலவச மாதிரிகள், கூப்பன்கள், விலைக்கட்டுகள் என்பன விற்பனை மேம்படுத்தல் முறைகளுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

39. (அ) செயற்றிட்ட அறிக்கையென்பது உத்தேசிக்கப்பட்டுள்ள ஒரு செயற்றிட்டத்தின் சந்தைச் சாத்தியக் கூறினை மட்டும் கற்பதன் மூலம் தயாரிக்கப்படும் எழுத்து வடிவிலான ஒரு கூற்றாகும்.

(ஆ) செயற்றிட்ட விண்ணப்பதாரர் தொடர்பான ஆளுக்குரிய தகவல்களும் செயற்றிட்ட அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

40. (அ) முதலீட்டின் மீதான வருவாயைக் காண்பதற்குப் பயன்படுத்தப்படும் சூத்திரம் பின்வருமாறு அமையும்.

$$\frac{\text{தேசிய இலாபம்}}{\text{உடமையாளர் முலதனம்}} \times 100$$

(ஆ) உற்பத்திப் பொருளொன்றின் மாறும் செலவை உற்பத்திப் பொருளின் விற்பனை விலையிலிருந்து கழிப்பதன் வாயிலாகப் பெற்றுக் கொள்ளப்படும் பெறுமானம் பங்களிப்பு எனப்படும்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சை, 1997 ஒகஸ்ற் (புதிய பாடத்திட்டம்)

General Certificate of Education (A/L) Examination. August 1997 (New Syllabus)

வணிகக்கல்வி - II (பகுதி II)

இரண்டு மணி

29

T | I

பகுதி "அ"விலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி "ஆ" விலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக. ஒவ்வொன்றுக்கும் 16 புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி 'அ'

1. (i) ஊழியர் சேம இலாப நிதியத்திற்கும் உழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் இடையிலான மூன்று பிரதான வேறுபாடுகளை எடுத்துரைக்க.

   (ii) கூட்டு உடன்படிக்கை என்பதனாற் கருதப்படுவது யாதென விளக்கி அத்தகைய உடன்படிக்கை யொன்றின் இரு நோக்கங்களைக் கூறுக.

   (iii) தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்திற்கமைய வேலைகொள்வோர் ஒருவரின் மூன்று பொறுப்புக்களைக் கூறுக.

   (iv) உற்பத்தி பொருளொன்றின் கட்டுத்துண்டு (Lable) எவ்வாறு நுகர்வோரைப் பாதுகாக்க உதவுகின்றது என விளக்குக.

   (v) நுகர்வொரை பாதுகாப்பதில் இலங்கைக் கட்டளைகள் நிறுவகம் நிறைவேற்றி வரும் மூன்று தொழிற்பாடுகளை விளக்குக.

2. (i) அரசாங்கத்திற்கும் வணிக நிறுவகங்களுக்குமிடையில் நிலவிவரும் பரஸ்பர தொடர்பினை ஆராய்க.

   (ii) அரசாங்கம் வணிகர்களுக்கு ஏன் வரிச்சலுகைகளை வழங்குகின்றது என்பதற்கான மூன்று பிரதான காரணங்களை விளக்குக.

   (iii) தேசிய அபிவிருத்தி வங்கி முதலீட்டாளர்களுக்கு வழங்கி வரும் மூன்று நிதி வசதிகளை விளக்குக.

   (iv) அரசாங்கம் வணிகர்களுக்குத் தற்போது வழங்கி வரும் மூன்று அன்னியச் செலவாணி (வெளிநாட்டு நாணயமாற்று) வசதிகளைக் கூறுக.

   (v) வணிகமொன்றின் சமூக பொறுப்பு என்பதனாற் கருதப்படுவது யாதென விளக்கி ஒரு வணிக நிறுவகம் சமுதாயத்தின்பால் கொள்ள வேண்டிய சமூகப் பொறுப்பின் வகைகள் யாவை எனக் கூறுக.

3. (i) பின்வரும் கூறுகளை விளக்குக.

   (அ) "வணிக முயற்சியாளரொருவர்" ஆபத்துக்களை (இடர் நேர்வுகளை) எதிர்கொள்வதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.

   (ஆ) வணிக முயற்சியாளரொருவர் தன்னம்பிக்கையுடன் செயற்படுதல் வேண்டும்.

   (ii) பின்வருவன தொடர்பில் வணிக முயற்சியாளரொருவரின் கடமைப்பங்கினை விளக்குக.

(அ) பாரிய அளவிலான வணிகங்களை ஆரம்பிப்பதில் முன்னின்று உழைத்தல்.
(ஆ) மரபுவழியான கைப்பணித் திறன்களைப் பாதுகாத்தல்.
(இ) வரையறுத்த சனத்தொகையைக் கொண்ட வணிகத் துறைகளில் ஈடுபடுதல்.

(iii) இலங்கைக்கு சிறிய நடுத்தர அளவு வணிகங்களின் முக்கியத்துவத்திற்கான மூன்று காரணங்கள் தருக.

(iv) இலங்கையில் சிறிய நடுத்தர அளவு வணிக முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் மூன்று பிரச்சினைகளைக் கூறுக.

(v) கைத்தொழில் அபிவிருத்திச்சபை கைத்தொழிலாளர்களுக்கு வழங்கி வரும் சந்தைப்படுத்தற் சேவைகள் மூன்றினைக் கூறுக.

பகுதி ஆ

4. (i) புதிய உற்பத்தி பொருளொன்றைச் சந்தைக்கு அறிமுகப்படுத்தத் திட்டமிடும் வணிகரொருவருக்குச் சந்தை ஆராய்ச்சியின் முக்கியத்துவம் யாது?

(ii) பரும்படியுற்பத்தி நிறுவனமொன்றிற்கான திரவியங்களை பெற்றுக் கொள்வதில் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் யாவை?

(iii) வணிக நிறுவகங்கள் தொடர்பில் பின்வரும் தரப்பினர் ஒவ்வொருவரும் காட்டும் அக்கறைக்கான பிரதான காரணங்களை விளக்குக.
(அ) உடமையாளர்கள்.
(ஆ) வாடிக்கையாளர்கள்.
(இ) அரசாங்கம்.

(iv) திட்டமிடுதலின் முக்கியத்துவத்திற்கான மூன்று காரணங்கள் கூறுக.

(v) கட்டுப்படுத்தல் தொடர்பில் பின்வருவனவற்றை விளக்குக.
(அ) முன்னேற்ற அறிக்கைகள்.
(ஆ) விகிதப் பகுப்பாய்வு.

5. (i) தடுப்புப் பராமரிப்புக்கும் (Preventive maintenace) முறிவுப் பராமரிப்புக்கும் (Break down maintence) இடையிலான வேறுபாட்டை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் உதாரணம் தந்து விளக்குக.

(ii) தொழிற்சாலையொன்றின் இயளவுப் பயன்பாடு தாழ்ந்த மட்டத்தில் இருப்பதற்கான மூன்று காரணங்களை விளக்குக.

(iii) ஊழியர்களின் உள்ளக ஆட்சேர்ப்பில் மூன்று அனுகூலங்களை விளக்குக.

(iv) ஊழியர்களுக்குப் பயிற்சியளித்தலின் மூன்று அனுகூலங்களைக் கூறுக.

(v) மனித சக்தித் திட்டமொன்றைத் தயாரிப்பதில் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய மூன்று விடயங்களைக் கூறுக.

6. (i) நிதிசார் முகாமையின் மூன்று பிரதான தொழிற்பாடுகளைக் கூறுக.

(ii) "ஐந்தொகையொன்று முதலீட்டாளரொருவருக்குப் பயன்படும் தகவல்களை வழங்கும்" ஆராய்க.

(iii) வியாபாரத் தாபனமொன்று விலைகளை நிர்ணயித்தல் மூலம் நிறைவேற்ற எதிர்பார்க்கும் மூன்று நோக்கங்களை விளக்குக.

(iv) மேம்படுத்தற் கலவையில் உள்ளடக்கப்படும் "பகிரங்கப் படுத்தலில்" மூன்று வெளிப்படையான சிறப்பியல்புகளை விளக்குக.

(v) செயற்றிட்ட அறிக்கையொன்றிலே உள்ளடக்கப்பட வேண்டிய சந்தை தகவல்களை விளக்குக.

விடைகள்

வணிகக்கல்வி பகுதி I (I)

வினா

இல. விடை

1. 2
2. 4 அல்லது 1
3. 3
4. 2
5. 3
6. 4
7. 3
8. 5
9. 3
10. 4
11. 1,2,3,4,5
12. 3
13. 4
14. 5
15. 2
16. 1
17. 2
18. 4
19. 1,2,3,4,5
20. 2
21. அ பிழை ஆ சரி
22. அ பிழை ஆ சரி
23. அ சரி ஆ சரி
24. அ பிழை ஆ சரி
25. அ பிழை ஆ பிழை
26. 2
27. 2
28. 2
29. 3
30. 2
31. 2
32. 5
33. 5
34. 4
35. 2
36. பகுதிக்கடை
37. வாங்குவோனின் உத்தேசம்
38. காசுக்கழிவு
39. ஒப்பந்தத்துக்கு உட்படுத்தல்.
40. ஏற்றுவதற்குரிய கட்டணம்

(40 புள்ளிகள்)

வணிகக்கல்வி பகுதி I (I)

வினா

இல. விடை

1 5
2 4
3 2
4 1,2,3,4,5
5 3
6 4
7 5
8 1
9 3
10 4
11 4
12 5
13 4
14 3
15 2
16 அ சரி ஆ சரி
17 அ சரி ஆ பிழை
18 அ சரி ஆ சரி
19 அ சரி ஆ சரி
20 அ பிழை ஆ சரி
21 1
22 2
23 4
24 5
25. 4
26. 4
27. 4
28. 5
29. 1
30. 3
31. 4
32. 2
33. 2
34. அ பிழை ஆ பிழை
35. அ சரி ஆ பிழை
36. அ சரி ஆ பிழை
37. அ பிழை ஆ சரி
38. அ சரி ஆ சரி
39. அ பிழை ஆ சரி
40. அ பிழை ஆ சரி

(40 புள்ளிகள்)

வணிகக்கல்வி – I (விடைகள்) பகுதி II

1. (i) பண்டமாற்று முறையின் வரையறைகள் மூன்றினை விளக்குக?

(1) பண்டமாற்றில் ஈடுபடும் இருவர்களினதும் தேவை ஒத்ததாக இருக்க மாட்டாது. அதாவது இரட்டை பொருந்துகையின்மை.

(2) பொருட்களை சிறுசிறு பகுதிகளாக பிரிக்க முடியாமை. (உ+ம் ஆடு, மாடு)

(3) பெறுமதியை சரியான முறையில் அறவிடமுடியாமை.

(4) சில பொருட்களை சேமித்து வைக்க முடியாமை.

(5) பண்டமாற்றில் கடன்கொள்வனவோ கடன் விற்பனவோ செய்ய முடியாமை.

(3 புள்ளிகள்)

(ii) வர்த்தக வளர்ச்சியுடன் தொடர்புறுத்தி கீழ்வருவனவற்றின் பிரதான தொழிற்பாடுகளை தனித்தனி பரிசீலிக்க.

(A) போக்குவரத்து (B) வங்கிமுறை (C) களஞ்சியப்படுத்தல்.

(A) **போக்குவரத்து**

தேவையான அளவு பொருட்களையும் ஆட்களையும் பாதுகாப்பாகவும்,தேவையான நேரத்தில் தேவையான இடத்திற்கு குறைந்த செலவில் கொண்டு செல்லுதலே பிரதான தொழிற்பாடாகும். (1 புள்ளிகள்)

(B) **வங்கிமுறை**

(1) சேமிப்பை வாடிக்கையாளரிடம் ஏற்றல்.

(2) கடன் வழங்கல்.

(3) வியாபார கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுதல்.

(4) வணிக முயற்சியில் ஈடுபடுபவர்களின் நலன் கருதி பிரதிகர்த்தாவாகவும் வங்கி ஈடுபடுகின்றது. (1 புள்ளி)

(C) **களஞ்சியப்படுத்தல்.**

(1) வர்த்தக வளர்ச்சிக்காக தேவைக்கேற்ப பொருட்களை பாதுகாப்பாக வைத்திருத்தல்.

(2) சந்தையில் பொருட்கள் தேவையான போது விநியோகித்தல். (1 புள்ளி)

(iii) இலங்கைக்கு செறிவான தொழிலாளரைக் கொண்ட கைத்தொழில்களின் முக்கியத்துவத்திற்கான மூன்று காரணிகளைக் குறிப்பிடுக.

(1) இக் கைத்தொழில்களில் தொழில் வாய்ப்பினை அதிகரிக்கலாம்.

(2) வருமான ஏற்றத்தாழ்வினை குறைக்க முடியும்.

(3) மூலதன பற்றாக்குறைக்கான தீர்வை வழங்க முடியும். (1 புள்ளி)

(iv) கைத்தொழில் மயமாக்கல் காரணமாக இலங்கை எதிர்நோக்கும் மூன்று பிரச்சினைகளை விளக்குக.

(1) கைத்தொழில் மயமாக்கலினால் சனத்தொகை நெருக்கடி அதிகரிக்கும். பெரும்பாலான மக்கள் நகர்ப்பகுதியை நோக்கி இடம் நகர்தல்.

(2) கைத்தொழிற்சாலைகளினால் வெளியேறும் புகை, கழிவு, நீர் ஆகியவற்றினால் சூழல் மாசடையும்.

(3) கிராமியங்களில் விவசாயிகள் செய்யும் சிறு சிறு உற்பத்திகள் செய்ய முடியாத நிலை ஏற்பட்டு கிராமியப் பொருளாதாரம் பாதிப்படையும்.

(3 புள்ளிகள்)

(v) புதிய கைத்தொழிலை குறித்த பிரதேசங்களில் சிலவற்றுக்கு மட்டும் மையமாக்காது இலங்கை முழுவதற்கும் பரவலாக்குவதன் நன்மை மூன்றினை விளக்குக.

(1) இலங்கை முழுவதற்கும் கைத்தொழிலை பரவலாக்குவதன் மூலம் கிராமிய அபிவிருத்தியை ஏற்படச் செய்யலாம்.

(2) எல்லா இடங்களுக்கும் கைத்தொழில் பரவலாவதன் மூலம் சம அளவான பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தலாம்.

(3) அந்தந்த இடங்களிலே தொழிலாளரை வேலைக்கு அமர்த்துவதால் வேலையாள் தேவை இட அசைவை குறைக்கலாம்.

(4) சில பிரதேசங்களில் பயன்படுத்தப்படாத வளங்களை பயன்படுத்தி அப்பிரதேச வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கலாம். (3 புள்ளிகள்)

2. (i) உடைமைத்துவத்திற்கு இணங்க இலங்கையில் வியாபாரம் எவ்வாறு பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதென்பதை குறிப்பிடுக. ஒவ்வொன்றுக்கும் தனித்தனி உதாரணம் தருக.

(1) தனியார் துறை வியாபாரம்
தனி வியாபாரம்
பங்குடமை
கம்பனி

(2) பொதுத்துறை வியாபாரம்
கூட்டுத்தாபனம்.

3) கூட்டுறவுத்துறை வியாபாரம்
பலநோக்கு கூட்டுறவு சங்கம். (3 புள்ளிகள்)

(ii) வியாபாரமொன்றை வரையறுத்த தனியாள் நிறுவனமாக தொடங்குவதிலும் பார்க்க பங்குடமையாகத் தொடங்குவதனால் விளையும் நன்மைகள் மூன்றினை விளக்குக.

(1) பங்குடமையை ஆரம்பிப்பது சுலபம். பதிவு செய்தல் முதலிய சட்ட அம்சங்கள் குறைவு.

(2) தனிப்பட்ட பங்காளர்களின் திறமைக்கேற்ப நிறுவன நடவடிக்கைகளைக் கொண்டு செயல்படுத்த முடியும்.

(3) வரையறுக்கப்படாத பொறுப்புகள் உள்ளமையால் பங்காளர் கூடிய அக்கறையுடன் திட்டமிட்டுச் செயல்படுதல்.

(4) பங்குடமை கணக்காய்வு, கணக்கு வைத்தல் சட்ட ரீதியான ஆவணம் பேணல போன்ற சில சட்டவிதிகளில் விலக்கு கிடைக்கும். (3 புள்ளிகள்)

(iii) வரையறுத்த கம்பனிகளால் நடத்தப்படும் பல்வேறுபட்ட பொதுக்கூட்டங்களை பெயரிட்டு ஒவ்வொன்றும் நடத்தப்படுவதன் குறிக்கோள்களைக் குறிப்பிடுக.

(1) *சட்டமுறைக்கூட்டம்*

மூலதனம் பெற்றுக்கொள்ளப்பட்ட மூலகங்களும் செலவு செய்யப்பட்ட முறையும், மூலகங்களும் மீதியும் பற்றி எல்லாப் பங்குதாரர்களுக்கும் அறிவுறுத்தல் வேண்டும்.

(2) *வருடாந்தப் பொதுக்கூட்டம்*

கடந்த காலத்தினுள் ஏற்பட்ட முன்னேற்றங்கள் பற்றி பங்குதாரர்களுக்கு அறிவித்தல். பங்கு இலாபங்களைத் தீர்மானித்தல். கணக்காய்வாளர், இயக்குனர் நியமனம், ஆலோசனைகளை முன்வைத்தல்.

(3) *அதி விசேட பொதுக்கூட்டம்.*

வருடாந்த பொதுக்கூட்டத்தில் கலந்துரையாடாத ஏதும் விடயங்களை கலந்துரையாடி தீர்மானம் எடுப்பதற்கு அல்லது பங்குதாரர் அனைவரும் சேர்ந்து தீர்மானிக்க வேண்டிய வேறு விசேட விடயங்கள் சம்பந்தமான தீர்மானம் எடுத்தல். (3புள்ளிகள்)

(iv) வரையறுத்த பொதுக்கம்பனிகளின் வெற்றிக்குரிய காரணங்கள் ஆறினைக் குறிப்பிடுக.

(1) கூடுதலான மூலதனம் திரட்ட முடியும்.
(2) சட்டத்தின் கண் தனி மனிதனாக கருதப்படும்.
(3) பொறுப்புகள் யாவும் வரையறுக்கப்பட்டிருக்கும்.
(4) சிறந்த முகாமைத்துவம் நிர்வாகம்.
(5) கம்பனிப் பதிவாளரின் கட்டுப்பாடு உண்டு.
(6) தொடர்ந்து நீண்ட காலம் நிலைத்திருக்கும் தன்மை கொண்டது. (3 புள்ளிகள்)

(v) இலங்கையில் முதலீட்டுச் சாதனங்களாக விளங்கும் நிரற்படுத்தப்பட்ட கம்பனிகளின் பிரபல்யத் திற்கான மூன்று காரணங்களைக் குறிப்பிடுக.

(1) மேற்பார்வையும் கட்டுப்பாடும் காரணமாக கூடிய பாதுகாப்பு (கொழும்பு பங்குப்பரிவர்த்தனைக் கம்பனி தொழிற்பாடு, இலங்கை பிணைகள் ஆணைக்குழு மேற்பார்வை)
(2) ஆகக் குறைந்த காலாண்டுக் கொருமுறை அறிக்கைகளை வெளியீடு செய்தல். (பருவகால அறிக்கை)
(3) பங்குச் சந்தையில் பங்குகளை தொடர்ச்சியாக, இலகுவாக கொள்வனவு விற்பனை செய்ய முடிதல். இதனால் இலாபம் சம்பாதிக்க முடியும்.
(4) சந்தை விலையை தினமும் அறிய முடிதலால் முதலீட்டுப் பெறுபேறுகளை தொடர்ந்து மதிப்பிட முடிதல்.
(5) விசேட வரிச்சலுகைகைகள் காரணமாக இலாபம், பங்கிலாபங்கள் அதிகரித்தல்.

3. (i) இலங்கையில் அரசாங்கத்துக்கு சொந்தமான வியாபாரம் பொறுப்புகளை தனியார மயப்படுத்துவதற்கு ஆதரவாகவும் எதிராகவும் மும்மூன்று காரணங்களைக் குறிப்பிடுக.

ஆதரவான கருத்துக்கள்

(1) அரசாங்கத்தின் அல்லது திறைசேரியின் கட்டுப்பாடுகளிலிருந்து விடுபடுதல்.
(2) திறமையான நிர்வாகத்தை கையாளல்.
(3) நவீன தொழில்நுட்பங்களை பெற்றுக்கொள்ள முடிதல்.
(4) வெளிநாட்டு, உள்நாட்டு முதலீட்டாளர் முதலீடுகளைப் பெற்றுக் கொள்ள வசதியாக அமைதல்.
(5) சந்தையை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வியாபிக்க முடியும்.
(6) அரசாங்க வரி போன்றவற்றை வருமானங்களை பெற்றுக் கொள்ள முடிதல்.

எதிரான கருத்துக்கள்:

(1) அரசாங்கத்தில் இருந்து தொழிலாளர் பொதுமக்கள் பெற்றுக்கொள்ளும் சலுகைகள் குறைவடைகின்றன.
(2) தொழிலாளர் குறைவாக பாவிக்கப்படுவதனால் பலர் தொழிலை இழக்க வேண்டிய நிலை ஏற்படும்.
(3) வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிப்பதால் இலாபங்கள் வெளியேற்றப்படல்.
(4) தொழில் பிணக்குகள் அதிகரித்தல் / தொழிலாளர் அமையாமை.
(5) நாட்டின் இறைமை பாதிக்கப்படும். (3புள்ளிகள்)

(ii) இலங்கையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தொடர்பாக பின்வரும் தகவல்களைக் குறிப்பிடுக.

(A) ஆகக் குறைந்த அங்கத்தினர் தொகையும், பங்கொன்றின் பெறுமதியும்.

விடை: ஆகக் குறைந்த அங்கத்தினர் 10 பேர்
பங்கொன்றின் பெறுமதி 100/=.ரூபா

(B) *மூலதன மூலகங்கள்*

(1) அங்கத்துவக் கட்டணம் மூலம் சேகரித்தல்.

(2) அரசாங்கத்தில் இருந்து அல்லது மக்கள் வங்கியில் இருந்து கடன் பெறுதல்.

(C) *நீர்வாகம்*

பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட இயக்குனர் சபையினால் நிர்வாகம் மேற்கொள்ளப்படல்.
(3 புள்ளிகள்)

(iii) வெற்றி பெறாத தனியார் முயற்சிகளை கையாள்வதிலே அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கையை விளக்குக.

அரசு வெற்றியடையாத கம்பனிகளை மீண்டும் கையேற்று புணருத்தாரணம் செய்து மீண்டும் கையளித்தல் அல்லது விற்பனை செய்தல் ~ தனியார் வெற்றியடையாத கம்பனிகளை புணருத்தாரணம் செய்யும் கட்டளைச் சட்டத்தின் கீழ் செயற்படுத்தல்.

(iv) நடத்துக் குத்தகையிலிருந்து நிதிக்குத்தகை வேறுபடும் விதம் பற்றிய விடயங்கள் மூன்றினைக் கூறுக.

நடத்துக் குத்தகை	நிதிக்குத்தகை
(1) குறுகிய காலம் (2) நிபந்தனைகள் குறைவு (3) மொத்தமாக கட்டணம் செலுத்தப்படும் (4) குத்தகை சொத்து / ஆதன உரிமையாளரால் பேணப்படும்	நீண்ட காலம் நிபந்தனைகள் அதிகம் தவணைக்கட்டணமாக செலுத்தப்படும். குத்தகை சொத்து / ஆதன உரிமையாளரால் பேணப்படும். (3 புள்ளிகள்)

(v) உள்ளக வெளிநாட்டுச் சந்தையின் மூன்று செயற்பாடுகளை விளக்குக.

(1) வெளிநாட்டு நாணயங்களை கொள்வனவு விற்பனை செய்தல்.

(2) வெளிநாட்டு வரைபுகளை வழங்கல்.

(3) பிரயாணிகள் காசோலைகளைக் கொள்வனவு செய்தல் விற்பனை செய்தல்

(4) வெளிநாட்டு உண்டியல்களை கழிவீடு செய்தல். (3 புள்ளிகள்)

பகுதி B

4) (i) இலங்கையில் தனியொப்படைப்புகளை உருவாக்க வேண்டியதன் காரணங்களைக் குறிப்பிடுக.

(1) சிறு மூலதனம் உள்ளவர்களை மூலதனச் சந்தை மிகவும் கவர்தல். அதாவது மூலதனச் சந்தை அறிவில்லாதவர்களாகவும், மூலதனச் சந்தையில் ஈடுபட வழிவகுத்தல்.

(2) பங்குச் சந்தையை அபிவிருத்தி செய்தல்.

(3) முதலீடு செய்யும் பல்வேறு நபர்களில் இருந்து (குறிப்பாக சிறு முதலீட்டாளர்கள் பணத்தைப் பெற்று அனுமதிக்கப்பட்ட முதலீட்டு மார்க்கங்களில் முதலீடு செய்தல். அதாவது சிறிய முதலீட்டாளர்களுக்கு முதலீட்டு வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்தல்.

(4) அலகுடமையினரின் பணத்தை பங்குச்சந்தை வேறு முதலீட்டு வளங்கள் ஆகியவற்றில் முதலீடு செய்தல் தொடர்பாக தேர்ச்சியுடைய முகாமைக் கம்பனி ஊடாக முதலீடு செய்தல் தனிப்பட்ட சிறு முதலீட்டாளர்கள் அனுபவம் குறைந்தவர்களாவர்.

(3 புள்ளிகள்)

(ii) தற்காலிக மேலதிகப் பற்றுக்கும் நிலையான மேலதிகப் பற்றுக்கும் இடையிலான வேறுபாடுகள் மூன்றினைக் குறிப்பிடுக.

தற்காலிக மேலதிகப்பற்று	நிலையான மேலதிகப்பற்று
(1) பிணைஅவசியமில்லை. (2) குறுங்காலம் (90 நாட்களுக்குக் குறைந்தது) (3) வட்டி அதிகம் (4) விண்ணப்பிக்காமலே பெறலாம். தற்காலிக மேலதிகப்பற்று வழங்கப்படும்.	பிணை அவசியம் ஒப்பிட்டளவில் நீண்ட காலம். ஒப்பீட்டளவில் வட்டி குறைவு. விண்ணப்பத்தால் பெற்றுக் கொள்ளப்படும்.

(3 புள்ளிகள்)

(iii) வியாபார நிறுவனமொன்றுக்கு கொடுகடன் அட்டை(Crdit Card) களினால் ஏற்படுகின்ற நன்மைகள் மூன்றினை விளக்குக.

(1) அறவிடமுடியா கடன் ஏற்படாது.

(2) இலகுவாக சுமக்கக் கூடியது. பணத்தைக் கையாள்வதில் உள்ள சிரமங்கள் குறையும்.

(3) விற்பனை அதிகரிக்கும்.

(4) கடன் அட்டை வழங்கும் நிறுவனங்கள் அவ்வட்டை மூலம் பொருட்களை கொள்வனவு செய்யக்கூடிய நிறுவனங்கள் பற்றிய விபரங்களைத் தருகின்றன. அதனால இந்நிறுவனங்கள் பிரபல்யம் அடைகின்றன. (3 புள்ளிகள்)

(iv) முதலீட்டாளரொருவருக்கு கொழும்பு பங்குத்சந்தையின் மாறும் விலைச்சுட்டி எவ்வாறு பயன்படும் என்பதை விளக்குக.

கொழும்பு பங்குசந்தையின் பாரிய சந்தை மூலதனமாக்கல் உள்ளக தெரிவு செய்யப்பட்ட கம்பனிகளின் பொதுவான விலைமாற்றுப் போக்கு பற்றிய அறிவை பெற்றுக்கொள்ள முடிகின்றது. இதன் மூலம் பங்குச் சந்தைக் கைமாற்றல்களை செய்து கொள்ள முடியும். அல்லது முதலீட்டு தீர்மானங்களை எடுக்க முடியும். அதாவது பங்குச் சந்தை விலைப் போக்கை அறிந்து தீர்மானம் எடுக்க முடியும். (3 புள்ளிகள்)

(v) நிதி நிறுவனங்ளை (வங்கியல்லாத) கட்டுப்படுத்துவதில் இலங்கை மத்தியவங்கியினால் எடுக்கப்படும் மூன்று படிமுறைகளை விளக்குக.

(1) மத்தியவங்கி பதிவு செய்து அனுமதிப் பத்திரம் வழங்குதல்.

(2) வைப்பாளர்களின் சொத்துக்களைப் பாதுகாக்கும் பொருட்டு ஊழல்கள் உள்ள கம்பனி நடவடிக்கைகளால் இருந்து தற்காலிகமாகத் தடுத்து வைத்தல் மூலம் அல்லது சில நிதிக்கம்பனிகளை நிரந்தரமாக மூடிவிடுவதற்கு நீதிமன்றத்தில் அனுமதி கோரல்.

(3) சேமிப்பை ஏற்றல், முதலீடு செய்தல், கணக்கறிக்கை தயாரித்தல், கடன் மூலதனத்துக்கும் உரிமை மூலதனத்துக்கும் இடையில் விகிதாசாரத்தைப் பேணல், திரவத்தன்மை பேணல் போன்றவற்றுக்குக் கட்டுப்பாடு விதித்தல், வைப்புக்களில் பெறுமதியில் ஆகக் குறைந்தது ஒரு குறிப்பிட்ட வீதத்தை திரவச் சொத்துக்களாக பேணுதல் வேண்டும்.

(4) ஒவ்வொரு நிதிக்கம்பனியும் ஒரு மூலதன நிதியினை பேணும்படி வேண்டப்பட்டிருக்கிறது.

இது மொத்த வைப்புக்களில் குறிப்பிட்ட வீதத்தை விட குறையக்கூடாது.

(5) வைப்பாளர்கள் பாதுகாப்பிற்காக நிதிக்கம்பனிகள் நிர்வாகத்தை தற்காலிகமாக கையேற்றல். கடுமையான தவறான முகாமையும், ஊழலும் காணப்படுகையில் நீண்ட காலத்திற்கு நிலைமையைச் சீராக்க முடியாவிட்டால் கலைப்பதற்கு உத்தரவிட மத்தியவங்கிக்கு அதிகாரமுண்டு.

(6) நிதிக்கம்பனிகள் நிதி நிர்வாகம் தொடர்பாக அறிவுறுத்தல்களை வழங்கல் மூலம் எங்கு முதலீடு செய்வது, கணக்கு பதிவுகளை வைத்திருத்தல், மூலதனம்/திரவச் சொத்துக்கள் வீதத்தை தீர்மானித்தல், போதியளவு கணக்கீட்டு முறைகளைப் பேணுமாறு நிதிக்கம்பனிகள் கேட்கப்பட்டுள்ளன.

5. (i) பொறுப்புக் காப்புறுதி என்பதனால் விளங்குவது யாது? இரண்டு உதாரணங்கள் தருக.
தனது நடவடிக்கைகள் ஏதும் காரணமாக பிறிதொரு நபருக்கு ஏற்படும் இழப்புகள் தொடர்பாக தம்மால் அவற்றை ஈடுசெய்வதற்காக செய்து கொள்ளப்படும் காப்புறுதி பொறுப்புக் காப்புறுதி எனப்படும். உ +ம் மூன்றாம் நபருக்கெதிராக மோட்டார் காப்புறுதி, தொழிலாளர் நட்டயீட்டுக் காப்புறுதி, ஏற்றுமதிக்கடன் காப்புறுதி பிணைப் பொறுப்புக் காப்புறுதி. (3 புள்ளிகள்)

(ii) உற்பத்தியாளர் ஒருவர் தனது உற்பத்திகளுக்காக போக்குவரத்து முறையொன்றைத் தெரிவு செய்யும் போது கருத்தில் கொள்ள வேண்டிய ஆறு பிரதான காரணிகளைக் குறிப்பிடுக.

(1) வேகம் அல்லது விரைவு அல்லது பயண காலம்.
(2) பாதுகாப்பு அல்லது பாதுகாப்பு ஏற்பாடுகள்.
(3) கிடைப்பனவு, ஒழுங்கான, உரிய நேரங்களில் கிடைப்பனவு.
(4) பொருட்களின் தன்மை.
(5) கிரயம் அல்லது கட்டணங்கள்.
(6) தூரம் / இடம் அல்லது ஊடகம்.
(7) இயலளவு / வசதிகள் (3 புள்ளிகள்)

(iii) கப்பல் முகவர் ஒருவரது பிரதான தொழிற்பாடுகள் மூன்றினை குறிப்பிடுக.

(1) கப்பல்களுக்கான இடவசதி செய்து கொடுத்தல்.
(2) நேர அட்டவணை, பாதைகளை வழங்கல்.
(3) சர்வதேச வர்த்தகத்தின் போது தேவையான ஆவணங்கள் தயார் செய்தல்.
(4) கட்டணங்களை நிர்ணயித்தல் (3 புள்ளிகள்)

(iv) சர்வதேச சந்தையொன்றிற்கு புதிய உற்பத்திப் பொருளை அறிமுகப்படுத்துகிற வியாபாரி ஒருவருக்கு "இன்ரநெற்" மூலம் கிடைக்கின்ற நன்மைகள் மூன்று குறிப்பிடுக.

(1)கொள்வனவாளர் பற்றிய தகவல்களைப் பெற்று கொள்ள முடிதல்.
(2) போட்டியாளர் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியதல்.
(3) தனது பொருள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடிதல்.
(4) உடனடியாகவும் குறைந்த செலவிலும் பொருட்களை சர்வதேச ரீதியாக அறிமுகம் செய்ய முடிதல். (3 புள்ளிகள்)

(v) செய்தித்தாள் ஒன்றில் வெளிவந்த விளம்பரம் ஒன்று கீழே தரப்படுகின்றது.
கேகாலை, பிரதான வீதி, இலக்கம் 60, கூடிய விலைக்கு
விசாரணை:~ வழக்கறிஞர் 145வட்டவளை வீதி.
மேலேயுள்ள விளம்பரத்தின் மீறப்பட்டுள்ள மூன்று தொடர்பாடல் கோட்பாடுகளை விளக்குக.

(1) பூரணத்தன்மையின்மை.
(2) உறுதியற்ற தன்மை.
(3) சுருக்கமான தன்மை.
(4) குறிப்பான தன்மையின்மை.
(5) மரியாதையின்மை. (3 புள்ளிகள்)

6. (i) பொருட்களின் உரிமையாளருக்கு "ஏலவிற்பனை" எவ்வாறு நன்மையளிக்கும் என்பதை விளக்குக.
கூடிய விளம்பரத்தை செய்து அதிகமானவர்களை கொள்வனவு செய்ய வரவழைத்துப் போட்டியை உருவாக்கி உச்ச விலையினை அல்லது மிகச் சிறந்த விலையினை பெற்றுக் கொள்ள முடியும். (3 புள்ளிகள்)

(ii) நாணயக் கடிதம் என்பதன் கருத்தை விளக்கி வெளிநாட்டு வர்த்தகத்தில் பரவலாக அது உபயோகப்படுத்தப்படுவது ஏனென்பதை விளக்குக.
இறக்குமதியாளன் தான் பெற்றுக் கொண்ட பொருள் சுமைகளுக்காக ஏற்றுமதியாளருக்கு செலுத்துவதற்கு உடன்பட்ட பணத்தொகைக்கு இறக்குமதியாளனது வணிக வங்கி ஏற்றும தியாளன் வணிக வங்கிக்கு வழங்கக்கூடிய ஆவணமே நாணயக் கடிதம் ஆகும்.
பணக்கொடுப்பனவை உறுதிப்படுத்தும் ஆவணமாக உபயோகப்படுவதேயாகும். (3 புள்ளிகள்)

(iii) "ஏற்றுமதிப் பதிவு" என்பதன் கருத்து என்ன? அது எதற்காக தேவைப்படுகிறது?
ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் சம்பந்தமாக சுங்க திணைக்களத்திற்கு கொடுக்கப்படும் விபரங்கள் ஏற்றுமதிப் பதிவு ஆகும்.
இதனது நோக்கம்:
(1) சுங்க வரியை தீர்மானிக்க.
(2) என்ன பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்பதை அறிவதற்கும் பரிசோதனை செய்வதற்கும். (3 புள்ளிகள்)

(iv) வர்த்தக திணைக்களத்தினால் ஏற்றுமதியாளன் ஒருவருக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள சேவைகள் மூன்றினை விளக்குக.
(1) உற்பத்தி நாட்டுச் சான்றிதழ் வழங்கல்.
(2) வெளிநாட்டு சந்தைகள் பற்றிய தகவல்களை வழங்கல்.
(3) ஏற்றுமதியாளர்களின் பொருட்காட்சி வியாபாரச் சந்தை போன்றவற்றை ஏற்பாடு செய்தல்.
(4) ஏற்றுமதியாளரின் பிரச்சினையை தீர்த்தல். (3 புள்ளிகள்)

(v) இலங்கை உற்பத்திகளுக்கான வெளிநாட்டுச் சந்தையை விரிவுபடுத்துவதற்கு ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் மூன்றினை விளக்குக.
(1) வெளிநாட்டு கொள்வனவாளன் சம்பந்தமான தகவல்கள் வழங்குதல்.
(2) ஏற்றுமதி அபிவிருத்தி நிலையம் ஒன்று அமைத்து நடத்துவதன் மூலம் தேசிய உற்பத்தி யாளரின் உற்பத்திகளைக் காட்சிக்கு வைத்தல். வெளிநாட்டு கொள்வனவாளர்களுடன் கலந்துரையாடல் செய்ய ஏற்பாடு செய்து கொடுதல் போன்றவற்றை செய்கிறது.
(3) ஏல விற்பனைகளையும், பொருட்காட்சிகளையும் நடத்துதலும் அவற்றில் பங்கு பற்றலும்.
(4) ஏற்றுமதியாளர்களுக்கு தொழில்நுட்பம் / விற்பனை விநியோக அபிவிருத்தி ஆகியன சம்பந்தமாக பயிற்சிக் கருத்தரங்குகளை நடத்துதல்.
(5) வெளிநாட்டில் வியாபாரம் விளம்பரம் செய்தல்.

பகுதி A

1. (i) ஊழியர்சேம இலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் இடையிலான முன்று பிரதான வேறுபாடுகளை எழுத்துரைக்க.

ஊழியர் சேமலாப நிதி	ஊழியர் நம்பிக்கை நிதியம்
(1) தொழில் கொள்வோன் / தொழிலாளர் பங்களிப்பு	தொழில் கொள்வோன் பங்களிப்பு மட்டும்
(2) தொழிலாளியினால் 8% உம் தொழில் வழங்குனரால். 12% உம் பங்களிப்பு செய்யப்படும்	தொழில் வழங்குனரால் 3% தொழிலாளியின் சம்பளத்தின் பங்களிப்பு செய்யப்படும்.
(3) தொழில் திணைக்களத்தினால் பரிபாலனம் செய்யப்படும். மத்திய வங்கியால் நிர்வாகிக்கப்படும்	தொழில் கொள்வோன் சேவை சபையினாரல் பரிபாலனம் செய்யப்படும்
(4) மேலதிக நலன் கிடையாது	மேலதிக நலன் கிடைக்கும்
(5) சுயவாய்ப்புகள் பெற்றுக்கொள்ள முடியாது.	சுயவாய்ப்பு வெளிநாட்டில் இருப்பவர் களுக்கு பெற்றுக் கொள்ளலாம்.

(ii) கூட்டு உடன்படிக்கை என்பதனால் கருதப்படுவது யாதென விளக்கி அத்தகை உடன்படிக்கை யொன்றின் இரு நோக்கங்கள் கூறுக.

தொழில் கொள்வோர், தொழிலாளர் ஆகிய இரு கட்சியினருக்கும் இடையில ஏற்படக்கூடிய ஒரு ஒப்பந்தம் கூட்டு உடன்படிக்கை ஆகும்.

இதனது நோக்கம்:

(1) கைத்தொழில் பிணக்குகளை நீக்கி கட்சியினருக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்துதல்.

(2) தொழில் சட்டங்கள் மூலம் பெறக்கூடிய சலுகைகளிலும் பிரதி பயன்களிலும் கூடிய சாதகமான நிலைமைகளை உருவாக்கல். (3 புள்ளிகள்)

(iii) தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்திற்கமைய வேலை கொள்வோர் ஒருவரின் முன்று பொறுப்புக்களை கூறுக.

(1) சகல கைத்தொழில் நிறுவனங்களும் தொழில் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) ஊழியர் பாதுகாப்புக் கருதி பொறித்தொகுதிகளில் பாதுகாப்பு செய்தல் தொழிற்சாலை தளம் ஒழுங்கமைத்தல்.

(3) தொழில் ரீதியான நோய்கள், அபாயங்கள் பற்றி அறிவித்தல்.

(4) சுகாதார சமூக நலவசதிகள் ஏற்படுத்திக் கொள்ளல்.

(5) பாதுகாப்பான உபகரணங்கள், முதலுதவிச் சேவை, தொழிலாளர் நலன்.

(6) இயந்திர உபகரணங்களைக் குறிப்பிட்ட கால ரீதியாகப் பரிசீலனை செய்தல்.

(3 புள்ளிகள்)

(iv) உற்பத்தி பொருளொன்றின் கட்டுத்துண்டு (Lable) எவ்வாறு நுகர்வோரைப் பாதுகாக்க உதவுகின்றது என விளக்குக.

(1) உற்பத்தியாளர் பெயரும் விலாசமும் காணப்படும்.
(2) விலை, குறிப்பிட்ட விலையை அறிந்து கொள்வதுடன் மற்றைய பொருளுடன் ஒப்பிட்டு அறியவும் முடியும்.
(3) குறைபாடுகள் காணப்படுகையில் அறிவுறுத்தல்.
(4) முதிர்வு திகதி / நிறை / அளவு காணப்படல்.
(5) உள்ளடக்கப்பட்ட பொருட்கள், பொருட்களின் தன்மை பற்றி அறிவு கிடைத்தல்.
(6) ஆலோசனைகள் ~ பாவனை முறைகள்.
(7) எச்சரிக்கைகள் ~ அபாயம் நஞ்சு, உடையக்கூடியவை.
(8) களஞ்சியப்படுத்தல் ஆலோசனைகள். (3 புள்ளிகள்)

(v) நுகர்வோரை பாதுகாப்பதில் இலங்கை கட்டளைகள் நிறுவகம் நிறைவேற்றி வரும் மூன்று தொழிற்பாடுகளை விளக்குக.

(1) S.L.S குறியினை நடைமுறைப்படுத்தல்.
(2) அரசாங்கத்தின் சட்டவிதிகளை நடைமுறைப்படுத்தல். உ+ம் தலைக்கவசத்தின் தரம்.
(3) நுகர்வோர் கல்வியை பரவலாக்கல்.
(4) இறக்குமதி பொருட்களை பரிசோதித்தல்.
(5) நுகர்வோனின் முறைப்பாடுகளைக் கேட்டு நடவடிக்கை எடுத்தல். (3 புள்ளிகள்)

2. (i) அரசாங்கத்திற்கும் வணிக நிறுவகங்களுக்குமிடையில் நிலவி வரும் பரஸ்பர தொடர்பினை ஆராய்க.

அரசாங்கம் அபிவிருத்தி திட்டங்களைக் கொண்டு நடத்துவதற்காக வணிக நிறுவனங்கள் ஊடாக வரிச்சலுகை, நிதிவசதி, செலவாணி வசதி, நிறுவன வசதி, அடிப்படை வசதி போன்ற பல வசதிகளை வழங்கி வியாபார நடவடிக்கைகளை நடத்திச் செல்வதற்கு உரிய சூழ்நிலை ஒன்றை உருவாக்கி அரசு உதவி புரிகின்றது. இதனால் அரசாங்கத்தினதும், சமூகத்தினதும் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்படும் வரையில் நடவடிக்கைகளை எடுத்துச் செல்வது வணிக நிறுவனங்களின் பொறுப்பாகும். தொழில் வாய்ப்புகள் அதிகரித்தல், சரியான வரிவிதித்தல், நுகர்வோனின் நலன்களை கருதிச் செயற்பட்டால் செலவாணி உழைத்தல், சூழலை பாதுகாத்தல் ஆகியவை அரசின் பொறுப்பாகும். (3 புள்ளிகள்)

(ii) அரசாங்கம் வணிகர்களுக்கு ஏன் வரிச்சலுகைகளை வழங்குகின்றது என்பதற்கான மூன்று பிரதான காரணங்களை விளக்குக.

(1) மூலதனத்தை தேசிய உற்பத்தி நடவடிக்கையின் மீது ஊக்குவித்தல். (வரிச்சலுகை கொடுக்கப்பட்ட துறைகளைவிட கூடிய வளர்ச்சியினைக் கொண்டிருக்கும்)
(2) ஏற்றுமதி அபிவிருத்தி அந்நிய செலவாணி உழைப்பு அதிகரிப்பு.
தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தல் அபிவிருத்தி செய்தல்.
(3) வெளிநாட்டு மூலதனத்தை உள்நாட்டில் கவர்தல், பிரதேசத்தில் உள்ள ஏனைய நாடுகளை விடக் கூடிய வரிச்சலுகை இலங்கையில் வழங்கப்படுவதனால் இங்கு முதலீடு செய்யப்படுகின்றது. (3 புள்ளிகள்)

(iii) தேசிய அபிவிருத்தி வங்கி முதலீட்டாளர்களுக்கு வழங்கி வரும் மூன்று நிதி வசதிகளை விளக்குக.

(1) பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நிதிவசதி அளித்தல்.

(2) நேரடி மூலதன வசதிகளை வழங்குதல், அதாவது புதிய தொழில்கள் வழங்கல், ஏற்கனவே உள்ள தொழில்களை அபிவிருத்தி செய்யும் குறுங்கால நீண்டகால கடன்வழங்கல்.

(3) நாணயக் கடிதங்கள் வழங்குதல்.

(4) மாற்றுண்டியல்களை கழிவீடு செய்தல்.

(5) குத்தகை மூலதனம் வழங்கல்.

(6) செயற்திட்ட அபிவிருத்தி வசதி வழங்கல். (3 புள்ளிகள்)

(iv) அரசாங்கம் வணிகர்களுக்குத் தற்போது வழங்கி வரும் மூன்று அந்நியச்செலவாணி (வெளிநாட்டு நாணயமாற்று) வசதிகளைக் கூறுக.

(1) வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு உடையோருக்கு இலங்கை முதலீட்டுச்சபை அனுமதி வழங்கியுள்ள வெளிநாட்டவருக்குச் சொந்தமான முயற்சிகளில் முதலீடு செய்வதற்கு வாய்ப்பளித்தல்.

(2) வெளிநாட்டு நாணயங்களை பரிமாற்றம் செய்து கொள்பவருக்கு வெளிநாட்டு நாணங்களை கொள்வனவு செய்வதற்கும் அவற்றை ஏனைய வெளிநாட்டு நாணயங்களுக்கு மாற்றி அமைத்து கொள்வதற்கும் அனுமதியளித்தல்.

(3) வெளிநாட்டுச் செலவாணிக்கான கொள்வனவுகள் விற்பனைகள் தொடர்பாக வியாபாரிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள வரையறைகளை எளிதாக்கல்.

(4) வெளிநாட்டு நாணய வங்கி அலகு மூலம் மேற்கொள்ளக்கூடிய கொடுக்கல வாங்கல் களுக்கான வரையறைகளைக் குறைத்தல். (3 புள்ளிகள்)

(v) வணிகமொன்றின் சமூக பொறுப்பு என்பதனாற் கருதப்படுவது யாதென விளக்கி ஒரு வணிக நிறுவகம் சமுதாயத்தின்பால் கொள்ள வேண்டிய சமூகப் பொறுப்பின் வகைகள் யாவை எனக் கூறுக.

தொழில் முயற்சியாளர்கள் தத்தமது குறிக்கோள்களை நிறைவு செய்து கொள்வதற்கு முயலும் போது சமூகங்களின் நிலைப்பாட்டிற்கு எந்த வகையான பாதகங்களும் ஏற்படாத முறையிலும் சமூகத்திற்கு நன்மை ஏற்படக்கூடிய முறையிலும் செயற்பட வேண்டும். இதுவே சமூகப் பொறுப்பு ஆகும்.

(1) நியாயமான விலைக்கு பொருட்கள் சேவைகளை வழங்குதல். (உரிய அளவிலும் தரத்திலும்)

(2) சூழலை தூய்மையாக பாதுகாத்தல்.

(3) சமூகம் எதிர்நோக்குகின்ற சமூக பிரச்சினைகளுக்கு உதவுதல்.

(4) தொழில் வாய்ப்புக்களை உருவாக்கலும் நல்ல வேலைச் சூழலை உருவாக்கல்.

(5) சமூக நல அபிவிருத்தி சங்கங்கள் உதவி வழங்கும் நிறுவனங்களது நடவடிக்கைகட்கு உதவுதல். (3 புள்ளிகள்)

3. (i) பின்வரும் கூறுகளை விளக்குக.

(அ) "வணிக முயற்சியாளரொருவர்" ஆபத்துக்களை (இடர் நேர்வுகளை) எதிர்கொள்வதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.

நட்டங்களையும் ஆபத்துக்களையும் துணிந்து எதிர்கொண்டு தனது வியாபாரத்தை ஆரம்பித்து நடத்திச் செல்லல் வேண்டும்.

(ஆ) வணிக முயற்சியாளரொருவர் தன்னம்பிக்கையுடன் செயற்படுதல் வேண்டும்.

தோல்வி, சோர்வு, வீழ்ச்சி ஆகியவற்றின் மத்தியில் நம்பிக்கை இழக்காது துணிவுடன் வியாபாரத்தை வெற்றி கொண்டு நடாத்துதல். (3 புள்ளிகள்)

(ii) பின்வருவன தொடர்பில் வணிக முயற்சியாளரொருவரின் கடமைப் பாங்கினை விளக்குக.

(அ) பாரிய அளவிலான வணிகங்களை ஆரம்பிப்பதில் முன்னின்று உழைத்தல்.

சிறு வியாபாரத்தை ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்திச் செல்வதன் பேறாக பாரியளவு வியாபாரம் உருவாகின்றது. புதிய வியாபாரங்களை ஆரம்பித்து உடமையாளரின் தொழிற்பாடாக அமைகையில் சிறு அளவில் ஆரம்பிக்கப்படும் அவ்வாறான சிறிய வியாபாரங்கள் உடமையாளர்களின் கடும் உழைப்பால் பாரிய நிறுவனங்களாக மாறும்.

(அ) மரபுவழியான நுட்பத் திறன்களைப் பாதுகாத்தல்.

உற்பத்தியாளர் ஆரம்பிக்கும் சிறு மத்தியளவிலான வியாபார அமைப்புகள் அதிகளவு மனித உழைப்பை உட்படுத்துவதாக இருக்கும். இவ்வாறான உற்பத்தி வியாபார நடவடிக்கைகளுக்காக இயந்திர சாதனங்கள் அல்லது மரபுவழியான நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதனைக் காணக்கூடியதாக உள்ளது.

(இ) வரையறுத்த சனத்தொகையைக் கொண்ட வணிகத் துறைகளில் ஈடுபடுதல் சில பொருட்களுக்கான சந்தை வரையறுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் உற்பத்தி செய்ய வேண்டியது குறைந்தளவில் சில வகைகளாகும். சாதாரணமாக சிறு நிறுவனங்களை ஆரம்பித்து கொண்டு நடத்துவதற்கு சிறு வணிகத் துறையினர் முன்வருவர். (3 புள்ளிகள்)

(iii) இலங்கைக்கு சிறிய நடுத்தர அளவு வணிகங்களின் முக்கியத்துவத்திற்கான மூன்று காரணங்கள் தருக.

(1) தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தல்.
(2) தற்போதைய மூலதனம் மூலம் உச்ச பயனடைதல்.
(3) தேசிய வினைத்திறன்களை உச்சமாக பயன்படுத்தல்.
(4) சந்தையில் போட்டித்தன்மையை வளர்த்தல்.
(5) துறைகளுக்கிடையில் சமமான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துதல்.
(6) பாரிய நிறுவனங்களின் நிலைப்பாட்டிற்கு உறுதுணையாக அமைதல்.
(7) அரசு பொருளாதார தொழிற்பாடுகளை வினைத்திறனுடன் செயற்படுத்தல்.
(8) உள்நாட்டு வளப்பயன்பாட்டை மேம்படுத்தல்.
(9) வெளிநாட்டு செலவாணிப் பற்றாக்குறையை நீக்கல். (3 புள்ளிகள்)

(iv) இலங்கையில் சிறிய நடுத்தர அளவு வணிக முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் மூன்று பிரச்சினைகளைக் கூறுக.

(1) மூலதனப் பற்றாக்குறை.
(2) பாரிய உற்பத்திகளினதும், இறக்குமதி பொருட்களினாலும் ஏற்படுகின்ற போட்டிகளுக்கு முகம் கொடுக்க முடியாத இடர்ப்பாடு.
(3) உற்பத்திப் பொருட்கள் சிறந்த தரத்தை உடையதாக காணப்படாமை.
(4) தேவையான தொழினுட்பம் காணப்படாமை.
(5) சந்தைப்படுத்தல் பிரச்சினைகள்.
(6) பயிற்றப்பட்ட தொழிலாளர் பற்றாக்குறையும் பயிற்சி பெறக்கூடிய வாய்ப்பு குறைவாகும்.

(v) கைத்தொழில் அபிவிருத்திச் சபை கைத்தொழிலாளர்களுக்கு வழங்கி வரும் சந்தைப்படுத்தற் சேவைகள் மூன்றினைக் கூறுக.

(1) எதிர்கால சந்தைக்கான உற்பத்தி தகவல்களையும் தரவுகளையும் தயாரித்தல்.

(2) உள்நாட்டு, வெளிநாட்டு வியாபாரத் தன்மைக்கேற்ப தரம், வடிவமைப்பு, விலையிடல், பொதிசெய்தல், விநியோகித்தல் சம்பந்தமான ஆலோசனை வழங்குதல்.

(3) உற்பத்தியாளன் பொருட்களைக் காட்சிக்கு வைப்பதும், விற்பனைக்காக நிறுவனம் ஒன்றைக் கொண்டு நடத்துதலும்.

(4) சந்தை தரவுகளைச் சேகரித்தலும், தேவைப்படுமிடத்து சந்தை சம்பந்தமாக பரிசோதனை செய்தல்.

(3 புள்ளிகள்)

பகுதி ஆ

4. (i) புதிய உற்பத்திப் பொருளொன்றைச் சந்தைக்கு அறிமுகப்படுத்தத் திட்டமிடும் வணிகரொருவருக்குச் சந்தை ஆராய்ச்சியின் முக்கியத்துவம் யாது?

(1) சந்தைப்படுத்தலில் பொருட்களுக்கு நேரான சந்தை காணப்படுகின்றதா அதன் அளவு பல்வேறு சந்தைகளின் இலாபத்தன்மை கொடுக்கல் வாங்கல் செய்வோர், அவர்களின் வருமானம், கல்வித்தரம், கொள்வனவு செய்யும் சந்தர்ப்பமும் முறையும் அடங்கிய விபரங்களை மதிப்பீடு செய்வதன் மூலம் பொருளின் சந்தையினை மதிப்பிட முடியும்.

(2) கொள்வனவாளரின் தேவைகளுக்கும், விருப்பத்திற்கும் ஏற்ற பொருத்தமான உற்பத்தியாளனை வழங்குவதன் மூலம் இலாபம் அதிகரித்தல்.

(3) சந்தையில் இருக்கும் போட்டியாளர் சம்பந்தமான அவர்களின் பொருட்களுடன் ஒப்பிடும்போது வியாபாரி சமர்ப்பிக்கும் பொருளுக்கு கிடைக்கும் இடத்தினை முன்கூட்டியே அறிய முடிவதால் போட்டியிடுதல்.

(4) கொள்வனவாளரின் பிரதிபலிப்பை அறிந்து கொள்ள முடிதல். (3 புள்ளிகள்)

(ii) பரும்படியுற்பத்தி நிறுவனமொன்றிற்கான திரவியங்களைப் பெற்றுக் கொள்வதில் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் யாவை?

(1) பொருத்தமான வழங்குதலை தெரிந்து கொள்ளல்.

(2) தேவையான மூலப்பொருட்கள் தொடர்ச்சியாக கிடைத்தல்.

(3) தேவையான மட்டத்தில் பொருளில் தரத்தைப் பேணுதல்.

(4) மூலப்பொருட்களை குறைந்த செலவில் பெற்றுக் கொள்ளக்கூடிய தன்மை.

(5) தொக்கினை குறைந்தளவில் வைத்துக் கொள்ளல்.

(iii) வணிக நிறுவகங்கள் தொடர்பில் பின்வரும் தரப்பினர் ஒவ்வொருவரும் காட்டும் அக்கறைக்கான பிரதான காரணங்களை விளக்குக.

(அ) உடைமையாளர்கள்:

உடமையாளர் இடப்பட்ட முதலீட்டுக்கு அளவான இலாபத்தை எதிர்பார்ப்பார்.

(ஆ) வாடிக்கையாளர்கள்:

தேவையான பொருட்களும் சேவைகளும் சரியான தரத்தில் நியாயமான விலைக்கே பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பார்.

(இ) அரசாங்கம்:

அரசின் அபிவிருத்தி நோக்கத்தை நிறைவேற்ற வெற்றிகரமான தொழில் முயற்சிகளின் இயக்கம் அவசியமானது. அதனால் அரசுக்கு இலாபம் கிடைத்தல். மக்களுக்கு நியாயமான விலைக்கு பொருட்களையும் சேவைகளையும் வழங்கல். தொழில்வாய்ப்பை அதிகரித்தல் என்பவற்றை எதிர்பார்க்கும். (3 புள்ளிகள்)

(iv) தட்டமிடுதலின் முக்கியத்துவத்திற்கான மூன்று காரணங்கள் கூறுக.

(1) நோக்கத்தை நிறைவேற்ற முயற்சித்தல்.

(2) நிறுவனத்தில் பல்வேறு பகுதிகளுக்கிடையில் பொருத்தமான இணைப்பு அவசியம்.

(3) பல்வேறு வேலைத்திட்டங்களில் பொருத்தமான திட்டத்தை தேர்ந்தெடுப்பதன் மூலம் சிறந்த நடத்தைக்கு வழிவகுக்கும்.

(4) பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொள்ளல். (3 புள்ளிகள்)

(v) கட்டுப்படுத்தல் தொடர்பில் பின்வருவனவற்றை விளக்குக.

(அ) முன்னேற்ற அறிக்கைகள்:

வியாபார நிறுவனத்தின் உண்மையான செயல்முறையை முன்னேற்ற அறிக்கைகளில் காணலாம். பெறுபேறு திட்டப் பெறுபேற்றோடு ஒப்பீடு செய்வதன் மூலம வளர்ச்சிப்போக்கைக் காணமுடியும்.

(ஆ) விகிதப் பகுப்பாய்வு:

எதிர்காலத் தீர்மானம் எடுப்பதற்கு உதவும் வகையில் வியாபாரத்தின் உண்மையான செயல்முறைப் பகுப்பாய்வு செய்தல் விகித அமைப்பில் செய்யப்படும். அவ்விகிதத்தின் மூலம் வெளிப்படுத்தும் உண்மைச் செயல் முறையை திட்டமிட்ட செயல்முறைக்கு பிரதிகூலமாகும் திறன்களை அறிந்து முகாமைத் தீர்மானங்களை எடுக்கலாம்.

(3 புள்ளிகள்)

5. (i) தடுப்புப் பராமரிக்கும் (Preventive maintenance) முறிவுப் பராமரிப்புக்கும் (Break-down maintence) இடையிலான வேறுபாட்டை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் உதாரணம் தந்து விளக்குக.

இயந்திர தாக்கத்தைக் குறைப்பதற்கும் இயந்திர செயற்பாட்டை தொடர்ச்சியாக இயக்கவும் தடை ஏற்படுவதற்கு முன் பொருத்தமான செயல்முறை ஏற்படுத்தல் தடுப்பு பராமரித்தலாகும். உடைதல், செயற்படாதிருத்தல் என்பவற்றை ஏற்றுக்கொள்ளும் (Operating level) உபகரணங்கள் பராமரிப்பு செய்தல் முறிவு பராமரிப்பு ஆகும். உ + ம்:

குறித்த காலத்தில் அல்லது திகதியில் இயந்திரம் அல்லது பகுதியை பரிசீலித்தல், சுத்தம் செய்தல், இயந்திர உபகரணம் உடைந்த பின் திருத்துதல். (3 புள்ளிகள்)

(ii) தொழிற்சாலையொன்றின் இயலளவுப் பயன்பாடு தாழ்ந்த மட்டத்தில் இருப்பதற்கான மூன்று காரணங்களை விளக்குக.

(1) தொழிலாளர்களின் பிரச்சினைகள்.

(2) உற்பத்தி முகாமைத்துவத்திலுள்ள வழுக்கள்.

(3) கேள்வி குறைதல்.

(4) தேவையான மூலப் பொருட்களையும் சேவைகளையும் பெற்றுக் கொள்ளாமல் இருத்தல்.

(5) இயந்திர உபகரண குறைபாடு (3 புள்ளிகள்)

(iii) ஊழியர்களின் உள்ளக ஆட்சேர்ப்பில் மூன்று அனுகூலங்களை விளக்குக.

(1) வியாபார இரகசியங்களை பாதுகாக்க முடிதல்.

(2) தொழிலாளரை நியமித்தல் கிரயம்.

(3) திறமையான தொழிலாளரைக் காண முடிதல்.

(4) தற்காலத் தொழிலாளர்களுக்கு இது நியாயமாக திட்டமாக காணப்படுவதால் அவர்களின் எதிர்கால தொழிற்பாதுகாப்பிற்கும், பதவி உயர்வுக்கும் நியாயமான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தல்.

(5) தொழில் திருப்தி ஏற்படல்.

(6) இருப்போருக்கு பதவி உயர்வு கிடைப்பதை அறிவதால் சிறந்த முறையின் விடயங்களில் திருப்தி ஏற்படல். (3 புள்ளிகள்)

(iv) ஊழியர்களுக்குப் பயிற்சியளித்தலின் மூன்று அனுகூலங்களை கூறுக.

(1) உற்பத்தி அதிகரித்தல்.

(2) வெளியீடும் தரமும் வளர்ச்சியடைதல்.

(3) தொழில் பயிற்சி தொழிலாளரின் திருப்திக்கு வழி வகுக்கும்.

(4) மேற்பார்வை செய்தலைக் குறிக்கும்.

(5) தொடர்ந்து இயங்கும் நிலை.

(6) அபாயங் குறைதல்.

(7) வளங்களின் துஷ்பிரயோகத்தைக் குறைத்தல்.

(8) தொழிற்திறனை வளர்ப்பதால் திருப்தி அதிகரித்தல். வேலைக்கு வராமலிருத்தல், நிறுவனத்தில் இருந்து விலகல் ஆகியன நடைபெறாமல் தடுப்பதற்கு. (3 புள்ளிகள்)

(v) மனித சக்தித் திட்டமொன்றைத் தயாரிப்பதில் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய மூன்று விடயங்களைத் தருக.

(1) நிறுவன அமைப்பின் நோக்கங்களும் திட்டங்களும்.

(2) தற்கால மனித சமூக எண்ணிக்கை.

(3) எதிர்கால மனித சமூக தேவைகள்.

(4) விலகலும் ஓய்வு பெறலும், இடமாற்றமும். (3 புள்ளிகள்)

6. (i) நிதிசார் முகாமையின் மூன்று பிரதான தொழிற்பாடுகளைக் கூறுக.

(1) பொருத்தமான முறையில் நிதியை பெறல்.

(2) பொருத்தமான முறையில் நிதிமுடக்கம் செய்தல்.

(3) தேவையானபோது, தேவையான அளவு நிதி வைத்துக் கொள்ள வேண்டும்.

(ii) "ஐந்தொகையொன்று முதலீட்டாளரொருவருக்குப் பயன்படும் தகவல்களை வழங்கும்" ஆராய்க.

(1) மூலதனக் கட்டமைப்பு பற்றி அறியமுடிதல்.

(2) தொழிற்படு மூலதனம் பற்றிய விபரம்.

(3) உறுதியான மூலதனக் கட்டமைப்பு. (3 புள்ளிகள்)

(iii) வியாபாரத் தாபனமொன்று விலைகளை நிர்ணயித்தல் மூலம் நிறைவேற்ற எதிர்பார்க்கும் மூன்று நோக்கங்களை விளக்குக.

(1) இலாபத்தை உச்சத்துக்கு கொண்டு வரல்.

(2) சந்தையைக் கைப்பற்றல்.
(3) சந்தையினதும் சகல துறைகளினதும் சக்தியைப் பெறல்.
(4) தற்போதைய வருமானத்தை உச்சமயப்படுதல்.
(5) விற்பனையை மேம்படுத்தல்.
(6) ஏனைய நிறுவனங்களின் விலை தரம் பற்றிய தலைமைத்துவத்தை பெறல்.
(7) வியாபாரம் வெற்றிகரமாக முறிவடையாது கொண்டு நடத்தல். (3 புள்ளிகள்)

(iv) மேம்படுத்தற் கலவையில் உள்ளடக்கப்படும் "பகிரங்கப்படுத்தலின்" மூன்று வெளிப்படையான சிறப்பியல்புகளை விளக்குக.
(1) நிறுவனத்திற்கு நேரடியான செலவீனங்கள் காணப்படாமை.
(2) கொடுக்கப்படும் தகவல்களுக்கு உயர் நம்பிக்கை காணப்படல்.
(3) விளம்பரத்தை விடக் கூடிய அவதானம் ஏற்படல்.
(4) ஏனைய துறைகளோடு ஒப்பீடுகையில் நிறுவனத்துக்கு தடை செய்யும் திறன் குறைவு.
(5) வியாபாரத்துக்கு இலாபநட்டமாக அமையும். (3 புள்ளிகள்)

(v) செயற்றிட்ட அறிக்கையொன்றிலே உள்ளடக்கப்பட வேண்டிய சந்தை தகவல்களை விளக்குக.
(1) தற்போதைய விலை.
(2) உற்பத்திக்கு இணைந்த பொருள் விரயம்.
(3) உற்பத்தி சந்தைக்கு விட்டு அறிமுகப்படுத்தப்படுகின்ற முறையும் அதற்கான செலவு விபரமும்.
(4) பொருள் விநியோக வழிமுறை.
(5) குறித்த காலத்தில் விற்பனை செய்யும் அளவு.
(6) சந்தை போட்டியாளரின் விபரம்.
(7) சாத்தியமான உற்பத்திக்காக தற்போது சந்தையில் இருக்கும் கேள்வி.

G. C. E. A/L

Question Papers with Answer

1997,1998
1999,2000

Price: 137.50

வெளிவரவுள்ள
க.பொ.த. உயர்தர
வினாவிடைகள்

- ☆ பொருளாதாரம்
- ☆ தமிழ்
- ☆ கணக்கீடு
- ☆ இந்து நாகரீகம்
- ☆ வணிகக்கல்வி
- ☆ இந்து சமயம்
- ☆ இஸ்லாம்
- ☆ இஸ்லாமிய நாகரீகம்
- ☆ பௌதிகம்
- ☆ உயிரியல்
- ☆ இணைந்த கணிதம்
- ☆ புவியியல்